# ப ண் டி த ம ணி

'சோமலெ'

இன்ப நிலையம்

மயிலாப்பூர் :: சென்னை-4.

முதற் பதிப்பு—ஜூன், 1955

விலை ரூ. 3—8—0

நவபாரத் பிரஸ், சென்னை—1.

# பொருளடக்கம்


பக்கம்

| | | | |
|---|---|---|---|
| 1. | மகிபாலன்பட்டி | ... | 13 |
| 2. | பிறப்பும் வளர்ப்பும் | ... | 25 |
| 3. | கல்வியறிவும் புலவர்கள் தொடர்பும் | ... | 35 |
| 4. | சன்மார்க்க சபை | ... | 52 |
| 5. | நாடறிந்த நாவலர் | ... | 76 |
| 6. | சமய நூலறிவு | ... | 81 |
| 7. | வடமொழிப் புலமையும் பயனும் | ... | 89 |
| 8. | சொற்பொழிவுகள் | ... | 99 |
| 9. | தலைமையுரைகள் | ... | 112 |
| 10. | ஈழநாட்டுப் பயணம் | ... | 127 |
| 11. | தமிழறிஞருடன் உறவு | ... | 138 |
| 12. | அரசரும் புலவரும் | ... | 147 |
| 13. | அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பணி | ... | 153 |
| 14. | மகாமகோபாத்தியாயர் | ... | 169 |
| 15. | கௌடலீயம் | ... | 177 |
| 16. | பழுத்த பாவன்மை | ... | 181 |
| 17. | கதிர்மணி விளக்கவுரை | ... | 195 |
| 18. | கருத்துக்கள் | ... | 216 |
| 19. | இல்வாழ்க்கை | ... | 220 |
| 20. | குணச் சிறப்புக்கள் | ... | 224 |
| 21. | கதிரொளியின் மறைவு | ... | 232 |
| 22. | கையறு நிலை | ... | 234 |

# இந்நூலைப் பற்றிய விவரங்கள்

நூலின் பெயர்—பண்டிதமணி.

ஆசிரியர் பெயர்—சோம. லெ. இலக்குமணச் செட்டியார்
"சோமலெ" பி. 1921.

முதற் பதிப்பு வெளியான காலம்—1955.

அளவு—18·3 cm.

பக்கம்—236

விலை—ரூ. 3—8—0.

நூலைப்பற்றிய குறிப்பு: வாழ்க்கை வரலாறு.
மகாமகோபாத்தியாய பண்டிதமணி
மு. கதிரேசச் செட்டியாரைப் பற்றியது.
ஆதாரமான குறிப்புக்களுடன் கூடியது.

# முன்னுரை

நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்
பண்புடையாளர் தொடர்பு

என்றார் திருவள்ளுவர். இத்திருக்குறட் பொருளைத் தமது புலமைத் திறத்தாலும் பண்புடைமையாலும் புலப் படுத்தியவர் மகாமகோபாத்தியாய பண்டிதமணி மு. கதி ரேசச் செட்டியாரவர்களாவர். பிறர் துணையின்றித்தமது நுண்ணறிவால் செந்தமிழ்ப் பெருநூல்களைத் தெளிவாகக் கற்றதோடு வடமொழியும் நன்கு பயின்ற சிறப்பு அவர் களுக்கு உண்டு. இருமொழிப் புலமையாலும் இனிய சொல்வன்மையாலும் இறுதிநாள்வரையிலும் தமிழ்த் தொண்டு புரிந்த பெருமை பண்டிதமணியவர்களுக்கு உரியதாகும். இவ்விருபதாம நூற்றுண்டில் தமிழகத் திலே தமிழ்ப் பற்றும் தமிழறிவுமுடையாராய்த் தமிழ் மக்களைத் தமிழ் வாழ்வில் ஈடுபடச் செய்தற்குக் காரண ராய் விளங்கிய பெரும் புலவர்களுள் முதல் வரிசையில் வைத்து எண்ணத் தக்கவர் நம்பண்டிதமணியாவர். தமிழி லக்கண அமைதி, சுவைநயம், மரபுமுறைமை முதலிய நல் லியல்புகள மாருவண்ணம தமிழ் நூல்களைப் பாடஞ் சொல்லுவது பண்டை முறை; இந்நாளிலும் இந்த முறை நிலைபெற்று வருவதற்கு நம் பண்டிதமணி போன்ற புல வர் பெருமக்கள் சிலரது உழைப்பே சிறந்த காரணமாகும். அவர்கள் தம நுண்ணறிவாலும் இனிய சொல்வளத்தா லும் அரும்பெருங் கருத்துக்களை இடையருது வழங்கித் தமிழ் மககளது கல்வித் திறனை வளம்பெறச் செய்தனர். அத்தகைய பேரறிஞரது வாழ்க்கை வரலாறு சிறந்த

முறையில் வெளி வருமானல் தாய்மொழி வளர்ச்சியிலும் கல்வித் துறையிலும சமய வாழ்விலும் தமிழர் நாகரிகத்தி லும் அரசியல் முன்னேற்றத்திலும அவர்கள் கருதிய கருத்துக்களும் தமிழ் மக்கள் செய்தற்குரிய சிறந்த பணி களாக அவர்கள் மேற்கொண்ட செயல்களும் தமிழ் மக்கள் உள்ளத்தில் நிலையான இடம் பெறுமென அறிஞர் பலர் எண்ணினர்கள்.

பண்டிதமணியவர்களுடன் அளவளாவி அவர்தம் சொற்சுவையிலீடுபட்ட அறிஞர் சிலர் பண்டிதமணியின் வாயிலாகவே அவரது வாழ்க்கை வரலாறு வெளிவருதல் வேண்டுமென விரும்பிப் பண்டிதமணியவர்களையடைந்து 'தன் வரலாறு' எழுதும முறையில் அவரது வாழ்க்கை யில் நிகழ்ந்த சிறப்புடை நிகழ்ச்சிகளை யெழுதியுதவும்படி வேண்டினர்கள். அவ் வேண்டுகோட் கிணங்கிய பண்டித மணியவர்கள் தம் வாழ்க்கைக் குறிப்புக்கள் சில வற்றைத் தொகுத்து வைக்கத் தொடங்கினர்கள். எனினும் அவர் தம் வாழ்க்கைத் துணைவியாராகிய மீனாட்சி ஆச்சியவர் கள் இறந்த துயரத்தாலும் எப்படியும் திருவாசகத்திற்கு உரையெழுதி முடித்தல் வேண்டும் என அவர்கள் மேற் கொண்ட உரைப்பணியாலும் வரலாறெழுதும்முயற்சியைக் கைவிட்டனர்.

இந்நிலையில் பண்டிதமணியவர்களுடன் நெருங்கிப்பழ கும் வாயப்பு எனக்கு ஏற்பட்டது. பேரறிஞர்களது வர லாற்றிற் காணப்படும் அரிய நிகழ்ச்சிகள் மக்களெல்லார்க் கும் நன்கு பயன்படும் என்னும நம்பிக்கையுடன் யான் பழ கிய அறிஞர்களின் சிறப்பியல்புகளைக் குறித்துக் கட்டுரை வாயிலாக வெளிப்படுத்துதல் எனது பொழுது போக்கா கும். பண்டிதமணியவர்களது வாழ்க்கை வரலாறு விரித் தெழுதப் பெறுமானல் அது தமிழ் அன்பர்களுக்குப்

பெரிதும் பயன்படுமென எண்ணினேன். நெருங்கிப் பழகிய நிலையில் எனது எண்ணத்தை யுணர்ந்த பண்டிதமணியவர்கள் தாம் வைத்திருந்த குறிப்புக்களை யெல்லாம் அன்புடன் என்னிடம் கொடுத்தார்கள். அக் குறிப்புக்களும் அவர்கள் அவ்வப்போ தெழுதிய நூல்க ளும் அணிந்துரை முகவுரைகளும் தமிழகத்திற் பல பேர வைகளில் நிகழ்த்திய சொற்பொழிவுக் குறிப்புக்களும் அவர்களைப் பற்றித் தமிழறிஞர்கள் வெளியிட்ட கருத்துக் களும் ஆகியவற்றைத் துணையாகக்கொண்டு அவர்களது வாழ்க்கை வரலாற்றை யெழுத எண்ணினேன்.

பண்டிதமணி யவர்களது வரலாற்றை யான் எழுத எண்ணியதுணர்ந்து கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை யவர்கள், பிறந்தநாள் முதலிய குறிப்புகளும் திருமணம் முதலிய பொது நிகழ்ச்சிகளுமாக மக்கள் எல்லார்க்கு முரிய சாதாரண வாழ்க்கைக் குறிப்புக்களை விரித்துரை யாமல் பண்டிதமணி யவர்களின புத்தி நுட்பத்தையும் சிறந்த பண்புகளையும் பாட்டும் உரையும் வரையும் அவரது புலமை நலத்தையும் சுவை நிறைந்த சொல்வளத்தையும் தமிழ் வளர மேற்கொண்ட அரிய முயற்சிகளையும் படிப் போர் மனங்கொள்ளும்படி அவர்களது வாழ்க்கை வர லாற்றினை யெழுதுதல் வேண்டும் என எனக்கு அறி வுறுத்தினார்கள். இவ்வகையிலே இவ்வரலாற்றை எழுத ஓரளவு முயன்றிருக்கிறேன்.

வெளியுலகத் தொடர்புடைய ஒருவர்விருப்பு வெறுப் பின்றி நடுநிலையில் நின்று ஒருவரது வாழ்க்கை வரலாற் றினைக் குறித்து எழுத நேருமானால் அங்ஙனம் எழுதப் பெறும் வரலாறு உண்மை நிகழ்ச்சிகளைத் தன்னகத்துக் கொண்டதாய் யாவராலும் மதிக்கப் பெறும் என்பது பண்டிதமணி யவர்களது துணிபாகும். தமிழ்ப்புலவரொ

ருவர் பால் இப்பணியை ஒப்புவித்தால் அவர்களால் எழு தப்படும் வரலாறு பாராட்டும் அளவில் அமைந்துவிடு மென அவர்கள் எண்ணினார்கள். எனவே வெளியுலகத் தொடர்பு கொண்டு பொதுவும சிறப்புமாக நோக்கி மனங்கொள்ளும் நிலையில் பண்டிதமணி யவர்களது வாழ்க்கை நிகழ்ச்சிகளை ஒருவாறு தொகுத்து இந்நூ லுருவில் தருதல் எனது கடமையாயிற்று.

பண்டிதமணி யவர்களின் பொருட்சுவை நிரம்பிய சொற்பொழிவுகள் ஒலிப்பதிவு செய்யப் பெற்றிருக்குமா னால் அவர்களது புலமை நலத்தை வருங்காலத் தமிழ் மக் கள் சுவைகுறையாமல் கேட்டு மகிழும் வசதியேற்பட்டிருக் கும். அத்தகைய வாய்ப்பு நமக்குக் கிடைக்கவில்லை. எனி னும் அவர்கள் எழுதிய சிறப்புடைய நூல்களும் பேரவை களில் ஆற்றிய சொற்பொழிவுகளும் ஒருவாறு கிடைத் திருப்பது மகிழ்ச்சிக்குரிய தொன்றும். அவர்கள் அவ்வப் பொழுது கூறிய கருத்துக்கள் இந்நூலில் ஆங்காங்கே குறிப்பிட்டு விளக்கப்பெற்றுள்ளன. தமிழகம் மதிக்கும் பெரும் பேராசிரியராகிய அவர்களது வாழ்க்கை வரலாற் றிற் குறிக்கத்தக்க சிறப்புடை நிகழ்ச்சிகளாக இனிமேலும் அன்பர்கள் கூறும் செய்திகள் அடுத்த பதிப்பில் இடம் பெறுமென்பது உறுதி. இந்நூல் வெளிவர, வேண்டும் துணைபுரிந்த அன்பர்களுக்கு எனது நன்றியைத் தெரி வித்துக் கொள்கிறேன்.

நெற்குப்பை.
25—6—55.

'சோமலெ'

# 1. மகிபாலன்பட்டி

தமிழகம் எத்தனையோ அறிஞர்களையும், அரசியல் மேதைகளையும், கலைஞர்களையும், கவிஞர்களையும், தொழில் துறை வல்லுநர்களையும் ஈன்றெடுத்திருக்கிறது. பெருமைக்குரிய இச் சிந்தனைச் செல்வர்களெல்லாம் தமிழகத்தின் வரலாற்றிலே பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பெற வேண்டியவர்கள். இந்த வரிசையிலே முதன்மையாக வைத்து எண்ணத்தக்கவர் நமது மகா மகோபாத்தியாயர் பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார் அவர்களே.

இப்பெருந்தகையாளரை நாடு நன்கறியும். ஏழு மாதங்கூடப் பள்ளிக்கூடத்தில் கல்வி பயிலாமல், பன்னிரண்டு ஆண்டுகள் பல்கலைக் கழகத்தில் பேராசிரியராக இருந்து, தமிழ்ப்பணி ஆற்றிய தனிச் சிறப்பு இவர்களுக்கே உரியது. இவர் பட்டம் பெறப் பிறந்தவரல்லர்; பட்டம் வழங்கப் பிறந்தவர்.

பேரவைகளில், கற்றவர்கள் வியப்பும் உவப்பும் எய்தும் வண்ணம், காப்பியச் சுவைகளை எடுத்துரைத்தல்,

பழம் புலவர் செய்யுள்களுக்கு உரை காணுதல், இனிமை கனியும் பாடல்கள் இயற்றல், கருத்துச் செறிவுடைய கட்டுரை வரைதல், வடமொழி நூல்களைத் தமிழிற் பெயர்த்தல் முதலிய பல துறைகளில் புலமை அமைந்து, தம் அறிவாற்றலையும் இறவாத புகழையும் நிலைநாட்டியவர் பண்டிதமணி.

இத்தகைய சிறப்பியல்புகளையுடைய பேரறிஞரின் வரலாறு தமிழுலகுக்குப் பெரும் பயனளிக்கும். ஒரு பெரியாரின் வாழ்க்கையைச் செவ்வையாக அறிவதற்கு, அவர் வாழ்ந்த இடத்தையும் காலத்தையும் தெளிவாக அறிந்து கொள்ளவேண்டுவது இன்றியமையாதது.

சங்கம் இருந்து தமிழ் வளர்த்த மூவேந்தருள், தமிழைப் பெரிதும் போற்றி வளர்த்தவர்கள் பாண்டி மன்னர்களே. **'பாண்டி நாடே பழம் பதி'** எனவும், **'தண்ணார் தமிழளிக்கும் தண்பாண்டி நாடு'** எனவும் சான்றோர் பாண்டிநாட்டைப் புகழ்ந்து போற்றுவர். இந்நாட்டின் உட்பகுதிகள் பல. இவற்றுள் ஒன்று பூங்குன்ற நாடு.

இந்நாடு 24½ கிராமங்களையுடையது. அவையாவன :

1. மகிபாலன்பட்டி
2. நெல்மேனிப்பட்டி
3. வேலங்குடி
4. மருதுகுடிப்பட்டி
5. பாப்பான்பட்டி
6. கொன்னத்தான்பட்டி
7. மலம்பட்டி
8. திருக்கோளக்குடி
9. ஆத்திரம்பட்டி
10. மின்னக்குடி
11. சந்தனம்பட்டி

12. கருப்பன்பட்டி
13. சுண்டைக்காடு
14. நல்லிப்பட்டி
15. கண்டவராயன்பட்டி
16. கருவேப்பிலாம்பட்டி
17. திருக்களாப்பட்டி
18. சோளம்பட்டி
19. வஞ்சினிப்பட்டி
20. காவினிப்பட்டி
21. கலாமடம்
22. கோயிலாப்பட்டி
23. பிலாக்குடிப்பட்டி
24. பையூர்
25. பறியாமருந்துப்பட்டி உட்பட நெற்குப்பைக் கீழத் தெரு. (கிராமத்தின் ஒரு பகுதி மட்டும் சேர்ந்திருந்ததால் இது அரைக் கிராமமாகக் கணக்கிடப்பெற்றது).

பூங்குன்ற நாட்டைச் சேர்ந்த மங்கலங்களாவன :

1. மகிபாலன்பட்டி
2. வேலங்குடி
3. சுண்டைக்காடு
4. வஞ்சினிப்பட்டி
5. கண்டவராயன்பட்டி

பூங்குன்ற நாட்டின் தலைநகர் மகிபாலன்பட்டி. மகி பாலன் என்பது முன் ஆண்ட அரசர் ஒருவரின் பெயர். அவ்வூர் அம்மன் கோயிலிலுள்ள தெய்வத்தின் பெயர் பூங் குன்றநாயகி. அங்குள்ள ஐயனுருக்குப் பூங்குன்ற ஐயனுர் என்ற பெயர் வழங்கப்பெறுகிறது.

மகிபாலன்பட்டியில் நடைபெறும் சமூகக் கூட்டங்களி லும், பூத் திருவிழா முதலிய நிகழ்ச்சிகளிலும் இந்த 24½ கிராம மக்களும் கலந்துகொள்வர்.

'புறநானூற்றுச் சொற்பொழிவுகள்' என்னும் நூலில் ஆராய்ச்சியாளர் டி. வி. சதாசிவப் பண்டாரத்தார் அவர்கள் 'புறநானூறும கல்வெட்டுக்களும்' என்ற தலைப்பில் எழுதியுள்ள பகுதியை இங்கே தருகிறோம் :

"**பூங்குன்றம்**:-படிக்குந்தோறும் மிக்க இன்பத்தை விளைவிக்கும் இயல்பு வாய்ந்த 'யாதுமூரே யாவருங் கேளிர்' என்ற 192—ஆம புறப்பாட்டை இயற்றிய புலவர் பெருமான் இவ்வூரினர் ஆவர். இது பாண்டி மண்டலத்தின் உள் நாடுகளுள் ஒன்றாகிய பூங்குன்ற நாட்டுக்குத் தலைநகர் என்பது 'பூங்குன்ற நாட்டுப் பூங்குன்றமும்' என்ற கல்வெட்டுப் பகுதியினால் பெறப்படுகிறது. இராமநாதபுரம் ஜில்லா, திருப்புத் தூர் தாலுகாவிலுள்ளதும், இரு பெரு மொழியினும் நுண்மாண் நுழைபுலம் படைத்தபுலவர்பெருமானாகிய மகாமகோபாத்தியாயர் பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார் அவர்கள் தோன்றியதும் ஆகிய மகி பாலன்பட்டியே இப்பூங்குன்றம்[1] என்பது அங்குள்ள குகைக் கோயிலில் காணப்படும் கல்வெட்டொன்றால் புலப்படுகிறது[2].

ஸ்வஸ்தி ஸ்ரீ கோச்சடைய வர்மரான திரி புவனச் சக்ரவர்த்திகள் எம் மண்டலமுங் கொண்டரு

---

1. 'பூங்குன்ற நாட்டுப் பூங்குன்றத்'திற்கு மகிபாலன்பட்டி என்ற பெயர் இடைக்காலச் சோழமன்னர் காலத்தில் உண்டா யிற்று. இக்குன்று இப்போது குடகமலை என்றும் வழங்குகிறது.

2. இக்கல்வெட்டு கெற்குப்பை—மகிபாலன்பட்டிச் சாலை யின் ஓரத்தில் இருக்கிறது.

ளிய ஸ்ரீ சுந்தரபாண்டிய தேவர்க்கு யாண்டு 10-ஆவது சிங்கநாயிற்று அமரபக்ஷமும் துதியையும் திங்கட்கிழமையும் பெற்ற பூரட்டாதிநாள் உடையார் குலசேகர ஈஸ்வரமுடைய நாயனுர் தேவதானம் பூங்குன்ற நாட்டுப் பூங்குன்றத்துடையார் திருப்பூங்குன்றமுடைய நாயனுர் ஆதி சண்டேசுவர நாயனுர்க்கு இந்நாட்டு நாட்டவரோம் பிரமாணம் பண்ணிக்கொடுத்த பரிசாவது.''

புகழ்பெற்ற புறப்பாடலாகிய 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்பதைத் தமிழுலகுக்கு வழங்கியவர் கணியன் பூங்குன்றனுர் என்னும் பெரும் புலவர் ஆவார். கணியன் என்ற சொல்லுக்குச் சோதிடன் என்பது பொருள். இந் நூலின் தலைவராக விளங்கும் **பண்டிதமணி** அவர்களும் சோதிடநூற் புலமை உடையவர் என்பது குறிப்பிடத்தக்கது.

மகிபாலன்பட்டி, மணிமுத்தாறு என்னும் ஆற்றினல் எல்லாப் பக்கங்களிலும் சூழப்பெற்று, அதன் நடுவே விளங்குவதால், இதனை 'ஆற்றிடைக்குறை' என்று சொல்லலாம். காட்டுவளமும ஆற்று வளமும் நிறைந்த இந்தச் சிற்றூரே பண்டிதமணி அவர்கள் தோன்றிய இடமாகும்.

இவ்வூர் இயற்கை வளம் நிரம்பியது. தமிழ்ப் பெரியார் திரு. வி. க. அவர்கள் தம் வாழ்க்கைக் குறிப்பில் கூறியிருப்பதாவது :

**''பண்டிதமணி மகா மகோபாத்தியாயர் கதிரேசச் செட்டியார் ஊராகிய மகிபாலன்பட்டிக்கு யான் இரண்டு முறை சென்றிருக்கிறேன். அவ்வூரின் அமைதி என் நெஞ்சைக் கொள்ளை கொண்டது. அஃது எவரையும் புலவராக்கும்—பாவலராக்கும் பண்புடையது.''**

புற ஆரவாரத்தில் ஈடுபடாமல் உள்ளத்தே உயர்ந்த எண்ணத்தை எண்ணுதற்குரிய அமைதியை வழங்குவது இவ்வூர். தனித்திருந்து தவம் செய்வோர்க்கு ஏற்ற இட மென்று இதனைச் சொல்லலாம். இவ்வூரின் அருகே காணப்பெறும் சமண முனிவர்களின் உருவங்கள் இவ் வுண்மையைப் புலப்படுத்துவன.

மகிபாலன்பட்டி, நாட்டுக்கோட்டை நகரத்தார்களின் 96 ஊர்களில் ஒன்று. எனவே, செல்வச் செழிப்புடையது. இருப்பினும், கடந்த சில ஆண்டுகள் வரையிலும் போக்கு வரவு வசதிகளின்றிப் பிற்போக்கான நிலையில் இருந்து வந்தது. அந்த ஊருக்கு மோட்டார் போக்குவரத்தை அமைக்கப் பண்டிதமணி முயன்றார். மணிமுத்தாற்றில் வெள்ளம் பெருக்கெடுக்கும்போது, அவ்வூரவர் எங்குஞ் செலல இயலாது; வெளியூரார் இங்கு வரவும்இயலாத நிலை யில் இவ்வூர் உளது. ஆகையால் சாலைவழியில் ஆற்றைக் கடப்பதற்கு உதவும் பாலங்களை அமைக்கப் பண்டிதமணி அவர்கள் பெரிதும் முயன்றார்கள். அவர்கள் முயற்சியின் பயனாக—அவர்கள் இறந்த பின்னர்—மகிபாலன்பட்டிக்கு மோட்டார் வசதி ஏற்பட்டிருக்கிறது. பாலம் அமைக்கும் வேலை விரைவில் தொடங்கப்பெற இருக்கிறது. ஒரு பாலம் பண்டிதமணி அவர்களது பெயராலேயே அமைக் கப் பெறவேண்டுமென இரமாநாதபுர மாவட்டக் கழகத் தினர் முடிவு செய்திருப்பது பாராட்டத் தக்கது.

ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னரே, மகா வித்துவான் சோழவந்தானூர் அரசஞ் சண்முகனார் அவர்களும், மகா மகோபாத்தியாயர் டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர் அவர் களும எழுதியிருக்கும் கடிதங்கள் பண்டிதமணி அவர்க

ளிடமிருந்து யான் பெற்றுள்ள ஆதாரங்களிற் சில. இவற்றின் மேற்கூடுகளில் எழுதப் பெற்றுள்ள முகவரி :

*மகா வித்துவான் ஸ்ரீமான்*

*குமட மு. கதிரேசன் செட்டியார் அவர்கள்*

*மகிபாலன்பட்டி*

*திருப்புத்தூர் போஸ்ட்*

*மதுரை ஜில்லா*

என்பதாகும். இவற்ருலும், ஏனைய கடிதங்களாலும், முன்னர்த் திருப்புத்தூரிலும் கண்டவராயன்பட்டியிலுந் தான் அஞ்சல் நிலையங்கள் இருந்தன என்பதும், மகிபாலன் பட்டிக்கு அஞ்சல் நிலையம் ஏற்பட்டது பண்டிதமணி அவர்களுடைய பேருழைப்பின் விளைவாகத்தான் என்பதும் தெரிய வருகின்றன.

காடுகள், சிறு குன்றுகள், ஆறு இவற்ருல் சூழப்பெற்ற சிற்றூர் மகிபாலன்பட்டி. இங்கு வாழும் மக்களிற் பெரும் பாலோர் உழவுத்தொழிலையே மேற்கொண்டவர் ஆவர். மழை பெய்துவிட்டால், இவ்வூரில் மாட்டுவண்டிகூடக் கிடைப்பது அரிது.

பல்லாண்டு வரையிலும் மாட்டுவண்டிகள் போய் வருவதற்குரிய பாதை வசதிகளுமின்றி இவ்வூர் மக்கள் துயரப்பட்டனர். இவ்வூரினரான திரு. வீரப்பச் செட்டியார் என்பார் தேவகோட்டையிலுள்ள செல்வக் குடும்பம் ஒன்றுக்கு வளர்ப்புப் பிள்ளையாகச் சென்ருர். அவரது வள்ளன்மையால், கண்டவராயன்பட்டிக்கும் மகிபாலன் பட்டிக்கும் இடையே சாலை அமைக்கப் பெற்றது. அந் நிலையில் மக்கள் அடைந்த மகிழ்ச்சியும், அதற்கு முன்னர்

அவர்கள் பட்ட அல்லலும் அவரை வாழ்த்தும் நிலையில் அமைந்த பின்வரும் பாடலால் தெரிகின்றன :

"மங்கலமுண் டாகவென்று வாழ்த்துகின்றோம் ஐயா,
மகிபால நகர்சிறக்க வழிதிறந்தீர் ஐயா.
பண்டுதந்த பாதைதனைப் பார்த்தவர்கள் தாமும்
பார்த்துமனம் திடுக்கிடுவார் பயந்திடுவார் தாமும்
இருபுறமும் கற்றாழை கள்ளிதோன்றும் மக்கள்
இறங்கிநின்றால் இடுப்பளவு படுகுழிகள் காணும்
மழைவிழுந்தால் சேறுதனை நீந்துவதோ பாடு
மனிதரினும் பன்மடங்கு மண்டியிடும் மாடு
மண்டியிட்டு இழுத்தாலும் வண்டிநக ராது
மனிதர்பலர் கூடிநின்று தள்ளினும்போ காது
பாரவண்டி மாடுபடும் பாடுதனைப் பார்த்தோர்
பரிதாபம் பரிதாபம் பரிதாபம் என்பார்
இரண்டுமைல் தாண்டவொரு நாள்செலுமே ஐயா
இதன்துயரை எடுத்துரைப்ப தெளிதாமோ ஐயா
வழிநிலத்தில் அடிமிதித்துத் தாண்டிவர வேண்டும்
விதிவசந்தால் தவறிவிட்டால் சேற்றில்விழ வேண்டும்
கண்ணாடி விரியன்கண்டேன் கரிவளனை நாகம்
அருகில்வந்தேன் அவைகளெலாம் போனவிடம் காணேன்
*மயானவழி யானதினுல் பேய்ப்பயமும் தோன்றும்
மறந்துதிடுக் கிட்டுவிட்டால் குளிர்காய்ச்சல் காணும்
அந்திபட்டால் திருடர்பயம் ஆகும்அந்தப் பாதை
அதிதூரம் தனிலிருந்து புதுமனிதர் ஒருகால்
அறியாமல் வந்தாலும் அடுத்தமுறை வெறுப்பார்
தடந்தெரியா வழியாகும் நிலையும்தெரி யாது

* மகிபாலன்பட்டியைச் சேர்ந்த மயானம் கண்டவராயன் பட்டிக்குச் செல்லும் வழியில் அமைந்திருக்கிறது.

சத்தமிட்டுக் கதறினலும் உதவிகிடைக் காது
எதிரில்வரும் மனிதர்களைக் காணமுடி யாது
இருக்குநிலை சொல்லென்ருல் எவர்க்குமுடி யாது
இப்பெரிய இடையூறு நிற்கவழி தேடி
இரண்டாண்டில் முடித்துவைத்தீர் எங்கள்நலம் நாடி
தலைநகரம்** மறக்காமல் செய்தபெரும் தருமம்
தினந்தினமும் தழைத்தோங்கும் தருமமிது தானே
வழியழகாய் முடித்துவைத்தீர் துன்பமெலாம் போக்கி
மணிமுத்தாறு கடக்கப் பாலமொன்று வேண்டும்
மேன்மேலும் கூட்டிவைப்பார் விசுவேசர் ஐயா
சிறிது குறையில்லாமல் சேர்த்துவைப்பார் ஈசன்
அறம்புரியும் தனவணிகர் வாழ்பாண்டி நாடு
அதுதேதி அந்நகரம் சிறந்ததுகண் கூடு
*செந்நெல்புரி தன்னில்வளர் சிவனடியார் செல்வர்
வீரப்ப செட்டியாரும் வாழ்கவாழ்க வாழ்க!

எளிமையும் இனிமையும் வாய்ந்த வெண்பாக்களைப் பாடுவதில் சிறந்து விளங்கிய புகழேந்திப் புலவர் பெண்களுககாக மிக எளிய நடையில் அல்லி அரசாணி மாலை முதலிய பல நூல்களைச் செய்து உதவினர் என்று கேள்விப் படுகிருேம். அதுபோலவே, மேலே குறிப்பிட்ட பாடலும் பெண்களுக்கெனவே மிக எளிய நடையில் பண்டிதமணி அவர்களால் பல ஆண்டுகளுக்குமுன் தம் இளம்பருவத்தில் இயற்றப் பெற்றதாகவும், அது சிதைந்த உருவில் இவ்வாறு இப்போது வழங்கி வருவதாகவும் அவ் ஆரார் கூறக் கேள்விப்பட்டிருக்கிறேன்.

---

** தலைநகரம் — பூங்குன்ற நாட்டின் தலைநகராகிய மகிபாலன்பட்டி

* செந்நெல்புரி—தேவகோட்டை.

இப்பாடலால்பண்டிதமணி அவர்கள் சிறு வயதிலேயே புலமைத் திறத்தைப் பொதுத் தொண்டில் ஈடுபடுத்திய செய்தியும், பொதுநலப்பணி புரிவோர்களைப் பாராட்டு முகத்தால் தாம் எண்ணிய செயல்களை நிறைவேற்றிக் கொள்ளும் திறமையும், உயிர்களிடத்தில் அவர்கள் கொண்டிருந்த இரக்க உணர்ச்சியும் தெரியவருகின்றன.

பண்டிதமணி அவர்களும் (யாழ்ப்பாணம் சி. வை. தாமோதரம் பிள்ளை அவர்களின் மகனும் தமிழறிஞரு மாகிய) கிங்ஸ்பரி என்பாரும் இனிய நண்பர்கள். கிங்ஸ் பரி அவர்கள், ஒருகால் பண்டிதமணி அவர்களைக் காண மகிபாலன்பட்டிக்கு வந்திருந்தபோது, "நாம் இருவரும் ஓர் ஊரினரே" என்று சொன்னாராம். "அது எவ்வாறு?" எனப் பண்டிதமணி வினவ, அவர் தம் ஆங்கிலப்பெயர் 'கிங்ஸ்பரி' (Kingsbury) என்பதைத் தமிழ்ப்படுத்தி உரிமை பாராட்டினாராம்.

மக்கள் பெருகியும் நாகரிகம் பரவியும் காணப்படும் இந்நாளிலும், இரு தெருக்கள், மூன்று சிறு கடைகள், ஒரு திண்ணைப்பள்ளிக்கூடம், 1,500 மக்கள் உடையதாகவே மகிபாலன்பட்டி காட்சி தருகிறது. ஊராண்மைக் கழகமோ, ஊர்காவல் நிலையமோ (போலீஸ் ஸ்டேஷன்) இன்னும் இவ்வூரில் ஏற்படவில்லை. இப்போது இருந்துவரும் மங்கள விநாயகர் வித்தியாசாலையும் நம் பண்டிதமணி அவர்களால் தோற்றுவிக்கப்பெற்றதே. இவ்வாறு இவ்வூரில் அஞ்சல்நிலையம், பாலம், மோட்டார் போக்குவரத்து, பள்ளிக்

---

* King *(கிங்)—மன்னர், மகிபாலன்;* King's—*மன்னரது*

Bury *(பரி)—பரோ* (Borough) *என்பதன் திரிபு. இதன் பொருள் சிற்றூர், பட்டி என்பது. சான்று: கான்டர்பரி, ஷ்ருஸ்பரி, பிரேக்கன்ஸ்பரி.*

கூடம்—இவையாவும் ஏற்படுவதற்குப் பண்டிதமணி அவர்களே பெரும் காரணமாக இருந்தார்கள். அவர்கள் தோன்றுவதற்குமுன் இவ்வூரின் பெயரும் 'மம்மலாவட்டி' என்றே மருவி வழங்கிவந்தது. பண்டிதமணி அவர்களை ஈன்றெடுத்த சிறப்பால், இச் சிற்றூரின் பெயர் அமெரிக்காவிலிருந்து வெளிவரும் கலைக் களஞ்சியத்திலும் இடம் பெறுவதாயிற்று. ஆகையால் ஷேக்ஸ்பியரால் ஸ்டிராட்போர்டு - ஆன் - ஏவனும், மகாத்மா காந்தியடிகளால் சேவாக்கிராமமும் புகழ் பெற்றமைபோலவே பண்டிதமணி அவர்களால் மகிபாலன் பட்டி புகழுடன் திகழுகிறது. மிக்க புகழுடன் தாம் வாழும் சிற்றூரின் பெருமையையும் பண்டிதமணி அவர்கள் பாரெல்லாம் பரப்பிவந்தார்கள். பண்டிதமணி என்றதும் மகிபாலன் பட்டியும், மகிபாலன்பட்டி என்றதும் பண்டிதமணியும் சேர்ந்து தமிழ் மக்களின் நினைவுக்கு வருவது குறிப்பிடத் தக்கது.

பண்டிதமணி அவர்கள் பிறந்த காலம் 19–ஆம் நூற்றுண்டாகும். அப்போது மக்கள் தமிழ் மொழியில் ஆர்வம் குன்றியிருந்தனர். காரணம் ஆங்கிலேயரது அரசாட்சியின் விளைவாக ஏற்பட்ட ஆங்கில மோகமும் அவர்கள் பரப்பிய கல்விமுறையும் ஆகும். சிறப்பாகக் கிராமங்களில் வாழ்ந்தவர்கள் கல்வித் தொடர்பேயின்றி விவசாயத்தில் ஈடுபடுவாராயினர். தனவணிகப் பெருமக்கள் திரைகடலோடித் திரவியம் தேடுவதிலேயே கண்ணுங் கருத்துமாக இருந்தனர்.

இத்தகு சூழ்நிலையில் செட்டிநாட்டின் பிறிதொரு பகுதியில் இராசா சர். அண்ணாமலைச் செட்டியார் என்னும் புரவலர் 30-9-1881–இல் தோன்றினர் ; புரவலர் தோன்றிய இரு வாரங்களுக்குப் பின்னர், நம் புலவர் பெருமானும்

தோன்றினர். புரவலரும் புலவரும் தமிழை வாழவைப்பா ராயினர்.

வெளியுலகத் தொடர்பற்ற சிற்றூரில் வாழ்ந்திருந்த போதிலும், இருமொழிப் புலமை நிறைந்து, தமிழ்நாடெங்கும் 'கலையொளி வீசிய தண்டமிழாசான் பண்டிதமணி அவர்கள்' தமிழ் மக்களுடன் அன்பினுல் கலந்து நெருங்கிப் பழகும் இயல்புடையவராக விளங்கினர்கள். உலக முழுதும் ஒன்றெனக்கருதும் விரிந்த உள்ளத்துடன் அவர்களது வாழ்வு சிறந்து விளங்கியதைப் பின்வரும் பகுதிகளில் காணலாம்.

# 2. பிறப்பும் வளர்ப்பும்

மகிபாலன்பட்டி முத்துக்கருப்பன் செட்டியார் அவர்களுக்கும் அவரது வாழ்க்கைத் துணைவியாரான சிவப்பி ஆச்சி அவர்களுக்கும் மகவாக, விசு ஆண்டு, புரட்டாசித் திங்கள், இரண்டாம் நாள் (16-10-1881) வெள்ளிக் கிழமையன்று ஓர் ஆண் குழந்தை பிறந்தது. இக்குழந்தைக்குக் 'கதிரேசன்' எனப் பெற்றோர் பெயரிட்டனர். இக் கதிரேசனாரே நம் பண்டிதமணி.

பண்டிதமணியின் பாட்டனாரான குமரப்பச் செட்டியார் மகிபாலன்பட்டியைச் சுற்றி நன்செய் புன்செய்களை உடையராக இருந்தாரென்றும், தந்தை முத்துக்கருப்பன் செட்டியார் மலேயாவிலும் இலங்கையிலும் பெருவணிகம் நடத்தி வந்தார் என்றும் கூறுவர். தந்தையார் கணிதத்தில் மிகுந்த பற்றுடையராக இருந்தார்; மைந்தன் கதிரேசனார் இலக்கண இலக்கியங்களில் பற்றுமிக்காராக விளங்கினார்.

கருப்பன் என்னும் பெயர் திருமாலைக் குறிக்கும்; சிவப்பி, செம்மை நிறமுடைய திருமகளைக் குறிக்கும். இவ்வாறு பெற்றோர் பெயர் திருமாலையும் திருமகளையும் குறித்த போதிலும், கதிரேசனார் சைவ சமயத்துக்கே உரியவரென்பது இவர் தோன்றிய நாளால் உறுதிப்படும். சிவனுக்கே உரிய திருவாதிரை நாளில் இவர் பிறந்தார். இருபத்தேழு நட்சத்திரங்களில் ஆதிரையும் ஓணமுமே 'திரு' என்னும் அடைமொழியை உடையன. ஆதிரை சிவபெருமானுக்கும், ஓணம் திருமாலுக்கும் உரியன.

பண்டிதமணி அவர்கள் பிறந்து ஈராண்டுகள்வரை உடல்நலத்தோடு இருந்தார்கள். இவர் மூன்றும் வயதில் இளம்பிள்ளை வாதத்தால் பீடிக்கப்பட்டனர். எனினும் அந்நோய் பதினைந்து வயதுவரை இவரைத் துன்பப்படுத்த வில்லை இளமை முறுக்கில் இவர் நோயைப் பொருட் படுத்தாது நாள்தோறும் இரண்டு மூன்று மைல்வரை நடந்து சென்று வந்தனர். அருகேயுள்ள சுண்டைக்காடு, வேலங்குடி ஆகிய சிற்றூர்களுக்கு அடிக்கடி பிறர் உதவி யின்றித் தாமே நடந்து சென்றிருப்பதாக இவர் என்னிடம் கூறியதுண்டு.

அக்காலத்தில் நகரத்தார்களுக்குத் திருமகள்பா லிருந்த பற்று, கலைமகள்பால் இருந்ததில்லை. தங்கள் குழந்தைகளை ஐந்தாம் ஆண்டில் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பும் மரபு இச்சமூகத்தில் அந்நாளில் இல்லை. பண்டிதமணி அவர்கள் நோயுற்றிருந்தமையால், ஏழு வயது வரை பள்ளிக்குச் சென்றதாகத் தெரியவில்லை- அதன் பின்னர், பெற்றோர்கள் இவரைத் திண்ணைப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பி வைத்தனர் என்பர். திண்ணைப் பள்ளியில் மாதச் சம்பளம் ஒரு பணம், அதாவது இரண்டணா.

செட்டிநாட்டுத் திண்ணைப் பள்ளிகளில் படிப்பு என்பது எண்சுவடிப் படிப்பே. ஏனைய படிப்பு, வட்டித் தொழிலுக்குத் தேவைப்படவில்லை. அதற்குச் செலவிடும் காலம் வீணாவதாகப் பொருளீட்டி வாழ்க்கையில் வெற்றி கண்டவர்கள் கருதினர். ஏழு மாத காலம் அங்கே கல்வி பயின்றதைப் பற்றிப் பண்டிதமணி கூறுவதாவது:

"யான் ஆறேழ் ஆண்டு அகவை உடையனாக இருக்கும் பொழுதுதான், திண்ணைப் பள்ளிக்கூடத் திலே கல்வி பயின்றேன். அப்பள்ளியிலே பாடமாக

வுள்ள ஆத்திசூடி, உலகநீதி முதலிய சிறு நூல்களை யான் பயில நேர்ந்தபோது, அச் சிறுசிறு வாக்குக் களின் அழகு என் நெஞ்சத்தைக் கொள்ளை கொண் டன. 'ஆ! இவைகள் எத்துணை அழகாகவும் இனிமையாகவும் அமைக்கப்பட்டுள்ளன!' என்று அடிக்கடி வியப்படைவேன். அவற்றில் ஏதோ ஒரு தெய்வத்தன்மை அமைந்திருப்பதாகவே எனக்குத் தோன்றிற்று. மேலும், அவற்றின் பொருள்களும தெளிவாகவே புலப்பட்டன. அவற்றை ஆர்வத்தோடே ஒரு சில திங்களிலேயே கற்று மனப் பாடஞ் செய்துகொண்டேன். அதன் பின்னர் இவ் வினத்துப் பொருள்கள் இன்னும் இவ்வுலகில் உள் ளன என்பதும் அறிந்தேன்; உள்ளனவாயின் அவற் றைப் பெற்றுப் பயிலுதல் எத்துணை இன்பமாக இருக் கும் என்று எண்ணினேன். அக்காலத்தே நூல்கள் கிடைப்பதே அருமை. திருத்தொண்டர் புராணம், கம்பராமாயணம், சிற்சில பிள்ளைத் தமிழ் இவைகளே அவ்விளம் பருவத்தே என் கைக்குக் கிடைத்தன அவற்றை ஆர்வத்தோடே ஓதினேன். அப் பெரு நூல்களும் தஞ்செய்யுட் பொருளை இளைஞனாகிய எனக்கு உலோவாது அளித்தன. திருத்தொண்டர் புராணம், கம்பராமாயணம் போன்ற நூல்களின் உயரிய செய்யுட்களும்—ஆசிரியரின் உதவியின்றியே யான் பயின்ற பொழுதும்—பழம்பாடம் போன்று எனக்கு விளக்கமாகப் பொருள் புலப்பட்டது.''

பொருளீட்டுவதற்காகச் சிறு வயதிலேயே கடல்கடந்த நாடுகளுக்குச் செல்லுவது செட்டியார்களின் மரபு. பண்டிதமணியும் அவ்வாறே, குல வழக்கப்படி, பதினோராம் வயதில் இலங்கைக்குச் சென்றார். கம்பளை நூரேல்யா

வழியிலுள்ள இரட்டைப் பாதைத் தோட்டத்தொழிலாள ருக்கு அரிசி, புடவை விற்றுவந்த வியாபார நிலையத்தில் இவர் வேலை பார்த்துவந்தார். யாழ்ப்பாணத்தார் பலரது தொடர்பு இவருக்கு அப்போது ஏற்பட்டது.

பண்டிதமணி மகிபாலன்பட்டியைச் சுற்றிலுமுள்ள காட்டு வளத்தைக் காணுவதில் அன்பு காட்டியதைப் போன்று, மிக்க ஆர்வத்தோடு, ஈழ வள நாட்டின் மலைப் பகுதிகளின், எழிலைக் கண்டின்புற்று நாள்தோறும் நெடுந் தூரம் உலவி வந்தார். இவரது உடல்நிலை சிறிது சிறிதாகத் தளர்ந்துவந்தது. இலங்கைக்கு இவர் சென்று மூன் ருண்டுகள் இருக்கும். தந்தையார் இறந்த செய்தி வந் தது. உடல் நலிவுற்ற பண்டிதமணியார் மனமும் நலி வுற்றுத் தாய்நாடு வந்து சேர்ந்தார்.

பண்டிதமணியுடன் பிறந்தார் இருவர். இருவரும் இளையரே. ஆகையால் குடும்பப் பொறுப்பைப் பண்டிதமணி ஏற்று நடத்தவேண்டியதாயிற்று. அப்போது இவருக்கு வயது 14. இவரைப் பற்றியிருந்த இளம்பிள்ளை வாதம், தன் வன்மையைக் காட்டத் தொடங்கியது. அதன் பயனுக இவரது இடக்காலும் இடக்கையும் வலுக்குறைந் தன; ஊன்றுகோலின்றி இவரால் நடக்க இயலவில்லை.

உடல் நோயால் துன்பமடைந்த பண்டிதமணி, மகிபாலன்பட்டியிலே வாழ்ந்து வரலானுர். பல இடங் களுக்குச் சென்று, தொழில் துறையில் ஈடுபட இயலாத நிலையில் உடல்வளம் குன்றியிருந்ததை ஈடுசெய்யும் வகை யில் இவர்களது உள்ளம் அறிவித்துறையில் ஈடுபட்டது. இந்த ஈடுபாடு தமிழ்மொழி வளர்ச்சிக்குத் துணையாய் அமைந்தது திருவருளின் செயல் என்றே கூறலாம். ஆசிரியர் எவருடைய உதவியுமின்றி, தம் வழிபடு கடவு ளாகிய விநாயகப் பெருமானையே ஆசிரியராக நினைத்துப்

பல நூல்களைத் தாமே கற்றுவந்தார். இவ்வாறு தாமே பயின்ற பண்டிதமணி, புலவரெல்லாம் பாராட்டும் வண்ணம் இலக்கியங்களைக் கற்றுத் தேர்ந்ததற்கு மகா வித்துவான் அரசஞ் சண்முகனாரும் பேருதவியாக இருந் தார். கந்தசாமிக் கவிராயர், சுந்தரேசுவர ஐயர் ஆகியோ ருடைய நட்பும் பண்டிதமணிக்கு வாய்த்தது.

பண்டிதமணி எப்பொழுதும் வெண்ணிற வேட்டி யையே உடுத்துவார். அதை மூலக் கச்சம் வைத்துக் கட்டிக்கொள்ளுவார். வெண்ணிறச் சட்டை அணிந்து கொள்ளுவார். அதன்மேல், கழுத்தில் ஒரு சுற்றிச்சுற்றி ஒரு தலைப்பு முன்புறமாகவும், மறு தலைப்புப் பின்புறமாக வும் இருக்கும்படி விசிறி மடிப்பு மடித்த மேல்வேட்டி அணிந்திருப்பார். கையில் வெள்ளிப் பூண் இடப்பெற்ற பிரம்பு. நீறிலங்கும் நெற்றி. புன்முறுவல் பூத்த முகம். முகத்தில் வலக்கண் அருகே ஒரு தழும்பு. நகைச்சுவை ஒழுகும் திருவாய். 'பழங்காலத்து நாட்டுக் கோட்டைச் செட்டியார்களைப் போலவும், இக்காலத்து இளைஞர்களைப் போலவும் இல்லாமல், கிராப்பா—இல்லையா என்று காண் பார் முடிவு கட்ட முடியாதநிலை.' யான் அறிந்த பதினெட்டு ஆண்டுகளிலும் பண்டிதமணி இவ்வாறே காட்சி தந்தார்.

மகிபாலன்பட்டியிலும் சரி, அண்ணாமலை நகரிலும் சரி வீட்டுக்குள்ளேயே பண்டிதமணி இருந்தாலும், பரந்த வெளியுலகிலேயே அவர் சிந்தனை இருந்துவந்தது. உலகி யல் நிகழ்ச்சிகளை அறிய வேண்டுமென்ற துடிதுடிப்பு அவ ருக்கு இருந்தது. நாள் தவறாமல் 'சுதேசமித்திரன்' இதழைப் படித்துவந்தார். இதழில் வராத செய்திகள்—உள்ளூர் நிகழ்ச்சிகள், மகிபாலன்பட்டியில் வாழும் பலருடைய குடும்ப விவகாரங்கள், அண்ணாமலை நகரில் இருக்கும் ஆசிரியர், மாணவர் பற்றிய பலப்பல செய்திகள் ஆகிய

இவற்றை அறிவதில் அவர் பேரார்வம் காட்டிவந்தார். சன்னலுக்கு அருகேயே அமர்ந்துகொள்வார். வீதியில் செல்வோரையெல்லாம்—தமிழறிஞர் முதல் தயிர்க்காரி வரை யாவரையும்— அழைத்து உரையாடுவார். பாமர மக்களோடு அளவளாவும்போது, இலக்கிய உலகை மறந்து, அவர்கள் மகிழும்வண்ணம் பேசுவார். கல்வி யறிவில்லாதவர்கள் புடை சூழ்ந்திருக்கும்போது, அவர்க ளிடமிருந்து பண்டிதமணி கொள்வது மிகுதியாகவும் கொடுப்பது குறைவாகவும் இருக்கும்; இவர்களோடு இடைவிடாது அளவளாவி மகிழும் புலவர்கள் சூழ்ந்திருக் குங்கால், பண்டிதமணி அவர்கள் கொடுப்பது மிகுதியாக வும் கொள்வது குறைவாகவுமே இருத்தல் இயல்பு.

உலகப் பேரறிஞர் பலர் உடல் அமைப்பின் குறை வால் தனிச் சிறப்புடையவர்களாக இருப்பது உலக இயல்பு. மில்டன் என்னும் ஆங்கிலப் பெரும் புலவர் இரு கண்களின் பார்வை இழந்தவர். இந்தியாவின் வைஸ்ரா யாக இருந்த வேவல் பிரபு ஒரு கண் பார்வையும் முது கெலும்பின் வன்மையும் இல்லாதவர். மலையாளக் கவிஞரான வள்ளத்தோல் செவியின் சுவை யுணரும் பேறு பெருதவர்; நாமக்கல் கவிஞரும் இப்படிப்பட்டவரே.

உடல் அமைப்பின் குறைவால், பண்டிதமணி அவர் கள் வாழ்வில் எத்தனையோ நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இவை அவரது வரலாற்றின் சுவையான பகுதிகள். எனவே, இவற்றைக் குறிப்பிடாமலிருக்க இயலவில்லை.

பண்டிதமணி நாற்காலியில் அமர்ந்த நிலையிலேயே இருப்பர். காண வருவோர், எதிரிலுள்ள நாற்காலிகளில் அமர்வர். இடையில் ஒரு மேசை இருக்கும். நூல்கள் திறந்த வண்ணம் எப்போதும் மேசைமீது இருப்பதுண்டு.

பேராசிரியர் ஒருவர் மாணவர்க்குப் பாடஞ் சொல்லும் வகுப்பு அறையின் காட்சியை அவர்கள் இருக்கும் இடத்தில் காணலாம்.

சிறிது தொலைவிலுள்ள இடங்களுக்கும் பண்டிதமணி அவர்கள் மாட்டு வண்டியிலேயே செல்ல நேர்ந்தது. எனவே, அண்ணுமலை நகரிலிருந்தபோது, அவரிடம் ஓர் ஒற்றைமாட்டு வண்டி இருந்தது. அதில் அவர் ஏறிக் கொண்டு நாள்தோறும் மாலைநேரத்தில் உலாவிவரச் செல்வார்; ஒருநாள் நண்பர் ஒருவரையும் வண்டியில் உடனழைத்துச் சென்ருர். வண்டி போகும்போது, முன்பக்கமாக உட்கார்ந்துகொண்டு, 'இப்படிப் போ, அப்படிப் போ, என்றுகூறி, வண்டிக்காரனுக்கு வழி காட்டிக்கொண்டே சென்ருர். உடன் வந்தவரோடு ஒரு சிறிதும் பேசவில்லை. அதனுல், அந்த நண்பரின் மனம் புண்பட்டது. அப்போது' பண்டிதமணி, "வண்டியில் பூட்டப்பெற்றிருக்கும் மாடு புதிது; வண்டிக்காரனும் புதிய ஆள். அவன் மாட்டை ஓட்டுகிருன்; நான் அவனை ஓட்டுகிறேன். எனவே, என் கருத்தனைத்தும் அப்பக்கமே திரும்பிவிட்டது" என்ருர்.

ஒரு தடவை, ஒரு சொற்பொழிவுக்குப் பண்டிதமணி காலங்கடந்து சென்ருர்கள்; அவ்வமயம், "யான் இன்று குறித்த காலங்கடந்து வந்தது பற்றி மன்னிக்கவேண்டுகிறேன். என் மனேவேகம் அதிகமாக இருந்தும், இரதவேகம் குறைவு பட்டமையின் தாமதித்து வர நேர்ந்தது" என்று வண்டி மெல்ல நகர்ந்ததைக் குறிப்பிட்டார்கள்.

திருவாவடுதுறை ஆதீனத்தின் தலைவராக இருந்த அம்பலவாண தேசிகர் அவர்களும் பண்டிதமணி அவர்களும் இனிய நண்பர்களாக இருந்தனர். முதல் முறை அவர்களைக் காண நேர்ந்தபோது, பண்டிதமணி

அவர்கள் மகாசன்னிதானம் அவர்களுடைய பாதத்தில் விழுந்து வணங்கினர்கள். அப்போது, அவர்களுடைய கைப் பிரம்பு வழுக்கியதால், பண்டிதமணி கீழே விழுந்துவிட்டார். மகாசன்னிதானம் உடனே எழுந்துவந்து பண்டிதமணியைத் தாங்கினர். அப்போது, பண்டிதமணி, ''பக்தர்களாகிய நாங்கள் தவறுவதும் தாங்கள் தாங்குவதும் இயல்புதானே'' என்று சிலேடை நயத்தோடு குறிப்பிட்டனர். இனி, ஆதீனத்திற்கு வரும் போது, கீழே விழுந்து வணங்க வேண்டாமென்று மகா சன்னிதானம் பண்டிதமணியைக் கேட்டுக்கொண்டாராம்.

திருச்சிராப்பள்ளியில் ஆசிரியராகப் பணியாற்றிய நாவலர் ந. மு. வேங்கடசாமி நாட்டார் அவர்கள் ஒருமுறை பண்டிதமணி அவர்களைத் திருச்சிக்கு மேற்கே மூன்ருவது மைலிலுள்ள திருக்கற்குடிக் கோவிலுக்கு அழைத்துச் சென்ருராம். அப்போது, கோவிலில் ஒவ்வோர் இடத்திலும் பண்டிதமணியை வழிகூட்டி அழைத்துச் சென்றமையால் இடையிடையே 'படி இல்லை' என்று சொல்லிக்கொண்டே வந்தார்களாம். அப்போது, பண்டிதமணி, ''இறைவன் சன்னிதிக்கு வந்து படி இல்லை என்று சொல்லாதீர்கள்; இறைவன்தானே எல்லோருக்கும படி அளப்பவன்'' என்று கூறினர்களாம்.

பண்டிதமணி அவர்கள் தலைமை தாங்காமல், சொற்பொழிவாளராக மட்டும் கலந்துகொண்ட கூட்டங்களிலும் ஏனைய சொற்பொழிவாளர்கள் யாவரும் தரையில் உட்கார்ந்திருகக, இவர்கள் மட்டும் தலைவருக்கு அருகே நாற்காலியில் இருந்து வந்தார்கள். ஆகையால், விழாத் தலைவர்களும் மெய்மறந்து, இவர்களையே 'தலைவர்' என்று குறிப்பிடுவது வழக்கமாக இருந்தது.

'கம்பர் யார்?' என்ற கிளர்ச்சி தமிழகத்தில் நடை பெற்றபோது, "கம்மை உடைவன் கம்பன்; அவ்வகையில் பார்க்கும்போது யானே கம்பன்" என்று பண்டிதமணி வேடிக்கையாகச் சொன்னார்கள்.

சென்னைப் பல்கலைக் கழகத்தின் பாடத்திட்டக் குழுவுக்குப் பண்டிதமணி தலைவராக நியமிக்கப் பெற்றார். அக் குழுவின் கூட்டம் வழக்கம்போல் கடற்கரையிலுள்ள பல்கலைக் கழக மாளிகையில் மேன்மாடியில் நிகழுமென்று அறிவிக்கப்பெற்றிருந்தது. சிலகாலம் கவர்னராக இருந்த, சர். மகமது உஸ்மான் அப்போது, துணை வேந்தராக இருந்தார்கள். அவரது இல்லத்திற்குச் சென்று பண்டிதமணி கூட்ட அறிக்கையைக் காண்பித்தார்கள். உடனே, அவர், "பண்டிதமணி அவர்கள் தலைவராகவோ உறுப்பினராகவோ கலந்துகொள்ளும் எல்லாக் கூட்டங்களும் கீழ் இடங்களிலேயே நிகழவேண்டும்" என்று ஆணை பிறப்பித்தார்.

பண்டிதமணியிடம் பெருமதிப்புடைய ஒரு செல்வர் தம் வீட்டுக்கு அவரை அழைத்தார். மோட்டார் தம் வீட்டு வாயிலில் நின்றதும், அச்செல்வர் பெரு மகிழ்ச்சியடைந்து, விரைந்துசென்று, மோட்டார்க் கதவைத் திறந்தார்; ஊன்றுகோல் முதலிய பொருள்களைத் தாமே வேகமாக வீட்டுக்குள் கொண்டுபோய் வைத்துவிட்டு வந்து, பண்டிதமணியை, "வருக, வருக" என அன்பொழுக அழைத்தார். சிறிதும் பதருமல், பண்டிதமணி, "அந்த ஊன்றுகோலைத் தருக; இன்றேல் என்னால் அங்கு வர இயலாது" என்றார்.

பண்டிதமணி அவர்களின் அறிவை வியந்து, அவருடைய அரிய நட்பைப்பெற விரும்பியவர் பலர். அவ்

அறிஞர்கள், அவர்களது உடற்குறையைக் கண்டு உள்ளம் உருகிப் பணிபுரிவார்கள். ஒருகால், பண்டிதமணி அவர்கள் சிகிச்சை செய்துகொள்ள, பொன்னமராவதி மருத்துவ நிலையத்திற்குச் சென்றிருந்தார்கள் அப்போது டாக்டர் வெளியே சென்றிருந்தார். பணியாள் போலக் காட்சிதந்து, சட்டையின்றியும் குடுமியோடும் ஒருவர் மருத்துவ நிலையத்தில் நின்றுகொண்டிருந்தார். பண்டிதமணி, அவரைப் பார்த்து, "ஐயா, கொஞ்சம் தண்ணீர் கொண்டுவர முடியுமா?" என்றார். அவர் உடனே சென்று, தண்ணீர் கொண்டுவந்து பணிவுடன் கொடுத்தார். பிறகு, அவரை நோக்கி, 'இட்டிலி கொண்டு வருக' என்றார் பண்டிதமணி. அவர் உடனே சென்று இட்டிலியும் கொண்டுவந்து கொடுத்தார். இந்நிலையில் டாக்டர் வேணுகோபால் நாயுடு அவர்கள் மருத்துவ நிலையத்துக்கு வந்து சேர்ந்தார்கள்; "யான் அறிமுகப் படுத்தி வைக்கு முன்னரே பெரும் புலவர்களாகிய நீங்கள் இருவரும் ஒருவரையொருவர் தெரிந்துகொண்டு விட்டீர்களே!" என்று அவர் சொன்ன பிறகே, தமக்குப் பரிவுடன் பணிவிடை செய்த அந்த அடக்கமான அன்பர்தான் சோழவந்தானூர் மகாவித்துவான் அரசஞ் சண்முகனார் என்பதைப் பண்டிதமணி அவர்கள் அறிந்துகொண்டார்கள். அன்று தொடங்கி இருவரும் மிக நெருங்கிய நண்பராயினர். பண்டிதமணி அவர்களின் புலமைக்கு இந்த நட்பு உறு துணையாக இருந்ததை அடுத்த கட்டுரையில் விளக்கமாகக் கூறுவோம்.

# 3. கல்வியறிவும் புலவர்கள் தொடர்பும்

'கண்டது கற்கப் பண்டிதனுவான்' என்று ஒரு பழமொழி வழங்கிவருகிறது. இதற்கு மாறுக விளங்கியவர் பண்டிதமணி. இவர் கண்டவற்றை யெல்லாம் படியாமல், ஒருசில சிறந்த நூல்களை மட்டுமே ஊன்றிப் படித்துப் புலமை அடைந்தவர். சீவகசிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, பெரியபுராணம், திருவாசகம், அகநானூறு, புறநானூறு, கம்பராமாயணம், திருக்குறள் (பரிமேலழகர் உரை) என்னும் குறிப்பிட்ட நூல்களையே இவர் பயின்ருர்.

சோழவந்தானூர் மகாவித்துவான் அரசஞ் சண்முகனுர் பேரறிஞராகவும் பெரும்புலவராகவும் அக்காலத்தில் திகழ்ந்தார். இலக்கியப் பயிற்சியில் தமக்கு ஒப்பாரும் மிக்காருமில்லை என்று சொல்லும்படி அவர் சிறப்படைந்திருந்தார். இலக்கணக் கடல் என்று அவரை அறிஞர் பாராட்டினர். இலக்கியங்களைப் பிறர் உதவியின்றிப் பண்டிதமணி தாமே படித்துணர்ந்த போதிலும், அவர் சேனுவரையம், தொல்காப்பியம் முதலிய இலக்கண நூல்களை அரசஞ் சண்முகனுரிடமே பாடங் கேட்டார். சண்முகனுர் சொல்லிக் கொடுத்ததைவிட, பண்டிதமணி தாமே ஆராய்ந்து கேட்ட வினுக்களுக்கு விடையும், ஐயங்களுக்குத் தெளிவுரையும் கூறியதே பெரும் பகுதி எனலாம். சண்முகனுரைப் பண்டிதமணி தம் ஆசிரியராகவே கருதினுர்; ஆனுல் சண்முகனுர் பண்டிதமணியைத் தம் நண்பராகவே மதித்தார். கதிரேசனுருடைய

இயற்கையறிவும் திறனும் அவரைப் பெரிதும் வியப்படையச் செய்தன. சண்முகனுர் பல நாட்கள் மகிபாலன் பட்டியிலேயே தங்கி, இலக்கண இலக்கியக் கடலில் தாமும் மூழ்கி, பண்டிதமணி அவர்களையும் மூழ்குவித்தார். அந்நாட்களில் பண்டிதமணியின் அருமைத் தாயார் சிவப்பி ஆச்சி அவர்கள் சண்முகனுரைத் தம் பிள்ளைகளில் ஒருவராகவே கொண்டு அவரை அன்புடன் உபசரித்து வந்தார்கள்.

1906-ல் அரசஞ் சண்முகனுர் பண்டிதமணி அவர்களுக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தார்கள். அக்கடிதத்தின் மேற்கூட்டில் பண்டிதமணியை, '**மஹாவித்துவான்**' என்று குறிப்பிட்டிருக்கிறுர். அக்கடிதம் ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் தமிழ்நாட்டில் செல்வக் குடும்பத்தில் பிறந்த பெரும் புலவர்கள்கூட வறுமையால் வாடிய காட்சியினை நம் கண்முன்னே நிறுத்துகின்றது. பண்டிதமணி அவர்கள்பால் சண்முகனுர்க்கு இருந்த நம்பிக்கையும் அன்பும் அதனுல் தெரியவருகின்றன; சண்முகனுரின் புலமை வளமும் கற்பனைத் திறமும் புலனுகின்றன. எனவே அதன் படியைக் கீழே காண்க.

*18—12—06*
*சோழவந்தான்*

*அன்புருவாய நண்பரவர்கள் சமுகத்துக்கு*
*வந்தனம்.*
*உபயகுசலோபரி.*

*தங்களைவிட்டு நீங்கி இவ்விடம் வந்தபின் கார்த்திகை 15உ வரை சில காரணத்தால் திண்டுக்கல் முதலாய சிலவிடத்துக் கடிதப் போக்குவரத்தின்றி*

யும் பிற ரறியாதும் வசிக்க நேர்ந்தது. அதனால் தங்களுக்கும் ஏனையோருக்கும் கடிதமெழுதுதல் தடையுற்றது.

கனம் டிரசரரவர்கள் மூன்று கடிதம் எழுதியும் என் கைக் கெட்டாது பின் இவ்வூர்ப் போஸ்டு மாஸ்டரவர்களால் கேள்வியுற்றுச் சென்றவாரம் கடிதம் எழுதினேன். இன்று அவர்கள் கடிதம் நேரிலும் பார்க்கப்பெற்றேன்.

அவர்கள் கட்டளைப்படி டிசம்பர் மீ 21௳ வெள்ளி இவணின்று பிரயாணமாய் மேலூர் மார்க்கம் வருவேன். வந்தால் ஞாயிறு அல்லது திங்கள் மகிபாலன்பட்டியில் தங்களைக் கண்டபின் யாமிருவேமும் கனம் டிரசரரவர்கள்பாற் செல்ல உத்தேசம். தாங்கள் ஞாயிறு, திங்கள், செவ்வாய் மாலை வரை ஊரிலிருக்கும்படி பிரார்த்திக்கிறேன்.

இனி என் வரலாறு சிறிது கூறுவல்.

சுயோதனனென்னுங் கடனால் ஊக்கமெனு நாடிழந்து, சஞ்சலமென்னுங் காட்டில் மதியென்னும் பாஞ்சாலியொடு பொறியென்னும் பஞ்சவர் கூட்டமாகிய யான் அலைந்து திரிந்தமை தாங்களும் அறிந்ததொன்றே. இவ்வாறு நிகழ்காலைத் தங்களைப் பிரிந்து இங்குற்றபின், ஐப்பசி முதற் கரந்துறையு நோத் திண்டுக்கல் லென்னும் விராட நகரத்து ஒரு மகமதியக் கனவானிடந் தங்கி அக்கனவானுக்கு ஏக்கர் 5½ உள்ள நஞ்செயை ரூ. 3058க்குக் கிரயஞ் செய்து, வேறு சில நஞ்செயை ரூ. 2000க்கு

ஒத்திவைத்தும் பத்திரம் எழுதிக் கரந்துறை விடுத்து வெளிப்பட்டுப் பின் கார்த்திகை முதல் தேதி முதல் 15வ வரை உத்தியோக பருவமு நடத்தினேன். இப்போது 18 நாட் போரு முடிந்தது. சுயோதனனும் துடை முறிந்து வீழ்ந்தான். இன்னும் உயிர் போகவில்லை. சீக்கிரம் போம். (ரூ. 5000 வரை கடன் தீர்த்தும் இன்னும் ரூ. 800 இருத்தலால் இவ்வாறு உருவகப்படுத்தினேன்). போயபின், நூலாய்ச்சி என்னு முடிசூட்டும் நடக்கும். நடந்தால் ஊக்க நாட்டாட்சியால் தொல்காப்பியப் பயிர் தழைத் தோங்கலு முண்மையே. பிற நேரில்.

அன்பன்,
அ. சண்முகன்.

சண்முகனார் அவர்களுக்குப் பண்டிதமணி அவர்கள் தாமும் பெரும் பொருள் வழங்கி, இலங்கையில் அவருக்குப் பொருளுதவி சேகரிக்கவும் துணையாக இருந்தார்கள். மேலைச் சிவபுரி வ. பழ. சா. குடும்பத்தாரும் முறையூர் சண்முகம் செட்டியார் என்னும் பெருஞ் செல்வரும் பண்டிதமணியின் வேண்டுகோளுக் கிணங்கிச் சண்முகனாருக்கு ஆதரவளித்து வந்தார்கள். சண்முகனார் அவர்கள்,

'கல்விதனம் மிக்க கதிரேசனும் வணிகன்
வல்வினை மெற்கொழித்தான் வள்ளுவரே'

எனக் கூறியிருத்தலிலிருந்து, பண்டிதமணி, புலவராக மட்டுமன்றிப் புலவர்க்குக் களைகண்ணாகிப் புரவலராகவும் திகழ்ந்தார் என்பது தெரியவருகிறது.

அரசஞ் சண்முகனார் வாயிலாகப் பண்டிதமணி அவர்களுக்குப் புதிய நண்பர் ஒருவர் அறிமுகமானார். மதுரை

வித்தியாபானு அச்சகத்தின் உரிமையாளரும், குமண சரித்திரம் முதலிய பல சிறந்த நூல்களின் ஆசிரியருமான மு. ரா. கந்தசாமிக் கவிராயர் அவர்களே இந் நண்பர் ஆவார்கள். இந் நட்பின் பயனுக் வித்தியாபானு இதழுக்குப் பண்டிதமணி விஷயதானம் செய்யத் தொடங்கினர்.

மதுரைக்குச் செல்லும் போதெல்லாம் பண்டிதமணி அவர்கள் மு. ரா. கந்தசாமிக் கவிராயர் அவர்களைச் சந்தித்து அளவளாவுவார்கள். இவ்வாறு அவர்கள் ஒரு முறை சென்றிருந்தபோது, இராவ் சாகிபு, முதுபெரும் புலவர், தமிழ்ப் பெருங்கவி, வெள்ளக்கால் வெ. ப. சுப்பிரமணிய முதலியார் அவர்களும் அங்கு வந்திருந்தார்கள். அப்போது இவ்விருவரும் ஒருவரையொருவர் அறிந்து கொள்ளும்படி, கவிராயர் அவர்களால் அறிமுகம் செய்து வைக்கப்பெற்றார்கள். திரு. வெ. ப. சு. அவர்களின் 'அகலிகை வெண்பா' வில் பல பாடல்களைப் பண்டிதமணி படித்துப்பார்த்து இன்புற்றார்கள்.

ஐப்பசி மாதந்தோறும் இராமாயண ஏடு படித்தலை நலம் தரும் கடமையாகக் கருதிவரும் குடும்பங்கள் செட்டி நாட்டில் உண்டு. ஏடு படிக்கத் தெரிந்தவர் ஒரு சிலரே. அவர்களும் பெரும்பாலும் தவருகவே படித்து வந்தனர். தவருன செய்திகள் மக்களிடையே பரவுதலைத் தடுக்க வேண்டுமென்று பண்டிதமணி அவர்கள் அக்காலத்திலேயே விரும்பினுர்கள். இராமாயணக் கதையையும் கம்பன் காவியச் சுவையையும் மக்கள் பிழையின்றி உணர்ந்து கொள்ளும் நிலையில், வெ. ப. சுப்பிரமணிய முதலியார் அவர்களின் கம்பராமாயணச் சாரப் பதிப்பினை வாங்கவும், ஒரளவு நூல் நயங்களைச் செட்டிநாட்டிலுள்ள

மக்கள் உணர்ந்து மகிழவும் பண்டிதமணி ஏற்பாடு செய் தார்கள்.

பீமகவி என்பார் செட்டி நாட்டில் மதிக்கத்தக்க ஒரு புலவராக விளங்கி வந்தார். பண்டிதமணியும் அவர்களும் நெருங்கிய நண்பர்களாக இருந்தனர். பல நிகழ்ச்சிகளி லும் இலக்கிய முயற்சிகளிலும் இருவரும் ஒருங்கே ஈடுபட் டிருந்தனர். இடையே கருத்து வேறுபாடு தோன்றிற்று. பீமகவி தம்மைக் குறை கூறியதாகப் பண்டிதமணியிடம் சிலர் தெரிவித்தனர். ஆகையால் பீமகவியின் சொற் பொழிவு ஒன்றில் காணப்பெற்ற குறைகளையெல்லாம் தொகுத்து, வித்தியாபானுவில் பண்டிதமணி விரிவாக எழுதினார். இதைப் படித்து வெகுண்ட பீமகவி பண்டித மணியின்மீது மானநட்ட வழக்குத் தொடுத்தார்.

வழக்கில் எதிர்த்துப் பேச ஆங்கிலமும் தமிழும் அறிந்த ஒரு வழக்கறிஞரைப் பண்டிதமணி தேடினார். அப்போது (டாக்டர்) சோமசுந்தர பாரதியார் என்னும் வழக்கறிஞ ரைத் தம் கட்சியை எடுத்துரைக்க இவர் ஏற்பாடு செய்து கொண்டார். பாரதியார்க்கும் பண்டிதமணியார்க்கும் அன்று தொடங்கிய நட்பு நாற்பது ஆண்டுக்காலம்—பண்டித மணியின் இறுதி நாள்வரை—நாளொரு மேனியும் பொழு தொரு வண்ணமுமாக வளர்ந்தது. 1941-ல் பண்டித மணி அவர்களுடைய மணிவிழாவில் பாரதியார் கூறிய பின்வரும் சொற்கள் இங்கே குறிப்பிடத் தக்கவை: "என் நெடு வாழ்க்கையில் முதலில் ஆங்கிலமன்றித் தமிழில் பேசி அறியாத என்னைத் தாய்மொழியில் தமிழர் கூட்டத்தில் பேசவைத்து, அத்துறையில் ஊக்கித் தமக்கு இனியர் குழு வில் என்னையும் சேர்த்து அன்புகாட்டி, பண்டிதமணி அவர்கள் அறிஞருலகில் எனக்கும் இடம் தந்தார்கள்."

அரசஞ் சண்முகனர் அவர்களிடமிருந்துஒருஅறிமுகக் கடிதம் பெற்று, 1906-ல் பண்டிதமணி அவர்கள் நாகைப் பட்டினம் சென்று, திரு. வேதாசலம் பிள்ளை அவர்களைச் (மறைமலையடிகள்) சந்தித்து, அன்னருடைய நட்பையும் பெற்றார்கள். அந்நட்பும் வளர்மதியென வளர்ந்தது. நாகை வேதாசலம் பிள்ளை அவர்கள்தாம் எழுதிய முதற் கடிதத்தில் பின்வருமாறு குறிப்பிட்டிருக்கிறார்கள்:

> "தங்களை தேரில் அளவளாவப் பெற்றக்கால் தங்கள் அரும் பெருங் குணமாட்சியும், சிவபத்திப் பெருந்திறமும், செந்தமிழ்ப் புலமையும் என்னுள்ளத்தில் மிகப்பதிந்து மகிழ்வுறுத்தின. தங்களைநண்பராகப் பெற்ற எனது புண்ணியத்தினையே மிக வியந்து நமது நட்பின் கெழுதகைமை எழுமை எழு பிறப்பும் செழிப்புறுகவெனத் திருவருளை வேண்டி வழுத்துகின்றேன்."

அன்பர்களின் வேண்டுகோளுக்கிணங்க, சில மாதங்களில் பண்டிதமணி மீண்டும் நாகைப் பட்டினத்திற்குச் சென்றார். அப்போது அங்கு நடைபெற்ற சைவசித்தாந்த சமாஜக் கூட்டத்தில்ஜெ. எம். நல்லசாமிப் பிள்ளைஅவர்கள் தலைமையில் முதன் முதலாகப் பிரசங்கம் செய்தார்.

அக்காலத்தில் தலைசிறந்த சொற்பொழிவாளராக விளங்கி, தமிழ்நாடெங்கும் பேரறிஞர் எனப் பெரும்புகழ் படைத்திருந்த ஞானியார் அடிகளை, நாகை வேதாசலம் பிள்ளை அவர்கள் வாயிலாகப் பண்டிதமணிசந்தித்தார்கள். பண்டித மணியின் செந்தமிழ் இலக்கண இலக்கியப் பயிற்சி ஞானியார் அடிகளைப் பெரிதும் கவர்ந்தது.

இவ்வாறு ஏற்பட்ட நட்பின் விளைவாக ஞானியார் அடிகளின் சொற்பொழிவுகள் பலவற்றை அடுத்த ஈராண்டு

களில் பண்டிதமணி அவர்கள் அடிக்கடி கேட்டு இன்புற்ருர்கள். சிறந்த முறையில் சொற்பொழிவாற்றுவது ஆங்கில மொழியில்தான் இயலுமென்று பண்டிதமணி கருதியிருந்த எண்ணம் மாறியது. சொல் இனிமையும் கருத்தழகும் நிறைந்தபேச்சுக்களைத் தமிழ்மொழியிலும் பேச இயலுமென்பதை ஞானியார் அடிகளின் தலைசிறந்த சொற்பொழிவுகள் பண்டிதமணியார்க்கு உணர்த்தின. தாமும், உள்ளத்தே தோன்றிய எண்ணங்களைக் கோவையாக எடுத்துரைக்கும் பேச்சுத்திறனைப் பெறவேண்டுமென்று பண்டிதமணி கருதினர்.

சொற்பொழிவுக்கு உரிய குறிப்புக்களை ஞானியார் அடிகள் ஒழுங்குபடுத்தி அமைத்து எழுதிவைத்திருந்ததை அறிந்த பண்டிதமணி அவர்கள், தாமும் இளமைக்காலத்தில் தம்முடைய சொற்பொழிவுக்கேற்ற குறிப்புக்களையும் மேற்கோள்களையும் ஒரு புத்தகத்தில் எழுதி வைத்துக் கொண்டு, ஒவ்வொரு கூட்டத்திலும் அவற்றை வரையறைப் படுத்தியே பேசுவதை வழக்கமாகக் கொண்டிருந்தார்கள்.

ஞானியார் அடிகளைச் சந்தித்துவிட்டு, திருப்பாதிரிப் புலியூரிலிருந்து திரும்பும் வழியில், கும்பகோணத்தில் தங்கி, 'காலேஜ் தமிழ்ப்பண்டிதர்' வே. சாமிநாத ஐயர் (பிற்காலத்தில் மகாமகோபாத்தியாயர் டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர்) அவர்களைப் பண்டிதமணி சந்தித்தார்கள். இருவர்க்கும் 1903 முதலே கடிதத் தொடர்பு உண்டு; பண்டிதமணியின் செய்யுள் இயற்றும் வன்மையை ஐயரவர்கள் தாம் எழுதிய முதற்கடிதத்திலேயே பெரிதும் பாராட்டியிருந்தார்கள். முதற்சந்திப்பில்—பின்னர் ஒவ்வொரு முறையும் சந்தித்தபோது போன்றே—இருவரும் இலக்கிய அறிவைப் பரிமாறிக்கொண்டனர்.

உ. வே. சாமிநாத ஐயரவர்களுக்கும் பண்டிதமணி அவர்களுக்கும் இருந்துவந்த நெருங்கிய நட்பைப் பற்றி இந்நூலின் பல இடங்களில் பின்னர்க் கூறுவோம். ஐயரவர்கள் பண்டிதமணி அவர்களுடன் 'சாவகாசமாகச் சல்லாபம் செய்வதைப் பெரிதும் விரும்பினார்கள் என்றால், ஏனைய புலவர்கள் பண்டிதமணியுடன் உரையாடுவதை ஒரு பொழுது போக்காக விரும்பியதில் வியப்பென்ன ?

பண்டிதமணி அவர்களோடு உரையாடும் வாய்ப்பைப் பெறாதபோது அவர்களுடன் கடிதத் தொடர்பு வைத்துக் கொள்வதைப் புலவர்கள் ஒரு பரிசிலாகக் கருதினர். சிலகாலம் பண்டிதமணி அவர்களிடமிருந்து கடிதம் வரா மல் அல்லற்பட்ட மறைமலை அடிகளார் அதன் காரணத்தை வினவி அறிந்து பின்வருமாறு எழுதியிருக்கிறார்கள் :

> நீங்கள் பழமை தொட்டு எனக்கு நண்பராக இருத்தலால், எனக்காவது என்னைச் சேர்ந்தவர்களுக்காவது உங்களிடத்தில் துவேஷம் வருவதற்குச் சிறிதும் காரணமே இல்லை. உங்களிடத்தில் அன்பு பாராட்டி வருவதல்லாமல், உங்களை யாம் சிறிதும் தூஷித்ததில்லை. அங்ஙனமிருக்க, உங்களை யானும் என்னைச் சேர்ந்தவர்களும் தூஷித்ததாக நினைந்து நீங்கள் வருந்துவது கண்டு யான் பெரிதும் வருந்துகின்றேன். இனி நீங்கள் அங்ஙனம் வருந்தாது பழமை போல் நட்புரிமை பாராட்டிக் கடிதம் எழுதும்படி கேட்டுக்கொள்கிறேன்.
>
> அன்புள்ள,
>
> **வேதாசலம்,**
>
> 18—8—1914.

சென்ற இடங்களில் எல்லாம் பண்டித மணியார் புதிய நூல்களையும் புதிய இதழ்களையும் விலைக்கு வாங்கி வந்தார். சிலரைப் போல் இவர் நூல்களை வாங்கி, பெருமைக்காக அவற்றை அடுக்கி வைத்துக் கொள்ளவில்லை. படிக்கப் படிக்க, புது நூல்களை வாங்குவது இவருடைய வழக்கம். இவருடைய நூல் நிலையத்தில் அப்போது ஏறத் தாழ 1,500 நூல்கள் இருந்தன. பிற்காலத்தில் இவர்களுக்குக் கிடைத்த நூல்கள் யாவும் அன்பளிப்பாக வழங்கப்பெற்றவையே.

நாகையில் முதற் சொற்பழிவு ஆற்றிய பின்னர், இளைஞர் கதிரேசனுர் செட்டி நாட்டிலும் பல இடங்களில் சொற்பொழிவு செய்தார். இலக்கண இலக்கியப் புலமை மிக்க இவருடைய பேச்சைக்கேட்டுக் காரைக்குடி சொக்கலிங்க ஐயா பெரிதும் மகிழ்ந்தார். சொக்கலிங்க ஐயா சைவ சித்தாந்த அறிஞராக விளங்கிச் சைவ உலகின் தனிப்பெரு மதிப்பிற்குரியவராக வாழ்ந்து வந்தார். புலமைத்துறை மட்டும் பயன்தராதென்றும், சமயத்துறையிலும் ஈடுபாடு இருக்கவேண்டு மென்றும் சொக்கலிங்க ஐயர் கதிரேசனுரிடம் கூறினுர்கள். திருமுறைகளிலும் சைவசித்தாந்த நூல்களிலும் நிரம்பிய பயிற்சி பெறுதல் இன்றியமையாதது என்பதைக் கதிரேசனுருக்குச் சொக்கலிங்க ஐயா அறிவுறுத்தினுர்கள். கதிரேசனுரும் ஈராண்டுகள் அவரை அணுகிச் சைவசித்தாந்த நூல்களைத் தெளிவாக அறிந்து கொண்டார்.

தம் அருமை மகன் சான்ரோேன் என அறிவுடைய நன் மக்களால் பாராட்டப்பெற்றதறிந்த கதிரேசனுரின் தாயார் ஈன்ற பொழுதினும் பெரிதும் மகிழ்ந்தார்கள்; எனினும் அவன் உடற்குறை நீங்கிப் பலவகைப் பேறுகளைப் பெறுவதற்குச் சிவபெருமானுடைய திருவருளைப்பெற இராமேஸ்

வரத்திற்குத் தல யாத்திரை செல்ல விரும்பினர். மூத்த மகனுன இவர்க்குத் திருமணம் ஆகாமையும், அதனுல் தம்பிமார்களின் திருமணம் தடைப் பட்டிருந்தமையும் சிவப்பி ஆச்சியாருக்குக் கவலேதந்தன. கவலே தீர்த்தருளும்படிஇறைவனே வேண்டித் தல யாத்திரையை ஆச்சியவர்கள் மேற் கொண்டார்கள். கதிரேசனுரும் இராமேசுவரம் சென்ருர்.

தாயாருடன் தலயாத்திரை செய்யச் சென்றிருந்த போதும் இவ்வழிச்செலவைக் கதிரேசனுர் இலக்கிய யாத்திரையாகவே மாற்றிக் கொண்டார். ஆரியக் கூத்தாடினுலும் காரியத்திலேயே கண்ணுயிருப்பவர் அல்லவா நம் கதிரேசனுர்?

இராமநாதபுரத்தில் மகாவித்துவான் ரா. இராகவ ஐயங்கார் அவர்களேப் பண்டிதமணி சந்தித்தார்கள். இருவரும் விரிவாக உரையாடினர். ஐயங்கார் அவர்கள் பண்டிதமணியைச் சீவக சிந்தாமணியில் சில கேள்விகள் கேட்டனர். அவைகளுக்கு அவர் சிறந்த முறையில் விடை கூறியதைக் கேட்டு மகிழ்ந்து, இராகவ ஐயங்கார் பண்டிதமணியைப் பாண்டித்துரைத் தேவர்க்கு அறிமுகம் செய்து வைத்தார். பாண்டித்துரை அவர்கள் மதுரையில் ஒரு தமிழ்ச்சங்கம் நிறுவ விரும்பிய காலம் அது. பண்டிதமணியின் புலமையை உணர்ந்த பாண்டித்துரை, மதுரைத் தமிழ்ச்சங்கத்தைத் தொடங்கி வைத்த புலவர்களில் ஒருவராகப் பண்டிதமணியையும் சேர்த்துக்கொண்டார்.

இலக்கியச்சுவை நலங்களில் திளேத்து மகிழ்தலேயே பொழுதுபோக்காகக் கொண்டிருந்த பண்டிதமணி வடமொழிக் காவிய நலங்களேயும் அறிந்துகொள்ள வேண்டுமென்று விரும்பினுர்; வடமொழியில் காளிதாசர் போன்ற

பெரும்புலவர்களால் இயற்றப்பெற்ற இலக்கியங்களைப் படித்து மகிழ எண்ணினூர். வடமொழி அறிவு ஓர் இனத் தார்க்கே உரியது என்று எண்ணியிருந்த காலத்தில் வட மொழியைப் படித்து, அம்மொழியில் உள்ள ஆகம நூல்க ளேயும் வியாகரணத்தையும் படிக்க விழைந்தார்; ஆதலால் வடமொழியில் வல்லுநராக விளங்கிய தருவை நாராயண சாத்திரியார் என்பவரை ஆசிரியராகக் கொண்டு ஐந்தாண் டுகள் வடமொழி பயின்றூர்; மாதம் எட்டு ரூபாய் வீதா் அவருக்குச் சம்பளம் கொடுத்து வந்தார்.

வடமொழி அறிவால் இருமொழிகளுக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகளைப் பண்டிதமணி நன்ருக உணர்ந் தார்கள். ஒரு மொழியில் நிரம்பிய புலமை அடைய வேண்டுமானல் பிறிதொருமொழிப் பயிற்சி வேண்டு மென்று அவர்கள் பலகால் கூறியதுண்டு. புதுவை இளைஞர் கழகத் தலைவரான ரா. ஆளவந்தார் என்பார் இயற்றிய பிரெஞ்சு இலக்கியம் என்னும் நூலுக்குப் பண் டிதமணி அவர்கள் பின்வருமாறு முன்னுரை எழுதியுள் ளார்கள் :

> "வேற்று நாட்டு மொழிகளில் உள்ள இலக்கியச் சிறப்பு எங்ஙனம் மதிக்கப்பட்ட தென்பதும், நம் நாட்டு மொழியில் உள்ள இலக்கியங்கள் எங்ஙனம் போற்றப்படவேண்டு மென்பதும் பிறமொழிப் பயிற்சி யாலேயே இயலும்."

பிறமொழிப் பயிற்சியின் பயனைப் பெறுவதில் பண்டித மணி அவர்கள் சிவஞான முனிவரின் ஆய்வு முறைகளைப் பின்பற்றினூர்கள். வடமொழியில் நிரம்பிய புலமை பெற் றிருந்தும் கூட, மறந்தும் அந்த மொழிநடையைக் கலவா மல், தூய தமிழில் எழுதியது சிவஞான சுவாமிகளின் தனிச் சிறப்பாகும். இந்த முறையையே பண்டிதமணி

யவர்களும் கையாண்டதை அவர்களுடைய மொழி பெயர்ப்பு நூல்களைக் குறிப்பிடும்போது விளக்குவோம்.

புறவாழ்க்கைச் சூழ்நிலைகளால் இலக்கியத்தில் முற்றி லும் பண்டிதமணி அவர்கள் ஈடுபட்டிருந்தது மேற்கூறிய வற்ருல் தெளிவாகும். இக்காலத்தில் பலரைப்போல, பட்டம் பதவி பெறவோ, பொருளீட்டவோ அவர்கள் கல்வி பயிலவில்லை. எனினும் பட்டமும் பதவியும் பொரு ளும் வலிய அவர்களை வந்து அடைந்தன. அவர்களே ஒருமுறை கூறியது இங்கே குறிப்பிடத் தக்கது: "ஓரளவு யான் கற்ற கல்வி பொருள் நோக்கம் பற்றியதன்று. வாழ்க்கையில் இன்பம் எய்துதல் குறித்ததேயாம். அக் கல்விக்குப் பரிசிலாக என்னை அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தில் பேராசிரியனுக வைத்துச் சிறப்பித்த நன்றியை என்றும் மறவேன்."

பண்டிதமணி அவர்கள் பலவான்குடியில் மணிவாசக சங்கம் தோற்றுவித்து, அதைச் சிறப்பாக நடத்திவந்தார்கள். சிவநேசர் திருக்கூட்டத்தின் முதல் தலைவராக இருந்தும் சிவம் பெருக்கினுர்கள். இலக்கியத்திலும் சைவத்திலும் பணியாற்றிய கதிரேசனுர் இந்த எல்லைக் கோடுகளுடன் நின்று விடவில்லை; உலகியல் நிகழ்ச்சிகளைச் சுதேசமித்திரன் வாயிலாகக் கூர்ந்து கவனித்து வந்தார்கள். 1910-ல் சுதேச மித்திரன் ஆசிரியர் ஜி. சுப்பிரமணிய ஐயரவர்கள் சுதேசி நிதி சேர்த்தபோது, கதிரேசனுர் செட்டிநாட்டில் அந்த நிதிக்குப் பணம் திரட்டினுர். "இத்தகைய தேசநன்மையைக் கருதிப் புரியும் உதவியே எல்லா அறத்தினும் சிறந்ததாகும், இவ்வறச் செயலில் முற்படாதவர் செல்வம் ஒரு சிறிதும் பயன்படாது" என்று பண்டிதமணி அவர்கள் பல இடங் களில் சொற்பொழிவாற்றினுர்கள். இந் நிகழ்ச்சியிலிருந்து பண்டிதமணியின் நாட்டுப் பற்று நன்கு புலனுகும்.

பிற்காலத்தில் அரசியலார் மகாமகோபாத்தியாயப் பட்டம் ஓர் இனத்தவர்க்கே உரியது என்ற கருத்தால் அதற்குப் பதிலாகப் பண்டிதமணிக்கு *ராவ் பகதூர்* என்ற பட்டத்தை வழங்க விரும்பியபோது பண்டிதமணி அதனை ஏற்க மறுத்ததும் இங்கே குறிப்பிடத்தக்கது.

மதுரைத் தமிழ்ச் சங்கத்து உறுப்பினராக இருந்து, அதன் நிகழ்ச்சிகளில் பண்டிதமணி பெரும் பங்கெடுத்து வந்தார்கள். உடல் நிலையையும் போக்குவரத்து வசதி யின்மையையும் ஒருசிறிதும் பொருட்படுத்தாமல் ஒவ்வொரு கூட்டத்திற்கும் மதுரைக்குச் சென்று வந்தார்கள். தாம் வாழும் பகுதியிலும் தமிழ் வளர்த்தற்கு ஒரு கிளை வேண்டுமென்று கருதிச் சன்மார்க்க சபையைத் தொடங்கினார்கள். அச்சபையை, மதுரைத் தமிழ்ச்சங்கத் தேர்வுக்குச் செல்லும் மாணவர்க்கு ஒரு பயிற்சி நிலையமாக அமைத்தார்கள். இச்சபையின் தோற்றமும் வளர்ச்சியும் வரலாறும் பண்டிதமணியின் பெரும்புகழின் தோற்றமும் வளர்ச்சியும் வரலாறுமாகும். எனவே இச்சபையைப் பற்றி அடுத்த கட்டுரையில் விரிவாகக் கூறுவோம்.

பண்டிதமணியார்க்குத் திருமணம் நடைபெற்றவரலாற்றைக் கூறி இக்கட்டுரையை முடிப்போம்.

அக்காலத்து நாட்டுக்கோட்டை நகரத்தார் குடும்பங்களில் 12 அல்லது 13 வயதில் திருமணம் நடைபெறுவது வழக்கம். உடற்குறையால் பண்டிதமணிக்கு உரிய காலத்தில் திருமணம் நடைபெறவில்லை. அதனால் தம்பிமார்களுக்கும் உரிய காலத்தில திருமணம் நடைபெறாமல் இருப்பதை அறிந்த பண்டிதமணி, "என் திருமணத்தைப் பற்றி நீங்கள் கவலைகொள்ளாமல் என் தம்பிமார்க்குத் திருமணம் நடத்துங்கள்" என்று தம் கருத்தை வெளியிட்டார். தம்பிமார்கள் இருவருக்கும் பண்டிதமணியே திருமணம் நடத்திவைத்தார்.

பண்டிதமணி, தம் திருமணத்தைப் பற்றிச் சிறிதும் கவலை கொள்ளாமல் உயர்ந்த நூல்களைக் கற்று இன்புறுவதிலும், சன்மார்க்கசபையின் வளர்ச்சியிலுமே தம்பொழுதைக் கழித்து வந்தார். தமிழ் நாடெங்கும் அறிஞர் குழுக்களிலே பண்டிதமணியின் பெயர் தெரிந்திருந்த போதிலும் செல்வச் செழிப்பில் திளைத்த செட்டியார்களுக்குக் கதிரேசனாரின் உடல் அமைப்பு மட்டுமே தெரிந்தது. சன்மார்க்க சபையின் வாயிலாக அவர்புகழ் மெல்லமெல்லச் செட்டிநாட்டிலும் பரவியது.

1912-ஆம் ஆண்டு சனவரித் திங்கள். அவ்வமயம் பண்டிதமணிக்கு வயது 32. செட்டிநாட்டில் பேரன்பேத்தி பெற்றெடுக்கும் பருவம். அப்போது தான் இவருக்குப் பெண்கொடுக்க வேகுப்பட்டி என்னும் சிற்றூரில் உள்ள ஒரு குடும்பத்தார் துணிவுடன் முன் வந்தனர்.

இவ்வாறு பண்டிதமணிக்குத் திருமணம் செய்ய முன் வந்தவர்கள் வேறு யாரும் இல்லை. இவர்களுடைய சொந்த அத்தையின் குடும்பத்தினரே.

பண்டிதமணி அத்தையின் மூதற் பெண் கலியாணி ஆச்சி. இப் பெண்ணையே பண்டிதமணிக்குக் கொடுக்கத் துணிந்திருந்தவர்கள் பின்னர் என்ன நினைத்தோ அவ் வெண்ணத்தை மாற்றிக்கொண்டனர். பிறகு அந்தப் பெண்ணை வேறிடத்தில் கொடுத்தனர். திருமணம் நிகழ்ந்த சில மாதங்களுக்குப் பின்னர் கலியாணி ஆச்சியார் கைம்பெண் ஆயினார். பண்டிதமணிக்குக் கலியாணி ஆச்சியைக் கொடுக்காத குறையால்தான் அப்பெண்மணி தன் கணவனை இழக்க நேர்ந்தது என அக் குடும்பத்தார் எண்ணி யெண்ணி அல்லும் பகலும் அல்லற் பட்டனர்; எனவே, குறையை நிறை யாக்குவதற்காகவே கலியாணி

ஆச்சியின் தங்கையாகிய மீனுட்சியைக் கதிரேசனுர்க்குத் திருமணம் செய்துவைக்க விரும்பினர்.

கதிரேசனுர்க்கு மீனுட்சி ஆச்சியைக் கொடுக்க அவரது அத்தையின் குடும்பம் ஒருவாறு துணிந்த போதி லும், போதிய பணமில்லாக் குடும்பத்தில் எப்படிப் பெண்ணைக் கொடுப்பது என்றெண்ணி அவர்களுடைய மனம் ஊசலாடிக் கொண்டிருந்தது. இவர்களது மன நிலையை உணர்ந்த மேலைச்சிவபுரிச் சன்மார்க்க சபைத் தலைவர், வ. பழ. சா. பழநியப்பச் செட்டியார் அவர்களும் கருமுத்து அழகப்பச் செட்டியார் அவர்களும் பெண்வீட்டா ருக்கு ஆறுதல்கூறி, பொருளீட்டும் முயற்சிகளில் தாங் களும் கதிரேசனுர்க்கு ஆதரவு தருவதாகத் தெரிவித் தனர். மலாய் நாட்டிலுள்ள ஈப்போ என்னும் ஊரில் பழநியப்பச் செட்டியார் குடும்பத்தவர்க்கு நடைபெற்ற தொழிலிலும் கதிரேசனுர்க்குப் பங்கு வைத்துக் கொடுத் தனர். கைம் பெண்ணுகிவிட்ட கலியாணி ஆச்சியின் சீதனத் தொகையை மூலதனமாகக் கொண்டு பர்மாவில் பாசின் என்னும் துறைமுகப் பட்டினத்தில் பண்டிதமணி யார் தொழில் தொடங்கப் பெண்வீட்டார் இசையும்படி பழநியப்பச் செட்டியார் செய்தார். செல்வத்திலும் செல் வாக்கிலும் சிறந்து விளங்கிய இத்தகைய மேன்மக்களின் ஆதரவு இருந்ததால், கதிரேசனுருக்கும் மீனுட்சிக்கும் திருமணம் நிகழ்ந்தது.

பலகாலம் காத்திருந்ததன் பயனுக இறைவன் இன் னருளால் மீனுட்சி என்னும் பெண்ணரசியைக் கதிரேசனுர் வாழ்க்கைத் துணைவியாகப் பெற்ருர். அவ்வம்மையார் கொண்டான் குறிப்பறிந்து ஒழுகி, நல்விருந்து ஓம்பி, மனை யறத்திற்குத் தக்க மாண்புகளை எல்லாம் பெற்று விளங்கி ஞர்.

மீனாட்சி ஆச்சியாரைப் பற்றி மீனாட்சி சுந்தரனார் (பன்மொழிப் புலவர் தெ. பொ. மீ.) ஒருமுறை கூறியதை இங்கே தெரிவிப்பது பொருந்தும்.

''கலைவாழ்வின் விளக்கமாகக் கதிரேசனாரைக்கண்ட நான் கலைவாழ்வின் அமைதியை அம்மையாரிடம் காணும் பேறு பெற்றவன். 'தமிழன்னை' என்ற எண்ணம் அவர்களைக் காணும் போதெல்லாம் எழுவது உண்டு. புன்னகை பூண்ட முகம், களங்கமற்ற மனம், குழவி போலும் பேச்சு, செட்டிநாட்டின் உயர்வு தோன்றும் அமைதியான கோலம், கணவனுக்கும் குழவிகட்கும் எனவே வாழ்ந்த பெருமை, விருந்தினரை மறவாதபேரன்பு, உடல் மென்மையோடு போராடும் செருக்கு, இத்தனையும் என் கண் முன்னே தோன்றுகின்றன. 'பானை பிடித்தவள் பாக்கியம்' என்பதில் ஓர் உண்மை உண்டு. கலையின் இருப்பிடம் பண்டிதமணியே யாயினும் அந்தச் சுவை வாழ்விலேயே அகத்தும் புறத்தும் அவர் வாழ உதவிய பெருமை அம்மையாருக்கே உண்டு. பண்டிதமணியாரின் கலை பழுத்து இனிக்கத்தொடங்கியது அம்மையாரின் தொடர்பே என எனக்குத் தோன்றுகிறது.''

# 4. சன்மார்க்க சபை

"நகரத்தா ரெவ்வாறு நல்லறங்கள்
பலசெயினும் நாட்டிற் கல்வி
மகரத்தான் பரவாத பான்மைதெரிந்
திக்குறையும் பாற்ற நாடி
ஒகரத்தார் வேள்பின்னும் வாய்பேசி
வணிகர்குலத் துதித்தா லன்ன
சிகரத்தார் திகழ்மேலைச் சிவபுரிவாழ்
பழனியப்பன் சிந்தித் தானே"

"செந்தமிழு மாரியமு முற்றவுணர்
நுண்மதியான் சீர்த்திச் சிந்து
வந்துமிழு மாரிநிகர் வண்மையினு
னற்குணமே வடிவ மானேன்
சுந்தரஞ்சேர் மகிபால நகர்வாழுங்
கதிரேசச் சுமுக னேடு
முந்தவே பலகாலு மாராய்ந்து
சபையொன்று முளைப்பித் தானே.*

பண்டிதமணி அவர்கள்பால் எல்லையற்ற அன்புடைய ராஜா சர். அண்ணாமலைச் செட்டியார் அவர்கள் தோன்றிய சில நாட்களில் பண்டிதமணி தோன்றினார் என்பதை முதற் கட்டுரையில் தெரிவித்தோம். இயற்கை அமைதி நிறைந்த

---

* சோழவந்தான் மகாவித்துவான் அரசஞ் சண்முகனார் அவர்கள் சன்மார்க்க சபையை வாழ்த்தி ஒன்பது பாடல்கள் பாடியுள்ளார்கள். அவற்றில் முதல் இரண்டு பாடல்கள் நகரத்தார்களின் அறப்பணிகளைச் சிறப்பித்துக் கூறுகின்றன. 3, 4 ஆம் பாடல்கள் இங்குத் தரப்பெற்றுள்ளன.

சிற்றூரில் வாழ்ந்த பண்டிதமணி அமைதி மிக்க தமிழ்க் கவி தையுடன் உறவுகொண்டனர் என்பதையும் சோழவந்தா னூர் மகா வித்துவான் அரசஞ்சண்முகனர் அவர்க ளுடைய பெருநட்பைப் பெற்றிருந்தார் என்பதையும் முன் கட்டுரையில் கூறினேம். பண்டிதமணியின் பெரும் புல மையைக் குன்றின்மீதிட்ட விளக்கென ஒளிரச்செய்தது மேலைச் சிவபுரிச் சன்மார்க்க சபையே. இச் சபை, தோன்றிய நாள்தொட்டுத் தமிழ் மக்களுக்குச் செய்துவரும் நலங்கள் பலவாகும். இச்சபையின் தோற்றத்திற்கு முன் செட்டிநாட்டில் தமிழ் வளர்ச்சிக்கென எத்தகைய கழக மும் நிறுவப்பெறவில்லை. தமிழ்ப் புலவர் பலரையும் அவ் வப்போது அழைத்துச் சொற்பொழிவுகள் வாயிலாக அவர் களுடைய அறிவுரையை இப்பகுதியில் பரப்பி வருவதும் இதுவே. இச்சபையின் உறுப்புக்களுள் ஒன்முகிய நூல் நிலையம் அரிய தமிழ் நூல்கள் பலவற்றைப் பெற்று நல்ல வளர்ச்சியடைந்து வருகின்றது.

பாரி வள்ளல் காலந்தொட்டு வாழையடி வாழையாகச் செட்டிநாட்டில் புரவலர் பெருமக்கள் பலர் வாழ்ந்து வரு கின்றனர். அத்தகவுடையோர் தம்மை நோக்கிவந்த புல வர்க்கெல்லாம் பொன்னையும் பொருளையும் அன்புடன் வழங்கினர். இவ்வண்ணம் நம் சிந்தையைக் கவருபவர் கள் மேலைச்சிவபுரி என்னும் சிற்றூரைச்சேர்ந்த **வ. பழ. சா. பழநியப்பச் செட்டியார்** அவர்களும் அவருடைய தம்பி **அண்ணுமலைச் செட்டியார்** அவர்களும் ஆவர்.

பொருள் படைத்து வறுமையை அகற்றிய வள்ளல் கள் பலர் வாழ்ந்தாலும், அவர்களெல்லாம் பண்டிதமணி யைப் போன்ற புலவர்களை இனிய நண்பராகப் பெற வில்லை. பெரியாரைப் பேணித் தமராக்கொளல் அரிய வற்றுளெல்லாம் அரியதல்லவா ? அத்தகைய வாய்ப்பைப்

பெற்றமையால், பழநியப்பச் செட்டியார் குடும்பத்தார் தமிழ் மக்களுடைய உள்ளத்தில் உயர்ந்த இடத்தைப் பெற்றுப் புகழுடன் விளங்குகின்றனர். பண்டிதமணி—பழநியப்பர் கூட்டுறவால் சன்மார்க்க சபை தோன்றிய வரலாற்றை இனிக்கூறுவோம்.

சன்மார்க்க சபையைத் தொடங்கி, அதன் முதல் தலைவராக விளங்கியவர் வ. பழ. சா. பழநியப்பச் செட்டியார் (1873-1912). இவர் சிறு பருவமுதல் நுண்ணறிவும், கடவுட் பக்தியும், தமிழ்ப்புலவர்களிடத்துப் பேரன்பும், ஏழைகள்பால் இரக்கமும், ஈகையும், இன்சொல்லும் மிக்காராக விளங்கினர். கற்று வல்ல புலவர்கள் இவரிடம் வந்து தங்கள் புலமைத் திறத்தைக் காட்டிப் பரிசு பெற்றுச் செல்வது வழக்கம். எனவே, இவர் எப்போதும் அறிஞர் குழாம் சூழ இருந்தார். **திருஞானசம்பந்த தேசிகர்** என்பவர் இசையோடு தேவார திருவாசகங்களைப் பாடும்ஆற்றல் பெற்றிருந்தாரென்றும், அவர்க்கு வேண்டும் உதவிசெய்து, அவரை அருகில் வைத்திருந்து, தேவார திருவாசகங்களைக் கேட்டு மனம் உருகும் இயல்புடையவராகப் பழநியப்பச் செட்டியார் இருந்தனர் என்றுங் கூறுவர்.

பழநியப்பச் செட்டியார் காலத்தில் செட்டிநாட்டில் வரன் முறையாகத் தமிழ்க்கல்வி பயிலுவதற்கான பள்ளிக் கூடங்கள்இல்லை. செட்டியார்களுக்கு அவ்வாறு கல்விகற்க வேண்டுமென்ற ஆர்வமுமில்லை. கீழ்வாய் இலக்கத்துக்கு மேல் படிக்கச் சொன்னால்,

**'பிள்ளையும் படிக்க வேண்டாம், பிரம்படி படவும் வேண்டாம், சள்ளையாம் சுவடி தூக்கிச் சங்கடப்படவும் வேண்டாம்'**

என்று கூறும் நிலையில் அன்றைய நகரத்தார் இருந்தனர். தமிழ்க்கல்வி பயின்றவன் வாணிகத்துக்கும் உலகியலுக்கும் பயன்படான் என்றும் கோவிலூர் மடத்துக்கு[1] ஓடிவிடுவான், என்றும் அஞ்சினர்.

மகிபாலன்பட்டியிலிருந்து மேலைச் சிவபுரி ஏழு மைல் தொலைவு. பண்டிதமணியின் தமக்கையார் வீடு மேலைச் சிவபுரியிலிருந்தது. அங்கு அவர் வரும்போதெல்லாம் பழநியப்பச் செட்டியார் அவர்களைச் சந்திப்பதுண்டு. இருவருமே வயிரவன் கோவில் என்னும் பிரிவைச் சேர்ந்தவர்கள்.[2] பழநியப்பச் செட்டியார் கதிரேசனுருக்கு எட்டாண்டு மூத்தவர்; எனவே, அண்ணன் என்ற முறையில் அன்போடு உறவாடி வந்தனர். அக் காலங்களிளெல்லாம், அவ்வப்போது கதிரேசனர், தாம் கற்ற நூல்களின் கருத்துக்களையும் பொருள் நயங்களையும் சுவைதோன்றப் பழநியப்பச் செட்டியாருக்கு எடுத்துக்கூறுவர். இவ்வாறு இருவரும் அடிக்கடி கலந்து பழகி மகிழ்ந்தனர், கல்விச் சுவையை நாளடைவில் கதிரேசனர் பழநியப்பச் செட்டியாருக்கு ஊட்டி வந்தமையால் பெரும்பயன் ஏற்பட்டது செட்டிநாட்டு இளைஞர்கள் சிறந்த கல்வியைப் பெறுவது நலம் என்பதைப் பழநியப்பரும் உணர்ந்தார்.

---

1. *கோவிலூர் மடம்: கோவிலூர் என்பது காரைக்குடியை அடுத்தசிற்றூர். இங்கு ஒரு வேதாந்த மடம் இருக்கிறது. செட்டியார் சமூகத்தைச் சேர்ந்த துறவிகளே இதில் மடாதிபதியாக இருக்க வேண்டும். ஆண்டவர் முத்துராமலிங்க ஞானதேசிகர், துறவு சுவாமிகள், சிதம்பர ஐயா, பொன்னம்பல சுவாமிகள் போன்ற தமிழ் அறிஞர்களாகிய பெரியார்கள் அம்மடத்தில் இருந்தனர்.*

2. *நகரத்தார் சமூகத்தில் திருமணம், சுவீகாரம் முதலிய ஏற்பாடுகளுக்காக ஒன்பது கோவிற் பிரிவுகள் உண்டு; இவற்றுள் வயிரவன் கோவில் என்பதும் ஒன்று.*

பழநியப்பச் செட்டியாருடன் உரையாடிக் கொண்டிருந்தபோதெல்லாம், பாண்டியர்கள் சங்கம் வைத்து மொழி வளர்த்த வரலாற்றைப் பண்டிதமணி கூறுவார். சமயக் கொள்கைகள் சங்கங்கள் வாயிலாகவே பரவும் என எடுத்துரைப்பார். அரசியல் கருத்துக்கள், சமூகச் சீர்திருத்தம் முதலிய யாவும் சபைகள் வாயிலாகவே நன்மை பெறுமென்பார். தம் கூற்றுக்கு ஆதாரமாக, மதுரையிலும் நாகையிலும் அப்போது துலங்கிய சங்கங்களைச் சுட்டிக் காட்டுவார். இதன்பயனாக, சங்கம் ஒன்றைச் செட்டிநாட்டில் ஏற்படுத்த வேண்டும் என்னும் கொள்கை பழநியப்பர் உள்ளத்தில் உதித்தது. ஆய்ந்து, ஆழ்ந்து, இனிக்கப் பேசும் கதிரேசனாரின் தூண்டுதலால் பழநியப்பச் செட்டியார் சன்மார்க்க சபை தோன்றச் செய்தமை

**'கல்விநிலை நம்நாட்டிற் காண்பதற்கே**
**யான்புரிந்த கருமச் சூழ்ச்சி**
**நல்வினையென் றுளங்கொண்டு விரைவின்முயன்**
**றதன்பயனை நன்கு கண்டாய்''**

என்று பண்டிதமணியார் பழநியப்பச் செட்டியார் இறைவனடி எய்தியபின் பாடிய இரங்கற்பாவின் ஒரு பகுதியால் தெரிகிறது.

1909-ஆம் ஆண்டு, மே மாதம் 13-ஆம் தேதியில் திருநாவுக்கரசு நாயனார் குருபூசை நிகழ இருப்பதைச் சில நாட்களுக்கு முன்னரே பண்டிதமணி உணர்ந்தார்; உடனே அவர் மேலைச்சிவபுரிக்குச் சென்று, அப்பொழுது பழநியப்பச் செட்டியார் கொழும்பிலிருந்தமையால் அவர் தம்பி அண்ணாமலைச் செட்டியாரிடம், இன்னும் சில நாட்களில் நடைபெறவிருக்கும் திருநாவுக்கரசு நாயனார் திருநாளன்று குருபூசை நடத்தி, அடியார்களுக்கும் ஏழைகளுக்கும் அன்னம் அளித்து, அன்று பிற்பகலிலேயே ஒரு

சபை கூட்டித் தக்க தமிழ்ப் புலவர்களைக் கொண்டு பிரசங்கங்கள் செய்வித்தால் மிக நல்லதாகும்'' என்று கூறினர். அதுகேட்டு அண்ணாமலைச் செட்டியார் மிக மகிழ்ந்து, ''அப்படியே செய்வோம். ஆனால் தமையனார் பழநியப்பச் செட்டியார் இவ்வமயம் இங்கில்லாம லிருப்பது தான் சற்றுக் குறையாகத் தோன்றுகின்றது. அவர்கள் இங்கு வரக்கூடிய காலம் அணிமையிலுள்ளது; திருவருட் பாங்கால் அவர்கள் வரவு குறிப்பிட்ட நாளில் நேரின் நன்று. ஒருவாறு இவ்வமயம் அவர்கள் இங்கு வராவிட்டாலும் இச்செயலில் அவர்களுக்கு மிக்க விருப்பம் இருப்பதால் பின்னர்த் தக்கபடி ஆதரவளித்துப் போற்றுவார்கள். ஆதலாற் குறித்தபடி குருபூசை செய்வித்துச் சபையையும் தொடங்குவோம்'' என்று தெரிவித்தனர். இந்நிலையில் குருபூசைக்குரிய ஏற்பாடுகள் செய்யப்பெற்றன.

வடக்குப் பழைய ஊருணியின் தென்கரையிலுள்ள சாமிநாத விநாயகர் சந்நிதியில் கீற்றுக் கொட்டகை யமைத்தனர், அவ்விடம் அலங்கரிக்கப் பெற்றது. அரசஞ் சண்முகனாரும் வேறு சில வித்துவான்களும் முதல் நாளே வந்து சேர்ந்தனர். மறுநாள் குருபூசையையும் சபையையும் இவ்வாறு நடத்துவதென்று முடிவு செய்துகொண்டிருந்தபொழுது கொழும்பிலிருந்து இரவு 9 மணிக்குப் பழநியப்பச் செட்டியார் தம் இல்லம் வந்துசேர்ந்தனர். அவர்கள் அவ்வமயம் ஊர் வந்து சேர்ந்ததைக் கண்டு எல்லோரும் சபை நீண்டகாலம் நன்னிலையில் நடைபெறுமென்பதற்கு இதுவே நன்னிமித்தமாகு மென்று பாராட்டினர். பின்னர், பழநியப்பச் செட்டியார் இந்நிகழ்ச்சிகளையெல்லாம் அறிந்து, பெரிதும் மகிழ்ந்து எல்லாவற்றையும் தாமே முன்னின்று முடிக்கத் தலைப்பட்டனர்.

குறித்தபடி சௌமிய ஆண்டு சித்திரைத் திங்கள் முப்பத்தோராம் நாள் (13-5-1909) வியாழக்கிழமையன்று காலையில் மேலைச்சிவபுரிச்சாமிநாத விநாயகருக்கு அபிடேக ஆராதனைகள் செய்யப்பெற்றன. திருநாவுக்கரசு நாயனாரின் புராணத்தைப் படித்து முடித்துக் குருபூசையையும் சிறப்புறச் செய்தனர். பகல்வேளையில் அடியார்களுக்கும் ஏழைகளுக்கும் உணவளிக்கப் பெற்றது.

பிற்பகல் 3 மணிக்குச் சாமிநாத விநாயகர் சந்நிதியில் சபை கூடிற்று. உள்ளூரிலும் வெளியூர்களிலு மிருந்து செல்வர்களும் அன்பர்களும் திரளாகக் கூடினர். மகா வித்துவான் அரசஞ் சண்முகனார் தலைமை தாங்கினார். 'வித்தியாபாநு' பத்திராதிபர் மு. ரா. கந்தசாமிக் கவிராயர், கீழைச்சிவற்பட்டி வித்துவான் வீமகவி, தேவகோட்டை சொ. வேற்சாமிக் கவிராயர், வேந்தன்பட்டிப் புலவர் வாத்தியார் என்ற சைவப்பிள்ளை ஆகியோர் சொற்பொழிவுகள் நிகழ்த்தினர். அவையோர் கருத்துப்படி, இச்சபைக்கு '**மேலைச்சிவபுரிச் சன்மார்க்க சபை**" என்னும் பெயர் இடப்பெற்றது. எனினும், குருபூசை நாளில் இது தொடங்கப் பெற்றதை யொட்டி, இச்சபைக் கட்டிடத்தை அவ்வூர் வாழ் முதியோர் 'குருபூசை மடம்' என்றே குறிப்பிட்டு வருகின்றனர்.

சபை, சாமிநாத விநாயகர் சந்நிதியில் தொடங்கப் பெற்றதை யொட்டி, அவ்விநாயகர் மீது பண்டிதமணி '**பதிற்றுப் பந்தந்தாதி**' பாடினார்கள். அவர்கள் இளமைக் காலத்தில் இயற்றிய பாடல்களில் இவை சிறந்தன என்று கூறலாம்.

சபையின் முதல் தலைவராகத் திரு. பழநியப்பச் செட்டியார் அவர்களே இருந்துவர வேண்டுமென்று அவையோர் வேண்டினர். அறிஞர் பெருமக்களின் விருப்

பத்திற்குப் பழநியப்பரும் இசைந்தார், "இச்சபை என்றும் நடைபெற வேண்டும்" என்றும், "இதற்குத் தக்க மூலதனம் தொகுத்துவைத்து ஆதரித்து வர வேண்டும்" என்றும் அரசஞ் சண்முகனார் அவர்கள் தலைமை உரையில் கூறிய சொற்களைப் பழநியப்பர் நாள்தோறும் எண்ணி, தம் எண்ணங்களைச் செயலாக்க முனைந்தார்.

**சபையின் நோக்கங்கள்:**

ஒழுக்கம், கல்வி முதலிய பல விஷயங்களைப் பற்றி உபந்நியாசங்கள் புரிவித்தலும், தக்க பண்டிதர் ஒருவரை இச்சபையில் உபாத்தியாயராக நியமனஞ் செய்து, அங்குச் சேரும் சிறுவர்களுக்குக் கல்வி பயிற்றுவித்தலும், சபையில் வந்து படிப்பார் பலருக்கும் உபயோகமாகும்படி தமிழ், சமஸ்கிருத பாஷைகளிலுள்ள முக்கியமான எல்லாப் புத்தகங்களையும் தொகுத்து வைத்தலும், கல்வி, ஒழுக்கம் முதலிய விஷயங்களைப் பற்றித் துண்டுப் பத்திரங்கள் அச்சிட்டு எல்லோருக்கும் இனமாகக் கொடுத்தலும், இலௌகீக இலக்கண இலக்கிய சாஸ்திர சம்பந்தமான பத்திரிகைகளைத் தருவித்தலும் பிறவுமாம்.

பழநியப்பச் செட்டியார் தலைவராக இருந்த காலத்தில் 12,000 ரூபாய் செலவில் சபைக்கு ஒரு கட்டடம் அமைக்கப் பெற்றது. சபையின் ஒரு பகுதியாகிய கணேசர் செந்தமிழ்க் கலாசாலையும் தொல்காப்பியனார் நூல் நிலையமும் நிறுவப்பெற்றன.

கணேசர் செந்தமிழ்க் கலாசாலை மாணவர்களுக்கு மூன்று திங்களுக்கு ஒருமுறை தேர்வு நடத்தும் பொறுப்பை அரசஞ் சண்முகனாரும் பண்டிதமணியாரும் மேற்கொண்டனர்.

திங்கள்தோறும் சொற்பொழிவுகளும் ஆண்டுதோறும் விழாக்களும் நடைபெற்றன. சபை இவ்வாறு கூடிய

போதெல்லாம் இங்கு வந்து அறிவுரைகளைக் கேட்டும் பிற செயல்களைக் கண்டும் மகிழ்ந்த அன்பர்கள் தத்தம் ஊர்களிலும் கல்லூரிகளும் சங்கங்களும் தொடங்கினர்; மூலதனம் சேகரித்தனர்; விழாக்கள் நடத்தினர். இவ்வாறு செட்டிநாட்டின் சிற்றூர்களில் தோன்றிய நிலையங்கள் பல. இவற்றை யெல்லாம் பண்டிதமணி அவர்களே தொடங்கி வைத்தார்கள். ஏனைய இடங்களில் இத்தகைய அமைப்புக்கள் அவற்றில் ஆர்வமுடைய அன்பர் ஓரிருவர் முயற்சியால் மட்டுமே நடைபெற்றன; உரிய அன்பர்கள் பொருளீட்டுவதற்காகக் கடல் கடந்த நாடுகளுக்குச் சென்ற பின்னர், அச்சங்கங்களையும் கடல் கொண்டது. ஆனால் மேலைச் சிவபுரிச் சன்மார்க்க சபை மட்டும் நாள்தோறும் தளர்ச்சியின்றி வளர்ச்சி பெற்று வந்தது. தாம் வேறு, சபை வேறு என்று கருதாமல், சபையின் வளர்ச்சியே தம் வளர்ச்சி என்பதை நன்குணர்ந்து பண்டிதமணி இச்சபையின் முன்னேற்றத்திலேயே முழுக் கவனமும் செலுத்திவந்தார். அவருடைய கருத்துக்கள் அனைத்தையும் பழநியப்பர் ஆர்வத்தோடு ஆதரித்தார்.

மூன்றாண்டுகள் சபை சிறப்பாக நடைபெற்றது. அதன் உறுப்புக்களுக்காகவும் மூலதனம் வைத்தற்கும் வ. பழ. சா. குடும்பத்தினரும் வேறு சிலரும் ரூபாய் ஐம்பதாயிரம் வரை பொருளுதவினர்.

மூன்றும் ஆண்டு நிறைவு விழாவுக்குச் சிறிது முன்னரே பண்டிதமணியின் திருமணம் நடைபெற்றது. இம் மண விழாவைப் பழநியப்பச் செட்டியார் அவர்கள் நடத்தி வைத்த விவரத்தை முன் கட்டுரையில் குறிப்பிட்டிருக்கிறோம். பண்டிதமணியார்க்குத் திருமணம் முடித்து, பொருளீட்ட வகை செய்து, புகழ் பெருக்க ஒரு சபை அமைத்ததுடன் தம் கடமை முடிந்துவிட்டது என்று பழநியப்பரின் உள்ளம் கருதியதுபோலும்!

சில மாதங்களில் அவருடைய உடல் நிலை கவலைக் கிடமாக இருந்தது. அப்போது அவருடைய தம்பி அண்ணாமலைச் செட்டியார் கொழும்பில் இருந்தார். தாம் உடல் நலமின்றி யிருப்பதை அவருக்குத் தெரிவித்து எழுதிய கடிதத்தில், "**சன்மார்க்க சபையைத் தளரவிடாது எப்பொழுதும் நீடித்து நடத்தி வருக**" என்று குறிப்பிட்டிருந்தார்.

பழநியப்பச் செட்டியாருக்குப் பின்னர் அண்ணாமலைச் செட்டியார் சபையின் தலைமைப் பதவியை ஏற்றுக்கொண்டார். அண்ணாமலைச் செட்டியார் பழநியப்பச் செட்டியாரளவு தமிழறிவிற் சிறந்தவராக இல்லை யெனினும், ஆர்வத்தில் ஒருசிறிதும் குறைந்தவரல்லர். அண்ணனுடைய குறிப்பு அவர் உள்ளத்தில் உறுதியாகப் பதிந்தது. பொருள் வரவு செலவுப் பொறுப்புக்களை அண்ணாமலைச் செட்டியார் மனமுவந்து ஏற்றுக்கொண்டார்; சபை, 'பண்டிதமணி சபை' ஆயிற்று. பண்டிதமணியின் தமிழ் முழக்கம் நாடெங்கும் கேட்கத் தொடங்கிவிட்டது. மணிச் சேவல் கூவி விட்டது.

ஐந்தாம் ஆண்டு நிறைவு விழா மிகச் சிறப்பாக நடத்தப் பெற்றது. 40 ஆண்டுகளுக்குமுன் போக்குவரவு சாதனங்களும் மின்சாரவிளக்கு முதலிய அமைப்புக்களும் இல்லாத கிராமப் பகுதியில் ஒரு தமிழ் விழா நடத்துவது எத்தகைய அருஞ் செயல் என்பது சபை அறிக்கையில் காணப்பெறும் பின்வரும் குறிப்பால் தெரியும்.

## ஐந்தாம் ஆண்டு விழா (1914)

"6வ பகல் 9 மணிக்கு மதுரை ரயில்வே ஸ்டேஷனில் வித்துவான்கள் பலர் சென்று, அக்கிராசனம் வகிக்க விஜயம் செய்த சென்னை பிரஸிடென்ஸி

காலேஜ் தமிழ்ப் பண்டிதர் மஹா மஹோபாத்தியாயா ப்ரும்ம ஸ்ரீ வே. சாமிநாதையரவர்களை எதிர் கொண் டழைத்து 7வ. காலை மதுரையிலிருந்து பிரயாணித்து சத்துருசங்காரக் கோட்டைச் சத்திரத்தில் தங்கி, அவண் முறையூர் ஸ்ரீமாந் பழ. சி. சண்முகஞ் செட்டி யாரவர்களால் நன்கு உபசரிக்கப் பெற்றுர்கள். அவண் நடந்த விருந்தைப் பாராட்டி மதுரைத் தமிழ்ச் சங்க வித்வான் ஸ்ரீமத் மு. ரா. அருணுசலக் கவிராய ரவர்கள் அடியில் வருங் கவியைக் கூறிஞர்கள்,

**'ஐயனந்தங் கிளையொடுவாழ் சத்துருசங்**
**காரக்கோட் டையிலன் புற்ற**
**மெய்யனந்தங் கவியருமை தெரிமுறையூர்ச்**
**சண்முக விவேக மேலோன்**
**செய்யனந்த விதமான சுவையுடைத்தாம்**
**விருந்தருந்தத் திகழும் செவ்வாய்**
**கையனந்தன் வாணனிக ராகச்செய்**
**தானிலனைக் கமலத்தோனே.'**

அங்கிருந்து மாலை 7 மணிக்கு மேலைச்சிவபுரிக்கு வந்து சேர்ந்தார்கள். அவண் சபைத் தலைவர் ஸ்ரீமாந் வ. பழ. சா. அண்ணுமலை செட்டியாரவர்கள், மகிபா லன்பட்டி வித்துவான் ஸ்ரீமத் மு. கதிரேசச் செட்டியா ரவர்கள், காரியதரிசிகள், அங்கத்தினர்கள், அபிமானி கள் ஆகிய பலர் வாத்திய கோஷத்துடனும், சந்தி ரோதயப் பிரகாசமுள்ள விளக்குகளுடனும் வந்து தலைவரவர்களையும், இதரவித்துவான்களையும் அருமை பாராட்டி அழைத்துச் சென்றுர்கள். சபையின் முற் பக்கத்தில் விசித்திர கொட்டகை யொன்று வாழை கமுகு முதலியவற்றுல் அலங்கரிக்கப் பெற்று விளங் கியது. சுமார் 500 பேரிருந்து போசனம் செய்யத்தக்க

தான நகரத்தார் போசனசாலை யொன்றும், பிராமண போசனசாலை யொன்றும், வித்துவான்கள் தங்குதற் குரிய பல அறைகளமைந்த கொட்டகை யொன்றும் மிகவும் சௌகர்யமாகவும் அழகாகவும் அமைக்கப் பட்டிருந்தன. எல்லாருந் தத்தம் இடங்களிற் றங்கினர்.''

இவ்விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர் அவர்களுக்கு வியப்பையும் உவப் பையும் தந்தது. அவர்தம் தலைமை உரையில் பண்டித மணியைப் பெரிதும் பாராட்டினர்.

ஆண்டு விழாவுக்குப் பின்னர், பண்டிதமணி அவர் கள் டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர் அவர்களை மகிபாலன் பட்டிக்கு அழைத்துச் சென்று அங்கு அவரைத் தம் இல்லத் தில் வரவேற்று உபசரித்து மகிழ்ந்தார். இந்நிகழ்ச்சிகள் 1914-ஆம் ஆண்டில் நடைபெற்றன. டாக்டர் ஐயரவர் கள் ஏடு தேடிக்கொண்டிருந்த காலம் அது. அந்த முயற்சியில் அவருக்குப் பண்டிதமணி பேருதவியாக இருந்தார். இதன் விளைவாக இருவரும் மிக நெருங்கிய நண்பர்களானர்கள்.

போக்குவரத்து வசதியும் விளம்பரக் கருவிகளும் பிரசார முறைகளும் பெருகாத ஒரு காலத்தில், சன் மார்க்க சபையின் ஆண்டுவிழா இன்றைய தமிழ் விழாப் போல மிகச்சிறந்து அமைந்தது என்று சொல்லலாம். வெளியூர்களிலிருந்து மூவாயிரம் மக்கள் ஆண்டு விழா வுக்கு வந்துகொண்டிருந்தனர்; ஒழுங்கான சாலைகளோ, கார் வசதியோ இல்லாமையால், ஆண்டு விழாவுக்கு வரும் பெருமக்கள் பல கண்மாய்களைத் தாண்டி மாட்டு வண்டிகளில் வந்தனர். இவர்களது செவிக்கும் வயிற்றுக்கும் உணவு ஏற்பாடு செய்யும் வ. பழ. சா.

குடும்பத்தார், வண்டி மாடுகளுக்கும் வைக்கோற் போர் களை ஆண்டுவிழாவுக்குச் சில வாரங்களுக்கு முன்னரே அமைத்துவிடுவது வழக்கமாக இருந்தது.

இவ்விழாக்களில் தமிழ்நாட்டிலுள்ள அறிஞர் பலர் செந்தமிழ்ச் சொற்பொழிவுகளைச் செய்துள்ளனர்; இவர் களுள் மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர், மு. ரா. கந்தசாமிக் கவிராயர், மதுரைத் தமிழ்ச் சங் கத்து ஆசிரியர் நா. சுந்தரேச ஐயர், ம. கோபால கிருஷ்ண ஐயர், நெடுவை இராமசாமி ஐயங்கார், மகா வித்துவான் ரா. இராகவ ஐயங்கார், மு. இராகவ ஐயங்கார், டி. சி. சீனிவாச ஐயங்கார், கா. சுப்பிரமணிய பிள்ளை, ந. மு. வேங்கடசாமி நாட்டார், விபுலானந்த அடிகள், திரு. வி. க., வெ. ப. சுப்பிரமணிய முதலியார், சி. கே. சுப்பிரமணிய முதலியார், உமாமகேசுவரம் பிள்ளை, கரந்தைக் கவியரசு அரங்க வேங்கடாசலம் பிள்ளை ஆகியோர் சிறப்பாகக் குறிப்பிடுவதற்குரியவர்.

விழாவுக்கு வரும் புலவர்கள் ஆறு, ஏழு நாட்கள் வரையில் மேலைச்சிவபுரியில் தங்குவது வழக்கமாக இருந்தது. அப்போது, பண்டிதமணியவர்கள் அப்புலவர் களுடன் நெருங்கிப் பழகி, இலக்கியக் கருத்துக்களைப் பரிமாறிப் பயன்பெற்று, அவர்கள் அனைவருக்கும் இனிய நண்பராயினர்.

தமிழ் நாட்டிலுள்ள பெரும் புலவர்கள், பேரறிஞர்கள் ஆகியோரை அழைத்துத் தாம் பயனடைந்ததுபோலவே, தம்பால் அன்பு காட்டித் தமக்கு ஊழியம் செய்த இளைஞர் —சிறப்பாகத் தம்முடைய மாணவ மாணவிகள்—பல ரைப் பண்டிதமணி இச்சபைக்கு அழைத்து அவர்களை முதலில் எழுதிப் படிக்கும்படி சொல்லி, பேசப் பழக்கினர்.

செவிவழித் தமிழ்ப்பயிரை வளர்ப்பதுடன் சன்மார்க்க சபை அமையவில்லை; கல்விச்சாலை ஒன்றையும் சபை நடத்தி வருகிறது. இது கணேசர் செந்தமிழ்க் கல்லூரி எனப்படும்; இக்கல்லூரியில் முன்னர்த் தமிழ்ப் பிரவேச பண்டித, பால பண்டித, பண்டித வகுப்புக்கள் நடந்து வந்தன. ஆனால், கடந்த 15 ஆண்டுகளாக, தமிழ்ச் சங்கத்துக்கு மாணவர்களை அனுப்பும் வழக்கம் கைவிடப் பெற்றது. எனவேகணேசர் செந்தமிழ்க் கல்லூரியின் கண் சென்னைப் பல்கலைக் கழகத்து வித்துவான் தேர்வுக்கு உரிய வகுப்புக்களே நடைபெற்று வருகின்றன, தமிழ்ப்புலமை சான்ற ஆசிரியர் பலர் தொண்டாற்றித் தமிழ் வளர்க்கின்றனர். நெடுந்தொலைவிலிருந்தும் ஏழை மாணவர் பலர் இங்கு வந்து உதவிச் சம்பளம் பெற்றுத் தமிழ்ப்படித்து பணியாற்றி வருகின்றனர். இங்கே கல்வி கற்ற மாணவர் சிலர் சென்னைப் பல்கலைக் கழகத்திலேயே முதல்வராக வெற்றிபெற்றுத் திருப்பனந்தாள் மடத்தார் வழங்கும் ஓராயிரம் வெண்பொற்காசுப் பரிசையும் பெற்றிருக்கின்றனர்.

தமிழ் வித்துவான் வகுப்பு நடைபெறும் கல்லூரிகள் தருமபுரம், திருவையாறு, கரந்தை, திருப்பனந்தாள், மயிலம், அண்ணாமலை நகர், திருப்பதி, கோயமுத்தூர் முதலிய நகரங்களில் உள்ளன. ஆனால் திருச்சி, மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி ஆகிய நான்கு மாவட்டங்களில் தமிழ் வித்துவான் வகுப்பு நடைபெறும் கல்லூரி இன்றளவும் இது ஒன்றே.

இப்போது இச்சபையின் தலைவராக இருப்பவர் திருவாளர் சாமிநாதச் செட்டியார் அவர்கள். அன்னாருடைய தம்பி சிதம்பரம் செட்டியார் அவர்கள் சபையின் அன்றாட அலுவல்களைப் பொறுப்புடன் கவனித்து இனிது

நடத்தி வருகின்றனர்கள். இக்குடும்பத்தைச் சேர்ந்த பழ. சிங்காரம் செட்டியார் பாடல் இயற்றும் ஆற்றல் படைத்தவர்; சா. அழகப்பன், சி. சொக்கலிங்கம் ஆகிய இருவரும் புலவர் பட்டம் பெற்றவர்கள்.

இத் தமிழ்க் கல்விக் கழகம் 45 ஆண்டுகளாக ஆரவாரமும் விளம்பரமும் இன்றி, மொழிப் பணியாற்றி வருகிறது. செட்டிநாட்டில் இன்று காணப்படும் தமிழ் அறிவுப் பெருக்கத்துக்கு விதை போன்றது இச்சபையே. கேள்வியறிவு வழங்கியும், கல்வி பயிற்றுவித்தும், நூல் வெளியிட்டும், நூல் நிலையம் அமைத்தும் இச்சபை ஆற்றிய பணிகள் யாவரும் பாராட்டுதற்கு உரியன.

பண்டிதமணியின் நூல்கள் வெளிவரத் துணையாக இருந்ததும் சன்மார்க்க சபையே. இச்சபையின் வாயிலாக இவர்கள் முதலில் வெளிப்படுத்திய நூல் **நாட்டுக் கோட்டை நகரத்தார்களின் சீர்திருத்தம்** என்பது; சபையின் இரண்டாம் ஆண்டு நிறைவு விழாவில் இவர்கள் ஆற்றிய சொற்பொழிவின் விரிவே இந்நூல். கல்வியின் இன்றியமையாமையைப் பற்றியும், தமிழின் தெய்வீக மாட்சியைப் பற்றியும் இந்நூல் விரிவாகக் கூறுகிறது. ஊர்கள் தோறும் சபைகள் நிறுவி அவற்றில் புலவர்களைக் கொண்டு சொற்பொழிவு புரியச் செய்வதால் விளையும் நன்மைகளையும், சமய ஞானம், ஐந்தெழுத்துண்மை, தேவாரப் பாடசாலைகளின் பயன் ஆகியவை பற்றியும் இந்நூல் தெரிவிக்கிறது.

ஆங்கிலத்திலிருந்து சிறந்த நூல்களைத் தமிழாக்குவது தலைசிறந்த மொழித்தொண்டு என்று இப்போது கருதப்படுகிறது; அந்நாளில், வடமொழியினின்றும் தமிழ் மொழிக்குச் சில அரிய நூல்களை மொழிபெயர்ப்பது இன்றியமையாதது என்ற கருத்து நிலவியது. இப் பணியைச் சன்மார்க்க

சபை தொடங்கிற்று. வடநூல்களைத் தமிழாக்குவதற்குப் பண்டிதமணி அவர்களுக்குஉதவியாகத் திருக்கோகர்ணம் வடமொழிப் பண்டிதர் திரு. டி. என். இராமச்சந்திர சாஸ் திரியார் அவர்கள் நியமிக்கப் பெற்று, அவர் சன்மார்க்க சபையில் வேலை பார்த்து வந்தார்.

**மண்ணியல் சிறுதேர், சுலோசனை, சுக்கிர நீதி** முதலிய நூல்கள் யாவும் இச்சபை வாயிலாகவே வெளிவந்தன. இந்நூல்களைப் பற்றிப் பிறிதொரு கட்டுரையில் கூறு வோம். **மாலதீ மாதவம்** என்னும் சிறந்த நாடக நூலும் இச் சபை வாயிலாகப் பண்டிதமணி அவர்களால் மொழிபெய ர்க்கப் பெற்றது. ஆனால் இந்நூல் இன்னும் அச்சாக வில்லை.

பண்டிதமணி அவர்கள் அண்ணாமலைப் பல்கலைக் கழ கத்தின் ஆராய்ச்சிப் பகுதித் தலைவராக இருந்தபோது செய்த **கௌடில்ய அர்த்த சாஸ்திரத்தின்**, மொழிபெயர்ப்பு வேலையும் இச்சபையிலேயே தொடங்கப்பெற்றது. ஆனால் எக்காரணத்தாலோ அவ்வேலை இடையே கைவிடப்பெற் றது.

நூல்களை அச்சிட்டு வெளியிடுவது ஒரு வியாபாரமாக ஏற்படாத காலத்தில், சன்மார்க்க சபையார் பண்டிதமணி அவர்களுடைய நூல்களை வெளியிட்டது விலை மதிக்கமுடி யாத மிகப் பெரிய உதவியாகும். இவ்வாறு, பண்டித மணி சபையை வளர்க்க, சபை அவரை வளர்த்தது.

வித்துவான் கதிரேசச் செட்டியாருக்குப் '**பண்டித மணி**' என்னும் பட்டம் சன்மார்க்க சபையில் தான் கொடுக்கப்பெற்றது. பிற்காலத்தில் முதுபெரும் புலவர், மகாமகோபாத்தியாயர், சைவசித்தாந்த வித்தகர் என்பது போன்ற பல பட்டங்கள் இவர்களுக்கு வழங்கப்பெற்றும்

பண்டிதமணி என்னும் பட்டமே இவர்களுடைய பெயருடன் இரண்டறக் கலந்து—ஏன் அவருடைய இயற்பெயராகிய கதிரேசன் என்பதை மக்கள் மறந்துவிடும் அளவுக்கு—இன்றளவும் நின்று நிலவி வருகிறது.

சபையின் பதினைருவது ஆண்டுவிழாவில், 27-2-1925 இல் டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர் தலைமையில் மகாவித்துவான் ரா. இராகவ ஐயங்கார் கதிரேசனரின் புலமையையும் சொல்லாற்றலையும் மொழிபெயர்க்குந் திறனையும் பாராட்டிக் கூறினர். அதன் பின்னர், பண்டிதமணி என்னும் பட்டம் வழங்கப் பெற்றது. பாட்டின் உட்பொருளை நயமாக உரைக்கும் கதிரேசனரின் பண்பைப் பாராட்டும் முறையில் இவ்வாறு அவர்களைச் சிறப்பிக்க வேண்டுமென்று விழாவுக்கு வந்திருந்த தூத்துக்குடி சிவகுருநாத பிள்ளை, ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை, தஞ்சை தமிழவேள் உமாமகேசுவரம் பிள்ளை, தர்ம பூஷணம் தீ. நா. முத்தையச் செட்டியார் ஆகிய தமிழ்ப் புலவர்களும் புரவலர்களும் ஏனைய அறிஞரும் விடியற்காலை நேரத்திலே மிக மறைவாகப் பேசிக்கொண்டிருந்தனர். அன்று அச்சபையிலேயே பட்டத்தை வழங்கிவிடுவது என்றும் பின்னர் அதை மதுரை, கரந்தை ஆகிய இடங்களிலுள்ள தமிழ்ச் சங்கங்களில் ஒப்புக்கொள்ளச் செய்து உறுதியாக்குவதென்றும் அவர்கள் முடிவு செய்தனர். அவர்கள் வேண்டுகோளுக்கிணங்கி அச்சங்கங்களும் பண்டிதமணி என்னும் பட்டத்தை ஏற்றுக்கொண்டன. காலை நேரத்தில் அன்பு நிறைந்த உள்ளங்களிலே தோன்றிய எண்ணம் ஞாயிற்றின் காலை ஒளியைப் போல மேலெழுந்து தமிழ்நாடெங்கும் பரவியது. பண்டிதமணியும் தமிழ் ஞாயிருக, தஞ்சைப் பெரிய கோவிலைப்போல, தாஜ் மகாலைப் போலப் புலவர்களுக்கிடையே நிலைத்த புகழ் பெற்று விளங்கினர்; தமக்கு வழங்கப்பெற்ற பட்டத்துக்கு மதிப்பளித்தார்.

சன்மார்க்க சபையின் வரலாற்றில் அடுத்த பெரிய மைற்கல் அதன் 23-ஆம் ஆண்டுவிழா. இவ்விழா 24—4—1932-இல் நடைபெற்றது. தமிழகமெங்கும் தம் புகழை நிலை நிறுத்திவிட்ட பண்டிதமணி இப்போது தமிழ் வளர்ச்சி கருதிச் சில உறுதியான கருத்துக்களைத் தெரிவிக்கத் துணிந்தார். இவை தீர்மானங்களாக அந்த ஆண்டு விழாவில் நிறைவேற்றப் பெற்றன. பண்டிதமணியின் கருத்து வளர்ச்சியைக் காட்டும் கண்ணாடியாக இருப்பதால் இவற்றை இங்கே தருவோம் :

(1) "தமிழ் நாட்டரசராக விளங்கும் புதுக்கோட்டை அரசரைத் தமது ஆட்சியில் சென்னைப் பல்கலைக் கழகத்தைச் சார்ந்த ஒரு தனித்தமிழ்க் கல்லூரி ஏற்படுத்தி நடத்துமாறு இச்சபையார் வேண்டிக்கொள்கின்றனர்.

(2) "சென்னை இராசதானிக் கல்லூரி (**Presidency College**) கும்பகோணம் அரசினர் கல்லூரி (**Government College**) இரண்டிலும் பி. ஏ. வகுப்பில் 5ஆம் பகுதி (**Fifth Group**) தமிழ்ப்பாடம் சொல்லிக் கொடுக்கத் தகுந்த வகுப்புக்களை ஏற்படுத்தும்படி அரசாங்கத்தாரை இச்சபையார் வேண்டிக்கொள்கின்றனர்."

(3) "இராமேசுவரம் தேவஸ்தானத்தார் நடத்திவரும் கல்லூரியில் தனித்தமிழ் வகுப்பும் ஏற்படுத்தும்படி இச்சபையார் வேண்டிக்கொள்கின்றனர்."

(4) "சென்னைப் பல்கலைக் கழகத்தார் பி. ஏ ஆனர்ஸ் (**B. A. Honours**) வழங்க வெகு விரைவில் ஏற்பாடு செய்யும்படி மேற்படி கழகத்தாரையும். அதற்குத் தகுந்த வகுப்புக்களை அரசாங்கக் கல்லூரி,

களில் ஏற்படுத்த அரசாங்கத்தையும் இச்சபையார் வேண்டிக்கொள்கின்றனர்."

(5) "சென்னை, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தார்களை அவர்கள் ஏற்படுத்தியிருக்கும் வடமொழிச் சிரோமணி வகுப்புக்களுக்கு ஒப்பத் தமிழிலும் இலக்கணம், இலக்கியம், சித்தாந்தம், வேதாந்தம், மருத்துவம், சோதிடம் முதலிய பிரிவுகளையும் ஏற்படுத்தி நடத்தும்படி இச்சபையார் வேண்டிக்கொள்கின்றனர்."

(6) "சென்னை, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தாரை நடுத்தரக் கல்வியில் (Secondary Education) ஆங்கிலந்தவிர்ந்த ஏனைய பாடங்களைத் தாய்மொழியிலேயே கட்டாயமாகச் சொல்லிக் கொடுக்கும்படி இச்சபையார் வேண்டிக்கொள்கின்றனர்."

(7) "பள்ளியின் இறுதித் தேர்தலுக்கு (S. S. L. C Examination) தமிழ் கட்டாயபாடமாக இல்லாமலிருப்பதால் மாணவர்களில் சிலர் முதற்றரத்திலேயே (First Form) தமிழை விடுத்துப் பிறமொழிகளைப் படிப்பதால் அவர்களது தமிழறிவு குறைந்து வருவது வருந்தத் தக்கதாயிருக்கிறது என்பதையும் முன்போல் தமிழில் ஒரு பகுதியாவது கட்டாய பாடமாக ஏற்படுத்த வேண்டுமென்பதையும் இச்சபை தெரிவித்துக் கொள்ளுகின்றது."

(8) "தமிழ்மொழியை வளர்ப்பதற்கு முயன்று வரும் சங்கங்கள் யாவும் ஒன்று சேர்த்து ஒத்துழைக்கும்படியும், ஆண்டுதோறும் ஒவ்வோரூரில் தமிழ் மகாநாடு கூடி இச்சங்கங்கள் உறுப்பினர்களை அனுப்பித் தமிழ் வளர்ச்சிக்குரிய பல முடிவுகளை நடைமுறைக்குக் கொண்டுவரும் வழிகளில் முயலும்படியும் இச்சபையார் கேட்டுக்கொள்ளுகின்றனர்."

சன்மார்க்க சபை தொடங்கிய 1909—ஆம் ஆண்டு முதல் தாம் காலமாகிய 1953—ஆம் ஆண்டு வரையில் பண்டிதமணி அச்சபையுடன் நெருங்கிய தொடர்புகொண்டிருந்தார்கள். 1934-இல் அவர்கள் அண்ணுமலைப் பல்கலைக்கழகத்துக்குப் பணியாற்றச்சென்றது வரை, அதாவது. 25 ஆண்டுகள் சபையின் நல்வளர்ச்சியில் நாள்தோறும் ஆர்வம் காட்டிவந்தார்கள். அவர்களுடைய தொண்டுக்கு நன்றிசெலுத்தும் வகையில் பண்டிதமணியின் உருவப் படம் 7-7-1940-இல் ராஜா சர் அண்ணுமலைச்செட்டியார் அவர்களால் திறந்துவைக்கப்பெற்றது. அப்போது பண்டிதமணி அவர்கள் நன்றிகூறு முகமாகக் குறிப்பிட்டதைக் கீழே காண்க.—

'என் சிறு தொண்டுக்கு உருவப்படம் அமைப்பது, சபைக்கு என்மீதுள்ளஅன்பைக் காட்டுகின்றது. எனக்கு இவ்வளவு சிறப்புச் செய்த அளவு யான் சங்கத்துக்குத் தொண்டு செய்ததாக என் நினைவுக்கு வரவில்லை. யான் படித்தது எங்கே எங்கே யென்று பல அன்பர்கள் கேட்டார்கள். இங்கேதான். யான் தான்இச்சங்கத்தின் முதல் மாணுக்கன். சன்மார்க்க சபையினுல்தான் எனக்கு மேன்மை யேற்பட்டது. பொருட்பயனை எதிர்பார்த்து யான் கற்கவில்லை. சொற் பொருட் சுவைகளை விரும்பிக் கற்றேன். இப்பொழுது பல்லாற்ருனும் பெரிதும் பயன் படுகிறது. என் சிறுமையை யான் அறிவேன். ஆனுல் யான் உயர்ந்தவனென்று பிறர் உணரும் படி செய்த பெருமை, கனம் ராஜா அவர்களைச் சார்ந்தது. **நிகரற்ற செல்வமும், அறிவும், ஆட்சித் திறனும் அமைந்த பெருங்கொடை வள்ளலாகிய கனம் செட்டிநாட்டு ராஜா அவர்கள் தம் உள்**

**ளத்தில் எனக்கும் ஓர் இடமளித்துச் சிறப்பித்து வரும் பெருமையே, யான் அடைந்துவரும் சிறப்புக்கள் எல்லாவற்றினும் தலை சிறந்ததாகும்.**

படத்திறப்பன்று படத்திற்கு உரியவர் வரலாகாது, வந்தாலும் பேசலாகாது என்பது மேனுட்டார் வரம்பு. ஆனல் யான் இரண்டையும் மீறி நடக்கிறேன். யான் பேச எண்ணியது ஒரு விஷயம். இந்தச் சங்கம் ராஜா அவர்களை வரவழைத்துத் தன்னை அலங்கரித்துக்கொள்ள எண்ணியது. அதற்கு என் படம் ஒரு கருவியாய் அமைந்தது. இதுவே எனக்கு மகிழ்ச்சி தருவது.'

1934-இல் சன்மார்க்க சபையின் வெள்ளிவிழா மிகச் சிறப்பாக நடைபெற்றது; பண்டிதமணி அந்த ஆண்டிலேயே அண்ணுமலைப் பல்கலைக் கழகத்துக்குச்சென்ருர். இதன் பயனுக, அவருக்கும் சபைக்கும் இருந்து வந்த தொடர்பு உள்ளத் தொடர்பாக மட்டுமே அமைந்தது. ஆண்டு விழாக்களில் சொற்பொழிவு செய்வதற்காக அண்ணுமலை நகரிலுள்ள அறிஞர்களை அழைத்துக்கொண்டு வருவதே பண்டிதமணி 1934—க்குப்பின் சபைக்குச் செய்து வந்த உதவியாகும்.

பண்டிதமணியார் அண்ணுமலைப் பல்கலைக் கழகத்துக்குச் சென்ற பின்னர், அங்குத் தமிழ்ப்பகுதியில் ஆசிரியராகப் பணியாற்ற மேலைச்சிவபுரியிலிருந்து அமிர்தலிங்கம் பிள்ளை, அருணுசலம் பிள்ளை, முத்துச்சாமிப் பிள்ளை முதலிய பல புலவர்களைப் பண்டிதமணி அழைத்துச் சென்ருர்கள். இதனல் பல்கலைக்கழகம் நன்மை பெற்றது; அங்குள்ள தமிழ்த்துறை சிறப்படைந்தது; ஆனல் அழுத்தமான கல்வியறிவு நிறைந்த புலவர்களைச் சன்மார்க்க சபை இழக்க நேரிட்டது.

இக்காலத்தில் சபையின் பொருள் நிலையும் சீர்கேட டைந்தது. ஆண்டு விழாக்கள் செம்மையாக நடைபெற இயலாமற் போயின. 'சபையின் சிறப்பான பகுதியாகிய கல்லூரியில் பாடத்திட்ட முறைகளை மாற்றியமைத்தால், மாணவர்கள் மதுரைத் தமிழ்ச் சங்கத்துப் பண்டித பரிட்சைக்குச் செல்லாமல், சென்னைப் பல்கலைக்கழகத்து வித்துவான் பட்டம்பெற்று ஆசிரியப் பணியாற்றலாம்' என்ற கருத்து அண்ணாமலைப் பல்கலைக் கழகத்துக்குச் சென்ற பின் பண்டிதமணி அவர்களுக்கு ஏற்பட்டது. ஆகையால் கணேசர் செந்தமிழ்க் கல்லூரியைச் சென்னைப்பல்கலைக் கழகத்துக்குட்பட்ட ஒரு கல்லூரியாக்கப் பண்டிதமணி தம் செல்வாக்கு அனைத்தையும் பயன்படுத்தினார்கள்.

சிற்றூரிலுள்ள ஒரு கல்லூரி பல்கலைக் கழகத்துடன் இணைவது என்பது எளிதான செயல் அன்று. சென்னை மாநகருக்கு வெளியே ஒரு கல்லூரி நிறுவுவதை அதிகாரத் திலுள்ளவர்கள் விரும்பாத சூழ்நிலை. கிறித்தவப் பெரு மக்களன்றி ஏனையோர் கல்வி நிலையங்களை நடத்தாத காலம். 'தமிழுக்கு மட்டும் ஒரு தனிக் கல்லூரியா ?' என்று ஏளனஞ் செய்வோர் மிகுந்திருந்தனர்.

ஒரு கல்லூரி இணைய விரும்பினால் அதன் ஆட்சி யாளர் உரிய முறைப்படி பல்கலைக் கழகத்தாருக்கு மனுச் செய்துகொள்ளவேண்டும். பின்னர், பல்கலைக் கழகத்தின் ஆட்சிக் குழுவினர் (சிண்டிகேட்) அதை ஆராய்வதற் காக ஓர் உட்குழுவை அமைப்பார்கள். உட்குழுவினர் உரிய கல்லூரிக்குச் சென்று அதன் வரலாற்றை அறிந்து, தக்காருடன் விவாதித்துக் குறுக்குக் கேள்விகளும் கேட் பார்கள்; கல்லூரியின் கட்டிடங்களைப் பார்வையிடு வார்கள்; உணவு விடுதிகளைச் சோதனை செய்வார்கள்; மூலதனம் போதிய அளவு இருக்கிறதா என்பதைச் சரி

பார்ப்பார்கள்; ஓர் இலட்சம் அல்லது இரண்டு இலட்சம் ரூபாயைப் பல்கலைக் கழகத்தாரிடம் சேமிப்பு நிதியாகத் தந்து வைக்கவேண்டுமென்று சொல்லுவார்கள்.

இது போன்ற தொல்லைகளின்றி, ஓர் உட்குழு சட்டப்படி ஆராய்ந்து அறிக்கை எழுதிய அளவில், கணேசர் செந்தமிழ்க் கல்லூரி சென்னைப் பல்கலைக் கழகத்துடன் இணைந்து கொள்ளும்படி செய்த பெருமை பண்டிதமணியின் தனிப் பெருமை என்றே சொல்லவேண்டும். ஆய்வுக் குழுவினர் மேலைச்சிவபுரிக்கு வந்து சென்றதை யொட்டிய செலவுகளைக்கூடப் பல்கலைக் கழகம் வசூலிக்காமற் செய்தது அவருடைய நிகரற்ற திறமைக்குச் சான்று.

காலம் செல்லச் செல்ல, பண்டிதமணியின் செல்வாக்கு அளவு கடந்ததாக இருந்தது; அவர் மன உறுதி கொண்டிருந்தால், இச்சபை இன்னும் பல மடங்கு பெருகியிருக்கும். அந்த அளவுக்கு அவர் சபையைப் பிற்காலத்தில் வளர்க்காதது ஒரு குறையே எனினும், கணேசர் செந்தமிழ்க் கல்லூரி நிலைபெறச் செய்தது பாராட்டுக்குரியது. இக்கல்லூரி இன்றும்—என்றும்—அவருடைய நினைவுச் சின்னமாக விளங்கும். சன்மார்க்க சபையின் தோற்றத்துக்கும் வளர்ச்சிக்கும் அவர் செய்த பெருந்தொண்டு தமிழும் தமிழ் நாடும் உள்ளவரை பாராட்டப் பெறும். பண்டிதமணி அவர்கள் புகழுடம்பு எய்தியபோது அவர்கள்பால் கணேசர் செந்தமிழ்க் கல்லூரி முதல்வர் புலவர் க. ஆறுமுகனார் அவர்கள் இயற்றிய பாடல்களின் பின்வரும் பகுதிகள் சபைக்கும் பண்டிதமணிக்கும் உள்ள தொடர்பைத் தெளிவாகத் தெரிவிக்கின்றன:

**உலகுக் கொளியைத் தந்துயிர்கள்**
**உவக்கும் வண்ணம் எழுங்கதிர்போல்**

உணர்வுக் கொளியைத் தந்தெம்மை
உயர்ந்தோ னுக்குங் கதிரேச !
ஒருத்தன் பலவா யிரத்துளென
உலகோர் மதிக்க அறிவுருவாய்
உலாவும் பெரும்பே ராசிரிய !
உயர்பண் டிதமா மணிப்புலவ !
அலகில் கலையைச் சைவமுடன்
அளிக்கும் நமது சன்மார்க்க
அறிவுச் சபைத்தூண் ஐவர்முதலாம்
அனைத்தும் நின்றன் கவிச்சுவைக்கு
ஆனந் திக்கும் பெருவாழ்வு
அள்ளி அளித்த பெருவாழ்வே !
அண்ணால் மணிவா சகன்புகழை
அகிலம் ஊட்டிப் புகழ்பெற்றேய் !

# 5. நாடறிந்த நாவலர்

மேலைச் சிவபுரிச் சன்மார்க்க சபையின் ஆண்டு விழாக்களில் ஆண்டுதோறும் பண்டிதமணி இலக்கிய சொற்பொழிவுகளை ஆற்றி வந்தா ரென்றும் அவருடைய சொற்பொழிவுகளைக் கேட்டும், அவருடன் பலநாட்கள் உரையாடியும் தமிழகத்துப் பேரறிஞர்கள் பண்டிதமணி யின்புலமையை அறியத் தொடங்கினரென்றும் முன் கட்டுரையில் தெரிவித்தோம்.

இவ்வளவு சிறந்த அறிவாற்றலுடைய பண்டித மணியார் தங்களூரிலுள்ள கழகங்களிலும், தமிழ் மன்றங்களிலும், கல்லூரிகளிலும் இலக்கிய நயங்களை எடுத்துரைக்கவேண்டுமென்று மேலைச்சிவபுரிக்கு வந்திருந்த அறிஞர்களெல்லாம் விரும்பினர். அவ்விருப்பத்தின் பயனாகக் கணக்கற்ற மாநாடுகளிலும், ஆண்டு விழாக்களிலும் பண்டிதமணி தலைமை தாங்கினார்.

துறையூரில் 1932-ஆகஸ்ட் 6, 7 தேதிகளில் நிகழ்ந்த தஞ்சை திருச்சி மாவட்டப் புலவர் மாநாட்டில் அவர் தலைமை தாங்கினார். பூவாளூர் சைவ சித்தாந்த சபை விழாவிலும் அவர் தலைவரானார். சென்னைத் தமிழ்ப் புலவர் மாநாட்டிலும், குறுந்தொகை மாநாட்டிலும் தலைமை தாங்கினார். சென்னைச் சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் வெள்ளி விழா, தூத்துக்குடி சைவ சித்தாந்த சபையின்

பொன் விழா ஆகியவற்றிலும் அவர் தலைமை தாங்கினார். கரந்தைத் தமிழ்ச்சங்க ஆண்டு விழா, பேரூர்சற்சங்க விழா, தென்காசி திருவள்ளுவர் கழக விழா ஆகியவற்றிலும் அவர் தலைவராக இருந்திருக்கிறார். சுருங்கச் சொன்னால், பண்டிதமணி அவர்களுடைய தலைமையைப் பெறாத நிலையம் அக்காலத்தில் இல்லை. சன்மார்க்க சபையின் 31ஆம் ஆண்டு நிறைவு விழாவில் பண்டிதமணி அவர்களுக்கு அளித்த வரவேற்பிதழில் குறிக்கப் பெற்றிருந்தது போல,

> **"செங்கதிரோன் ஒளிவிரவாத் தேயமிலை**
> **யஃதேபோற் சிறந்த கல்வி**
> **யெங்கதிரே சப்பெரியோய் நின்றலைமை**
> **பெறாதசபை யாண்டு மில்லை"**

என்ற நிலை ஏற்பட்டிருந்தது. இயற்கையிலேயே உடல்நலம் குன்றியிருந்ததால் மேலைச்சிவபுரிப் பயணத்தோடு அமைதியடைந்திருந்த பண்டிதமணி, தம் உள்ளத்தின் ஆற்றலினால் பல ஊர்களுக்குச் சென்றவண்ணமாக இருந்தார்; தமிழ்த் தொண்டிலும் சைவத் தொண்டிலும் ஈடுபட்டார்; நாடறிந்த நாவலரானார்.

சைவ சமயத் தொடர்பான சொற்பொழிவுகளைப் பண்டிதமணி பல இடங்களில் ஆற்றியிருக்கிறார். 1935-ல் திருவண்ணாமலையில் நடைபெற்ற இளைஞர் மாநாட்டில், "தாயுமானவர் காலத்தில் சமய நிலை" என்பது பற்றியும், 1937-ல் வேலூரில், "சைவ ஒழுக்கம்" என்பது பற்றியும், 1940-ல் மயிலத்தில், "சிவப்பிரகாசர் அனுபவம்" என்பது பற்றியும், பண்டிதமணி சொற்பொழிவாற்றி யிருக்கிறார்; சமாஜத்தின் வெள்ளிவிழா 1930ஆம் ஆண்டில் சென்னைப் பச்சையப்பன் கல்லூரியில் நடைபெற்றபோழ்து, மூன்று

நாள் கூட்டங்களிலும் தலைமை வகித்து, அரிய விரிவுரை நிகழ்த்தியிருக்கின்றார்; பிறகு சமாஜத்தின் 37ஆம் ஆண்டு விழாவில், 1942-ல் சீகாழியில் தலைமை வகித்துப்பேருரை வழங்கினார்கள். சிதம்பரத்தில் நடைபெற்ற சைவ சித்தாந்த கோடைக் கால வகுப்பின்போது, பண்டிதமணியவர்கள் சித்தாந்த கருத்துக்களை மாணவர்களுக்குக் கற்பிப்பதுபோல, பெருங்கூட்டத்திலும் விளக்கமாக எடுத்துரைத்தார்கள்.

சைவசித்தாந்த கருத்துக்களை இவ்வாறு எளிதாகத் தெரிவித்தது போலவே, இலக்கியச் சுவையையும் பலரும் நுகரும் வண்ணம் பண்டிதமணி தமிழ்நாடெங்கும் பரப்பி வந்தார். எல்லோருக்கும் தெரிந்த பாடலாக இருப்பினும் அதுவரை யாரும் கேட்டிராத நயங்களை அப்பாடலின் வாயிலாக வெளிப்படுத்தும் தனித்திறன் பண்டிதமணிக்கு இருந்தது. பெரிய புராணம், சிலப்பதிகாரம், கம்பராமாயணம் போன்ற எந்த இலக்கியத்தையும் இனிமையாகப் பண்டிதமணியவர்கள் எடுத்துரைத்தார்கள். திருவாசகப் பாட்டு வந்துவிட்டால் இனிமை, இறையின்பமாக மாறிவிடும்.

பண்டிதமணியவர்கள் தலைமை தாங்குகிறார் என்றால் அக்கூட்டத்திற் கலந்து கொள்ளும் பேச்சாளர்கள் பலவாறு அல்லற்படுவர்; அஞ்சுவர். "மகாமகோபாத்தியாயர் பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார் என்றால் தமிழ்நாட்டில் அழுத பிள்ளை வாய் மூடாது. அது பாட்டுக்கு அழுது கொண்டுதான் இருக்கும். ஆனால் தமிழ்ப் புலவர்கள் கூட்டங்களில் இப்பெயரைச் சொன்ன மாத்திரத்தில் மரியாதைக்கு அறிகுறியான அமைதி நிலவும்" என்று கல்கி, ரா. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் எழுதியது முற்றிலும் உண்மை.

தமிழ்ப்புலவர்கள் மட்டுமல்ல, ஏனையோரும் பண்டித மணிக்கு அஞ்சினர். ஒரு முறை ஓர் அமைச்சர் தமிழாசிரியர்களைக் குறைகூறினர்: ''அவர்களுக்குக் க, கா என்ற இரண்டுக்கு மேல் ஒன்றும் தெரியாது. க என்பது கடவுள்; கா என்பது காதல்'' என்றார். எல்லோரும் கை கொட்டி அமைச்சரைப் பாராட்டினர். அதன் பின் அங்கே சொற்பொழிவாற்ற இருந்த பண்டிதமணியவர்கள், ''தமிழாசிரியர்களுக்குக் க, கா என்ற இரண்டிற்கு மேல் ஒன்றும் தெரியாது என அமைச்சர் கூறுவது உண்மை; அதற்குமேல் இவர் அறிந்தது என்ன? இவ்வுலகில் கடவுளுக்கும் காதலுக்கும் மேலாக எப்பொருள் இருக்கிறது? இந்த வகையில் தமிழ்ப்புலவர்கள் மாத்திரமல்ல, இங்கிலீஷ் புலவர்களும் அரசியல் நிபுணர்களும் எல்லோரும் ஒன்றுதான். இந்த அறியாதவர் கூட்டத்தில் அமைச்சர் விலக்கல்ல'' என்றார் எல்லோரும் பண்டிதமணியின் அஞ்சாது கண்டிக்கும் திறனை வியந்தனர்.

இவ்வாறு பலர் பண்டிதமணியைக் கண்டு அஞ்சியதுண்டு; வேறு சிலர், வாளினும் கூரிய அவருடைய சொற்களால் கற்றறிந்தோர் அவைகளிலே தம் மதிப்பை இழந்ததும் உண்டு. எனினும், தகுதி நிறைந்த சிலர் பண்டிதமணியவர்களின் தலைமையில் பேசும் வாய்ப்புப் பெறுவதைப் பெரும் பேருகவே கருதினர். கப்பலோட்டிய தமிழர் வ. உ. சிதம்பரம் பிள்ளையவர்கள் 14-1-1933-ல் திருநெல்வேலி திரு. என். இராமலிங்கம் பிள்ளையவர்களுக்கு எழுதிய கடிதத்தின் பின்வரும் பகுதி குறிப்பிடத்தக்கது:

> ''நமது அருமை நண்பர் பண்டிதமணி திரு. மு. கதிரேசன் செட்டியாரவர்களுக்கு நான் 31-1-33 மாலையில் அங்கு அவர்கள் தலைமையின்கீழ் திருக்

குறள் என்னும் பொருள் பற்றிப் பேச ஒப்புக் கொண்டிருப்பதாகவும், அவர்கள் தலைமை வகிக்க வரமுடியவில்லையென்று தந்தி கொடுப்பதாயிருந்தால், அவ்வாறே நானும் தந்தி கொடுத்துவிடுவேன் என்றும் தங்களுக்கு எழுதியிருப்பதாகத்தெரிவியுங்கள்.''

தமிழ் வளர்ச்சிக்குப் பண்டிதமணி ஆற்றியுள்ள பணியைத் தமிழகம் ஒருபோதும் மறக்க முடியாது.

''25 ஆண்டுகளுக்குள் தமிழ் மக்களிடையில் ஒரு புதிய கலையுணர்ச்சியும் ஆர்வமும் தோன்றி வாடியிருந்த தமிழ்க்கலை மறுமலர்ச்சி பெற்றது. இந்த மறுமலர்ச்சிக்கு முக்கியமான சில பெரியார்களின் பெயர்கள் நினைவுக்கு வருகின்றன. மறைமலையடிகள், கா. நமச்சிவாய முதலியார், உ. வே. சாமிநாத ஐயர், திரு. வி. க. டி. கே. சி. **பண்டிதமணி**. தமிழ்க் கடவுளாகிய முருகக்கடவுளின் ஆறுமுகங்கள்போல் இந்த ஆறு தமிழ்ப் பெரியார்களும் நம்முடைய கலை வளர்ச்சியில் முதன்மையானவர்கள்.''

என்று டாக்டர் ரா. க. சண்முகஞ்செட்டியார் அவர்கள் கூறியிருப்பது பொருத்தமே.

# 6. சமய நூலறிவு

'கல்வி யறிவும் புலவர்கள் தொடர்பும்' என்னும் பகுதியில், காரைக்குடி சொக்கலிங்க ஐயா அவர்களைப் பற்றிக் குறிப்பிட்டோம். பண்டிதமணி அவர்கள், திருமுறை களிலும் சைவ சித்தாந்த நூல்களிலும் பெரும் புலமை பெறுவதற்குச் சொக்கலிங்க ஐயா அவர்களின் அறி வுரையே ஓரளவு காரணமாக இருந்தது.

முற்காலப் புலவர்கள் தமிழறிவோடு சமய அறிவும் வளர்தற்குரிய நெறியில் முயன்று, நூல்களைக் கற்றுப் பேரறி வுடன் விளங்கினர். பண்டிதமணி அவர்களும் அத்தகைய சிறப்புடையவரே. இவர் திருப்பணி வாயிலாகச் சைவ சமயத்தை வளர்த்தும் பாதுகாத்தும் வரும் சமூகத்தைச் சேர்ந்தவர். ஆங்கிலேயர் தமிழ்நாட்டுக்கு வந்து, கிறித்தவ சமயத்தைப் பரப்ப எண்ணி, 19ஆம் நூற்றுண்டில் பெரிதும் முயன்று வந்தனர். அதனைக் கண்ட தமிழ் மக்கள் சமயப் பற்று மிக்காராய், சைவ சமயத்தைக் காக்க எண்ணிப் பல துறைகளில் முயன்றனர். அவ்வாறு முயன்றவர் களுள் ஆறுமுக நாவலர், இராமலிங்க அடிகள் முதலி யோர் குறிப்பிடத்தக்கவர். அவர்கள் முயற்சியால் சமயத் துறையில் ஒரு கிளர்ச்சி ஏற்பட்டது. அக் கிளர்ச்சியும் நம் பண்டிதமணி அவர்களின் சமயப்பற்றுக்கு ஓரளவு காரணமாயிற்று.

பண்டிதமணி இளமையிலேயே சைவ சமயப் பற் றுடையவராய்ச் **சிவநேசத் திருக்கூட்டம்** முதலியவற்றில் பங்கு கொண்டார்; பல இடங்களில் அவ்வியக்கம் பரவத்

தம்மாலான தொண்டினையும் செய்துள்ளார்; சன்மார்க்கக் கருத்தைப் பரப்புதற்குச் சபை ஒன்றை நிறுவிப் பேரும் புகழும் பெற்றார்.

பண்டிதமணி அவர்கள் சைவத்திற்குச் செய்துள்ள பெருந்தொண்டு திருவாசகக் கதிர்மணி விளக்கவுரையே. அவ்வுரையின் சிறப்பைப்பற்றி, இந்நூலில் தனியாக ஒரு கட்டுரை எழுதுவோம். இத்தகைய சிறந்த உரையைத் தமிழுலகுக்கு வழங்குவதற்கு முன்னரே, பண்டிதமணி அவர்கள் பல இடங்களுக்குச் சென்று, ஆங்காங்கே சொற்பொழிவுகள் செய்து, பெரிய புராணம், திருவாசகம் முதலிய நூல்களின் விழுமிய கருத்துக்களைப் பரப்பியுள்ளார். இச்சொற்பொழிவுகளையே 'சமயக் கட்டுரைகள்' (உரைநடைக் கோவை—முதற் பகுதி) என்னும் நூலாக அவர் வெளியிட்டார். அச்சிறந்த நூற்பொருளின் சாரத்தைச் சிறியேனாகிய யான் தருவது சிறப்புடையதாகாது என எண்ணுகின்றேன். ஆகையால் இலக்கியப் புலமையும் சைவசித்தாந்த அறிவும் பெற்று விளங்கிய பேராசிரியர் கா. சுப்பிரமணிய பிள்ளை, எம். ஏ., எம். எல். அவர்கள் அந்நூலை ஊன்றிப் படித்து, அதற்கு முகவுரையாக எழுதியுள்ள கருத்துக்களைக் கீழே தந்துள்ளேன் :

"சன்மார்க்க மென்னும் முதற் கட்டுரையில் மக்கட் பிறப்பின் பயனெய்துதற்கு மொழியறிவும் சமய ஞானமும் இன்றியமையாச் சாதனங்களென்பதும், மக்கட் பிறவியின் தனிச் சிறப்பும், உண்மை நிலையாவது உயிர் தூய்மையடைந்து இறைவனுடன் இரண்டறக் கலந்து, என்றும் நுகரும் பேரின்ப நிலையேயாம் என்பதும், அவ்விரண்டற்ற நிலையை வடமொழியாளர் அத்துவிதமென்பர் என்பதும், அத்துவிதச் சொல்லின் தெளி பொருளும், உண்மை நிலையை அடைதற்குரிய நெறியே சன்மார்க்கம் என்பதும்,

இறை, உயிர், கட்டு என்னும் முப்பொருளின் உண்மையைக் கருதலளவையாலும் நூலளவையாலும் ஆயும் முறையும், கேனோபநிடதக் கருத்தும், வேதத்தின் இதயத்திற் சிவம் விளங்குவதும், சிவமே சத்துப்பொருள் என்பதும், சத்தை யறிதற்குரிய மார்க்கமே சன்மார்க்க மென்பதும், நல்லொழுக்க நெறியும் சரியை கிரியை யோகத்தின் முடிவாகிய ஞானநெறியும் சன்மார்க்கங்களாய்ச் சிவநெறியுள் அடங்கும் முறையும், பிறவும், உபநிடதங்கள், சிவஞானபோதம், திருமந்திர முதலிய சைவசித்தாந்தத் தமிழ் நூல்களின் துணைகொண்டு செவ்விதின் விளக்கப் பெற்றுள்ளன.

**சிவபிரான் கருணையும் சீவர்கள் கடமையும்** என்ற சொற்பொழிவின் கருத்துக்கள்: — 'தன் கடன் அடியேனையுந் தாங்குதல்' என்பதால் சிவபிரான் திருவருளும், 'என் கடன் பணிசெய்து கிடப்பதே' என்பதால் சீவர்கள் கடமையும் அறியற்பாலன. ஐந்தொழிற்கும் உரிமையுடைய பரம்பொருள் சிவமே என்பது நூல்களின் முடிபாகும். அன்பு, தொடர்புடையார் மாட்டுச் செல்லும் உள்ள நெகிழ்ச்சி. அருள், எல்லா உயிர்கள் மாட்டும் நிகழும் அத்தன்மையதாகும். அன்பின் குழவி அருள் என்னுங் கருத்து, 'அருட்பெருகு தனிக்கடலும் உலகுக்கெல்லாம் அன்புசெறி கடலுமாம்' என்னும் பெரிய புராணப் பகுதியின் அடிப்படையிலமைந்து, அப்பராகிய திருநாவுக்கரசு அன்புக் கடலெனவும், பிள்ளையாகிய சம்பந்தர் அருட் கடலெனவும் உய்த்துணர்தற் கேதுவாய்ப் போந்த நூல் நயம் அழகாக எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. உயரிய இறைவன் மாட்டு அருளும், தாழ்ந்த உயிர்கள் மாட்டு அன்பும் நிகழ்தற்குரியன. அருளை முற்றிலும் ஆளும் பேராற்றல் இறைவனுக்கே உரியது. உலகம்

உய்ய நஞ்சுண்ட சிறப்பு, 'பெயக் கண்டும் நஞ்சுண் டமைவர்' என்னுந் திருக்குறள் அடியில் குறிப்பிக்கப்பட் டுள்ளது. சித்துச் சத்தாயுள்ள சிவமே ஈயுந் தாதாவாகும். ஏனையோர் ஈயப்படும் பொருளாவர். 'வழங்குகின்றுய்க் குன் அருளாரமுதத்தை' என்னும் திருவாசகத் திருப்பாசு ரத்தின் ஒவ்வொரு சொல்லின் நுண்ணிய காரணமும், மண் சுமந்த திருவிளையாட்டின் தத்துவக் கருத்தும் இக் கட்டுரையின் மூன்றும் பகுதியுள் உள்ளங் கவரத்தக்க வாறு விளக்கப்பட்டுள்ளன. கருணை, அறக்கருணை, மறக் கருணை யென இருவகைப்படும். அன்பும் அவ்வாறே இரு பிரிவாகும் என்பது, 'அறத்திற்கே அன்புசார் பென்ப அறியார், மறத்திற்கு மஃதே துணை' என்ற திருக்குறளின் கண் குறிப்பிடப்பெற்றுள்ளது. இறைவன் அருளே உயிரின் அன்பிற்குக் காரணம் ஆகும். இயற்கைத் தண்ணளி பயன் கருதாது நிகழும். அது பாரி முதலிய வள்ளல்கள்பாற் காணப்படும். உலகியற் கடமை, சமயக் கடமை என்ற இரண்டினுள் இறைவன்பால் அன்பு செலுத்துதல் சமயக்கடமை ஆகும். சிவநெறியிற் செல்லு வோர் மலத்தைக் கெடுத்துச் சிவத்துவத்தைக் கொடுப்ப தாகிய தீக்கைப்பேறு உடையராதல் வேண்டும். சமய ஒழுக்கத்தாலன்றி உள்ளத் தூய்மை யுண்டாகாது. உள்ளத் தூய்மையின் பயனுக ஞானம் கைவரும். திரு வுருவ வழிபாடு இறைவன்பால் அன்பு செலுத்தற்குச் சிறந்த சாதனமாகும். இறைவனுக்கு உண்மையான அடிமை பூண்டவர்கள் பற்றற்ற பணிவு நிலையையுடையரா யிருப்பர். அவர் வீடும் வேண்டா விறலின் விளங்குவர். யானென தென்னுஞ் செருக்கற்றுத் திருவருள் வழி நிற்பார்க்குப் பிராரத்துவ வினை உடலூழாய்க் கழியும் என் பனவாம்.

சைவ சமய விளக்கம் என்னும் கட்டுரையுள், வாழ்க்கை நோக்கமானது அற நிலையிற் பல திறப்பட்டுச் சமய நிலையில் ஒன்ருக முடியுமென ஆசிரியர் விளக்கினர். இல்வாழ்க்கையின் முடிந்த நோக்கம் பிறர்க்கு நன்மை செய்வதே யாதலின், அதனை இல்லின்ப மென்னுது இல்லறமெனப் பெரியோர் குறிப்பிட்டனர் எனக் காட்டிய நயம் பாராட்டத்தக்கது. பெருங் கவிகளின் உள்ளக் கிடக்கையை உணர்ந்து முகத்தால் இன்பச் சுவை விளைக்குஞ் செய்யுட்களில் ஆசிரியர் சேக்கிழார் தெய்வ மணங் கமழ்வித்த நயமும், காளிதாச மகா கவியின் உய ரிய நோக்கமும் இனிது விளக்கப்பட்டன. ஒழுக்கத் திற்குச் சமயக் கொள்கையின் இன்றியமையாமையும், சைவத்தின் பொது இயல்பும், பட்டினத்து அடிகள் முதலிய பெரியார்களின் உரையளவையானும் கருத லளவை யானும் துணியப்படும் முப்பொருள்களின் இயல்பும் உண்மையும் இன்னவென விளக்கிய பின், ஆசிரியர் இறைவனை யடைதற்குரிய நெறிகள் அறிவு நெறி, அன்பு நெறி யென இருவகைப்படும் என்பதை அறிவுறுத்தினர். அறிவு நெறி யென்னும் பகுதியுள் **அனுபவமென்பது அழுந்தி யறிதலாகும் என்பதும், சிவோகம்பாவனை, கருட பாவனை என்பவற்றின் இயல்பு இன்னவென்பதும், 'உடம் பெனு மனையகத்துள்' என்னும் தேவாரத் திருப்பாட்டின் பொருளும் திட்பமாக விளக்கப்பட்டன.** அன்பு நெறி யென்பதனுள் தம்மை மறந்து இறைவனை நினைந்துருகும் அன்பர்களின் மெய்ப்பாடும், விதி விலக்கைக் கடந்து செல்லும் அதன் இயல்பும் அறிவுறுத்தப்பட்டன. கட்டு நிலையிலும் வீட்டு நிலையிலும் நீங்காத உயிரின் அடிமைத் திறன் இன்ன என்பதும், தொண்டக் குலத்தினர்க்குப் பண்டைக் குலமாகிய சாதி வேறுபாடு இல்லை யென்பதும், முத்தி நிலையில் மூன்று முதலும் உண்டென்பதும், மல நீக்

கம் எவ்வாறு இன்பம் விளைவிப்ப தென்பதும், புராண முதலிய நூல்களை ஆராயு முறையும், சமயத்தைப் பாது காக்கும் கடமையும் **இக்கட்டுரையின் இறுதியிற் போந்த விழுமிய கருத்துக்களாம்.**

**ஞானத்தின் திருவுரு** வென்னுங் கட்டுரையுள் குணி களைக் குணங்களாகக் கம்பர், சேக்கிழார் முதலிய பெருங் கவிகள் புனைந்துரைக்கும் நயமும், **'ஞானத்தின் திருவுருவை'** என்ற பெரிய புராணத் திருப்பாட்டின் விளக்கமும் நுண்ணிய ஆராய்ச்சி முறையின் வைத்து இனிதுணர்த்தப்பட்டன. திருஞானசம்பந்தப் பெருமான் பர ஞானத்தின் திருவுருவாயும் அபர ஞானத்தின் இணையற்ற துணையாயும் அவர் திருவுள்ளப் பான்மையைக் கருது வார்க்கு விளங்கின ரெனவும், அவர் தூய உடலியல்பைக் கருதுவார்க்கு அவர் மதிக் கொழுந்தென விளங்கினர் எனவும், அவரது அருண் மொழியின் இனிமையைக் கருது வார்க்கு அவர் ஏழிசையின் அவதாரமாக இலங்கினர் எனவுங் கூறப்பட்டுள்ளன. இக்கருத்து நயங்களை **அறிவுறுத்திய தனி மாண்பு இவ்வாசிரியர்க்கே யுரித்து.**

**அன்பின் திருவுரு** வென்னுங் கட்டுரையானது கண்ணப்ப நாயனர் புராணத்திற்கு உரை நடையிலமைந்த பேருரை விளக்கமாகத் திகழ்கின்றது. கண்ணப்பரை ஆசிரியர் சேக்கிழார் அன்பின் வடிவாகக் குறித்த சொற் றொடர்கள் இக் கட்டுரையிற் பல இடங்களில் விளக்கம் பெற்றுள்ளன. கண்ணப்பரின் வரலாற்றுச் சுருக்கமானது, தத்துவ நுண்பொருள் கொள்ளுதற்குப் பொருத்தமாக அமைக்கப்பட்டுள்ளது. 'பிறப்பின் பெருமை' யென்னும் பகுதியுள், பெரியார் பெருமை அவர் பிறந்த ஊருக்கும் இயைவது என்பதை ஆசிரியர் சேக்கிழார் நயமுறக் காட் டிய முறையும், கண்ணப்பரைச் சிங்கக்குட்டி என்பதற்

கேற்ப, அவர் பெற்றோரைச் சிங்கங்களாகக் கூறிய முறையும், திண்ணனாரைப் புலிக்குட்டியென்று கூறியதற்குக் காரணமும், ''பான்மதி உவரி யீன்றுளெலன' என்ற பகுதியின் நுண் பொருள் விளக்கமும் இனிது இயம்பப்பட்டன. அவ்வாறே பல நூல் நயங்கள், 'பிள்ளைமைப் பருவம்', 'தொழிலுரிமை கோடல்' என்னும் பகுதிகளிற் காணப்படுகின்றன. கண்ணப்பர் முற்பிறப்பிலே பார்த்தனாயிருந்தமைக்குக் காரணங்கள் 'பழம் பிறப்புத் தொடர்ச்சியுள்' தொகுக்கப்பட்டன. அன்பின் மெய்ப்பாட்டுத் திறங்களும், அகவிருள், புறவிருள், அகப்புறவிருள் என்னும் முத்திற இருளினங்களை ஒழிக்கும் மூவகை ஒளியினங்கள் திருக்காளத்தி மலையி லுண்மையும், நக்கீர தேவர் பாராட்டிப் பாடிய கண்ணப்பர் மாண்பும், அன்புநிலை யென்னும் பகுதியுள் நன்கு விளக்கப்பெற்றன. 'கலை மலிந்த சீர் நம்பி' என்பதன் நுண்பொருள் தனிப்பகுதியாக வைத்து விளக்கப்பட்டது. கண்ணப்பர் தம்மை மறந்து, சித்தம் சிவமாகப் பெற்றுப் பேரின்ப நிலையடைந்தமை கூறும் பகுதியுள், மும்முறை, நிற்க எனக் கூறியதன் காரணம் இனிது விளக்கப்பட்டது. வரலாற்று நுண்பொருள் கூறுமிடத்து, 'நாகன் நிலை ஆணவம் போல்வதாம்; தத்தை நிலை மாயை போல்வதாம்; காடனியல்பு நல்வினை போல்வதாம்; நாணனியல்பு உயிர்க்குச் சுட்டறிவு நல்கும் வாக்குக்களின் மூலமாகிய சுத்த தத்துவங்களின் தொகுதி யெனப்படும் மாயேய மலம் போல்வதாம்; தேவராட்டியின் இயல்பு மறைப்புச்சத்தி என்னும் திரோதான மலம் போல்வதாம் என்னும் இவ்வுண்மைகளும், கண்ணப்பர் வீட்டுநிலை யெய்துதற்குரிய உயிராதலும், காளத்தியப்பர் சத்தியொடு கூடிய சிவமாதலும் நன்கு விளக்கிக் காட்டப்பட்டுள்ளன. இந்நுண் பொருள்களும், இடக்கண்ணை யிடந்து அப்ப நினைந்த மாத்திரத்தில் கண்ணப்பர் மனம் இறைவனது **இடக்கண்ணாகிய சந்திர**

னில் ஒடுங்கிவிட்டமையால் அந்நிகழ்ச்சி நடைபெற வில்லை என்ற நுட்பமும், கண்ணப்பருக்கு இறைவன் நயன தீக்கை, பரிச தீக்கை என்பவற்றை நிகழ்த்திய வித முட், ஆறு நாட் பூசனை ஆறு அத்துவாக்களைக் கடப்பதற் குதவின என்ற கருத்தும், மூல கன்மத்திற்கு வேறாக இரு வினைகள் உண்மையும், கண்ணப்பரை இறைவன் தனது வலப்புறத்தில் மன்னுவித்தமைக்குக் காரணமும் நிகரற்ற ஆழ்ந்த சைவசித்தாந்த நூலாராய்ச்சித்திறனோடு இந் நூலுட் காணப்படுதல்போல இதுவரை எவரும் அறிவுறுத் தக் கண்டிலம். இதன் பொருட்டு இந்நூலாசிரியர்க்குத் தமிழ்ச் சைவ வுலகம் கைம்மாறற்ற கடப்பாடுடையது. இவ்வாறு பிற நாயன்மார் வரலாறுகளுக்கும் இவ்வாசிரியர் விளக்கம் எழுதின் அஃது அளவற்ற பெரும் பயன் நல்குவ தாகும்.

ஈண்டுத் தொகுக்கப்பெற்ற ஐந்து கட்டுரைகளும் திருவைந்தெழுத்துப்போலப் பாராட்டத் தக்கன. அவை முறையே கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிட்டை கூடல் முத்திப் பேறு என்பவற்றின் நுட்பங்களை விளக்குவனவா யமைந்துள்ளன. இந்நூல் சைவ உண்மையை அறிய விரும்பும் தமிழ் மாணவர்களுக்கு எளிதிற் பெரும் பயன் தரும் இணையற்ற அறிவுக் கருவூலமாகப் போற்றற்பாலது.”

# 7. வடமொழிப் புலமையும் பயனும்

பண்டிதமணி அவர்கள் தருவை நாராயண சாத்திரியார் என்பவரை ஆசிரியராகக் கொண்டு வடமொழி பயின்றதைப் பற்றிச் சில குறிப்புக்களை 46ஆம் பக்கத்தில் தெரிவித்தோம். அக் கல்வியின் பயனாக அவர் பெற்ற வடமொழிப் புலமையின் சிறப்பையும், அதனால் தமிழுக்கு விளைந்துள்ள பயனையும்பற்றிச் சிறிது விரிவாக இக்கட்டுரையில் கூறுவோம்:

பெருங் காப்பியங்களிலும் சிறந்த நாடகங்களிலும் பண்டிதமணிக்கு ஈடுபாடு இருந்தது. இந்த ஈடுபாட்டால் தான், வடமொழியைப் பயிலவேண்டும் என்ற அவா அவருக்கு ஏற்பட்டது. அம்மொழியிலுள்ள நாடகங்களை மட்டுமன்றி நீதி நூல்கள், காவியங்கள், அலங்கார நூல்கள் பாணினி வியாகரணம் ஆகியவற்றையும் முறையாக மிக ஆழ்ந்து பயின்றார். அதன் பயனாக வடமொழிப் பெரும் புலவர்களும் இவரை மிகவும் மதித்தார்கள். வடமொழிக் கழகங்கள் இவரைப் போற்றிச் சிறப்பித்தன. வடமொழி விடைத் தாள்களைத் திருத்தும் தேர்வாளராகவும் இவர் பணியாற்றினார். மதுரையில் உள்ள இராமேச்சுர அறநிலைய வட மொழிக் கல்லூரியின் ஆலோசனைக்குழு உறுப்பினராகவும் இவர் நியமனம் செய்யப்பெற்றார்.

வடமொழி அறிவின் பயனாக, பண்டிதமணி தம்சொற்பொழிவுகளில் காளிதாசர் போன்ற வடமொழிப் புலவர்களின் செய்யுள் நலங்களையெல்லாம் தமிழ்ப் பாடல்களுடன் வைத்துச் சீர்தூக்கிக் கேட்பார் வியக்கும்படி

செய்துவந்தார். இத்தகைய போக்கினை, தமிழ்—ஆங்கிலம் கற்ற பெரும் புலவர்களிடமும் காண்டல் அரிது. இவ்வகையில் இவருடைய சொற்பொழிவு தனிச் சிறப்புடன் விளங்கிற்று. இரு மொழியின் பெருமையையும் ஆழத்தையும் கேட்டு மகிழ்வதற்காக ஆங்கிலத்திலும் வடமொழியிலும் சிறந்து விளங்கிய புலவர்களும் இவரது சொற்பொழிவைக் கேட்க மிக விரும்பி வருவர். இக் கருத்தையே டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர் அவர்கள் பண்டிதமணி அவர்களைப்பற்றிப் பாடிய பின்வரும் பாடலில் காணலாம் :

**"வடமொழி வாணருந் தென்மொழி வாணரும்**
**ஆங்கிலப் பயிற்சியி லோங்கிய நிபுணரும்**
**வேட்டுப் பலமுறை கேட்டுச் சிரகர**
**கம்பிதஞ் செய்திடக் கவின்பிர சங்கம்**
**புரிதரு திறலினன்"**

அக்காலத்தில் ஆங்கிலத்தில் பெரும்புலமை பெற்று விளங்கிய வ. வே. சு. ஐயர், வ. உ. சிதம்பரம் பிள்ளை, விபுலானந்த அடிகள், மறைமலை அடிகள், கா. சுப்பிரமணியப்பிள்ளை, டாக்டர் சோமசுந்தர பாரதியார் ஆகியோர் தமிழ் இலக்கிய வளர்ச்சியில் ஈடுபட்டுத் தமிழ்நாட்டுக்கு அறிமுகமாயினர். ஆங்கில மொழியறிவு பெறுதிருந்தும் மேற்குறிப்பிட்ட பேரறிஞர்களைப் போன்ற புகழும், அவர்கள் மதிக்கத்தக்க அறிவும் பெற்றிருந்த பெருமை பண்டிதமணிக்கு உண்டு. இவ்வாறு இவர் புகழ்பெற்றதற்கு ஓரளவு காரணமாக இருந்தது, தென்மொழியைப் போல வடமொழியிலும் இவர் பெரும்புலமை பெற்றிருந்ததே.

இக்காலத்தில் ஒரு சிறிதே வடமொழி அறிவு பெற்றுள்ளவர்கள் வடமொழி எழுத்துக்களிலேயே தமிழை எழுத

வேண்டும் என்று பிரசாரம் செய்துவருகின்றனர். இவர்களைப் போலன்றி, பண்டிதமணியவர்கள் தம் வடமொழிப் புலமையைத் தமிழினை வளம்படுத்தவே பயன்படுத்தினர்.

தமிழ் நூல்கள் அனைத்தும் வடமொழியிலிருந்து வந்தனவே யென்றும், வடமொழிக் காவியங்களின் மேன்மை தமிழில் இல்லையென்றும் தமிழ்ப் புலவர்களாலுங்கூடக் கருதப்பட்ட ஒரு காலத்தில், பண்டிதமணி அக் கருத்துப் பிழையென்பதைப் பலருமறியக் கூறினர். பல சமயங்களில் அவர் வட நூல்களையும் தமிழ் நூல்களையும் ஒப்பிட்டு விளக்கித் தமிழின் மேன்மையை நிலைநாட்டியிருக்கிறார்.

> "தமிழ் மற்றொரு மொழியினின்றும் தோன்றிய தென்றுதல், பிறிதொன்றின் சார்பின்றி நடைபெறு தென்றுதல் கூறுவார், உண்மை ஆராய்ச்சி இலராவர். ஒரு சில வடசொற்கள் உண்மை பற்றித் தமிழ்மொழியை வடமொழியினின்றும் தோன்றிய தென்றல் பொருந்தாத ஒன்றும்"

என்றும்,

> "நமக்குரிய நாட்டு மொழியைப் புறக்கணித்து வேற்று மொழியில் எத்துணை மேற்சென்றாலும் மொழியறிவால் பெறும் பயன் முற்றும் எய்தாது"

என்றும் பண்டிதமணி வற்புறுத்திக் கூறியிருக்கிறார்.

பண்டிதமணியவர்களின் இருமொழிப் புலமைக்கு ஏற்ப, அவர்களுடைய இயற்பெயரும், 'கதிர்' என்னும் தமிழ்ச் சொல்லும் 'ஈசன்' என்னும் வடசொல்லும் சேர்ந்து அமைந்திருப்பதையும் அவர்கள் சில சமயம் நகைச்சுவைபடத் தெரிவிப்பது உண்டு. இவரைப் பற்றிப் புகழ்ந்து பேசிய சில புலவர்களும், "இவருக்கமைந்துள்ள பண்டிதமணி யென்னும் பெயர் இவரது இரு மொழிப்

புலமையினைக் காட்டுகின்றது. 'பண்டித' என்ற வடசொல்லும் 'மணி' என்ற தமிழ்ச் சொல்லும் ஒன்று சேர்ந்து விளங்குவதைக்காண்க' எனக் கூறியுள்ளார்கள். பண்டிதமணியவர்களின் வடமொழிப் பேரறிவைப் பாராட்டும் வகையில் மறைமலை அடிகள் பின்வருமாறு ஒருமுறை குறிப்பிட்டார்கள் :

> ''பண்டிதமணியவர்கள் மட்டும் தனித்தமிழ் இயக்கத்தின் கொள்கைகளை ஒப்புக் கொண்டு, நாம் தமிழாக்கியிருக்கும் வட சொற்களுக்குத் தக்க திருத்தங்கள் செய்து தருவார்களே யானால் நம் இயக்கத்தை எவராலும் அசைக்க இயலாது.''

இனி, பண்டிதமணியவர்கள் வடமொழியிலிருந்து தமிழுக்கு வழங்கிய நூல்களைப் பற்றிக் கூறுவோம். இந்த மொழிபெயர்ப்பு நூல்கள் யாவும் சிறந்த முறையில் முதல் நூலின் உட்பொருளைத் தரும் சிறப்புடையன. இவர் மொழிபெயர்த்துள்ள பிரதாபருத்திரீயம், மாலதி மாதவம் என்னும் இரண்டு நூல்களும் இன்னும் அச்சிடப் படவில்லை. ஏனைய நூல்களில் அர்த்த சாஸ்திர மொழிபெயர்ப்பு இவர்களுடைய இறுதிக் காலத்தில் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் செய்யப் பெற்றது. இந் நூலைப் பற்றித் தனிக் கட்டுரை ஒன்று எழுதுவோம்.

பண்டிதமணி மொழிபெயர்த் துதவிய ஏனைய நூல்கள் உதயண சரிதம், சுலோசனை, மண்ணியல் சிறு தேர், சுக்கிர நீதி என்பன.

சுலோசனை என்பது ஒரு சிறு கதை; ஒரு கற்பரசியைப் பற்றியது; அவலச் சுவை நிறைந்தது; இம் மொழி பெயர்ப்பு, பண்டிதமணியின் அழகிய உரைநடைக்குச் சான்றாக விளங்குகின்றது.

தமிழில் நாடக நூல்கள் குறைவு; நாடகக் கலை வளர்ச்சி கருதி, இக்குறையைப் போக்க வடமொழியிலுள்ள சிறந்த நாடகங்களைத் தமிழில் தர வேண்டுமென்று அறிஞர்கள் கருதினர். காளிதாசர் இயற்றிய நாடகங்களில் சிறந்து விளங்கும் சாகுந்தலம் என்னும் நூலை வடமொழியிலிருந்து மறைமலையடிகள் மொழி பெயர்த்துத் தமிழுக்கு ஈந்தது போலவே, பண்டிதமணி யவர்கள் வடமொழியில் மற்றொரு பேரிலக்கியமாக விளங்கும் மிருச்ச கடிகத்தைத் தமிழர்களுக்கு வழங்கியுள்ளார். இம்மிருச்ச கடிகமே வடமொழி நாடகங்களிலெல்லாம் காலத்தால் முந்தியது. நாடகப் பேராசிரியரான பாச மகா கவி வியக்கத்தக்க முறையில் இயற்றிய **சாருதத்தம்** எனப் பெயரிய நாடகத்தை விரித்து விளக்கி, **மிருச்சகடிகம்** என்னும் பெயரில் அரசரும் புலவருமான சூத்திரகன் என்பார் வெளிப்படுத்தினர். இந் நாடகம் பலரால் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப் பெற்றுள்ளது. அண்மையிற்கூட இந் நாடகத்தை அமெரிக்காவிலுள்ள ஹாவர்ட் பல்கலைக் கழகத்தார் வெளியிட்டுள்ளனர்.* நியூயார்க்கு முதலிய இடங்களிலுள்ள அரங்குகளில் இந்நாடகம் நடிக்கப்பெற்றிருக்கிறது. இத்தகைய ஒப்பற்ற இலக்கியத்தைத் தமிழில் தந்தபோது, **மண்ணியல் சிறுதேர்** என்னும் தமிழ்ப்பெயரிலேயே அவர் மொழிபெயர்த்தார். இந்நூல் அவருடைய புலமைக்கு மாத்திரமன்றி, எல்லையற்ற தமிழ்ப் பற்றுக்கும் தமிழ்ச் சொற்கள் இருக்கும்போது வடமொழிச் சொற்களை வழங்க வேண்டியதில்லை என்னும் சீரிய கொள்கைக்கும் சான்றாக இருக்கிறது. இந்நூல் இடையிடையேசெய்யுள் விரவப்பெற்ற உரைநடை நூலாக வடமொழியில் உளது; அதுபோன்றே உரையை உரையாகவும், செய்யுளைச் செய்யுளாகவும்

* The Little Clay Cart—Arthur William Ryder.

பண்டிதமணியவர்கள் தமிழில் தந்திருக்கிறார்கள். 'வட மொழியில் தெளிவு குன்றிக் கிடக்கும் சில இடங்களில் இத்தமிழ்நூல் தெளிவு மலிந்து காணப்படுகின்றது' என்று வடமொழி அறிஞர் கூறியுள்ளனர். புலமையற்ற பாத்திரங்களைச் சேரி மொழியை ஒத்த சிதைந்த பிழைபட்ட சொற்களால் பேச வைத்திருப்பது வடமொழியிலுள்ள முதல்நூலின் சிறப்பு. அதை நீக்கி, பண்டிதமணியவர்கள் பயில்வார்க்கு மொழிநயம் தோன்ற இப்பகுதியை எழுதியிருக்கிறார்கள். 'இந்நாடகம் நடிக்க உதவினால் மட்டும் போதியதாகாது; படிக்கவும் பயன்பட வேண்டும்' என்று அவர்கள் கருதியிருக்க வேண்டும்.

இம் மொழிபெயர்ப்பு நூலில், கதைச் சுருக்கமும் நாடகப் பாத்திரங்களின் பெயர்விளக்கமும் தரப்பெற்றுள்ளன; பக்கந்தோறும் அடிக் குறிப்புக்கள் உள்ளன. கருத்து, அமைப்பு, நடை, சுவை, உவமைகள், கற்பனை அலங்காரங்கள் ஆகியவற்றாலும் இந்நூல் மேம்பட்டு விளங்குகிறது. இந்நூலில் பண்டிதமணி அவர்கள் யாத்துள்ள செய்யுள்களை நோக்கின், இப் பெரும்புலவர், "கவிமணி எனவும் விளங்குகின்றார்" என்று விபுலானந்த அடிகள் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

## சுக்கிர நீதி

பொருளைப் பற்றித் தனித்துக்கூறும் நூல்கள் தமிழில் அருமையாகவே உள்ளன. இக்குறையை நிறைவாக்கப் பண்டிதமணி அவர்கள் விரும்பியபோது, வடமொழியில் வியாழன், வெள்ளி, சாணக்கியன் ஆகியோர் இயற்றிய நூல்கள் அவர் நினைவில் தோன்றின. வெள்ளி(சுக்கிரன்*) இயற்றிய 'ஔசநசம்' என்னும் பரந்த நூல் அவர்

* சுக்கிராச்சாரியார் என்றுங் கூறுவர்.

உள்ளத்தை ஈர்த்தது. அதன் சாரமாகிய சுக்கிர நீதியைத் தமிழில் தர அவர் முயன்றார்.

இம் முயற்சி தமிழ் அறிஞர் பலர்க்கும் இன்பத்தை விளைவித்தது. 24—3—1924 இல் டாக்டர் உ. வே. சாமிநாத ஐயரவர்கள் சுக்கிரநீதி கையெழுத்துப் படியின் முதற் பகுதியைப் படித்தபின் எழுதிய கடிதம் வருமாறு:

> "எவ்வளவு ஜாக்கிரதையாகவும் திருத்தமாகவும் வடமொழியிலிருந்து தமிழில் மொழி பெயர்க்கப்பட வேண்டுமோ அந்த அளவிற் சிறிதுங் குறையாமல் அம் மொழிபெயர்ப்பு விளங்குகின்றது. தங்களுடைய கல்வி வன்மையையும் ஆராய்ச்சி வன்மை முதலியவற்றையும் அம் மொழிபெயர்ப்பு காட்டுகின்றது. இக் காலத்து வேறொன்றாலும் விளங்காத பல அரிய விஷயங்களை அந்நூல் தெரிவிக்கின்றது. அந்நூல் வெளியானால் தமிழுலகம் மிக்க பயன் பெற்றதாகும் என்பது என் கருத்து."

இக் கடிதம் வந்த பின்னர், நூலை விரைந்து முடிக்க வேண்டுமென்ற எண்ணம் பண்டிதமணி அவர்கட்கு ஏற்பட்டது; சன்மார்க்க சபையின் வாயிலாக, அதன் தலைவர் அண்ணாமலைச் செட்டியார் அவர்கள் மனமுவந்து ஆதரித்து இந்நூலை வெளிப்படுத்தலானார்கள்.

சுக்கிர நீதிக்கும் திருக்குறளுக்கும் உள்ள தொடர்பை இனிக் கூறுவோம்: சுக்கிர நீதியும் ஒரு சிறந்த நீதி நூல். அது பத்தாம் நூற்றாண்டில் தோன்றியது என்பர்; திருக்குறள் போன்ற தமிழ் நூல்களில் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே சுருக்கமாகக் கூறப்பெற்றுள்ள உண்மைகளை, சுக்கிரநீதி பல மேற்கோள்களுடன் விரிவாகத் தெரிவிக்கிறது. எனவே, திருக்குறளை விளக்க

மாக அறிய உதவும் கருவியாகிய ஒரு சிறந்த நூலைப் பண்டிதமணி அவர்கள் தமிழகத்துக்கு வழங்கியுள்ளனர். திருக்குறள் நூலாராய்ச்சிக்குச் சுக்கிரநீதியைப் படித்து உணருதல் பேருதவியாக இருக்கும். சுக்கிராச்சாரியார் இயற்றிய ஔசநசத்தையும் ஏனையநூல்களையும் கற்றுத் தேர்ந்தமையே, திருக்குறள் நுட்பங்களை ஆழமாக உணரப் பண்டிதமணிக்குத் துணைபுரிந்தது என்பதும் இங்கே தெரிவிக்கத்தக்கது.

கிரேக்க நாட்டில் பிளேட்டோ என்னும் பேரறிஞர் எழுதிய அரசியல் சாத்திர நூல் ஒரு பேரிலக்கியமாகக் கருதப்பெறுகிறது; சுக்கிரநீதி அதனுடன் ஒத்த சிறப்புடையதென்பது இந்நூலைப் படித்தபின் எவர்க்கும் புலனாகும்.

சுக்கிரநீதி பெரும்பாலும் அரசியலைப் பற்றியும் ஓரளவு வருணாச்சிரமத்தைப் பற்றியும் கூறுகிறது; சந்திரகுப்தன், அசோகன் ஆகிய பேரரசர்களின் காலத்தில் நிலவிய அரசியல் முறையின் பெருமையைத் தெரிவிக்கிறது; செம்மையான அரசு எவ்வாறு இயங்க வேண்டுமென்பதை வரையறுத்துச் சொல்லுகிறது இந் நூலில் நிலத்தின் அளவு வகைகள் கூறப்பெற்றுள்ளன. 'கிராமம் என்பது 5000முழம் அளவுள்ளதும் 1000 ரூபாய் நிலவரி செலுத்தத் தக்கதும் ஆம்' என்றும் குறிக்கப்பெற்றிருக்கிறது. எனவே பழங்காலத்தில் எவ்வளவு இடம் உள்ள பகுதியை நம் முன்னோர் கிராமமாகக்கணக்கிட்டனர் என்பது தெரிகிறது.

அரசியல் அலுவலரை நியமிக்கும் முறைகளையும் அவர்களின் ஆற்றல்களையும் இந்நூல் விளக்குகிறது. கோட்டமும் கோவிலும், தோட்டமும் மன்றமும், மாடமும் கூடமும், அரணும் அகழியும், வீதியும் மறுகும், பாட்டையும் பாசறையும் என்ற பிரிவுகளில் நகர் அமைப்பு, அரண் அமைப்பு,

அரசவீதி அமைப்பு ஆகியவற்றின் முறையும் வனப்பும் பலவாறு விளக்கப்பெற்றுள்ளன. நவமணிகளின் இலக்கணம், குதிரை, யானை முதலியவற்றின் இலக்கணம், பத்திர வகைகள், அமைச்சர் பெறும் ஊதியம் முதலிய பல்வேறு செய்திகளும்ர இச் சுக்கிநீதியில் கூறப்பெற்றுள்ளன.

சுக்கிரநீதியில் குறிப்பிடப்பெற்றிருப்பவற்றை யெல்லாம் வடமொழி சுலோகங்களிலிருந்து பண்டிதமணி தமிழில் தந்திருக்கும் திறமை பாராட்டுக் குரியது. டாக்டர் ச. சோமசுந்தர பாரதியார் அவர்கள் கூறியிருப்பது காண்க.

> ''முதனூலிற் கண்டதனை முகந்துகொண்டு, தமிழ் மொழியிற் குறையாது கொடுப்பதுடன், அசையேனுங் கூடாமல் அளந்தெடுத்துதவுமிவர் சொற் செட்டும் பொருணிறைவும் வரன்முறை வணிகர் வளத்தழகை வலியுறுத்தி நிற்கும்''

ஏற்ற இடங்களில் தொடர்புடைய தமிழிலக்கிய மேற்கோள்களையும் குறள் அடிகளையும் ஒப்பிட்டுக் காட்டுவது பண்டிதமணி மொழிபெயர்ப்பின் ஒரு தனிச் சிறப்பு.

இந் நூலின் அருமை பெருமையை அறிந்து 1926 இல் சென்னை அரசியலார்—பாடநூல் இலக்கிய மன்றத்தின்* வாயிலாக—பரிசில் வழங்கினர்; ஆகையால் தமிழ் நூல்களுக்கும் பரிசு வழங்க வேண்டும் என்ற எண்ணத்தை அரசியலார்க்குத் தோற்றுவித்த பெருமை பண்டிதமணி அவர்களுக்கே உரியது என்று சொல்லலாம். பண்டிதமணி அவர்கள் விதைத்த இச் சிறு விதை நாளடைவில் வளர்ந்து, 1947 இல் வன்மையான கிளைகளோடு கூடிய

---

*Madras School Book and Literature Society

மரமாகி, திரு. அவிநாசிலிங்கம்செட்டியார் அவர்கள் முயற்சியால் தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் வாயிலாக ஒவ்வொரு துறையிலும் சிறந்த நூலுக்கு 500 ரூபாய்ப் பரிசையும், பின்னர் அம்மரத்தின் இலைகள் தழைத்து, அரும்பி, மலர்ந்து, 1955-இல்இந்திய அரசியலாரால்—சாகித்திய அக்கடமி வாயிலாக — 5000 ரூபாய்ப் பரிசாகிய கனியையும் தமிழ் உலகுக்கு வழங்கியுள்ளது, இவற்றின் விளைவாக, தமிழ் மொழியில் வேறுபட்ட துறைகளில், சிறந்த நூல்கள் வெளியாகிக் கொண்டிருக்கின்றன.

# 8. சொற்பொழிவுகள்

பண்டிதமணியின் பேச்செல்லாம் தமிழ் மணம் கமழும். அவர் மூச்செல்லாம் இலக்கியம் என்று சொல்லலாம். தமிழகமெங்கும் தம் சொற்பொழிவுகளின் வாயிலாகப் பெரும்புகழ்பெற்ற ஒரு சிலருள் அவர் முதன்மையானவர். அவருடைய சொற்பொழிவில் நகைச்சுவை மிகுந்திருக்கும்; அவரது சிலேடைகள் உள்ளத்திற்குப் பெரு மகிழ்ச்சியைத் தரும். ஆங்காங்கே கூடியிருக்கும் மக்களின் அறிவு நிலைக்குத் தக்கவாறு நடையை மாற்றி, எடுத்துக் கொண்ட பொருளுக்கேற்பப் பேசும் ஆற்றல் அவரிடம் இருந்தது.

சிலருடைய சொற்பொழிவுகள் வெறும் சொல்லடுக்காக இருக்கும்; பொருள் நிறைந்த பேச்சாகப் பேசக் கூடிய சிலரது பேச்சு, சொல்லோட்ட மின்மையால் தடைப்படும்; கேட்போருக்கு இனிமை பயக்காது. எண்ணிய எண்ணத்தை வெளிப்படுத்த இயலாத சிலருடைய பேச்சில் கை, கால் அசைப்பு மிகுதியாக இருக்கும். இத்தகைய குறைபாடு எதுவுமின்றி, "பற்பலரும் அங்காந்து",* பண்டிதமணி அவர்களின் இனிய சொற்பொழிவை மெய்மறந்து கேட்பார்கள். இதைப் பாராட்டி, அண்ணுமலைப் பல்கலைக் கழகத்துத் தமிழ் விரிவுரையாளர் திரு. மு. அருணாசலம் பிள்ளை அவர்கள் ஒரு பாடலில் பாடினர்.

---

*பலவகைப்பட்டவர்களும் வாய் திறந்து சொற்பொழிவில் ஈடுபடச் செய்தல்.

அதைப்பற்றிப் பண்டிதமணி அவர்கள் கூறியது இங்கே குறிக்கத்தக்கது.

"பல பற்களை உடையவர்களும் வாயைத் திறக்கும் படி என்ற பொருளும் 'பற்பலரும் அங்காந்து' என்ற தொடரில் உண்டு; என் வாயில் பல்லே இல்லாததால் இவ்வாறு பாடினர்கள் போலும்!"

பண்டிதமணி அவர்கள் பல்வேறு மாநாடுகளில் ஆற்றிய எட்டுச் சொற்பொழிவுகள் 'உரைநடைக் கோவை' யின் இரண்டாம் பகுதியாக, 'இலக்கியச் சொற்பொழிவு கள்' என்னும் தலைப்பில் வெளிவந்துள்ளன. இவற்றைப் படித்த சிலர், பண்டிதமணி அவர்களின் நடை கடினமாக உளது என்று அவரிடமே கூறியிருக்கின்றனர். நடையின் சிறப்பைக் காட்ட வேண்டுமென்ற எண்ணத்தாலும் நுட்ப மான பொருள் நயத்தைத் தெரிவிக்க வேண்டுமென்ற விருப்பத்தாலும் இவ்வாறு எழுத நேர்ந்தது என்று அவர்கள் கூறியுள்ளனர். பிற்காலத்தில் அவர்கள் எழுதிய நூல்களின் நடை, ஓரளவு எளிமையாக இருப்பதும் இங்கே ஒப்புநோக்கத்தக்கது. கடினமான சொற்களைப் பயன்படுத்துவதில் தவறில்லை என்றும், பொருத்தமான சொல்லாக இருந்தால் அதைப் பயன்படுத்தியே ஆக வேண்டுமென்றும், சொற்பொழிவாளர் தம் சொல் வளத் தைப் புலப்படுத்துவதற்காகத் தேவையில்லாத சொற்களை வலியப் புகுத்தலாகாது என்றும் பண்டிதமணி அவர்கள் சொல்லுவார்கள்.

ஓரளவேனும் அடிப்படையான அறிவு இல்லாதவர் களிடம் பண்டிதமணி இரக்கங் காட்டுவதில்லை. ஒரு முறை ஓரன்பர் பண்டிதமணியிடம் வந்து "... ...ஊரில் தாங்கள் பேசிய பேச்சை..................என்னும் இதழில் படித்தேன், சில பகுதிகள் விளங்கின; வேறு சில

பகுதிகள் விளங்கவில்லை" என்றார். உடனே, பண்டித மணி, "அப்படியா! விளங்கிய பகுதி எது என்று சொல் லுக. அதையும் மாற்றியமைத்து விடுகிறேன்" என்று விடை கூறினார்.

பண்டிதமணி அவர்களுடைய சொற்பொழிவுகளின் சிறப்பு, பாடல்களுக்கு விளக்கம் தருவதாகும். சில அறிஞர்கள் தம் நூல்கள் விலையாகத் தடையாக இருக்கு மென்று அஞ்சி, பாட்டு நயங்களையும் இலக்கியக் குறிப்புக் களையும் சொற்பொழிவுகளில் சொல்லுவதில்லை. தாங்கள் பல இடங்களுக்குப் போய்வந்த நிகழ்ச்சிகளையே குறிப் பிட்டு நேரத்தைப் போக்குவர்; வேறு சிலர், சொற்பொழிவு களுக்குச் செல்லும் வழக்கத்தையே படிப்படியாகக் கைவிடுவர். ஒரு சொற்பொழிவுக்குப் போவது குறைந் தால், நான்கு மணிநேரம் மீதமாகுமே எனக்கணக்கிடுவர். மக்கள் வாழ்க்கை ஆர அமர நடைபெற்ற காலத்தில் பண்டிதமணி அவர்கள் தமிழ் நாட்டில் இலக்கிய ஆர்வத்தை உண்டாக்கினர். அதன் விளைவாக இன்று மொழித் துறையில் ஒரு மறுமலர்ச்சி தோன்றியுளது.

பண்டிதமணியவர்கள் ஒரு சொற்பொழிவு செய்ய இசைந்துவிட்டால் அது நடைபெறுவதற்கு ஒருநாள் முன்னரே அங்குச் சென்றுவிடுவர். கூட்டம் நடைபெற்ற பின்னரும் மக்கள் அவருடைய சொற்பொழிவைக் கேட்க விரும்பி, இரண்டு மூன்று நாட்கள் தங்கிப் போகும்படி வேண்டுவர். அவ் வன்பர்களின் வேண்டுகோளுக் கிணங்கிப் பண்டிதமணி அவர்களும் அவ்வூரில் தங்கி, அவர்கள் விரும்பும் பல பொருள்களைப்பற்றிப் பேசி மக்களை மகிழ்விப்பர். இப்படி இலக்கியங்களை மக்கள் கேட்டவுடனே எடுத்துரைக்கும் பேராற்றலை எல்லாப் புலவர்களிடமும் காண்டலரிது. இக்காலத்தில் உள்ள

பல புலவர்கள் ஒருமுறை ஒரு கூட்டத்தில் பேசிவிட்டால் மறுமுறையும் அதனையே திருப்பித் திருப்பிக் கிளிப்பிள்ளை போல் பேசி வருகிறார்கள். எனவே ஓரிடத்தில் பலநாள் தங்கிப் பல பொருள்களைப் பற்றிப்பேச அவர்கள் உடன்படுவதில்லை.

மற்றுஞ் சில புலவர்கள் பல பத்திரிகைகளில் தம் பெயர் வெளியாகும் என்ற காரணத்தாலும், உயர்ந்த பதவிகளில் உள்ளவர்களின் தலைமையில் பேசுவதால் பெரு நன்மை விளையும் என்ற நோக்கத்தாலுமே பேச இசைவர். இத்தகைய நன்மை விளையாத சிற்றூர்களில் பேச அழைப்பு வரின், அதனைச் சிறிதும் பொருட்படுத்தாது பல சாக்குப் போக்குக்களைச் சொல்லித் தப்பித்துக் கொள்வர். இப்படிப்பட்ட போலிப் புலவர்களுக்கு மாறாகப் பண்டிதமணியவர்கள் ஒரு பயனையும் நோக்காது, தம் உடலமைப்பையும் பொருட்படுத்தாமல், மக்களுக்குத் தமிழ் அமுதை வள்ளல்போல் வழங்க வேண்டுமென்று எண்ணி, தமிழ் அன்பர்கள் இருக்கும் இடமாகிய சிற்றூர்களுக்கும் சென்று, கைம்மாறு கருதாக் கார்முகிலெனத் தமிழ் மழை பொழிந்து, மக்களது உள்ளமாகிய நிலத்தில் தமிழ்ப் பயிர் தழைக்கும்படி செய்வர். இவ்வண்ணமே பண்டிதமணி அவர்கள் மாநாடுகளில் கலந்துகொள்ளுங்கால்புலவர்கள் அவரைச் சூழ்ந்துகொண்டு, பல நாட்களாக அவர்களுக்கிருந்த ஐயங்களை யெல்லாம் போக்கி அறிவு விளக்கம் பெறுவர்.

பண்டிதமணி அவர்கள் பேசும்பொழுது அழகிய உவமைகளை அவ்வப்போது எடுத்துரைப்பர். அவற்றுக்குச் சான்றாக ஒன்றை இங்கே சுட்டிக் காட்டுவோம்;

"இக்காலத்தில் நம் பெண்களெல்லாம் சட்டை அணிகிறார்கள். விதவிதமான நிறங்களிலிருப்பதால் அவை

பெண்களுக்கு அழகு தருகின்றன. சங்க காலந்தொட்டே பெண்கள் கச்சு* அணியும் வழக்கம் இருந்துவந்திருக்கிறது. ஆடவர்கள் அவை தரும் அழகில் சொக்கி மயங்குகிறார்கள். ஆனால் தலைவன் தலைவியர் புலவிக் காலத்தில் அந்தச் சட்டை உதவாது போய்விடுகிறது. அது அகற்றப்படுகிறது. அதுபோல, இறைவனுடன் உயிர்கள் இரண்டறக் கலக்குமுன் வினையைக் கழிப்பதற்கு அவ்வுயிர்கள் உடற்சட்டைக்குள் புகுகின்றன. இறைவனுடன் இரண்டறக் கலக்கும் நிலை உயிருக்கு வரும்போது அந்த உடற்சட்டை அகற்றப்பட்டே யாகவேண்டும். 'அழகுக்கிட்ட சட்டை அனுபவத்திற்கு உதவாதவாறு போல', வினையேற்க ஏற்ற உடலை அகற்றிய பின்பே, உயிரால் இறையின்பம் அனுபவிக்க முடியும்'' எனப் பண்டிதமணி கூறுவர்.

காப்பியச் சுவை நலம் கனிந்தொழுகும் சிலப்பதிகாரத்தைப் பண்டிதமணியவர்கள் தம் சிரமிசைக் கொண்டு போற்றிப் பேசுவர். அந்நூலைப் பற்றி அவர் எத்தனைநாள் பேசினாலும் புதுப்புதுக் கருத்துக்களைக் கேட்கலாம். ''ஓவியத்திலும் தீட்ட முடியாத அழகிய படங்களைக் கவிஞர்கள் தம் சொல்லோவியத்தில் தீட்டிக்காட்டுவர்' என அப்புலவர் பெருமான் காட்டும் பல படங்களில் ஒன்றைக் கீழே காணலாம் :

''காவி யுகுநீரும் கையில் தனிச்சிலம்பும்
ஆவி குடிபோன அவ்வடிவும்—பாவியேன்
காடெல்லாம் சூழ்ந்த கருங்குழலும் கண்டஞ்சிக்
கூடலான் கூடா யினன்''*

---

* கச்சு—ரவிக்கை

* மதுரைக் காண்டம்—வழக்குரை காதை.

இப்பாடலைப் பண்டிதமணியவர்கள் எடுத்துச் சொல்லி விளக்கம் கூறுகின்றபொழுது பெரும் புலவர்களும் மெய் மறந்து மகிழ்ச்சிக் கடலில் திளைப்பர்.

பண்டிதமணியவர்கள் சிலப்பதிகாரத்தில் மிகவும் ஈடுபட்ட மற்றொரு பகுதி வாழ்த்துக்காதையில் உளது. அடிக்கடி அதை அவர்கள் புலவர்களிடம் எடுத்துக்கூறிப் பாராட்டுவார். அப்போது அவரை அறியாது, அவர் கண்களிலிருந்து அருவிபோல் நீர் பெருகிக்கொண்டிருக்கும். அத்தகைய சிறந்த அடிகளைக் கீழே காணலாம் :

" தற்பயந் தாட்கில்லை தன்னைப் புறங்காத்த
எற்பயந் தாட்கும் எனக்குமோர் சொல்லில்லை
கற்புக் கடம்பூண்டு காதலன் பின்போந்த
பொற்றொடி நங்கைக்குத் தோழிநான் கண்டீர் !
பூம்புகார்ப் பாவைக்குத் தோழிநான் கண்டீர்!"

இந்த அடிகளிலிருந்து கண்ணகியின் கற்பின் திறனையும் பெறலரும் பெருங் குண நலனையும் பண்டிதமணி அவர்கள் விளக்கும்பொழுது தேவாரத் திருப்பாடல் ஒன்றை எடுத்துக் காட்டுவதும் அவரது இயல்பு, அவ்வழகிய பாடலையும் படித்து மகிழ்வோம்:

"முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள்
மூர்த்தி யவனிருக்கும் வண்ணம்கேட்டாள்
பின்னை அவனுடைய ஆரூர் கேட்டாள்
பெயர்த்தும் அவனுக்கே பிச்சியானாள்
அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள்
அகன்றாள் அகலிடத்தார் ஆசாரத்தைத்
தன்னை மறந்தாள் தன்நாமம் கெட்டாள்
தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே."

சைவ நூல்களில் பெரியபுராணத்திலும் திருவாசகத்திலும் பண்டிதமணி அவர்கட்கு இருந்த பற்று எல்லையற்றது. பெரிய புராணச் சொற்பொழிவில் தேவாரங்களை எடுத்துக் காட்டி மக்களுக்கு மகிழ்ச்சியளிப்பர். வேடிக்கையாக, சேக்கிழாரின் பெரும் புலமைக்குச் சான்றாக அடிக்கடி அவர் சொல்லும் பாடல்களில் ஒன்றைத் தருவோம்:

**"வையகம் பொலிய மறைச்சிலம் பார்ப்ப**
**மன்றுளே மாலயன் தேட**
**ஐயர்தாம் வெளியே யாடுகின் றாரை**
**யஞ்சலி மலர்த்திமுன் குவித்த**
**கைகளோ திளைத்த கண்களோ அந்தக்**
**கரணமோ கலந்தவன் புந்தச்**
**செய்தவப் பெரியோன் சென்றுதாழ்ந் தெழுந்தான்**
**திருக்களிற் றுப்படி மருங்கு."**

— தடுத்தாட்கொண்ட புராணம்.

இப்பாடல் சுந்தரமூர்த்தி நாயனார் சிதம்பரத்திற்கு வந்து, தில்லை நடராசரை வழிபடும் காட்சியைக் கூறுகிறது. "சிவபிரான் திறந்த வெளியிலே திருநடனம் புரிந்து கொண்டிருக்கின்றார்; இந்த உண்மையை அறியாத மாலும் அயனும் உள்ளே தேடுகின்ற அறியாமை என்னே!" என்ற பொருள்பட, சேக்கிழார் இவ்வாறு பாடியுள்ளதை எடுத்துக் காட்டிப் பண்டிதமணி புன்னகை புரிவர் நடராசர் சிதாகாசத்தில்* ஆடுகிறார் என்பதை 'வெளியிலே ஆடுகிறார்' எனக் கூறியுள்ள நயத்தை அவர் பாராட்டிக் கூறுவர்.

'எம்மொழியினும் இத்துணைத் திட்ப நுட்பங்களமைய யாத்த ஒரு நூலும் உளதோவென்று ஆராய்வார் வியப்

---

* சிதாகாசம்—உள்ளமாகிய ஆகாயம்.

புறும் வண்ணம் தமிழ் நிலத்தார் தவப் பயனுக எழுந்த நீதிநூல் திருக்குறள், என்று பண்டிதமணி கூறுவர். இந்நூலுக்கு அமைந்த உரைகளில் பரிமேலழகர் உரையே மிகச் சிறந்தது என்பது அப் புலவர் பெருமானின் கருத்து. அவர் அந்த உரை முழுவதையும் எழுத் தெண்ணிக் கற்றவர் என்று சொல்லலாம். ஏனைய உரையாசிரியர் களின் உரைகளினின்றும் பரிமேலழகர் வேறுபடும் இடங் களையும் அவ்வாறு வேறுபடுதற்குரிய காரணத்தையும் பண்டிதமணி அவர்கள் தெளிவாக உணர்ந்தார்கள். இவர்கள் டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர் அவர்கள் தலைமையில் பரிமேலழகர் உரையின் சிறப்பைப் பற்றி 1925 இல் பேசினுர்கள். அப்பேச்சில் அமைந்த சிறந்த கருத்துக்களை உணர்ந்து, ஐயர் அவர்கள் பெரிதும் பாராட்டி ஞர்கள். 'பரிமேலழகருடைய உரைக்கு நயம் என்ற தலைப் பெயரிட்டு ஒரு குறிப்புப் புத்தகம் வரைந்து பதிப் பித்து வெளிப்படுத்திஞல் மிகுந்த உபகாரமாக இருக்கு மென்பது என் கருத்து' என அவர்கள் 3—3—1925 இல் (சிதம்பரத்திற்குப் போய்ச் சேர்ந்தபின்)* பண்டிதமணி அவர்களுக்கு எழுதி யிருக்கிருர்கள்.

திருக்குறளை நன்ருய்ப் படித்ததாகத் தம்மிடம் வந்து கூறும் புலவர்களிடம் திருக்குறளையும் பரிமேலழகர் உரையையும் கையிலே கொடுத்துச் சில பாடல்களுக்குப் பொருள் கூறும்படி பண்டிதமணி கேட்பர். அவர் நடத்தும் இத்தேர்வில் பலர் பரிமேலழகர் உரைக்கு விளக்கம் கூற இயலாது திகைத்து நிற்பர். பின்னர் பண்டிதமணி அவர்கள் பரிமேலழகர் உரையை விளக்குவர். அதற்குச் சான்ருக ஒரு குறளைக் காட்டுவோம்:

---

* அப்போது, ஐயரவர்கள் சிதம்பரம் ஸ்ரீ மீனுக்ஷி தமிழ்க் 'காலேஜில் பிரின்சிபாலாக' இருந்து வந்தார்கள்.

"அன்பிற்கு முண்டோ வடைக்குந்தாழ் ஆர்வலர்
புன்கணீர் பூசல் தரும்."

பரிமேலழகர் உரையிலுள்ள "ஆர்வலரது புன்மை கண்ணீர்மேல் ஏற்றப்பட்டது." என்னும் தொடர்க்குப் பண்டிதமணி கூறும் விளக்கம்.

கண்ணீர் இருவகைப்படும். ஒன்று உவகைக் கண்ணீர்; மற்றொன்று துன்பக் கண்ணீர். இங்குப் 'புன்மை' என்பது துன்பத்தைக் குறிக்கும். ஆர்வலரது துன்பம் கண்ணீர்மேல் ஏற்றப்பெற்றுப் 'புன்கண்ணீர் பூசல் தரும்' எனத் திருவள்ளுவர் கூறியுள்ளார் என்பர்.

குறுந்தொகை மாநாட்டில்* பண்டிதமணி அவர்கள் ஆற்றிய சொற்பொழிவு ஓர் இலக்கிய விருந்தாக இருந்தது. அம் மாநாட்டில் தமிழறிஞர் ஐவர் நெய்தல், முல்லை, பாலை, மருதம், குறிஞ்சி என்ற தலைப்புக்களில் பேச ஒழுங்கு செய்யப் பெற்றிருந்தது. தலைமைதாங்கிய பண்டிதமணி அவர்கள் நூலின் உட்பகுதியில் நுழைந்து பொருள் நயங்களைச் சொல்லிவிட்டால், தாம் என்ன பேசுவது என்று அப் புலவர்கள் கவலைப்பட்டுக் கொண்டிருந்தனர். ஆனால் அவர்கள் எல்லோர்க்கும் விடுதலைதரும்வகையில், அந் நூலின்கண்ணுள்ள கடவுள் வாழ்த்துச் செய்யுளுக்கு** மட்டுமே பண்டிதமணி நயங் கூறினர். குறுந்தொகையில் இப் பாடல் திலகம்போல ஒளிர்கின்றது என்பது அவர் கருத்து. ஐந்திணை ஒழுக்கம் குறுந்

---

*இது 1940 நவம்பர் 30, டிசம்பர் 1 ஆம் நாட்களில் சென்னையில் நிகழ்ந்தது; சைவசித்தாந்த நூற் பதிப்புக் கழகத்தாரால் கூட்டப் பெற்றது.

**"தாமரை புரையுங் காமர் சேவடி" என்று தொடங்கும் பாடல்.

தொகையின் பொருளாதலின், அப்பொருளை இக் கடவுள் வாழ்த்துப் பாடல் கருக்கொண்டது என்பதையும் பண்டித மணி விளக்கமாகக் கூறியிருக்கிறார். இந்தப்பாடலி லுள்ள நுண்பொருள் பலவற்றையும் படிப்பவர்க்குப் பேரின்பம் தருகின்ற முறையில் அவர் தெரிவித்துள் ளார்கள். உவமை நயங்கள், குணவருணனை; ஆறுதல் மொழி கூறுமுறை, குறிப்பிற் புலப்படுத்துமாறு வலியுறுத் தும் அழகு, பழங்காலத்துத் தமிழ் மக்களின் மனநிலை, உண்மைக் காதல் வயப்பட்ட மகளிரின் பண்பாட்டுச் சிறப்பு ஆகியவற்றைக் குறுந்தொகை எவ்வாறு புலப் படுத்துகிறது என்பதையும் தம் உரையில் குறிப்பிட்டிருக் கிறார். இவ்வுரை "உரைநடைக் கோவை இரண்டாம் பகுதி"யிலும், "குறுந்தொகைச் சொற்பொழிவுக"ளிலும் வெளியிடப் பெற்றிருக்கிறது.

இக்காலத்தில் புலவர்களில் பலர் கூட்டத்தில் தலைமை வகிப்பது மிக எளிதான செயல் என்று எண்ணு வர்; எனவே சொற்பொழிவுக்கு இசையாமல் தலைமை தாங்க மட்டுமே உடன்படுவர். அவ்வாறு உடன் படுவோர் தம் முன்னுரையில், "எல்லாவற்றையும் பின்னர் கூறுவோம்" என்று சொல்லி அமைவர். முடிவுரையில், "சொல்லத் தக்க யாவும் எம் அருமை நண்பர்களாகிய சொற்பொழிவாளர்களால் தெளிவாகச் சொல்லப் பெற் றன. நேர மின்மையாலும் பெருமக்களாகிய உங்கள் பொறுமையை இனியும் சோதிப்பது என் விருப்பல்ல. ஆகையாலும் உங்கள் அனைவர்க்கும் என் மனமார்ந்த நன்றி உரியது" என்று நன்றியுரையும் தாமேகூறிக் கூட்டத்தை முடிப்பர்.

பண்டிதமணியோ இவர்கள் போக்குக்கு மாறாக, தலைமை தாங்க இசைந்துவிட்டால், அன்று முதலே பல

பொருள்களைப் பற்றி ஆழ்ந்து சிந்தித்து —மேனாட்டு அறிஞர்கள் செய்வதுபோல—தாம் சிந்தித்த பொருள்களை யெல்லாம் முறையாக எழுதிக்கொள்வர். அவ்வாறு அவர் எழுதுவதில், அதுவரை புலவர்கள் காணாத பொருள்களை யெல்லாம் காட்டுவர். அதற்குச் சான்றாக, கரந்தைத் தமிழ்ச் சங்க ஆண்டுவிழாவில், 'தமிழும் தமிழ்ப்பணியும்' என்ற தலைப்பில் அவர் நிகழ்த்திய தலைமைப் பேருரையி லிருந்து ஒரு கருத்தைக் காட்டுவோம்:

'பிறமொழியிலுள்ள இலக்கண ஆசிரியர்கள் எழுத்து, சொல் என்னும் இவற்றையே விரிவாக ஆராய்ந்து கூறுவர். ஆனால் தமிழ்மொழியின் இலக்கண நூலாசிரியராகிய தொல்காப்பியர் ஏனைய மொழியாளர்களைப்போல எழுத்துச் சொற்களின் ஆராய்ச்சிகளோடு அமையவில்லை, பொருளாராய்ச்சியும் செய்யத்தொடங்கி, அதில் மக்களின் ஒழுக்கத்தைப் பற்றியும் தாவரங்களைப் பற்றியும் உயி ரினங்களைப் பற்றியும் கூரறிவாளரும் வியக்கும்படி பல பகுதிகளாகப் பிரித்துத் தெள்ளத் தெளிய விளக்கியுள் ளார்' என்னும் கருத்தமையப் பண்டிதமணி பேசி யுள்ளார்.

அகப் பொருட் பகுதிகளை எடுத்துரைப்பதிலும் பண்டிதமணி சிறந்து விளங்கினார். சான்றாக ஒரு பகுதி யைத் தருவோம் :

> "சகுந்தலை என்னும் பெண்மணி, துஷ்யந்தன் என்னும் வேந்தர் பெருமானைக் கானகத்திற் கண்ட அளவிற் காதல் வயப்பட்டு, அந்நிலையை எவ்வாறு அரசர்க்குப் புலப்படுத்தலாமென்று ஆராய்ந்து கொண்டிருக்குங்கால், தன் உயிர்த் தோழியா லறிவிக் கப்பட்டு, காதற் கடிதம் எழுதத் தொடங்கினாள்.

இஃது அக்காதலரிருவரும் தம்முட் கூட்டம் நிகழ்த்து தற்குமுன் நிகழ்ந்தது. இதன் மொழிபெயர்ப்பாவது :

**நின்னுடைய உள்ள நிலையறியேன் நின்பாலே**
**மன்னுடைய வேட்கை மலிவுற்ற—என்னுறுப்பைக்**
**காமன் இரவும் பகலும் கனற்றுகின்றான்**
**ஏமவரு ளில்லா யிவண்**

என்பதாம். 'அருளில்லாத அரசே' நின்பாற் கொண்டவேட்கை மிக்கவுடலுறுப்புக்களை மன்மதன் இரவும்பகலும் எரிக்கின்றான்; இந்நிலையில் நினது உள்ளத்தின் நிலை இன்னதென்று அறிந்திலேன்' என்பது இப்பாடலின் கருத்து.

சகுந்தலை எழுதிய கடிதம் கிளியின் வயிறு போன்று பசுமை மிக்க மெல்லிய தாமரையிலை யாகும். அதன்கண், அவள் தன் கைந் நகங்களையே எழுது கோலாகக்கொண்டு எழுத்துக்களைப் பதித்தனள் என்பர். தாமரையின் மெல்லிய இலைகளால், அவள் வெம்மை தணிய அப்பொழுது தோழியர் விசிறிக் கொண்டிருந்தன ராதலின், அவள் இருந்த இடத்தில் கிடைத்த தாமரையிலையே எழுதுதற்குரிய கடித மாயிற்று. எழுதுகோல் தேடுதற்கு அவகாசமின்மை யால் கைந் நகங்களாற் பதிக்கலாயினள்''

என்று பண்டிதமணி அவர்கள் நயங் கூறுவர்; இக் கடிதத்தையும் காதலனுடன் கூடிய பின்னர் மாதவி எழுதிய காதற் கடிதத்தையும் ஒப்பிட்டுச் சொன்மாரி பொழிவர்; அப்போது காதல் வயப்பட்டாருள் எழுது வோர் எழுதப்படுவோர் இயல்புகளையும், எழுதும் வாசகங்களையும் பண்டிதமணி அவர்கள் தெரிவிக்கும் முறை கேட்போர் உள்ளங்களை யெல்லாம் ஈர்க்கும் ஆற்றல் வாய்ந்தது.

இனி, மறைமலையடிகளின் தலைமையில் பண்டிதமணி அவர்கள் ஒரு முறை கரந்தையில் பேசியபோது நிகழ்ந்த ஒரு நிகழ்ச்சியைக் கூறுவோம்: 'சங்க நூல்களெல்லாம் தனித் தமிழ் நூல்கள்; அவை வடசொற் கலப்பு இல்லா தவை' என்று மறைமலையடிகள் தமது தலைமை உரையில் கூறினர். பின்னர் அங்கே பேசிய பண்டிதமணி அவர்கள் "சங்க நூல்களில் சிறந்ததும் கற்றறிந்தார் போற்றுவதுமான கலித்தொகையில்,

**தேறுநீர் சடைக்கரந்து திரிபுரம் தீ மடுத்து**

என முதல் பாடலிலேயே சடை, திரிபுரம் என்று வட சொற்கள் வந்திருக்கின்றனவே" என்றார்.

(தேவார திருவாசகங்கள் தனித் தமிழில் ஆக்கப்பட்ட தென்று மறைமலையடிகள் கூறினார்கள். உடனே

**சலம் பூவொடு தூபம் மறந்தறியேன்**
**தமிழோ டிசைபாடல் மறந்தறியேன்**

என்று திருநாவுக்கரசர் தேவாரத்தில் முதற் பதிகத்தில் இருப்பதைப் பண்டிதமணி எடுத்துக்காட்டி, சலம், தூபம் இரண்டும் வடசொல் என்பதையும், இவ்வாறு பலஇடங்களில்வடசொற்கள் கையாளப்பெற்றிருக்கின்றன என்பதையும் தெரிவித்தனர். மறைமலையடிகள் கோபமாய் மேசையைக் குத்தினர். 'எனக்கும் ஒரு மேசை போட்டிருந்தால் இதைவிட வலுவாகக் குத்தி மிகுதியான ஓசையை எழுப்பியிருப்பேன்" என்று பண்டிதமணி கூறினர்.) ஆம். பண்டிதமணிக்கும் நூற்றுக்கணக்கான விழாக்களில் தலைமைப் பேறு கிடைத்தது; மேசையும் போடப்பெற்றது; அப்போது நடந்த நிகழ்ச்சிகளை அடுத்த கட்டுரையில் தெரிவிப்போம்.

# 9. தலைமையுரைகள்

பண்டிதமணி அவர்கள் சொற்பொழிவாற்றுங் கூட்டங்களின் சிறப்பைப்பற்றி முன் கட்டுரையில் கூறினோம். அவற்றைவிடப் பன்மடங்கு சிறப்புடையன அவர் தலைமை தாங்கும் மாநாடுகளும் பிற கூட்டங்களும். சொற்பொழிவாளர் எவராயினும், அவர் எடுத்துக்கொள்ளும் பொருள் எதுவாயினும், அவரவர்க்கும் அததற்கும் மிகப் பொருத்தமாகவும், அழகாகவும், நகைச்சுவையுடனும், அங்கதம் விரவவும், முன்னுரை முடிவுரைகளைக் கூறுவதில் பண்டிதமணிக்கு ஒப்பாக யாரையும் சொல்ல இயலாது.

பண்டிதமணி அவர்களின் தலைமையில் பேசுவதென்றால், சொற்பொழிவாளர்கள் அஞ்சுவர், பல நாட்கள் முன்னரே தக்க நூல்களைத் துருவி ஆராய்ந்து, குறிப்புக்களை எழுதிக்கொண்டு வருவர்; பேசுவதும் மிகக் கவனமாகவே பேசுவர். ஒரு பிழை கண்டாலும் பண்டிதமணி கண்டிக்காமல் விடமாட்டார்; பெருந் திரளான மக்களிடையே தவறான செய்தியை விதைத்து விடக்கூடாது என்பது பண்டிதமணியின் கருத்து.

பண்டிதமணி தலைமை தாங்கும் கூட்டங்களில், தம் கூரிய அறிவால் பிறருடைய கருத்துக்களை வெட்டிப் பேசுவது வழக்கமாக இருந்தது. சொற்பொழிவாளர் உரை நிகழ்த்திக் கொண்டிருக்கும்போதே, குறுக்கே பேசுவது அவர் இயல்பு; இதன் பயனாகக் கூட்டங்களில் சில சமயம் சலசலப்பும் அமைதியின்மையும் ஏற்படுவதுண்டு.

இப்போது சென்னையில் அரசியலார் கலைக் கல்லூரியில் தமிழ்த் துறைத் தலைவராக இருக்கும் புலவர் முத்து இராசாக்கண்ணனுர் அவர்கள் ஒருமுறை பண்டிதமணியின் தலைமையில் புதுவை இளைஞர் கழகக் கூட்டத்தில் 'அமெரிக்க நாட்டில் ஆங்கிலக் கவிஞர்' என்ற தலைப்பில் பேசினுர்கள். தலைவராகிய பண்டிதமணி அவர்கள் தம் முடிவுரையில், குறிப்பிட்டது சுவையாக இருந்தது: 'மிகச் சாமர்த்தியமாக நான் கேட்க ஒரு பேச்சு இன்று நண்பர் இராசாக்கண்ணனுர் அவர்களால் நிகழ்த்தப்பெற்றது. இடைவேளை உண்டாக்கும் இடைவேலை எனக்கு இல்லாமற்செய்துவிட்டார்.'

புதுக்கோட்டையில் ஒருமுறை பண்டிதமணி அவர்களின் தலைமையில் ஒரு தமிழறிஞர் பேசினுர். அப்பொழுது அச் சொற்பொழிவாளர் விதைவாதம் (Hernia) என்னும் நோயால் தாக்குண்டிருந்தார். ஆகையால் அவர் பண்டிதமணியின் செவியருகு சென்று, தம்மால் அந்நோய் காரணமாக நின்றுபேச முடியாமையைத் தெரிவித்தார். பிறகு, பண்டிதமணி அவர்கள் எழுந்து, 'அன்பர்களே, ஓர் ஏரில் பூட்டப்பெற்றுள்ள இரண்டு மாடுகளும் ஒரு நிலையில் நின்று வேலையை மேற்கொண்டாலொழிய காரியம் நடைபெருது. ஆகையால் சொற்பொழிவாளர், உடல்நலமின்மையால் உட்கார்ந்து பேச விரும்புகின்ருர்' என்று கூறினர். தம் நோயைச் சுட்டிக்காட்டிய பண்டிதமணியின் உரைநயத்தை வேறுவிதமாக உணர்ந்த சொற்பொழிவாளர், பண்டிதமணி தம்மை மாடாக்கியமைக்கு மிகவும் வருந்தினர். இப்படிச் சிற்சில சமயங்களில் பண்டிதமணியின் சொல்லாழத்தைப் புலவர்களும் அறிந்துகொள்ள இயலாமல் வருந்துவதுண்டு.

ஒரு கவிஞர் ஒருமுறை அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்குச் சென்று பண்டிதமணியின் தலைமையில் ஒரு சொற்பொழிவு ஆற்றினர். அச் சொற்பொழிவுக்கிடையே ஆறு சுவைகளைப்பற்றிப் பேச நேர்ந்தது. அப்பொழுது கவிஞரவர்கள் அவையிலுள்ளவர்களை நோக்கி, "அன்பர்களே, இவ்வுலகில் உப்பில்லாப் பொருளே இல்லை. இவ்வுண்மையை ஆறு சுவைகளைக் குறிப்பிடும் கார்ப்பு, கைப்பு, உவர்ப்பு, துவர்ப்பு, புளிப்பு, இனிப்பு என்னும் சொற்களில் காணலாம். ஒவ்வொரு சொல்லின் இறுதியிலும் உப்பு என்னும் சொல் இருத்தலைக் காண்க" என்று விரிவாகப் பேசி அமர்ந்தார். அவர் பேசிக்கொண்டிருந்த போது பண்டிதமணி அவர்கள் புன்னகையுடன் காட்சி யளித்துக் கொண்டிருந்தார்கள். அவையோர் தலைவரவர்களின் முடிவுரையைக் கேட்க மிக்க ஆவலுடன் எதிர் பார்த்துக்கொண்டிருந்தனர். அப்பொழுது பண்டிதமணி அவர்கள் தம் முடிவுரையில், "நான் சுவையில் மிக்க ஈடுபாடுடையவன்; சுவைகளைப்பற்றிக் கற்பதும் கேட்பதும் நுகர்வதும் எனக்கியல்பு. எனினும் இன்று இக் கவி செய்துள்ள ஆராய்ச்சியின் மூலம் இதுவரை நான் கேளாத ஒரு நுட்பத்தைக் கேட்டு மகிழ்ந்தேன். ஈடும் எடுப்பும் இல்லாத இத்தகைய சுவை ஆராய்ச்சியை இவரைத் தவிர வேறு யார் செய்யவல்லார்? இதுவரை உப்பைப்பற்றி இப்படி ஆராய்ச்சிசெய்த கவிஞர் ஒருவரும் இல்லை. இனியும் இருக்க முடியாது" என்று புன்னகையுடன் கூறினர். இருபொருள் நயம்படப் பேசும் பண்டிதமணியின் திறமையைப் பலமுறையும் கேட்டு மகிழ்ந்துள்ள அண்ணாமலைப் பல்கலைக் கழக மாணவர்கள் கைகொட்டிச் சிரித்து ஆரவாரம் செய்தனர். வெளுத்ததெல்லாம் பாலெனக் உணரும் கவிஞர்பிரான் பண்டிதமணியின் வஞ்சப் புகழ்ச்சியைப் பாராட்டுரையெனக்

கொண்டு மகிழ்ந்தார். மேலும், தாம் சென்ற இடமெல்லாம் பண்டிதமணியின் பெருந்தன்மையையும் எடுத்துக் கூறிப் பாராட்டினர்.

இராயவரத்தில் பண்டிதமணியின் தலைமையில் இரண்டு நாட்கள் தமிழ் விழா நடைபெற்றது. ஒருநாள், நாகர்கோவில் குமரேச பிள்ளை அவர்கள் இராமாயணத்தைப் பற்றிப் பேசினர். முகவுரையாக அவர் அரைமணி நேரத்திற்குமேல் பேசிக்கொண்டே யிருந்தார். அவ்வளவு நேரமும் பொறுமையுடனிருந்த பண்டிதமணி அவர்கள், பின்னர் எழுந்து, அவையி லிருப்பவர்களை நோக்கி, 'அன்பர்களே, இப்பேர்ப்பட்ட பேரறிஞர்களின் சொற்பொழிவைத் தனியே வைத்து நாமெல்லாம் அனுபவிக்க வேண்டும். பல பேச்சுக்களுக்கிடையே கால வரையறை இவர்களுக்குக் கொடுப்பது சரியல்ல' என்றுகூறி, தமக்குத் தலைவலி ஏற்பட்டு விட்டபடியால், கூட்டத்தைச் சொற்பொழிவாளரையே நடத்தும்படி கேட்டுக்கொண்டு போய் விட்டார்.

செட்டிநாட்டுச் செல்வர் ஒருவரைச் சன்மார்க்க சபையில் ஒரு சொற்பொழிவாற்றும்படி பண்டிதமணி பல ஆண்டுகளுக்குமுன் வேண்டிக்கொண்டார். அதற்கு அச் செல்வர், 'ஐயா, யான் இதற்குமுன் ஒருமுறைதான் சொற்பொழிவாற்றி யிருக்கிறேன்; அச் சொற்பொழிவும் தாங்கள் கேட்டதே. அச் சொற்பொழிவு செய்வதற்கு யான் பட்டபாடு கொஞ்சமல்ல. மீண்டும் நான் பேச விரும்பினல், அந்தச் சரக்கைத்தான் அங்குள்ள மக்களுக்கும் கொடுக்கவேண்டும். அதைத் தவிர வேறு என்னிடத்தில் நீங்கள் எதிர்பார்பார்க்கலாகாது' என்ருர். அவர் சொற்களைக் கேட்ட பண்டிதமணி அவர்கள் புன்னகை புரிந்து, 'எல்லாப் புலவர்களும் இப்படித்தானே

செய்கின்றனர். ஓரிடத்தில் கேட்பவர்கள் மற்றோரிடத்திலுமா வந்து கேட்பார்கள்? ஒன்றையே பல இடங்களில் கூசாமல் கூறலாம்' என்று அவரை உற்சாகப்படுத்தினர். செல்வரும் பண்டிதமணி சொன்னதை நம்பிப் பேச இசைந்தார். அப் பேச்சின் பின்னர், அக் கூட்டத்தின் தலைவராகிய பண்டிதமணி அவர்கள் முடிவுரை கூறிய போது குறிப்பிட்டதாவது: 'முன்னர்ப் பேசிய ஒரு பொருளையே இன்று அவர்கள் இங்கேயும் பேசினார்கள். பிறரெல்லாம் கேட்டு மகிழ்ந்ததை நாமும் கேட்டு மகிழலாகாதா? என்பதே என் கருத்து. இவ்வாறு செய்தால் தான் பெரும் புலவர்களை ஊக்கியதாகும்.'

சென்னையில் நிகழ்ந்த ஒரு கூட்டத்தில் பண்டிதமணி அவர்கள் தலைமையில், சட்ட நிபுணர் ஒருவர் பேசினார். அப்போது, அவர் தமிழ்ப் புலவர்களின் குறைகளை வரிசைப்படுத்த நினைந்து, 'தமிழ்ப் புலவர்கள் நேரத்தின் அருமையை அறியாதவர்கள்; குறித்த காலத்தில் வருதலும் குறித்த நேரத்தில் பேசி முடித்தலும் அவர்களிடத்தில் காண இயலாது; முற்போக்கிலே செல்லுவதற்குச் சிறிதும் அவர்கள் முயலுவதில்லை' என்று பல குறைகளை அடுக்கிக்கொண்டே சென்றார். அவர் பேசிய ஆத்திரத்தில் கால எல்லையைக் கடந்து பேசி முடித்தார். பிறகு, பண்டிதமணி அவர்கள் எழுந்து, 'அன்பர்களே, இன்று தமிழ்ப் புலவர்களின் குறைகளைப் பேரறிஞர் வாயிலாகக் கேட்டோம். இச் சமயத்தில் எனக்குத் திருவள்ளுவர் கூறிய ஒரு குறள் நினைவுக்கு வருகிறது. அப்புலவர் பெருமான்,

**ஏதிலார் குற்றம்போல் தம்குற்றம் காண்கிற்பின்**
**தீதுண்டோ மன்னும் உயிர்க்கு**

என்றார். அக்குறள் இவரைப்போன்ற அறிஞர்களை நோக்கியே சொன்னாரோ என்று நான் கருதுகிறேன். 'பண்டிதர்களின் குற்றங்களையெல்லாம் தெரிவித்த இவர் காலத்தை மீறுவதாகிய தம் குற்றத்தைச் சிறிதும் சிந்தித்தாரில்லை' என்று சொன்னார். உடனே, சட்ட அறிஞர் எழுந்து, வெகுண்டு, 'குறித்த நேரம் ஆனதும் தெரிவித்திருக்க வேண்டியது தங்கள் பொறுப்பு அல்லவா?' என்றார். பண்டிதமணி அதற்கு விடையாக, 'ஆம், தெரிவிக்காதது என் குற்றம்; காலங் கடந்து பேசியது உங்கள் குற்றம். பேரறிஞரே, அமருங்கள்' என்றார். உடனே கூட்டத்தினர் மகிழ்ச்சியால் ஆரவாரம் செய்தனர்.

குன்றக்குடியில் சைவசித்தாந்த சமாஜ மாநாட்டில் கோவை சி. கே. சுப்பிரமணிய முதலியார் தலைமையில் ஒரு கூட்டம் நடந்துகொண்டிருந்தது. ஏதோ காரணத்தால், தலைவரவர்கள் வெளியே போக நேர்ந்தது. அப்போது அவர்கள் பண்டிதமணி அவர்களைத் தலைமை தாங்கும்படி கேட்டுக்கொண்டார். பண்டிதமணியும் அதற்கிசைந்து தலைமை தாங்கினார். அடுத்தபடியாக, டி. கே. சி. யின் சொற்பொழிவு அமைந்திருந்தது. சொற்பொழிவாளரை அறிமுகப்படுத்தும்போது,

"அன்பர்களே, டி. கே. சி. அவர்கள் மிகச்சமர்த்தர். ரசிகர். ரசிகமணி என்றுங் கூறலாம். கம்பராமாயணப் பாடல்களாகிய பொற்காசுகளைக் கொட்டுவார், தட்டுவார், கம்பன் முத்திரை இல்லாத, செல்லாக் காசு என்று அவர் தூக்கிஎறிவார். சில சமயம் படலம் படலமாகக் கூடத் தூக்கி எறிந்துவிடுவார். இவரைப் போன்ற ரசிகமணிகள் பலர் தோன்றிவிட்டால், கம்பராமாயணத்தைப் படிக்கும் சிரமமே மக்களுக்கு இராது. எரிக்க எண்ணும் அன்பர்களும் மகிழ்வர்"

என்று பண்டிதமணி சுவைபடக் கூறினர்.

ஞானியாரடிகளுடைய வெள்ளிவிழா டி. கே. சி. அவர்கள் தலைமையில் திருப்பாதிரிப்புலியூரில் நடைபெற்றது. "இலக்கணமாகிய ஆலையில் மாணவராகிய கரும்புகள் இடப்பட்டுப் பிழியப்படுகின்றன" என்று அவர் தலைமையுரையில் கூறியதைக் கேட்டுப் புலவர்கள் வெறுப்பும் கொதிப்பும் அடைந்து வெளியேறினர். சேலம் திம்மப்பய்யர் என்பவர் இயற்றியிருந்த "ஞானியார் ஆற்றுப்படை"யை அரங்கேற்றுவதற்கென்று மறுநாள் ஒரு கூட்டம் ஒழுங்கு செய்து, பண்டிதமணியைத் தலைமை தாங்கும்படி புலவர்கள் வேண்டினர். முன்னேற்பாடின்றி இந்த நிகழ்ச்சி உருவாயிற்று. தமிழகத்துப் பெரும் புலவர் அனைவரும் அக்கூட்டத்திற்கு வந்திருந்தனர். டி. கே. சி. யும் வந்திருந்தார்.

பண்டிதமணி அவர்கள், தம் தலைமையுரையில் அதற்கு முதல்நாள் டி. கே. சி. அவர்கள் பேசியதைப் பற்றிக் குறிப்பிட்டார்கள்.

**காரென்று பேர்படைத்தாய் ககனத் துறும்போது**
**நீரென்று பேர்படைத்தாய் நீணிலம் வந்ததன்பின்**
**வாரொன்று மென்முலையிவ் வாய்ச்சிகைப் பட்டபின்னர்**
**மோரென்றும் பேர்படைத்தாய் முப்பேரும் பெற்றாயே**

என்ற தனிப்பாடலை டி. கே. சி. அவர்கள் நமக்குச் சீர் சீராக, இசையுடன் பாடி விளக்கினர்கள். வோட்ஸ்வர்த் என்னும் ஆங்கிலக் கவிஞரது பாடல்கள் சிலவற்றையும் நயம்பட எடுத்துரைத்தார்கள். இவ்வாறு சொல்லழகுடனும் பொருள் நயத்துடனும் தெளிவுபெறப் பாடல்களை வெளிப்படுத்தியது பாராட்டுக்குரியது. இது, ஆங்கில அறிவு பெறாத புலவர்கள் செய்ய இயலாத அருஞ்செயல்

இத்தகைய ஆற்றல் நிறைந்த நம் முதலியார் அவர்கள் இலக்கணத்தை வெறுக்கிறார்கள். அந்த ஆலையில் இவர் இளமையில் இட்டு நசுக்கப்பெற்ற காரணத்தால்தான் இங்ஙனம் பாடல்களின் அழகைக் காணவும் கூறவும் முடிகிறது. கரும்பு ஆலையில் இடப்படாது போமேயானால், அதன் சாறு எவர்க்கும் பயன்படாது. தானே வற்றி உலர்ந்து பயனின்றி ஒழியும். அதுபோலவே, இலக்கண மாகிய ஆலையில் முதலியாரவர்கள் இடப்படாதிருப்பரே யாயின் அவர் வெறும் தடி* முதலியாராகவே இருந் திருப்பார்.''

அளவெட்டி என்னுமிடத்தில் பண்டிதமணி அவர் களின் தலைமையில், திரு. மு. அருணாசலம் பிள்ளை அவர்கள் சொற்பொழிவாற்றினர். அப்போது தமக்கும் அவர்களுக்கும் உள்ள தொடர்பைக் குறிப்பிட்டு,

**ஆழ அமுக்கி முகக்கினும் ஆழ்கடல்நீர்**
**நாழி முகவாது நானாழி**

என்ற ஔவையார் வாக்கை அருணாசலம் பிள்ளை அவர்கள் மேற்கோள் காட்டினர். நாழித் தண்ணீர் பிடிக் கும் செம்பு, கடல் நீரையே முகந்தாலும் ஒரு நாழி அளவு தானே ஏற்றுக்கொள்ளும்? அது போலத் தாம் அறிவுக் கடலாகிய பண்டிதமணியுடன் தொடர்பு கொண்டிருந்த போதினும் தம் சிற்றறிவு ஓரளவு தான் ஏற்றுக்கொள்ள இயலும் என்பதைக் கூறித் தம் அடக்கத்தை வெளிப் படுத்தினர். இதைப்பற்றிப் பண்டிதமணி அவர்கள் குறிப் பிடும்போது, 'அந்தநாழிநீரும் கடல் நீர் தானே' என்று கூறினர். அதன் நயம் சிந்திக்கத் தக்கது. சிறிய அளவி

---

** தடி என்னும் சொல் கரும்பு என்னும் பொருளிலும் வழங்கி வருவது இங்கே சிந்திக்கத்தக்கது.*

ருப்பினும், அந்த நாழி நீருக்கும் கடல் நீரின் தகுதி உண்டென்பதை இவ்வாறு சுட்டிக் காட்டினர்.

பூவாளூரில் சைவசித்தாந்த சபையின் ஆண்டுவிழாவில் டாக்டர் உ. வே. சாமிநாத ஐயரவர்கள் தலைமையில் பண்டிதமணி அவர்கள் பேசுவதற்கு இருந்தார். ஆனால் ஐயரவர்கள் வர இயலாமற் போனமையால், பண்டிதமணியே தலைமைதாங்க நேர்ந்தது. அப்போது அவர்கள் கூறியதாவது:

''சைவ சித்தாந்த சபைக்குத் தலைமை வகிப்பது எளிதன்று. அன்பர்கள் என்னை வேண்டிக் கொண்டபோது, பின்வரும் சிவஞானசித்தியார் பாடலே என் நினைவுக்கு வந்தது.

புறச் சமயநெறி நின்றும் அகச்சமயம்புக்கும்
புகல்மிகுதி வழி உழன்றும் புகலும்ஆச் சிரம
அறத்துறைகள் அவையடைந்தும் அருந்தவங்கள் புரிந்தும்
அருங்கலைகள் பலதெரிந்தும் ஆரணங்கள் படித்தும்
சிறப்புடைய புராணங்கள் உணர்ந்தும் வேத
சிரப்பொருளை மிகத்தெளிந்தும் சென்றால் சைவத்
திறத்தடைவர் இதிற்சரியை கிரியா யோகம்
செலுத்தியபின் ஞானத்தால் சிவனடியைச் சேர்வர்

புறச் சமயத்தை விடுத்து, வேத ஆகமத்தை ஏற்றுக் கொள்ளுபவரே அகச் சமயங்களில் பிறப்பர்; அதன் பின், பல பிறப்புக்களில் புண்ணியம் செய்தவர்கள் தான் சிறப் புடைய புராணங்களையும் வேதங்களையும் தெளிந்து சைவப் பிறப்பை அடைவர் என்பதுஇப் பாடலின் கருத்து. ஆகையால், சைவ சித்தாந்தம் எளி'

தன்று. சைவ சித்தாந்த சபைக்கு வந்து சேருவதும் அப்படியே. திருச்சிவரையில் ரயிலில் வந்தோம்; பிறகு உந்து வண்டியில் சிறிது தொலைவும், நண்பர் ஒருவருடைய ஊர்தியில் எஞ்சிய பகுதியும் வந்தோம். வழியில் நண்பரின் ஊர்தி தடைப் பட்டதால், கடைசியாக மாட்டு வண்டியில் ஏறிப் பூவாளூருக்கு வந்து சேர்ந்தோம்.

இவ்வாறு வந்துசேர்ந்த இடத்தில், சாமிநாத ஐயர் அவர்களுக்கு அடுத்தபடி எனக்குத்தான் தகுதி என்று அறிந்து மகிழ்கிறேன்.

**மாருதி அல்லனில் தீயெனும் மாற்றம் பெற்றேன்**
**ஆரினி என்னேடொப்பார் என்றதோர் இன்பமுற்ருன்**

என்று கம்பராமாயண யுத்த காண்டத்தில் அங்கதன் தூதுப் படலத்தில் அங்கதன் சொன்னதாக வரும் பகுதி என் நினைவுக்கு வருகிறது. அநுமான் இராவணனிடத்தில் முன்னர்த் தூது சென்ருன்; மீண்டும் அவனையே அனுப்பக்கூடாது; அடுத்த தகுதியுடைய வனுகிய அங்கதனைத்தான் அனுப்ப வேண்டுமென்று இராமன் சொன்னபோது அங்கதனுக்கு ஏற்பட்ட பெருமிதம் எனக்கும் ஏற்படுகிறது.'

தூத்துக்குடி சைவசித்தாந்த சபை ஆண்டு விழாவிற்குப் பண்டிதமணி சென்றிருந்தார்கள். அன்பர்களின் வேண்டுகோளுக்கிணங்க மூன்ருவது நாளும் அங்குத் தங்கித் தலைமைதாங்கி. கம்பராமாயணத்தைப் பற்றிச் சொற்பொழிவாற்றினர். கம்பராமாயணத்தைப் பற்றி அவர்கள் பேசப்போவது தெரிந்து, 'சைவ சித்தாந்தப் பந்தலில் இராமாயணம் பற்றிப் பேசுவதா?' என்று இரண்டாம் நாள் பிற்பகலில் மறை திருநாவுக்கரசு அவர்

கள் ஒரு கிளர்ச்சி செய்துகொண்டிருந்தனர். அது பண்டித மணி செவிக்குஎட்டிற்று.அவர்கள்பேச்சின் தொடக்கத்தில் அதைப்பற்றிக் குறிப்பிட்டு, 'எனவே மறை. திருநாவுக் கரசர் தமது ஆட்சேபனைகளை யெல்லாம் இங்கே தெரிவிக் கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.' என்றார், அவரும் தம் கருத்தைக் கூறினார். பின்னர், பண்டிதமணி அவர்கள் பேசியதாவது :

'சைவ சபைப் பந்தலில் வைணவத்தைப் பற்றிப் பேசுவது குற்றமாகாது. இராமர் சிவனடியார்களில் முதல் அடியார். அன்று அவர் இராமேசுவரத்தில் பூசித்த லிங்கமே இன்று இராமலிங்கமாக விளங்குகிறது. அவரைப்பற்றி இந்தப் பந்தலிலே பேசக் கூடாதென்றால், வேறு எந்தச் சிவனடியாரைப் பற்றியேனும் இங்கே பேசுவது தகுமா?'

பிறிதொரு விழாவில் தூத்துக்குடியில் பண்டிதமணி அவர்கள் தலைமையில் ஒரு புலவர் பேசினார். பாரதத்தி லிருந்து அவர் ஒரு மேற்கோள்கூறி, 'தேவாதி தேவர்கள் எல்லோரும் வந்தனர் : ஆனால் முருகன்தான் எல்லோரை யும்விடப் பெரியவனாக இருந்தான்' என்று பொருள்கூறி விளக்கினார்.

வாழைப்பழத்தில் ஊசியைக் குத்துவதுபோல, ஆணித் தரமான கருத்துக்களைச் சுவைபடச் சொல்லும் பண்டித மணி அவர்கள் இதைப்பற்றி முடிவுரையில் கூறுதிருப் பார்களா ? 'சொற்பொழிவாளர் பாரதப் பா ஒன்றை மேற்கோள் காட்டினார்கள், அதை நான் படித்ததாக நினைவில்லை. எனினும் அவர்கள் சொன்ன கருத்து மிக நன்றாக இருந்தது. பரமேசுவரன், பார்வதி முதலியோரும் தேவாதி தேவர்களும் வந்திருந்தார்களாம். முருகன் எல் லோர்க்கும் மேலாக இருந்தானும். ஆமாம். பெரிய கூட்டம். முருகன் ஒரு குழந்தை. ஆதலால் பரமேசு

வரன் குழந்தையைத் தோள்மேல் தூக்கி வைத்திருந்திருப்பார். முருகன் எல்லோர்க்கும் பெரியவனுகக் காட்சி கொடுத்ததில் வியப்பில்லை யல்லவா?' என்றதும் எல்லோரும் அவர்களுடைய நகைச்சுவையைப் பாராட்டி மகிழ்ந்தனர்.

ஒருமுறை பண்டிதமணி அவர்கள் தலைமையில் ஒரு சீர்திருத்தக்காரர் பேசினர். பல பழக்க வழக்கங்களை அவர் மிக வன்மையாகக் கண்டித்துப் பேசிக்கொண்டிருந்தார்; கூட்டத்திலுள்ள பெண்மக்களைப் பார்த்து, 'நீங்கள் உங்கள் கணவன்மார்களின் எச்சில் உணவைச் சாப்பிடுகிறீர்களே! அந்தத் தீய வழக்கத்தை இன்று தொடங்கி ஒழித்துக் கட்டுங்கள், மூடப் பழக்கத்துக்கு முற்றுப்புள்ளி வைத்துவிடுங்கள்' என்று ஆவேசமாகக் கூறினர். அவர் பேசி முடித்ததும், தமக்கு இயல்பான புன்முறுவலுடன் பண்டிதமணி முடிவுரை யாகப் பெண்மக்களை நோக்கி, 'இந்தத் தவருன பழக்கத்தை நீங்கள் விட்டுவிட்டால் மட்டும் போதாது. எத்தனை ஆண்டுகளாக அவ்வாறு உண்டுவந்தீர்களோ, அத்துணைக் காலமாவது உங்கள் மிச்சிலையும் உங்கள் கணவன்மார்களை உண்ணச்செய்து பழிக்குப்பழி வாங்கினுல்தான் என் மனம் அமைதி அடையும்' என்று கூறினர்.

பண்டிதமணி அவர்கள் தலைமைதாங்கிய விழாக்களில் எதிர்பாராத ஒருவகைச் சிறப்பு, 1944 ஏப்ரல் 16ஆம் நாளில் சென்னை கோகலே மண்டபத்தில் நிகழ்ந்த கம்பர்விழாவுக்கு ஏற்பட்டது.

பண்டிதமணி அவர்கள் தம் அரிய உரையை எழுதிக் கொண்டுவந்து அதைப் படிக்கத் தொடங்கினர். அப்போது கூட்டத்திலிருந்த ஒரு சிலர் கூட்டம் நடக்கவிடாமல்

பலவகையாகஇடையூறு புரிந்தனர். மேடை மீதிருந்த நாற்காலிகள் பறந்தன. வானொலி நிலையத்தாரின் ஒலிபெருக்கி நொறுங்கிற்று. அந்நிலையிலும் பண்டிதமணி அவர்கள்,

> 'அறிவாளிகளுடன் சொற்போருக்கு நான் தயார்; ஆனால் மற்போர் செய்ய நான் பருவம் கடந்துள்ளேன். என் உடல்நிலையும் இடந்தராது'

என்று சுவைபடக் கூறினார்கள்.

பண்டிதமணி அவர்களின் பேச்சை ஏனையோர் படிக்க, ஒரு வகையாகக் கூட்டம் இனிது நிறைவேறிற்று. அக்கூட்டம் நடைபெறுவதற்குக் காரணமாக இருந்தவர்களில் முக்கியமானவருள் ஒருவர் 'கலைமகள்' ஆசிரியர் கி. வா. ஜகந்நாதன் அவர்கள். அவர் விழாவுக்கு மறுநாள் பண்டிதமணி அவர்கட்கு எழுதிய கடிதத்தின் படியை இங்கே தருவோம் :

சென்னை 17-4 1944

ஸ்ரீ மகாமகோபாத்தியாய பண்டிதமணி செட்டியார் அவர்களுக்கு. நலம்.

இந்தக் கடிதத்தைத் தாங்கள் பார்க்கும்போது சௌக்கியமாக அண்ணாமலைநகரில் போய்ச் சேர்ந்திருப்பீர்கள் என்று எண்ணுகிறேன். தங்களுடன் காரில் வந்த என் நண்பர் தாங்கள் இன்று காலையே புறப்படப் போவதாகத் தெரிவித்தார். தங்களை நேரில் வந்து பார்க்க எண்ணியிருந்தேன். அது இயலவில்லை.

கம்பரையும் கம்பர் திருவிழாவையும் சென்னை வாசிகள் என்றும் மறக்காதபடி செய்துவிட்டார்கள், சில தமிழர்கள். கம்பராமாயணத்தைத் திருப்பிப்

படிக்கும் அவர்களுக்கு யுத்தகாண்டந்தான் செயலில் முகிழ்க்கிறது. ராவணனை வழிபடு தெய்வமாகக் கொள்ளும் அவர்கள் எல்லா வகையிலும் 'காரண மின்றியேயும் கனலெழச் சிவக்கும் கண்ணூர்' கூட்டத்திற் சேரும் தகுதியுடைவர்களே.

ஒரு பெருங்குறை : கூட்டத்தினர் மிகவும் ஆவலாகத் தங்கள் பேச்சைக் கேட்க விரும்பியிருந்தனர். எல்லோரும் ஏமாந்து போயினர். தண்ணிய தென்றலும் சந்தனமும் தோழமைபூணும் தமிழ், பிற மொழிகளைக் காட்டிலும் மென்மையொலிகள் நிரம்பியது என்றெல்லாம் பாராட்டும் செந்தமிழுக்கும் 'அறம் புகா' நெஞ்சினருக்கும் வெகுதூரம். நாம் என்ன செய்வது? யாரை நோவது? இந்தத் துரதிருஷ்ட நாட்டில் கம்பன் பிறந்தது அதிருஷ்டக் குறைவு என்று கூட நினைக்கத் தோன்றுகிறது.

தங்களைத் தலைமைப் பதவியில் வைத்துக் கம்பன் புகழைப் பரப்பும் தொண்டர்களாக இருக்கவேண்டுமென்பது எங்கள் அவா. அது நன்கு நிறைவேறும் என்றே நம்பியிருந்தோம். தவளை குதித்ததனுல் யானை நிழல் கலங்கிவிட்டது!

தங்களுக்குப் பலவகையில் அசௌகரியம் நேரும்படி நாங்கள் செய்துவிட்டோம். எங்கள் வினைப்பயன் அது. ஒருவிதமாகக் கூட்டத்தை நிறைவேற்றினது ஓர் ஆறுதலைத் தருகின்றது.

ரேடியோ நிகழ்ச்சி மாத்திரம் குலைவின்றி அமைதியாகவும் அழகாகவும் நடைபெற்றது. சென்னை நகரத்தில் இந்த அநாகரிக நிகழ்ச்சி நிகழ்ந்தது குறித்து

வெளியூரார் வியப்பார்கள். பத்திரிகைகளில் உண்மையான செய்திகள் வந்திருக்கின்றன. கம்பன் புகழ் பன்மடங்கு பரவவும், கம்பன் விழாக் கழகத்தார் செய்த தொண்டின் உயர்வை நன்கு மதிக்கவும், இந்தச் சகோதரர்களின் முயற்சிகள் காரணமாக இருக்கின்றன. ராவணன் இன்றேல் ராமனுக்குப் புகழ் ஏது?

இந்த நிகழ்ச்சியால் தங்கள் உள்ளமும் உடலும் மிகப் புண்பட்டுவிட்டன. தங்கள் அருளுள்ளத்தில், 'தமிழர் இந்த உட்பகையினின்றும் நீங்கி உய்ய வேண்டும்' என்ற வேண்டுகோள் தில்லையம்பல வாணரை நோக்கி எழுந்தால், அதற்கு நல்ல பயன் உண்டாகும். அந்தப் பிரார்த்தனையில் தமிழர் அனைவரும் சேர்ந்துகொள்ளவேண்டும்.

கம்பர் திருவிழாக் கழகத்தாரின் சார்பில் தங்கள் மன்னிப்பை நான் இரக்கின்றேன். சிறிதும் எதிர்பாராத இந்த அநுசிதத்தைத் தங்கள் திருவுள்ளத்தில் கொள்ளாது மறக்க வேண்டுகிறேன். தங்கள் பேரன்பு இந்தச் சிறு குறும்பையெல்லாம் அலக்ஷியம் செய்து வீறிநிற்கும் என்ற துணிவு எனக்கு உண்டு.

மீண்டும் தங்கள் மன்னிப்பை யாசிக்கின்றேன்.

இங்ஙனம்,

அன்பன் **கி. வா. ஜகந்நாதன்.**

நிற்க. கம்பர் விழாவில் பண்டிதமணி கூறிய சிறு முன்னுரை என்றும் அவர்களது பெருமைக்குச்சான்றாக விளங்கும். 'சொற்போருக்குப் பின்னிடேன்' என்றது பண்டிதமணியின் புலமை வீரத்தையும், 'மற்போருக்குரிய பருவங் கடந்துவிட்டேன்' என்றது தமிழ்க் குடியிற் பிறந்தவரின் பெருந்தன்மையையும் புலப்படுத்துகின்றன.

# 10. ஈழநாட்டுப் பயணம்

இக் கட்டுரையில் பண்டிதமணி அவர்கள் இலக்கிய யாத்திரையாக இலங்கைக்குச் சென்ற விவரத்தைக் கூறுவோம்:

யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷாபிவிருத்தி சங்கத்து ஆண்டுவிழாவில் தலைமை தாங்கவேண்டுமென்று இலங்கையின் முடிசூடா மன்னராக விளங்கிய சர் பொன். இராமநாதன் அவர்களும், அவருடைய மருமகனும் இப்போது இலங்கை அமைச்சருள் ஒருவராக இருந்து வருபவருமான தமிழறிஞர் சு. நடேச பிள்ளை அவர்களும் பண்டிதமணியை 1930 முதல் வேண்டினர். இவ்வேண்டுகோளுக்கிணங்க 1933ஆம் ஆண்டு மார்ச்சு மாதத்தின் இறுதியில் பண்டிதமணி அவர்கள் யாழ்ப்பாணத்திற்குப் போய்ச் சேர்ந்தார்கள்.

யாழ்ப்பாணத்திற்கும் இந்தியத்தமிழ்ப் புலவர்களுக்கும் உள்ள உறவுபற்றி, இலங்கை அரசியலாரின் மொழி பெயர்ப்பாளர் முகாந்திரம் குல. சபாநாதன் அவர்கள் கூறியிருப்பதை இங்கே குறிப்பிடுவது பொருந்தும்:

"இந்தியாவிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு வந்துபோகும் புலவர் தமிழ் வல்லுநராய் இருக்கவேண்டுமென்பது பண்டைக்காலத்து இந்தியத் தமிழகத்தின் கருத்து. எல்லோரும் சொற்பொழிவாளர் என்று யாழ்ப்பாணத்துட் புகுவதில்லை. யாழ்ப்பாணத்து மக்களின் நன்மதிப்பைப் பெற்றிருந்தால் இந்தியாவில் தமக்கு இன்னும் பெரும்புகழ் உண்டாகும் என்ற நோக்கத்துடன் இந்திய நாட்டுப் புலவர்கள் யாழ்ப்பாணம் வந்துபோயினர்."

இக்காலத்தில் பத்திரிகைகளின் பிரசாரத்தாலும் ஆகாயவிமானப் போக்குவரத்து வசதியாலும் வேறு பல துணைக்காரணங்களாலும் தமிழ்நாட்டிலிருந்து யாழ்ப்பாணத்திற்குச் சொற்பொழிவு செய்யப் போய் வராதவர் 'பாவம் செய்தவர்' என்று சொல்லலாம்; இப்போது யார் வேண்டுமாயினும் யாழ்ப்பாணத்துக்குச்செல்லலாம். 'செக்குஞ்சரி சிவலிங்கமுஞ்சரி என்ற பான்மையில் தனுஷ்கோடியிலிருந்து தலைமன்னாரில் இறங்கும் பத்திரிகை நிருபர்களும் அச்சுக்கோப்பவர்களும் அவர்களுடைய மனைவிமக்களுமாய இத்தகையினர் யாவரும் ஆன்றோர்' என வரவேற்கப் பட்டுப் பாராட்டப்படுகின்றனர். இதன் பயனாக, இங்கிருந்து செல்லும் தக்க அறிஞர்கள் முகத்திலும் கரிபூசிவிட வேண்டுமென்ற உணர்ச்சி யாழ்ப்பாணத்தில் வளர்ந்து வருகிறது. 25 ஆண்டுகளுக்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் இத்தகைய சூழ்நிலை நிலவவில்லை; புலமைமிக்க பெரியார்களின் வருகையை எதிர்பார்த்து, அவர்களுடன் தொடர்பு கொள்ள விரும்பி, ஆங்குள்ள அறிஞர் பெருமக்கள் வரவேற்பு ஏற்பாடுகளைச் செய்வர். அத்தகைய அரிய சிறப்புககு உரியவராக விளங்கியவர் நமது பண்டிதமணி அவர்கள்.

புகையிரத மார்க்கமாக, பண்டிதமணி அவர்கள் 'யாழ்ப்பாணப் புகையிரத ஸ்தானத்தை' அடைந்ததும், ஆரிய திராவிட பாஷாபிவிருத்தி சங்கத்தாரும், தமிழ்ப் புலவர்கள் பலரும் அவரை வரவேற்றனர். அவர்கள் ஒவ்வொருவரும் பண்டிதமணிக்கு அறிமுகம் செய்துவைக்கப் பெற்றனர். அப்போது பண்டிதமணி அவர்கள், அவரவர் தாரதம்மியத்துக்கேற்பத் தலையசைத்தும், முறுவலித்தும், கையெடுத்தும், கைகொடுத்தும், கை குவித்தும், முதுகு தைவந்தும், வார்த்தையாடியும் வேண்டிய மரியாதைகள் செய்தார்கள்.

மறுநாள் பண்டிதமணி அவர்களை மோட்டார் ஊர்தியில் அமரச் செய்து, மாலையிட்டு, ஆண்டுவிழாவுக்கு ஊர்வலமாக அழைத்துச்செல்லத் தொடங்கினர். மாலையிட்ட போது, பெரியதொரு மங்கலத்துக்கு அறிகுறியாகச் சிவன் கோவில் மணி ஒலித்தது. ஆறுமுக நாவலர் அவர்கள் முதன்முதல் சைவப்பிரசங்கம் செய்யத் தொடங்கியபோது இந்த மணியே ஒலித்தது என்பதை நினைத்து யாழ்ப்பாணத்துச் சைவ நன்மக்கள் மட்டற்ற மகிழ்ச்சியடைந்தனர்.

விழாவில் பண்டிதமணியை அறிமுகப்படுத்தியபோது, தலைவர் நடேசபிள்ளை அவர்கள் ஈழத்துக்கு (பொன்னுக்கு) மணியின் இன்றியமையாமையையும், மணிக்கு ஈழத்தின் இன்றியமையாமையையும் விளக்கிக் கூறினார்கள்.

பண்டிதமணி அவர்கள் தமது விரிந்து பரந்த தலைமையுரையில் யாழ்ப்பாணப் புராதனத்தையும், யாழ்ப்பாணத்துக்கும் தென்னிந்தியத் தமிழ்நாட்டுக்கும் உள்ள தொடர்பையும், தமிழ் வடமொழி வளர்ச்சிக்குச் செய்யவேண்டுவனவற்றையும், தமிழ் வடமொழி இலக்கியச் சிறப்புக்களையும் எடுத்துக் கூறினர்.

அரசகேசரி, ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர், வித்துவ சிரோமணி ந.ச. பொன்னம்பலப் பிள்ளை, சுன்னுகம் அ. குமாரசாமிப் புலவர், சர் பொன். இராமநாதன் முதலாகிய பிரபல கவிஞர்கள், நாவலர், பண்டிதர், பிரபுக்களிருந்து தமிழை வளர்த்த நாடு என்று யாழ்ப்பாண நாட்டைப் பண்டிதமணி புகழ்ந்து கூறினர்.

ஆரிய திராவிட பாஷாபிவிருத்தி சங்கத்தைப்பற்றிப் பேசுகையில் இது தென்மொழி வடமொழி என்னும் இரண்டையும் ஒப்ப வளர்க்கும் நோக்கம் உடையதெனினும், வடமொழித்தேர்வு எழுத விரும்புவோர் தமிழிலும் பால பண்டித வகுப்புத் தேர்ச்சி பெற்றிருக்கவேண்டும் என்று விதி செய்திருப்பது தமிழுக்குத் தனி முதன்மை கொடுத்து

வளர்க்கும் சிறப்பு என்று பாராட்டினுர். இவ்வித ஒழுங்கு தென்னிந்தியாவிலுள்ள எச் சங்கத்திலும் தாம் கண்ட தில்லையென்றும், இவ்வாறு தமிழ் மொழிக்குத் தனி முதன்மை கொடுத்து வளர்ப்பதில் இங்குள்ள பிராமண ரெல்லாரும் முன்னின்று உழைப்பதைக் கண்டு தாம் பேருவகை அடைவதாகவும் கூறினுர். தென்னிந்தியாவி லுள்ள பல்கலைக்கழகங்களிலும் தமிழுக்கு இவ்வாறு தனி முதன்மை கொடுத்து வளர்த்தற்கு அங்குள்ள பிராமணர் களுள் சிலர் இடையூருக நின்றமையாலுற்ற வருத்தத்தை யும் வெளிப்படுத்தி இச்சங்கத்தை அவர்,புகழ்ந்துபேசினுர்.

ஆண்டுவிழாவின் மூன்று நாட்களிலும் அரிய பல பொருள்களைப்பற்றி விரிவாகச் சொற்பொழிவாற்றி யாழ்ப் பாணத்துப்பேரறிஞர்களின் பெருமதிப்பிற்கு அவர் உரிய வராஞர். பின்னர், யாழ்ப்பாணம் கலா நிலையத்தார் கலா நிலையத்தின் இரண்டாம் ஆண்டு விழாவுக்கு அழைத்து, விருந்து முதலிய உபசாரங்கள் செய்தார்கள். இந்நிகழ்ச் சியைப்பற்றியும் வேறு பல நிகழ்ச்சிகளைப் பற்றியும் பண்டித சி. கணபதிப் பிள்ளை அவர்கள் அக்காலத்தில் எழுதிய ஒரு கட்டுரையிலிருந்து சில பகுதிகளைத் தருவோம்:

'சரித்திர ஆராய்ச்சியாளர் ஸ்ரீமான் செ. இராசநாயக முதலியார் அவர்கள், தமிழ்மொழியாராய்ச்சியாளர் சுவாமி ஞானப்பிரகாசர் அவர்கள் முதலிய பிரபலஸ்தர்கள் பண் டிதமணியவர்களைக் கலாநிலையத்தில் வந்து தரிசித்தார்கள். பண்டிதமணியவர்கள் ஒவ்வொருவரோடும் அவரவர் தகுதிக்கேற்ப அளவளாவிச் சம்பாஷிக்குந் திறமை, பழைய யாழ்ப்பாணத்துப் புலவர்களின் சம்பாஷணையை ஞாபகப்படுத்தியது.'

'தினகரன் உபபத்திராதிபர் ஸ்ரீமான் நடராஜா அவர்கள் தம்மாலும், ஈழகேசரிப் பத்திராசிரியராலும் பண்டிதமணி

மீது பாடப்பட்ட நீண்ட இனிய அகவற் செய்யுள்களையும், வெண்பாக்களையும் நிலையத்தின் சார்பாகப் படித்துக் கொடுத்தார்கள். பண்டிதமணி அவர்கள், தம் மீது பாடப்பட்ட செய்யுள்கள் என்பதனையும் நோக்காது, செய்யுள்களின் இனிமையிலும் பொருளமைதியிலும் ஈடுபட்டு, அவற்றினையும், யாழ்ப்பாணத்தாருக்கு இயல்பானமைந்துகிடந்த கவித்துவ சக்தியினையும் மனமார விதந்து விதந்து பாராட்டினார்கள்.'

கொழும்பு, நீர்கொழும்பு ஆகிய இடங்களிலும் மிகப் பல கூட்டங்களில் பேசி அவர் பெரும்புகழுடன் தாய்நாட்டுக்கு வந்து சேர்ந்தார். அதன் பின்னரும், பண்டிதமணி ஈழநாட்டுடன் தொடர்ந்து தொடர்புகொண்டிருந்தார்.

யாழ்ப்பாணத்துக்கு யாராவது செல்லுகிறார்கள் என்று தெரிந்தால், '**நாவலர்** வீட்டைப் பார்க்கத் தவறாதீர்கள்; அவர் பாடஞ் சொல்லிக் கொடுத்த இடம் முதலியவற்றுக்குங் கட்டாயம் சமுகம் கொடுங்கள்' என்று சொல்லுவார்கள். சுன்னாகம் குமாரசுவாமிப் புலவர், விபுலாநந்த அடிகளார், சதாசிவ ஐயர், சோமசுந்தரப் புலவர், பண்டிதர். சி. கணபதிப் பிள்ளை, பண்டிதர் இளமுருகனார் ஆகியோரைப் பண்டிதமணி அடிக்கடி பாராட்டுவதுண்டு.

மகாவித்துவான் சி. கணேச ஐயர்மீது பண்டிதமணிக்குப் பெருமதிப்பு இருந்தது. அவர் ஆடம்பரமற்ற தமிழ்ப்புலவர் என்றும், இலக்கண அறிவு சிறப்பாக உடையவர் என்றும் சொல்லுவார்கள்.

யாழ்ப்பாணத்திலிருந்து வெளியான **ஞாயிறு** இதழ்களிலும் **ஈழகேசரி**யிலும் ஒரு சில கட்டுரைகளைப் பண்டிதமணி எழுதியிருக்கிறார்; திரு. நா. பொன்னையா அவர்கள் அன்புடன் அனுப்பிய ஈழகேசரி இதழ்களை

இருபது ஆண்டுகளாக வாரந் தோறும் படித்து அதன் வாயிலாக ஈழநாட்டுச் செய்திகளை அறிந்து மகிழ்ந்தனர்.

பண்டிதமணியுடன் கடிதத் தொடர்பு கொண்டிருந்த வர்கள் தி. சதாசிவ ஐயர், நவநீதகிருஷ்ண பாரதியார், சுவாமி உருத்திரகோடீசுவரர், பண்டித சி. கணபதிப்பிள்ளை; சி. கணேச ஐயர் ஆகியோர். இப்போது அமைச்சராக இருக்கும் சு. நடேசபிள்ளை அவர்கள் பண்டிதமணியின் இறுதிநாள்வரை அவருடன் நெருங்கிய தொடர்பு கொண்டி ருந்தார்கள். அவர் லண்டனுக்குச் சென்றிருந்த போதும் அங்கிருந்து அடிக்கடி பண்டிதமணிக்குக் கடிதம் எழுதியுள் ளார். அவருடையமாமியார்லேடி இராமநாதன் அம்மையார் பண்டிதமணிமீது அளவுகடந்த பக்தி உடையவராக இருந் தார்கள். **திருவாசக உரை**பற்றி லேடி இராமநாதன் 1952-ல் பண்டித மணிக்குப் பின்வருங் கடிதம் எழுதினார்கள்:

> 'மாணிக்க வாசக சுவாமிகளது நூலுக்கு வெளி வந்திருக்கும் தங்களுடைய சிறந்த பேருரையை மிக வும் பாராட்டுகிறேன். அவருடைய தெய்வத்திருவாக் கினைச் சுவையுணர்ந்து படித்து அதன் நுண்பொருள் களைப் பிறர்க்குத் தெள்ளிதின் எடுத்துக் காட்டும் தங்கள் அறிவுத் திறனைப் புலப்படுத்தும் ஒரு சின்ன மாக அது விளங்குகின்றது. இக்காலத்தில் தமிழ் மொழியில் இத்தகைய கடினமான வேலையில் ஈடுபடு வார் மிகச் சிலரேயாவர்.'

மருதனுமடத்திலுள்ள **இராமநாதன் கல்லூரி** பண்டித மணியின் மனத்தைப் பெரிதும் கவர்ந்தது. அதைப்போன்ற ஒருகல்லூரியைச் செட்டி நாட்டில் அமைக்க வேண்டு மென்று கருதி ஒரு கட்டுரை எழுதினார்கள். அக்கட்டுரை யில், 'இக் குருகுலத்தை இரண்டாண்டுகளின் முன்னர் நேரிற் கண்டு மகிழ நேர்ந்தது. அப்பொழுது என் உள்ளத்

தெழுந்த உவகைக்கு அளவின்று. ஆங்குள்ள சோதரிக ளெல்லாம் 'ஆங்கிலம் தமிழ் இசைப் பயிற்சியுடையராய்த் திகழ்தலைக் கண்டு பேருவகை பூத்தேன். அக்குருகுல அமைப்பு, சர் பொன். இராமநாதனவர்களின் புகழுட லாகக் காணப்பட்டது. பூதவுடல் இறக்கப் புகழுடல் ஆக்க முறும் என்பதைக் கண்கூடாகக் கண்டேன்' என்று குறிப் பிட்டுள்ளார்கள். அதன் விளைவாகக் கொப்பனுபட்டியிற் **கலைமகள் கல்லூரி** என்னும் உண்டி உறையுள் மகளிர் பள்ளிக்கூடம் ஒன்று சிறந்த முறையில் அமைக்கப்பெற்று இனிது நடைபெற்று வருகிறது.

பண்டிதமணி, ஆரிய திராவிடபாஷாபிவிருத்திசங்கத் தில் ஆற்றிய தலைமையுரையில் தென்னிந்தியப் பிராமணர் சிலரைக் குறை கூறியதன் விளைவாக ஒரு விவாதம் நடை பெற்றது. 'ஆர்த்ரா' என்னும் பத்திரிகையின் ஆசிரியரான திரு. நாராயணஐயர் பண்டிதமணியின் பேச்சைச்சிதைத்தும் திரித்தும், கூட்டியும் குறைத்தும் அமைத்து, அதைத் தென் னிந்தியாவிலுள்ள பிராமணர் பலர்க்கு அனுப்பினர். பண் டித மணியின் கூற்றுக்களை மறுத்தும், பிராமணர் தமிழுக்கு ஆற்றியுள்ள பணிகளை வரிசைப்படுத்தியும் காலஞ்சென்ற காங்கிரசுத் தலைவர் திரு. சத்தியமூர்த்தி ஐயர் அவர்களும் டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர் அவர்களும் "ஆர்த்ரா" ஆசிரியர்க்குக் கடிதங்கள் எழுதினர். இதனுல் பண்டித மணி அவர்கட்கும் தென்னிந்தியப்பிராமணஅறிஞர் சிலர்க் கும் நட்புக் குறைந்தது. அந்த ஆண்டில் அவருக்குக் கிடைப்பதாக இருந்த "மகாமகோபாத்தியாய" பட்டமும் தடைப்பட்டது.

அக்காலத்தில் இலக்கிய உலகில் இன வெறி எந்த அளவில் இருந்தது என்பதை உணர்த்தவே இதை இங்கே குறிப்பிடுகிறேன். இந் நிகழ்ச்சியைப் பற்றிப் பண்டிதமணி

எழுதிய கடிதத்திற்கு டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர் அவர்கள் எழுதிய பதில் கடிதத்தையும் இங்கே தெரிவிப்பது இன்றியமையாதது. புகழ் பெற்றவர்கள் பெயரால் பத்திரிகைகளில் அறிக்கைகள் வெளியிடப்படும் சூழ்ச்சியை இக் கடிதம் வெளிப்படுத்துகிறது. பண்டிதமணிக்கும் டாக்டர் உ. வே சாமிநாத ஐயர் அவர்கட்கும் இடையே இருந்த நெருங்கிய நட்பையும் இக்கடிதம் புலப்படுத்துகிறது.

திருப்பனந்தாள்
22-6-33

அன்புமிக்க ஐயா,

உபயகுசலோபரி. நான் சில தினங்களாக இவ்விடம், தலைவர்களுடைய விருப்பத்தின்படி இருந்து வருகிறேன்.

பட்டணம் விலாஸத்திற்குத் தாங்களெழுதியனுப்பிய கடிதமும் சென்னைக்கு வந்திருந்த 'ஆர்த்ரா' வென்ற பத்திரிகைப்பிரதியும் ஒருங்கே நேற்று இங்கே எனக்குக் கிடைத்தன. தங்கள் கடிதத்தைப் பார்த்துத் தங்களிலும் மிக்க வருத்தத்தை அடைந்து, ஆர்தரா என்னும் பத்திரிகையைப் பிரித்து, அதில் நான் எழுதியதாகவுள்ள கடிதத்தையும் பார்த்தேன். அக்கடிதத்தை இப்பொழுதுதான் பார்த்தேன்.

ஸ்ரீமான் நாராயணையர் முன்பு ஒரு கடிதமும் அச்சுக்கடிதமொன்றும் அனுப்பியிருந்தார். அச்சுக் கடிதத்தில் தாங்கள் யூனிவர்ஸிடியிலுள்ள சிலர்மேல் குறை கூறி, நானும் அங்ஙனமே கூறினேனென்சொல்லியதாக உள்ளதைப் பிறர் மொழிபெயர்த்துச் சொல்ல அறிந்து சிறிது மனவருத்தமடைந்ததுண்டு. யூனிவர்ஸிடி சம்பந்தமாகக் குறை கூறுதல் அதன் தொடர்

புடைய என்பால் விபரீத உணர்ச்சி உண்டாகக் காரணமாகும். ஒரு கலாசாலையில் ஆசிரியராக இருந்து பத்திரிகை ஒன்றை நடத்திவரும் தகுதியுடைய ஒருவர் பொய் கூறுவாரென எண்ணவில்லை. அக்கடிதத்தை மொழிபெயர்த்துக் கூறியவரும் உடனிருந்த சிலரும், 'இதற்கு என்ன விடையளிப்பது?' என்று கேட்டபொழுது, 'யூனிவர்ஸிடி சம்பந்தமாக நான் குறை கூறியதாக ஞாபகமில்லை. பொதுவாகத் தமிழ்க் கல்வி குறைந்துவருகிறதென்று சொல்லியிருப்பேன்' என்று கூறினேன். சில காலமாகக் கடிதம் எழுதுதல் முதலியவற்றைப்பிறருடைய ஸகாயத்தைக்கொண்டே செய்துவரும் இயல்புடையவனாக இருத்தலின், அக் கருத்தையே விடையாக எழுதி விடலாமென்று சொன்னேன். உடனிருந்த ஒருவர் ஒரு விடைக்கடிதத்தை எழுதிக்கொணர்ந்து நான் சொல்லியவற்றையே எழுதியிருப்பதாகச் சொன்னார். தபாலுக்கு நேரமாயினமையாலும், சோர்வடைந்த சமயமாக இருந்தமையாலும் அவர் கூறியதை நம்பி அக் கடிதத்திற் கையெழுத்திட்டேன்.

நேற்று, 'ஆர்த்ரா'வில்தான் அக்கடிதத்திலுள்ள வாக்கியங்களையும் படித்துப் பார்த்தேன். தாங்கள் வருந்தி எழுதுவதற்குரிய காரணங்கள் அதில் இருத்தலையும் அது வழக்கமாக நானெழுதும் அமைப்பில் இல்லாதிருத்தலையும் உணர்ந்தேன். இச்செயல் காலவித்தியாசத்தால் நிகழ்ந்தது என்றெண்ணி மிக வருந்தினேன். அப்பொழுது இருந்த என் மனநிலை இத்தகையதென்றெழுதல் இயலாது.

என்னை யார் எவ்வாறு தூஷித்தாலும் இழிவாக நடத்தினாலும் பொறுத்துக்கொண்டு கடமைகளை

நிறைவேற்றி வருவதே இளமை தொடங்கி நான் கொண்ட கொள்கை. அது தாங்களும் அறிந்ததே. அங்ஙனமிருக்க, நெடுநாட் பழக்கமும் மிக்க உள்ளன் பும் உடைய தங்கள்பால் நான் சினங்கொள்ளுவதற் குக் காரணமே இல்லை. தங்கள்பாலுள்ள அன்பும் தாங்கள் பலவகையிற் செய்த உபகாரங்களை மறவா உணர்ச்சியும் என்றும் என் உள்ளத்தினின்றும் மாறு. 'ஆர்த்ரா'விற் காணப்படும் கடிதம் எழுதியபின்னரே தாங்கள் இயற்றிய 'மண்ணியல் சிறுதேர்' என்ற மொழிபெயர்ப்பு நூலுக்குச் சிறப்புப்பாயிரம் மனமு வந்து அளித்தேனென்பது நினைவிருக்கலாமே. தங் கள்பால் மாறுபாடான எண்ணம் இருக்குமாயின் அவ்வாறு செய்ய மனம் இடங்கொடுக்குமா ?

தங்கள் கடிதத்திலுள்ள, 'நீண்டகாலமாக வளர்த்த அன்பை ஒரு கணப்பொழுதில் வேரறக் களையும்', 'தாங்கள் வெறுத்தொதுக்கினும்' என்பன வும் பிறவுமாகிய சொற்றொடர்களைத் தங்கள் மூல மாகக் கேட்க வைத்த ஊழ்வினையை நினைந்து வருந்து கின்றேன். எல்லாவற்றையும் மறந்துவிடவேண்டும். நேரிற் சந்திக்கும்பொழுது எல்லாம் கூறுவேன்.

இங்ஙனம்,
அன்பன், **வே. சாமிநாதன்**

இந் நிகழ்ச்சி யாழ்ப்பாணத்துப் பெருமக்களுக்கும் பண்டிதமணிக்கும் இடையே இருந்த அன்புப் பிணைப் பை மேன்மேலும் உறுதிப்படுத்தியது. பண்டிதமணியின் வருகையால், தமிழ்ப் பயிர் மேலுந் தழைத்து ஓங்குமென அவர்கள் மகிழ்ந்தனர். என்பதைத் திரு. நடேசபிள்ளை அவர்கள் எழுதிய ஒரு கடிதம் தெளிவாகத் தெரிவிக்கிறது :

'தாங்கள் யாழ்ப்பாணத்துக்கு வந்ததனால் ஆண்டுத் தமிழ் வளர்ச்சி ஓங்குவதற்குரிய மனவெழுச்சி மக்களுள் அதிகமாகத் தோன்றியுள்ளது. நுணுகிய தமிழ் நயங்களைப் பண்டிதர் பாமரர் யாவரும் உணர்ந்து இன்புறுமாறு தாங்கள் செய்த உபந்யாசங்கள் சிறந்த பயனை விரைவில் அளிக்கத்தக்கன. தாங்கள் மீண்டும் மீண்டும் ஆண்டு வந்து தமிழமுதத்தினை ஊட்டுதல் வேண்டும். இதுவே அங்குள்ள பல அறிஞர்களது பேரவாவாகும்.'

மீண்டும் பண்டிதமணி ஈழநாட்டுக்குச் செல்லும் வாய்ப்பு ஏற்படவில்லை. ஆனால் ஈழநாட்டிலுள்ள நூற்றுக் கணக்கான இளைஞர்கள் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் கல்வி பயின்றபோது, அவர்களுக்குப் பண்டிதமணி தமிழமுதத்தினை ஊட்டிவந்தார். அவருள் பலர் இப்போது ஈழவள நாடெங்கும் ஆசிரியப் பணியாற்றி வருகின்றனர்; வேறு பலர் பெரிய அலுவலர்களாக உள்ளனர். அவர்கள் யாவரும் பண்டிதமணியிடம் பேரபிமானங்கொண்டிருந்தது அவர் இறந்த செய்தி எட்டியபின் "தினகரன்" இதழில் அவர்களிற் பலர் எழுதிய கட்டுரைகளிலிருந்து தெளிவாகத் தெரியவந்தது.

# 11. தமிழறிஞருடன் உறவு

இளமைக்காலத்தில் பண்டிதமணி தமிழகத்துப் புலவர்கள் சிலருடன் முதன் முறையாகத் தொடர்புகொண்டதைப்பற்றி முன்னொரு கட்டுரையில் விரிவாகத் தெரிவித்தோம். இக்கட்டுரையில் தமிழறிஞர்கள் பண்டிதமணியைப் பற்றி என்ன கருதினர் என்பதையும், அவர்களோடு பண்டிதமணி எவ்வாறு நடந்துகொண்டார் என்பதையும் கூறுவோம்:

இந்நாளில் புகழ்பெற்றிருக்கும் புலவர் சிலர் காவியப் பயிற்சி பெற்றிருந்தும் சாத்திர அறிவு பெறுதிருக்கின்றனர். சிலர்க்கு இலக்கியத்தில் ஈடுபாடிருக்கும்; இலக்கணத்தில் விருப்பம் இராது. சிலர் உரை நடை எழுதுவர்; பாடல் புனையும் ஆற்றல் பெற்றிரார். இக்குறைபாடுகள் எவையுமின்றி, பலதுறைகளிலும் பண்டிதமணியவர்கள் ஆழ்ந்த புலமை பெற்றிருந்ததால் புலவர்கள் அவர்களைப் பெரிதும் மதித்தனர்.

புலவர் சிலர் எப்போதும் பண்டிதமணியைச் சூழ்ந்து கொண்டிருந்தனர். செட்டிநாட்டரசராகிய அண்ணாமலை வள்ளல் பண்டிதமணியைப்பாராட்டிப்பெரிதும்மதித்ததால், ஏனைய செல்வர்களும் இப்புலவரை அடிக்கடி கண்டு மரியாதை செய்தனர். இதன் விளைவாக, பண்டிதமணிக்குப் பல பகைவர் உண்டாயினர். ‘புகழுக்குப் பகையும் புலமைக்குப் பொறாமையும் எங்கெங்கும், என்னென்றும் காத்திருக்கும்’ என்ற பேகன் (Bacon) வாக்குப் பண்டிதமணியின் வாழ்க்கைக்குச் சாலப் பொருந்தும்.

மாறுபட்ட கருத்துக்கள் தமக்குத் தோன்றியபோது அவற்றைத்தங்கு தடையின்றிப் பண்டிதமணி தெரிவித்தார்; நெற்றிக்கண் காட்டினும் குற்றம் குற்றமே' என்ற புலவர் நெறியை அவர் கடைப்பிடித்தார். எவ்வளவு நுட்பமாகப் புடைத்த அரிசியைச் சமைத்தாலும் அந்தச் சோற்றில் ஒரு கல் தட்டுப்படுவதுபோல, பிற அறிஞரின் நூல்களில் பண்டிதமணி அவர்கள் எளிதில் குற்றம் கண்டுபிடித்துவிடுவர்.

எந்த ஆசிரியரின் நூலுக்கும் பண்டிதமணி எளிதில் முன்னுரை கொடுக்கமாட்டார்; ஆசிரியர் பெயரையும் நூலின் பெயரையும் தெரிந்துகொண்ட அளவில் முன்னுரை எழுதும் வழக்கம் அவரிடம் இல்லை. உயிர்நீப்பதற்குச் சில நாட்கள் முன்னரே அவர் எழுதிய ஒரு முன்னுரையிலும்* அழுத்தமான கருத்துக்களையும், ஆராய்ச்சி வன்மையையுங்காணலாம். அவர், இல்லது புனையமாட்டார்; சொல்நயம், பொருள்நயம், பாநயம் ஆகிய இவற்றையே முன்னுரையிலும் விளக்கிக் கூறுவார். ஏனைய கருத்து ஏதாவது தெரிவித்தால், அதிலும் சிலேடை நயம் இருக்கும். எனவே அவரிடம் முன்னுரை வேண்டப் புலவர்கள் அஞ்சினர்.

'தமிழ் படித்தவன்' என்று சொல்லி யாராவது தம்மிடம் வந்தால், அவர் ஆழமாய்ப் படித்திருக்கிறாரா என்று பண்டிதமணி சோதிப்பர்; நன்றாகப் படிக்கவேண்டும் என்றஎண்ணத்தை உண்டாக்கி, வந்தவரின் அறிவுமமதையை அடக்கிவிடுவர்.

ஒருதடவை, மகிபாலன்பட்டிக்கு ஒரு தமிழ் வித்துவான் வந்தார். ஆசிரியப் பதவிக்கு மனுப்போட விரும்புவதாகவும் தமக்குஒரு சிபார்சுக் கடிதம் வேண்டுமென்றும்

*சொ. முருகப்பா அவர்களின் 'இராம காதை' பாலகாண்டத்துக்கு எழுதிய முன்னுரை.

அவர் பண்டிதமணியிடம் கூறினர். 'ஆகு பெயருக்கும் அன்மொழித் தொகைக்கும் என்ன வேறுபாடு?' என்று அவரைப் பண்டிதமணி கேட்டார்; அவரால் அவ்வினவுக்கு விடைகூற இயலவில்லை. 'நீரிற் குமிழி இளமை' என்ற குமரகுருபரர் பாடலில் எழுவாய், செயப்படு பொருள், பயனிலை எவையெவை? என்று அவரை மற்றொரு கேள்வி கேட்டனர். இவ்வினவுக்கும் அவரால் விடைபகர இயலவில்லை. தமிழாசிரியராவதற்கு அவருக்குத் தகுதி இல்லை என்று பண்டிதமணி உரியவர்கட்கு எழுதிவிட்டார்.

இதுபோன்ற நிகழ்ச்சிகளால் பண்டிதமணி 'பொல்லாதவர்' என்று பெயரெடுத்தார். அவருடைய சிலேடைகளும் பிறர் மனத்தைப் புண்படுத்தும். நாமக்கல் கவிஞர் அவர்களைப் பண்டிதமணி 'நாமக்கல்லார்' என்று கூறுவர். கல் என்பது மலையைக் குறிக்கும் என்பதும்,

**'அளக்க லாகா அளவும் பொருளும்**
**துளக்க லாகா நிலையும் தோற்றமும்**
**வறப்பினும் வளந்தரும் வண்மையும் மலைக்கே'**

என்ற ஒரு பழந் தமிழ்ப்பாடலில் புலவர்க்கு உவமையாகக் கூறும் மலையின் தன்மை குறிப்பிடப்பெற்றிருப்பதும் சிந்திக்கத்தக்கது.

தமிழ்வளர்ச்சிக் கழகத்தின் தலைவர் அவிநாசிலிங்கம் செட்டியார் அவர்கள்மீது பண்டிதமணிக்குப் பெருமதிப்பு உண்டு. அவர் கல்வி அமைச்சரானபோது, பண்டிதமணி அவரைப் பாராட்டி ஒரு கடிதம் எழுதினர்;இவ்வாறுபண்டிதமணி வலிய எழுதுவது மிக அருமையான செயல். தமிழ் வளர்ச்சிக்கழகத்தினர் ஒரு தடவை பண்டிதமணிக்குப் பரிசு வழங்கினர். அப்போது பண்டிதமணி என்னிடங் கூறியது இன்றும் என் செவிகளில் ஒலித்துக்கொண்டிருக்கிறது:

'அவிநாசிலிங்கம் செட்டியார் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கவேண்டும்; அவிநாசி உடல்; தூரன் உயிர்; எனவே, தூரன் அவர்களுக்கே தெரிவித்தாலும்போதும். ஆனல் தூரனும் தூரத்தில் இருக்கிருர்.'

'எல்லோரும் தம்மைப் பாராட்டவேண்டும்; தாம் யாரையும் பாராட்டக்கூடாது' என்ற எண்ணம் பண்டித மணிக்கு இருந்ததாகச் சிலர் கூறக் கேள்விப்பட்டிருக் கிறேன். இது தவறு. தக்காரைப் பாராட்ட அவர்கள் என்றும் தயங்கியதில்லை. அரிய பொருள் நிறைந்த சிறந்த கருத்துக்களை யார் வெளியிட்டாலும், அவர்கள் கேளாமலேயே பண்டிதமணி பாராட்டியிருக்கிருர். நட்பின் காரணமாக இவரிடம் முன்னுரையோ பாராட்டுரையோ பெற இயலாது. 'பரிந்து விரும்பிப் பல்கால் கேட்பினும் பொருந்த எழுதவிரையா இயல்புடையீர்' என்று ஓர் அறிஞர் கூறியிருப்பது முற்றிலும் உண்மையே.

பல ஆண்டுகளுக்கு முன்னர் நாவலர் ச. சோம சுந்தர பாரதியார் அவர்கள் தூத்துக்குடியில் ஒரு சொற் பொழிவாற்றினர். இதழ்களில் அதைப் படித்துப் பாரதி யாரைப் பாராட்டிப் பண்டிதமணி கடிதம் எழுதினர். தம் மைப் பாராட்டிய முதற் புலவர் பண்டிதமணியே என்றும், அதன் பயனகவே, 'தசரதன் குறையும் கைகேயி நிறை யும்' என்ற நூல் உருவாயிற்று என்றும் பாரதியார் அடிக்கடி கூறுவதுண்டு. 'பண்டிதமணியின் அறிவாற்றல் மிகுதியை நோக்க, அம்மட்டில் எங்களுடன் போட்டி போடாதபடி ஆங்கிலம் தெரியாது போய்விட்டது நல்லதாயிற்று' என்றும் அவர் குறிப்பிட்டிருக்கிருர்.

கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை அவர்களிடம் பண்டிதமணி அவர்களுக்குப் பல ஆண்டுகளாகப் பெரு

மதிப்பு இருந்தது. கவிமணிக்கும் பண்டிதமணிமீது அவ்வாறே மரியாதையும் மட்டற்ற அன்பும் இருந்து வந்தன. எனினும் 1938-இல்தான் இவர்களிருவரும் சந்தித்தனர். திருவனந்தபுரம் பல்கலைக் கழகத்துப் பாடத் திட்டக் குழுவின் கூட்டம் நடைபெற்றபோதுதான் இச்சந்திப்பு ஏற்பட்டது. அப்போது, துணைவேந்தர் பரமேசுவர பணிக்கர், திரு. பன்னிருகைப்பெருமாள் முதலியார், கவிமணி ஆகியோரது வேண்டுகோளுக்கிணங்கி, பண்டிதமணி திருவாசகத்தைப்பற்றி ஒரு சொற்பொழிவு ஆற்றினர். அதைக்கேட்டு யாவரும் மனம் உருகினர்; அன்று தாம் கண்ட காட்சியையே,

**நெற்றி நிறைந்த நீறுடையான்**
**நெஞ்சில் பஞ்சாக் கரமுடையான்**
**முற்றி முதிரும் அன்பாலே**
**மூவர் தமிழும் பயில்நாவான்**
**சுற்றம் தழுவும் குணசீலன்**
**தூய நெறிகண் டொழுகிடுவான்**
**கற்ற பெரியோன் கதிரேசன்**
**கடவு ளருளால் வாழியவே!**

என்ற பாடலில் கவிமணி சித்திரித்துள்ளார்.

பண்டிதமணியின் சொற்பொழிவில் சிறந்த ஓசையின்பம் இருந்தது கவிமணிக்கு மகிழ்ச்சிதந்தது. 'பண்டிதமணி அகங்காரி என்ற செய்தியைத்தான் நான் இதுவரை அதிகமாகக் கேள்விப்பட்டிருக்கிறேன்; ஆனால் அவர்களுடைய புலமையையும் எளிமையையும் அறியும் பேறு இன்றுதான் கிட்டிற்று' என்று கவிமணி கூறினர்.

எதைப்பற்றியாவது பண்டிதமணி அவர்கள் கருத்துத் தெரிவித்துவிட்ட பிறகு, கவிமணியிடம் அதைப்பற்றிக் கேட்டால், 'பண்டிதமணி சொன்னதையே நான் மீண்டும்

சொல்லவேண்டியதில்லை' என்று கூறுவார்கள். பண்டித மணி எழுதிய கதிர்மணி விளக்க உரையைப் பாராட்டிக் கவிமணி பாடிய பாடல்களும், பண்டிதமணிமீது கவிமணி பாடிய சரமகவிகளும் பண்டிதமணியின்பால் அவர் கொண்டிருந்த எல்லையற்ற பேரன்புக்கு எடுத்துக்காட்டாக உள.

கவிமணி அவர்களைப் பண்டிதமணி பாராட்டாத நாள் இல்லை என்று சொல்லலாம்; சோழவந்தானூர் அரசஞ் சண்முகனூர், டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர், பேராசிரியர் கா. சு. பிள்ளை, டாக்டர் சோமசுந்தர பாரதியார், பன்மொழிப் புலவர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார், டாக்டர் மு. வரதராசன், 'ஆனந்த விகடன்' இலக்கிய ஆசிரியர் பி. ஸ்ரீ. ஆகியோரையும் அவர் அடிக்கடி பாராட்டுவார்.

கருத்து வேறுபாடிருப்பினும், ஏனைய அறிஞர்களுடன் நல்லுறவுகொண்டிருக்க வேண்டுமென்று பண்டிதமணி கருதினர். 'டி. கே. சி.' அவர்களைப் பல தடவை கண்டித்துப் பேசியபோதும் அவர்களுடன் பண்டிதமணி கடிதப் போக்குவரவு வைத்திருந்தார்; அவர் மகன் தீத்தாரப்பன் காலமானபோது, அவரைக் கண்டு ஆறுதல் கூறுவதற்காகப் பண்டிதமணி அவர் இல்லத்திற்குச் சென்றார்.

சுத்தானந்த பாரதியார் அவர்களுடைய கருத்துக்களைப் பண்டிதமணி ஏற்றுக்கொண்டதில்லை; எனினும், புதுச்சேரிக்குச் சென்றபோது, அரவிந்த ஆசிரமத்திற்குப் போய் அவரைக் கண்டு அளவளாவினர். அடிகள் அப்போது மௌனமாக இருந்ததால், பண்டிதமணி அவர்கள் சொல்லிய செய்திகளுக்குத் தம் விடையை ஒரு தாளில் எழுதினர். அந்தத் தாளைப் பண்டிதமணி பேணி வைத்திருக்கிறார்கள். 'தங்களை அடிக்கடி நினைப்பதுண்டு; பார்த்தது பெருமகிழ்வளிக்கிறது. தமிழெனும் மணிக்குத்

தாங்கள் கதிர் வீசுகிறீர்கள்! தங்களால் தமிழ் மிகவும் பெருமை பெற்றிருக்கிறது. தாங்கள் கதிர், தமிழ் மணி. மணியுடன் கதிரும் சேர்ந்தது. கண்ணிருப்பவரெல்லாம் தங்கள் பெருமையைக் காணலாம்' என்பவை சுத்தானந்தர் எழுதிய கருத்துக்கள்.

தம் வீட்டில் நடைபெறும் நிகழ்ச்சிகளிலும் புலவர்கள் தொடர்பை எவ்வகையிலாவது பயன்படுத்த வேண்டுமென்பது பண்டிதமணியின் இயல்பு. விபவ ஆண்டு, தைத் திங்கள் முதல்நாளில் அவர்கள், மகா வித்துவான் ரா. இராகவ ஐயங்கார் அவர்கட்கு எழுதிய கடிதம் வருமாறு:

அன்புள்ள ஐயா,

அநந்த நமஸ்காரம்,

சுபம்.

தாங்கள் அன்புகூர்ந்தனுப்பிய 2—1—29 கடிதம் வரப்பெற்று மகிழ்ந்தேன். என் வேண்டுகோளைப் பொருட்படுத்தி, தை மீ 9உ இங்கு நடைபெறும் கிருகப் பிரவேச காலத்தில் இவ்விடம் விஜயஞ் செய்து என் சிற்றில்லத்தில் '**சீதை திருமணம்**' நடத்த உடன்பட்டுத் தெரிவித்தது கண்டு மிகவும் இன்புறுகின்றேன். அழைப்பில் தங்கள் உபந்யாஸம் நடைபெறுவது குறிப்பிட்டுள்ளேன். அழைப்பு இதனோடு வருகின்றது. குறிப்பிட்ட முதனாளே (தை மீ 8உ மாலையே) இவ்விடம் விஜயஞ் செய்து மிக்க ஆர்வத்தோடு தங்கள் இன்னுரை அமிர்தம் பருக விழைந்திருப்பவர்க்கு ஊட்ட வேண்டுகிறேன்.

தங்கள் இனிமை மிக்க நல்லுரை இராஜ கிருகங்களில் நடைபெறத்தக்கது; என் சிறிய கிருகத்தில்

நடைபெறுவது அன்புரிமையாலென்பதை உணர்ந்து மகிழ்கின்றேன்.

கூடுமானால் ஒரு பதில் கார்டு தருக.

அன்பன்,

**மு. கதிரேசன்.**

மேலைச் சிவபுரி சன்மார்க்க சபைக்கு வரும் பெரும் புலவர்களை இடையிடையே தம் இல்லத்துக்கு அழைத்துப் பண்டிதமணி தக்கவாறு பேணி அனுப்பி வைப்பதுண்டு.

மகா வித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்களுடைய குடும்பத்துக்குப் பொருளுதவி சேர்க்கும் முயற்சியில் பெரிதும் ஈடுபட்டவர் பண்டிதமணி அவர்களே. டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர் அவர்கட்கும் பல உதவிகளைப் பண்டிதமணி செய்திருக்கிறார். 21—6—1925இல் டாக்டர் சாமிநாத ஐயரவர்கள் இதற்கு நன்றி தெரிவித்து எழுதிய கடிதத்தில், " முன்பு பிள்ளை அவர்களுடைய குடும்பக் கவலையைத் தீர்த்தீர்கள்: இப்போது அவர்களுடைய மாணாக்கனது கவலையைத் தீர்த்தீர்கள் " என்று குறிப்பிட்டிருக்கிறார்கள்.

ஓரளவு தமிழிலக்கியங்களில் நல்ல பயிற்சியும், செய்யுள் இயற்றுந்திறனும் அமைந்த புலவர் சிலர் தமது வறுமையினைப் போக்கிக் கொள்ளுவதற்குப் பண்டிதமணி அவர்களுடைய தகுதியுரையினைச் சான்றாகப் பெற்று, செட்டிநாட்டுச் செல்வர்களின் ஆதரவைப் பெற்றார்கள்; அவர்களிடம் கடிதம் வாங்கிக்கொண்டு இலங்கை, மலேயா முதலிய இடங்களுக்குச் சென்று, பொருளீட்டி வறுமை நீங்கியவர்களும் உண்டு. எனவே, புலவர்கள் தமக்குத்

துணைபுரிந்த கதிரேசச் செட்டியாரைத் தமிழுக்குக் 'கதி' என்றுநன்றியுடன் குறிப்பிடுவர்.

பண்டிதமணி அவர்கள் வழங்கிய சான்றிதழின் துணை கொண்டு, செட்டிநாட்டரசர் ராஜா சர். அண்ணாமலைச் செட்டியார் அவர்கள், தமிழ் வள்ளல் கருமுத்து. தியாக ராசச் செட்டியார், வ. பழ. சா. குடும்பத்தார், பெ. ராம. ராம. சிதம்பரம் செட்டியார் ஆகியோரிடம் பரிசில் பெற்ற வர் நூற்றுக் கணக்கானவர். இவ்வாறே அவர் உதவியால் தமிழாசிரியப் பதவி பெற்றவர்கள் எண்ணிலடங்கார். சுருங்கச் சொல்லின், பண்டிதமணி ஒரு புலவர் மட்டு மல்லர்; புரவலருமாவார். ஆழ்ந்த கல்வியறிவுடையவர் களை மதிக்க அவர் ஒருபோதும் தயங்கியதில்லை.

# 12. அரசரும் புலவரும்

எல்லா நாடுகளிலும் புலவர்களுக்குப் பேரும் புகழும் பெருகுவதற்குக் காரணமாயிருந்தவர்கள் புரவலர்களே. அவர்கள் இல்லையென்றால் புலவர்களும், புலவர்களது பெருந்தொண்டும் நாட்டிற்குப் பயன்படமுடியாது. பண்டித மணியவர்களைப் போற்றிய புரவலர்கள் பலதிறப்படுவர். அவர்களுள் முதற் புரவலர் சன்மார்க்க சபைக்குரிய வ. பழ. சா. பழநியப்பச் செட்டியார் அவர்களே.

மகிபாலன்பட்டியில் ஒரு மூலையில் தென்மொழிக் கடலிலும் வடமொழிக் கடலிலும் ஆழ்ந்தாழ்ந்து பெறலரிய முத்துக்களைக் கண்டெடுத்துத் தாமே மகிழ்ந்து கொண்டிருந்த பண்டிதமணியவர்களை வெளிக்கிழுத்துத் தாம் பெறும் இன்பத்தைத் தமிழ்மக்கள் எல்லோரும் பெறவும், தமிழ்நாட்டில் அன்று பெரும் புலவராயிருந்த பெருமக்களின் தொடர்பு பண்டிதமணி அவர்களுக்கு ஏற்படவும் காரணமாயிருந்தது பழநியப்பச் செட்டியார் தொடங்கிய சன்மார்க்க சபையே.

1929ஆம் ஆண்டில் அரசர் அண்ணாமலைச் செட்டியார் அவர்கள் டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர் அவர்களைக் கண்டு தமது பல்கலைக் கழகத்தில் முதல் தமிழ்ப் பேராசிரியராக இருக்கும்படி வேண்டினர். அப்பொழுது ஐயரவர்கள், 'தங்கள் பல்கலைக் கழகத்தில் பேராசிரியராக இருக்கும் தகுதியுடையவர்கள் இருவர். அவர்களில் ஒருவர் பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார். மற்றொருவர் ரா. ராகவையங்கார் அவர்கள். இருவரும் இரு

மொழிப் பெரும் புலமை படைத்து விளங்கும் தமிழ்ப் பேராசிரியர்கள், என்று சொன்னர். அந்நாளிலிருந்து எப்படியாவது பண்டிதமணியவர்களைத் தம் அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழாசிரியராக அமர்த்திவிடவேண்டு மென்று ராஜா அவர்கள் எண்ணினுர்கள்.

**'எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியர்**
**திண்ணிய ராகப் பெறின்'**

என்ற குறளுக்கு இலக்கியமாகத் தம் விடாமுயற்சியால் பல துறைகளில் வெற்றி கண்டவர் அரசர் அண்ணுமலைச் செட்டியார் அவர்களே.

ஆகையால் அப்பெரியார், பண்டிதமணிக்கு வேண்டியவர்கள் யார் என்று ஆராய்ந்து, கானுடு காத்தான் சித. வீரப்ப செட்டியாரைக் கண்டுபிடித்தனர். பின்னர் ஒரு நாள் அச் செட்டியாருடன் அரசர் பண்டிதமணியின் வீட்டிற்குச்சென்று தம் கருத்தைத் தெரிவித்தனர். அப்பொழுது பண்டிதமணி, 'நான் தங்கள் பல்கலைக் கழகத்தில் ஆசிரியனுக இருக்கும் தகுதியுடையவனல்லன், வேறு பெரும் புலவரைப் பார்க்கலாம்' என்று மறுத்துவிட்டனர். அன்று பண்டிதமணி அவர்கள் அரசரிடம் நடந்துகொண்ட வகையும், பேசிய திறமும், ஆன்று அவிந்து அடங்கிய அடக்கமும் அரசர் அண்ணுமலைச் செட்டியாரின் உள்ளத்தைக் கொள்ளை கொண்டன. இவர்தாம் நம் பல்கலைக் கழகத்தில் ஆசிரியராக இருக்கும் தகுதியுடையவர் என்று அன்றே அரசர் எண்ணிவிட்டார். அன்றுதான் பண்டிதமணியாகிய புலவர் பெருமானுக்கும் அரசர் அண்ணுமலைச் செட்டியாருக்கும் உலகிலுள்ள எல்லாப் பொருள்களிலும் சிறந்து விளங்கும் நட்பு அரும்பத் தொடங்கிற்று. 'ஒருநாள் பழகினும் பெரியோர் கேண்மை இரு நிலம் பிளக்க வேர் வீழ்க்கும்மே' என்ற முதுமொழியின்படி அன்று வேருன்

றிய அந் நட்பு, பின்னர் பெருமரமாகிப் பூத்துக் காய்த்துக கனிந்து தமிழ் நாட்டிற்குப் பெரும்பயன் அளித்ததைப் பின்னர்க் காணலாம். அரசர் பின்னர் அடிக்கடி பண்டித மணியின் வீட்டிற்கு வரத் தலைப்பட்டனர்.

1931 ஆம் ஆண்டில் பண்டிதமணி அவர்கள் புதிதாகக் கட்டிய கட்டடத்திற்குப் 'புதுமனைப் புகுவிழா' நடைபெற்றது. அந்நிகழ்ச்சிக்கு அரசர் அண்ணாமலைச் செட்டியாரும் வந்திருந்தார். ஆனால் அரசர் அவர்கள் பெருஞ் செல்வர்கள் வீட்டிற்கும் மிக நெருங்கிய உறவினர்கள் வீட்டிற்கும் வருவார்களேயன்றி, மற்றையோர் வீடுகளுக்கு வருதலும், வந்து பல மணி நேரம் மிக நெருங்கிப் பேசிக் கொண்டு இருத்தலும் அருமை. அத்தகைய அரசர் அவர்கள் பண்டிதமணியின் வீட்டிற்கு அடிக்கடி வருதலையும், வந்து பல மணிநேரம் மிக நெருங்கிப் பேசிக்கொண்டிருத்தலையும் கண்ட ஏனைய செட்டியார்கள் பண்டிதமணியிடம் பெருமதிப்புக் கொண்டு அவரது தொடர்பை நாடினர்.

மேனாட்டுப் பெருங் கழகங்கள் பெரும்புலவர்களைத் தேடிப்பிடித்து, அவர்களுக்குப் பெருஞ் சிறப்பினைச் செய்து அவர்கள் புலமை நாட்டுக்குப் பயன்படும்படி செய்கின்றன. எடுத்துக்காட்டாக ஒன்றினைப் படித்து மகிழ்வோம். ரஷ்யாவின் ஒரு பகுதியான உஸ்பெகிஸ்தானில் உழவுத் தொழிலையே மேற்கொண்டிருந்த ஒருவன் ரஷ்ய மொழியைத் தானாகவே கற்று இசைக்கவியாக விளங்கினான். டாஷ்கண்டு சர்வகலாசாலை அவன் கவிதைகளைப் போற்றி, அப்புலவனுக்கு உயர்ந்த பட்டம் அளித்து ஸ்டாலின் வெகுமதியும் தந்தது. அவ்வண்ணமே அரசர் அண்ணாமலைச் செட்டியார் அவர்களும் பண்டிதமணியவர்களைத் தேடிப்பிடித்து, அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் அமர்த்தி மகாமகோபாத்தியாய பட்டத்தை அவர் பெறு

தற்குரிய ஏற்பாடுகளைச் செய்து அவரது பெரும்புலமை தமிழ்நாட்டிற்குப் பயன்படும்படி செய்தனர்.

ராஜா அவர்களுடைய ஜாதகத்திற்கும் பண்டிதமணியி னுடைய ஜாதகத்திற்கும் பல ஒற்றுமைகள் இருந்தன. இதைப் பற்றிப் பண்டிதமணி அடிக்கடி குறிப்பிடுவதுண்டு. பொருள் மட்டும் ராஜா அவர்கள் ஜாதகத்தில் இருப்பது போலத் தம்முடைய ஜாதகத்தில் சிறப்பான நிலையில் இல்லையென்று சொல்லுவார்கள்.

பண்டிதமணியின் வியத்தகு புலமை வளத்தைப் பல தடவைகளில் அண்ணாமலை அரசர் பாராட்டியுள்ளார். ஏனைய தமிழ்ப் புலவர்களைச் சந்திக்கும் போதெல்லாம் பண்டிதமணி இளமையில் யாரிடம் பாடம் கேட்டாரென்று அடிக்கடி அரசர் வினவுவார். அதற்குத் தக்க விடை கூற இயலாது புலவர்களும், பண்டிதமணிக்கு இயற்கையில் அமைந்த கவிச் சுவையும், கல்வி ஆர்வமும், தன் முயற்சியுமே அவருடைய நிகரற்ற புகழுக்குக் காரணம் என்று கூறுவர். இவற்றைக் கேட்டு அரசர் முன்னிலும் மகிழ்ந்து முறுவலிப்பர்.

பண்டிதமணி அவர்களுடைய படத்தை மேலைச் சிவ புரி சன்மார்க்க சபையில் ராஜா சர் அண்ணாமலைச் செட்டி யார் அவர்கள் திறந்து வைத்தார்கள் பண்டிதமணி அவர் களுடைய 60 ஆம் ஆண்டு நிறைவு விழாவில் ராஜா அவர் களே தலைமை தாங்கினார்கள். அதைப்பற்றிக் குறிப்பிடும் வகையில் பண்டிதமணி அவர்கள் சுவைபடக் கூறியது இங்கே குறிப்பிடத்தக்கது.

'இரண்டு வாரங்கள் முன்னர் நிகழ்ந்த கனம் ராஜா அவர்களின் மணிவிழாவில் அவர்கள் அழகிய மாளிகை யில் உலகத்துப் பெருமக்களெல்லோரும் அடங்கியிருந்

தனர். அவ்வெல்லோரையும் தம் பெருமையுள் அடக்கித் திகழும் அரசர் பெருந்தகையார் இன்று எனது இச் சிறு குடிலில் அடங்குவார்களாயின், இதன் பெருமையைப் பற்றிச் சொல்லவேண்டுமோ? என்பாலுள்ள பேரன்பால் இத்துணை நேரம் பன்மீன் நடுவண் பான்மதிபோல் இங்கே வீற்றிருந்து என்னைப் பாராட்டி மகிழ்வித்த ராஜா அவர்களுக்கு யான் என்றுங் கடமைப்பட்டவன்.'

எவ்வளவு பெரிய ஆற்றல் உடையவராக இருந்தாலும் அந்த ஆற்றலை அவர் வெளிப்படுத்துவதற்கான ஒரு வாய்ப்பு ஏற்படாவிட்டால் அந்த ஆற்றல் அனைத்தும் வீணாகும். அதனால் நாடும் மக்களும் பயன்பெற இயலாது. பண்டிதமணி அவர்களுடைய புலமையும் திறமையும் தமிழ் நாட்டிலுள்ள இளைஞர்களுக்குப் பயன்படுவதற்கான ஒரு வாய்ப்பைத் தந்த பெருமை ராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் அவர்களுக்கே உண்டு. இதை எண்ணும்போது, கிரேஸ் எலிஜி என்னும் ஆங்கிலக் கவிதை நினைவிற்கு வருகிறது. இப் பாடலைக் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்கள் பின் வருமாறு இனிய தமிழில் தந்திருக்கிறார்கள்:

**"தக்க திறனிருந்தும்—நல்ல**
**தருணம் வாய்த்திலதேல்**
**மிக்க புகழெய்தி—மக்கள்**
**மேன்மை யடையாரம்மா.**
**சூழ்நிலை வாய்த்திலதேல்—சூரனும்**
**சோம்பி மடிவானம்மா**
**பாழ்நிலத் திட்ட விதை—வளர்ந்து**
**பயன் மரமாமோ."**

ராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் அவர்களைத் தவிர வேறு சிலரும் பண்டிதமணி அவர்களை ஆதரித்துச்

சிறப்பித்துள்ளனர். சன்மார்க்க சபையை நிறுவிய குடும்பத்தாரைப் பற்றி முன்னரே குறிப்பிட்டிருக்கிறோம். பண்டிதமணி அவர்களுடைய நூல்களை வெளியிட்டு உதவியவர்கள் மிகப் பலர். அவர்கள் அனைவருடைய பெயரையும் இங்கே குறிப்பிடுவது இயலாது. இருவரைப் பற்றி மட்டும் கூறலாம். ஒருவர் தமிழ் வள்ளலாக விளங்கிய நற்சாந்துப்பட்டி பெ. ராம. ராம, சிதம்பரம் செட்டியார் அவர்கள். மற்றொருவர் சிறந்த தமிழ்த் தொண்டுகளை இன்றளவும் செய்துவருபவர்களும், தமிழ் அன்பர்கள், தமிழ்ப் புலவர்களுடைய உள்ளங்களிலே நிலையான நல்லிடத்தைப் பெற்றிருப்பவர்களுமாகிய கருமுத்து. தியாகராசச் செட்டியார் அவர்கள். தியாகராசச் செட்டியார் அவர்கள் இளமைக் காலம் முதல் பண்டிதமணி அவர்களுடன் நெருங்கிப் பழகியவர். அவர்பால் எல்லையற்ற அன்பும் மதிப்பும் உடையவர். அவர் பண்டிதமணி அவர்களுக்குச் செய்த உதவிகள் பல. பண்டிதமணியின் அறிவுரைகளைக் கேட்டுத்தான் தாம் மேற்கொள்ளும் தமிழ்த் தொடர்புடைய செயல்களை நிறைவேற்றுவது அவருடைய இயல்பு. தியாகராசச் செட்டியார் அவர்கள் பண்டிதமணியின் இறுதிநாள் வரை அவருடைய இனிய நண்பராக இருந்தார். பண்டிதமணியை அடிக்கடி மதுரைக்கு அழைத்து உரையாடுவார்; அறிவுரைகள் வேண்டுவார்; பாடம் கேட்பார்; இடையிடையே மகிபாலன்பட்டிக்கும் வந்து அவரைச் சந்தித்து மகிழ்வார்.

# 13. அண்ணுமலைப் பல்கலைக் கழகப் பணி

பல்கலைக்கழகம் முதலிய நிலையங்களில் முக்கியமான நியமனங்கள் இந்நாளில் செய்யப்படுகின்ற முறை நாடறிந்ததே. இன்ன வேலைக்கு ஆட்கள் வேண்டும், அவர்கள் இன்ன தகுதியுடைவர்களாகஇருக்கவேண்டும், இன்ன வயதினராக இருத்தல் வேண்டும் என்று வரையறைசெய்து, செய்தித் தாள்களில் விளம்பரம் செய்யப்படுகிறது. அதன் பிறகு கிடைக்கும் மனுக்களிலிருந்து ஒருவர் தெரிந்தெடுக்கப்படுகிருர். ராஜா சர் அண்ணுமலைச் செட்டியார் இவ்வாறு எந்த நியமனமும் செய்யவில்லை. பேரறிஞர்களாக இருந்தவர்களை யெல்லாம் வரவழைத்து, அவர்களைத் தம் பல்கலைக் கழகத்தில் பணியாற்றச் செய்து, அவர்களையும் உயர்த்தி மகிழ்ந்தது அவர்களுடைய திருவுள்ளம்.

விபுலானந்த அடிகள் ஈழ நாட்டவராயிருந்தும், ஈழ நாட்டவருக்கு முன்னரே அடிகளாரின் பெருமையை அரசர் அறிந்தார். அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்ப் பேராசிரியராக இருந்த பின்னரே விபுலானந்த அடிகளார் இலங்கைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்ப் பேராசியராக நியமிக்கப் பெற்ருர். அடிகளார் அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தில் பணியாற்றுவதற்காக இராமகிருஷ்ண மடத்தின் தலைமை அலுவலகத்திலுள்ள அடிகளார் சிலரை அரசர் நேரில் சந்தித்து, அவர்களின் இசைவைப் பெற்ருர்.

இன்னும் அதற்கு முன்னர் ஆசிரியப் பணி ஏற்காமல் இருந்த சோமசுந்தர பாரதியார் அவர்களை அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்ப் பேராசிரியராக இருக்கும்படி வற்புறுத்தி, தம் முயற்சியில் வெற்றி கண்டார் அரசர்.

இன்று சொல்லின் செல்வராகவும், பேராசிரியராகவும், தலைசிறந்த தமிழ் அறிஞராகவும் விளங்கும் ரா. பி. சேதுப்பிள்ளை அவர்கள் 25 ஆண்டுகளுக்கு முன்னர் வழக்கறிஞராகவும் நெல்லை நகராண்மைக் கழகத் துணைத் தலைவராகவும் இருந்தார்கள். அவருடைய தமிழ் ஆர்வத்தையும் அறிவையும் அரசர் அறியும் வாய்ப்பு, ஜஸ்டிஸ் கட்சியில் அரசரின் நண்பராக இருந்த சிலர் வாயிலாக ஏற்பட்டது. சேதுப்பிள்ளை அவர்களின் நெருங்கிய உறவினர்களிடம் அரசர் தமது செல்வாக்கைப் பயன்படுத்தி, அவர் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் ஆசிரியப் பணியை ஏற்றுக்கொள்ளச் செய்தார்.

இவ்வாறே பண்டிதமணி அவர்களின் புலமையும் பல்கலைக் கழகத்திற்குப் பயன்படவேண்டுமென்று அண்ணாமலை மன்னர் எண்ணினர். எண்ணிய எண்ணியாங்கு நிறைவேற்றும் அரசர் பெருமான், தாம் கருதியவாறே பண்டிதமணி அவர்களை அங்குப் பணியாற்றச் செய்தார். பல்கலைக் கழகத்திற்கு வந்தபின் பண்டிதமணியின் புகழ் உச்ச நிலையை அடைந்தது.

பண்டிதமணி 1934-ல் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் ஆசிரியரானர். அதற்கு முன்னரே அவர்க்கும் இப்பல்கலைக் கழகத்திற்கும் தொடர்பு இருந்தது. தமிழ்ப் பகுதிக்கு அறிவுரை கூறும் சில குழுக்களிலே அவர் உறுப்பினராக இருந்தார். அக்கூட்டங்களுக்கு வரும்போதெல்லாம் பண்டிதமணி அவர்கள் பல்கலைக் கழகத்துணை

வேந்தர் திவான்பகதூர் சர் எஸ். இ. அரங்கநாதன் அவர்களைக் கண்டு தம் கருத்துக்களைத் தெரிவித்து வந்தார்கள். இவை தமிழ் நாட்டுக்கே பெரும்பயன் விளைத்தன என்று 1932-ல் விபுலானந்த அடிகள் எழுதியிருக்கிறுர்கள், தமிழ்ப் பேரகராதி (**Tamil·Lexicon**) பதிப்புக்கான அறிஞர் குழுவில் உறுப்பினராக இருந்து இவர் சென்னைப் பல்கலைக் கழகத்துடனும் தொடர்பு கொண்டிருந்தார்.

1934-ம் ஆண்டில் பண்டிதமணி அண்ணுமலைப் பல்கலைக் கழகத்திற்கு வந்து சேர்ந்தார்கள். தமிழில் ஆராய்ச்சிப் பகுதி தொடங்குவதாக ஏற்பாடு இருந்தது. அப்பகுதியிலேயே பண்டிதமணி அவர்கள் பணியாற்றுவதாகத் திட்டம் செய்யப்பட்டிருந்தது.

பண்டிதமணி அவர்கள் பிப்ரவரி மாதத்தில் பதவி ஏற்றுக் கொண்டார்கள். ஆராய்ச்சிப் பகுதி ஜூன்மாதம் தான் ஏற்படுவதாக இருந்தது. எனவே பிப்ரவரி–மார்ச்சு ஆகிய இரண்டு மாதங்களுக்கு மட்டும்—பல்கலைக்கழகம் கோடை விடுமுறைக்கு மூடும் வரையில்—பண்டிதமணி மாணவர்களுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்கலாம் என்று தமிழ்த் துறைத் தலைவர் சோமசுந்தர பாரதியார் வேலைத் திட்டம் வகுத்துக் கொடுத்தார். பாடப் பகுதியைப் பண்டிதமணி சிறப்பாக நடத்தியதால் பண்டிதமணி தொடர்ந்து அந்த வேலையையே பார்த்து வந்தார். ஆராய்ச்சிப் பகுதியின் தலைவராக மகாவித்துவான் இராகவ ஐயங்கார் அவர்கள் நியமிக்கப்பெற்றுர்கள்.

பண்டிதமணி ஆசிரியராகச் சேர்ந்தபோது அவருக்கு வயது 53. சாதாரணமாக ஆசிரியர்கள் பதவியைவிட்டு ஓய்வு பெறுகின்ற கட்டம். சில ஆசிரியர்கள் கண்ணுடியை அணிந்து கொண்டு தம் வேலை அனைத்தையும் செய்யும்

வயது. ஒரு சிலர், எழுத்துப் பார்க்க ஒரு கண்ணுடியும் ஆளைப் பார்க்க ஒரு கண்ணுடியும் பயன்படுத்தும் பருவம், ஆசிரியர் எழுத்துப் பார்க்கும் கண்ணுடியைப் போட்டுக் கொண்டிருக்கும்போது 50 பேர் உள்ள வகுப்பில் ஒரு மாணவர் மட்டுமே இருப்பதும் அந்நாளில் வழக்கமாக இருந்தது. ஆனால் பண்டிதமணி அவர்களோ இத்தகைய குறைபாடுகளின்றிச் சிறப்பாகப் பாடம் நடத்தினர்கள். பாடம் சொல்லிக்கொடுக்கின்ற வன்மை அவர்களிடம் சிறப்பாக அமைந்து இருந்தது. ஒரு பாடலை விளக்குவதற்கு முன்னர் அந்தப் பாடலில் அமைந்த நுண்ணிய பொருள்களை, சொற் சாதுரியத்துடனும், நகைச் சுவையுடனும் முதலில் தெரிவித்து விடுவார்கள். நயமான பகுதிகளை விட்டு விட்டு, ஏனைய பகுதிகளைத்தான் முதலில் சொல்லுவார்கள். கடைசியாகத்தான் பாட்டைப் படிப்பார்கள். பாடல்களைத் படித்துத் தாம் தெளி பொருள் கூறுவதற்கு முன்னதாக, இசையோடு பாடக்கூடிய மாணவர்களை அந்தப் பாடலை வகுப்பில் படிக்கச் சொல்லுவர். எனவே அவர் நடத்தும் பாடம் மாணவர் மனத்தில் பசுமரத்தாணிபோல் பதியும்.

பண்டிதமணியின் மாணவராக இருந்தவர்கள் நூற்றுக் கணக்கானவர். அவர்களில் குறிப்பிடத்தக்கவர் அண்ணுமலைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியர் டாக்டர் திரு. அ. சிதம்பரநாதச் செட்டியார், மைசூர்ப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியர் திரு. எஸ். உருத்திரபதி, ஹைதராபாத் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியர் திரு. மீனுட்சி சுந்தரனர், சென்னைக் கிருத்துவக் கல்லூரியில் தமிழ்ப் பகுதித் தலைவராக இருககும் திரு பூ. ஆலாலசுந்தரம் செட்டியார், சென்னைச் சைதாப்பேட்டை ஆசிரியர் பயிற்சி கல்லூரித் தமிழ்ப் பகுதித் தலைவர் திரு. எஸ். ஆறுமுக முதலியார், திருச்சி செயின்ட் ஜோசப் கல்லூரித் தமிழ்ப்

பேராசிரியர் ரம்போலா மஸ்கரேனஸ், சென்னை மாநிலக் கல்லூரித் துணைத் தமிழ்ப் பேராசிரியர் திரு. முருகன், காரைக்குடி அழகப்பா கல்லூரித் தமிழ்ப் பேராசிரியராக இருந்து காலஞ் சென்ற திரு. ஆ. முத்துசிவன், அக்கல்லூரியில் இப்போது பேராசிரியராக இருந்துவரும் திரு. வ. சுப. மாணிக்கம், சென்னை மேரி அரசி பெண்கள் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் திருவாட்டி ஆர். இராசாமணி அம்மையார், கோவை அரசியலார் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் திருவாட்டி ஆர். இராசரத்தினம் அம்மையார், கும்பகோணம் அரசியலார் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் திரு. கோவிந்தராஜன், கொழும்பு ரேயல் கல்லூரித் தமிழ்ப் பேராசான் கி. இலக்குமண ஐயர் ஆகியோர். தாம் கல்வி பயின்ற காலத்தைப் பற்றித் திரு. இலக்குமண ஐயர் பண்டிதமணி அவர்களைப் பற்றிய ஒரு கட்டுரையில் மிக விளக்கமாகக் கூறியிருக்கிருர். தமிழ் அறிஞர் வி. கே. பி. நாதன் அவர்களை ஆசிரியராகக் கொண்டு கொழும்பிலிருந்து வெளிவரும் 'தினகரன்' என்னும் நாள் இதழிலிருந்து இப்பகுதி எடுக்கப்பெற்றிருக்கிறது :

> **அப் பல்கலைக்கழகம் மகோன்னத நிலையிலிருந்த காலம் அது. அதுவே பேராசிரியர் கா. சுப்பிரமணிய பிள்ளை அவர்களும் பேராசிரியர் பண்டிதமணி அவர்களும் அக் கலைக்கழகத் தமிழ்ப் பகுதியின் இரு கண்களெனத் திகழ்ந்த காலம்.** அவ்விருவரும் தமிழிலக்கிய வானிலே ஞாயிறும் திங்களுமென இலங்கினர். **அன்று** தம்மைப் பீடித்த பிணியின் விளைவான ஒரு வெம்மையை—எளிதில் சினமுறும் உளநிலையை—காட்டினர் பேராசிரியர் சுப்பிரமணிய பிள்ளை அவர்கள். அத்தகைய வெம்மை எதுவு

மின்றித் தண்ணளிக்கோர் உறைவிடமாய் விளங்கினர் பண்டிதமணி.

பண்டிதமணி அவர்களிடம் இயல்பாய் அமைந்த இனிய சுபாவமும், எந்த நூலையும் மாணவர் மனம் இலயிக்குமாறு பல்வகைச் சுவையும் சொட்டச் சொட்டப் பாடஞ்சொல்லுந் திறமையும் மாணவர் அனைவரையும் காந்தமெனா ஈர்த்தன. தமிழ் நாடெங்கணும் பரவிய பண்டிதமணி அவர்களின் புகழைக் கேள்வியுற்ற மாணவருள் அன்னோரிடங் கல்விகற்பதே பெறலரும் பேறு எனக்கருதி, அந்த நோக்கமொன்றையே கொண்டு அண்ணாமலை நகர் சென்றோர் பலர். பண்டிதமணி அவர்கள் பல்கலைக்கழகம், பாடங்களுக்கெனக் குறித்த நேரங்களில் மட்டுமன்றி ஏனைய நேரங்களிலும் ஆர்வங் காட்டும் மாணவர்களை அன்போடு தம்மில்லத்துக்கு அழைத்து, அவர்கள் விரும்பும் நூல்களை விரிவாக விளக்குவர். சித்தியார், சிவப்பிரகாசம் போன்ற சமய சாத்திரங்களாயினுஞ்சரி, திருக்குறள் போன்ற நீதி நூலாயினுஞ்சரி, புறநானூறு பதிற்றுப்பத்துப் போன்ற புறப்பொருள் நூல்களாயினுஞ் சரி, அகநானூறு போன்ற அகப்பொருள் இலக்கியங்களாயினுஞ்சரி, சுவை பெருக உரைகூறி நயங் காட்டலில் அவருக்கு நிகர் அவரென்றே கூறல் வேண்டும். அந்நூல்களை அவர் எவ்வளவு நேரம் நடத்தினுஞ் சிறிதும் தெவிட்டாது. சிறு சிறு பதங்களை எடுத்து அழகழகாக விரிப்பர். கேட்கக்கேட்க ஆனந்தம் மிகும். அவரது சொற்பொழிவுகளும் அத்தகையனவே. அவருக்கென்றே தனிப்பட அமைந்த ஒரு கனிவுங் குழைவும் அவர் பேச்சுக்கு எங்குமில்லாத கவர்ச்சியை அளிக்கும்.'

அரிய நூல்களையும் எளிய முறையில் அழுத்தம் திருத்தமாக மாணவர் மனத்திற் பதியும்வண்ணம் கற்பிக்கும் ஆற்றல் பண்டிதமணியிடம் அமைந்திருந்தது. இவர் பாற் கல்வி பயிலும் மாணவர் இவரது அறிவாற்றல்களில் ஈடுபட்டு, இவர் வயப்படுவர். 'நவிறொறு நூல்நயம் போலும் பயிறொறும் பண்புடையாளர் தொடர்பு' என்று திருவள்ளுவர் கூறிய நூல் நயத்தின் இயல்புக்கும், பண்புடையாளர் பண்புக்கும் இவரது ஆழ்ந்தகன்ற அறிவும் பண்பும் எடுத்துக்காட்டாக இருந்தன. மாணவர் குழாம் பண்டிதமணியை எப்போதும் சூழ்ந்த வண்ணமாக இருக்கும்.

பேரிலக்கியங்களுக்கு மட்டுமன்றி, உரை நடைப் பகுதி, துணைப்பாடங்கள் ஆகியவற்றிற்கும உரை நூல்கள் (நோட்ஸ்) வெளிவரும் காலம் இது. மாணவர் இந்த உரை நூலின் ஒரு பிரதி வாங்குகிறார்கள் என்றால் ஆசிரியர் சிலர் அதில் இரண்டு பிரதிகள் வாங்கி முன்பக்கம் பின்பக்கமாகத் தனித்தனி தமது நோட்டுப் புத்தகத்தில் ஒட்டிக்கொண்டு, அவற்றை மாணவர்க்குத் தெரியாதபடி மறைத்து வைத்துக்கொண்டு, வகுப்பில் பாடம் நடத்துவது வழக்கம். இன்னும் சில ஆசிரியர்கள் ஆண்டுத் தொடக்கத்தில் தலைமை ஆசிரியரைச் சந்தித்துத் தமக்கு மிக எளிமையான பாடங்களையே கொடுக்கும்படி வேண்டுவர். இவற்றிற்கு மாறாகப் பண்டிதமணி பெரும்பாலும் கடுமையான பாடங்களையே எடுத்து நடத்துவர். அகநானூறு போன்ற உரையில்லாத நூல்களை அவர் பாடங் கூறுவார். 'உரையில்லாப் பகுதியாகிய வஞ்சிக் காண்டத்திற்குத் தம்முடைய கூரிய மதியினால் அவர்கள் இழைத்திழைத்துப் பொருள் கூறின திறத்தை யாங்கள் வியந்தேம். ஒப்புமைப் பகுதிகள் காட்டல், மேற்கோள் காட்டல், இலக்கண நயம் எடுத்துரைத்தல், நூல்

நயம் நவிலுதல் ஆகிய வகையில் தம்மை ஒப்பாரும் மிக்காரும் இல்லை எனச் சொல்லுமாறு அவர்களுடைய வகுப்புக்கள் நடைபெறும்' என்று அவருடைய மாணவராகிய டாக்டர் அ. சிதம்பரநாதச் செட்டியார் அவர்கள் எழுதியிருக்கிறார்கள்.

ஆசிரியர் என்ற முறையில் நம் பண்டிதமணியவர்கள் பெற்றிருந்த தனிச் சிறப்பைப்பற்றி மணி மலரில் குறிப்பிடப்பட்டிருக்கும் பகுதியை இங்கே தருவோம்:

> 'எத்தகைய நிலையிலுள்ள மாணவர்களுக்கும் அவரவர்கள் தகுதிக்கேற்ப வுளங்கொள்ளுமாறு எத்தகைய நூல்களையும் பாடஞ் சொல்லும் பேராற்றல் இவர்களது தனியுரிமையென்று கூறினும் மிகையாகாது. சிங்கைச் சிலேடை வெண்பாவாயினும் ஆகுக; சிலப்பதிகாரமாயினும் ஆகுக; ஆறுமுக நாவலர் இலக்கண வினு விடையாயினும் ஆகுக; தொல்காப்பியச் சேனுவரையமாயினும் ஆகுக; பாடங் கேட்போர் தமிழில் எழுத்துவரை உணர்ந்த மாணவராயினும் ஆகுக; பல்கலைக் கழகத்து அறிஞர் (டாக்டர்) பட்டம் பெற்ற புலவராயினும் ஆகுக; அவரவர்கள் மகிழ்ந்து பயன்கொள்ளுமாறு பாடஞ் சொல்வார்கள் எனின், இவர்கள் ஆசிரியத் திறனை யாவர்தான் வியக்காதிருக்கக்கூடும்! **சொற்பொழி வாற்று முறையிலோ** இவர்களது முறை ஒரு தனிமுறை யென்றே கூறும் பான்மையுடையது. ஒரு நூலை யெடுத்து அதன் நயங்களைக் கூறுவதிலும், ஒரு பொருளை யெடுத்து அதன் விரிவுகளைத் திரட்டிச் சுருங்கக்கூறுவதிலும், ஒரு வரலாற்றை யெடுத்து அதன் பல சிறப்புக்களும் தோன்றத் தக்கவாறு இணைத்துக் கூறுவதிலும் சமய நூற்கருத்துக்களையும்

உண்மை (தத்துவ) நுண் பொருள்களையும் எடுத்து விளக்குவதிலும் இவர்களைப் போன்று இனிமையாக வும், எளிமையாகவும், இடை யிடையே நகைச் சுவை தோன்றவும் பேசுபவர்கள் இல்லை யென்றே கூறலாம். இவர்களுடைய ஆழ்ந்த கருத்துக்கள் அமைந்த சொற்பொழிவுகளினுல் திருவாசகம்,பெரிய புராணம், சிலப்பதிகாரம் முதலிய பெரு நூல்களின் நுண்ணிய கருத்துக்களையும், பாட்டின் வளங்களையும் பலரும் அறிந்து பயனடைந்துள்ளார்கள். இருபத்தைந் தாண்டுகட்குமுன் தஞ்சையில் சேக்கிழார் கவி மாண்பு என்னும் பொருள்பற்றி இவர்கள் பேசிய பொழுது அங்குக் கூடியிருந்த புலவர் பலரும் ஒவ் வொரு நயத்திற்கும் பிறகு அடுத்தென்ன கூறுவார் களோ, என்ன கூறுவார்களோ என்று ஆவலுடன் கேட்டு மகிழ்ந்தார்கள். தமிழ் நூல்களின் பொருளை அம்முறையில் எடுத்துக் கூறத் தொடங்கியவர்கள் இவர்களே யாவார்கள். அது தனிமுறை யென்றே கூறலாம். சைவசமயச் சார்பிலார்களுங்கூட அந் நூல்களில் ஈடுபடுவார்களென்பது திண்ணம். சிலப் பதிகாரத்தையும் சாகுந்தல நாடகத்தையும் இவர்கள் ஒப்பிட்டுப் பாராட்டும்போது வடமொழித் தென் மொழிப் புலவர்கள் எல்லாம் இவர்களது நூலாராய்ச் சியையும் நுண்ணறிவையும் வியந்து மிகவும் பாராட்டு வார்கள்.'

அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தில் பண்டிதமணி அவர்கள் ஆசிரியராகச் சேர்ந்த காலத்தில்தான்,பெண்கள் பலரும் தமிழ் வகுப்பில் சேர்ந்தனர். அவ்வாறு சேர்ந்தவர் களுள் முன்னர்க் குறிப்பிடப் பெற்ற இராசாமணி அம்மை யார், இராசரத்தினம் அம்மையார் ஆகிய இருவரும் மிக ஒற்றுமையாக இணைபிரியாது வருவதையும் போவதையும்,

உண்பதையும் உறங்குவதையும் பண்டிதமணி கண்ணாரக் கண்டும் கேள்வியுற்றும் அறிந்தார்; அவர்களைப்பற்றிக் குறிப்பிடும் போதெல்லாம் 'இருதலைப் புள்' என வகுப்பி லும் கூறுவர்.

பண்டிதமணி அவர்கள் தம் வகுப்பினிடையே மாணவி களையும் அடிக்கடி பல கேள்விகள் கேட்பார். அவர்கள் இயல்பாகத் தமக்குரிய நாணத்தாலும், பண்டிதமணியின் பாலுள்ள அச்சத்தாலும் தெரிந்த விடைகளையும் சொல் லாமல் எழுந்து மௌனமாக நிற்பர். அவர்கள் நிலையைக் காணும் பண்டிதமணி அவர்கள் புன்முறுவல் பூத்து, **'பாவையர்கள் பாவைபோல் நிற்கின்றனர்'** என்பர். இத் தகைய நகைச்சுவைகளிலீடுபடும் மாணவ மாணவிகள் இவர் வகுப்பில் பெரு மகிழ்ச்சியுடன் விளங்குவர்.

பண்டிதமணி அவர்கள் சில சமயங்களில் பாடம் நடத்தும்போது, மாணவர்களின் முன்னேற்றத்தைநினைந்து அறிவுரை சிலவற்றைக் கூறுவார்:

> **'கற்பனவற்றையெல்லாம் கசடறக் கற்றாலும், உங்க ளுடைய புகழ் பலஇடங்களிலும் பரவவேண்டுமானால், நீங்கள் பல இடங்களுக்குச் சென்று, சொற்பொழி வாற்றவேண்டும். புகழைப் பெறுதல் மாத்திரமன்றி உங்களுடைய அறிவும் அச்சொற்பொழிவுகளால் பெருகும். சொற்பொழிவாற்றுவதற்குப் பல நாட்க ளுக்கு முன்னரே பேச எடுத்துக்கொண்டபொருள் களைப்பற்றிப் பல நூல்களை மிக ஆழ்ந்து படித்துக் குறிப்புக்கள் எழுதிக்கொள்ள வேண்டும். இப்படி மிக உழைத்துப் பலஇனிய செய்திகளை மக்களிடைப் பேசினால்தான் பேரும் புகழும் பெருகும்; இதுவே நான் மேற்கொண்டு வெற்றி அடைந்தமுறை.'**

பண்டிதமணி அவர்கள் திருக்குறள் பாடம் நடத்தும் பொழுது, இன்ன இன்ன குறள்கள் மிக ஆழ்ந்து சிந்திக்

கற்பாலன என்றும், இன்ன இன்ன குறள்கள் மேடைச் சொற்பொழிவுகளில் மக்களுக்குப் பெரு மகிழ்ச்சி அளிக் கக்கூடியன என்றும், இன்ன இன்ன குறள்களுக்குப் பரி மேலழகரின் உரை சிறந்து விளங்குகிறது என்றும் கூறுவார்.

பண்டிதமணி அவர்கள் அண்ணுமலை நகரிலிருந்த போது, அவருடன் பணியாற்றி வந்த புலவர்கள் பலரும் ஏனைய ஆசிரியர்கள் சிலரும் பண்டிதமணி அவர்களின் வீட்டுக்கு நாள்தோறும் வந்து, தம் நேரத்தைக் கழிப்பர். அப்போது சில புலவர்கள் பண்டிதமணி சொல்லும் குறிப் புக்களை எழுதிக்கொண்டிருப்பர்; சிலர் அவரது ஏவல்களை இன்முகத்துடன் செய்வர்; சிலர் தூது செய்திகளைப் பேரா சிரியர், பல்கலைக்கழகப் பதிவாளர் முதலியோர்க்குக் கொண்டுசெல்வர். இக்காட்சிகளுக்கிடையே பண்டிதமணி யைக் காண வருவார்—செல்வர்கள், புலவர்கள், நூல் வெளியீட்டாளர், மாணவ மாணவிகள், உறவினர், இர வலர், உற்ருர் என—பலவகைப்படுவர். இவர்கள் யாவ ரிடத்தும் அவரவர் தகுதிக்கேற்றபடி பண்டிதமணி அவர்கள் அன்புடன் உரையாடும் விதம் மிகச்சுவையாக இருக்கும். சிலேடையாகப் பேசிச் சிலரைச் சிரிக்கச் செய்வர். இவ் வாறு பண்டிதமணி அவர்கள் அண்ணுமலை நகரில் பெரு மதிப்புடன் வீற்றிருந்த காட்சியைக் கண்கூடாகக் கண்ட தமிழறிஞர் 'குமரன்' ஆசிரியர் காரைக்குடி சொ. முரு கப்பா அவர்கள பின்வருமாறு எழுதியுள்ளார்.

'பண்டிதமணியவர்கள் அண்ணுமலை சர்வகலா சாலையில் அரியணையில் வீற்றிருக்கும் அரசர் போன் றிருக்கிருர்கள். எத்தனையோ வித்வான்கள், எத்த னையோ மாணவர்கள், மாணவிகள், நேசர்கள்; இத் தனைபேரும் பண்டிதமணியின் வாயை எதிர்பார்த்து,

அச்சமும் அன்புங் கொண்டு பணி செய்யக் கூட மனங் கனிந்திருக்கிறார்க ளென்று கூறலாம். எத்தனை பொர்சு? எத்தனை அதிகாரம்? எத்தனை வேண்டு கோள்? புத்தகமெழுதலாம்; சொற்பொழிவாற்றலாம்; தலைமை தாங்கலாம்; ஆதரிக்கலாம்; கண்டிக்கலாம்; ஒருபுத்தகத்தில் ஆயிரம் இடத்தில், புகழ்ந்தெழுதப் படலாம்......"

பண்டிதமணி அவர்கள் தமிழ் விரிவுரையாளராகவும் தமிழ்ப் பேராசிரியராகவும், தமிழ் ஆராய்ச்சித்துறைத் தலைவ ராகவும் 10 ஆண்டுகள் அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தில் பணியாற்றினர். பேராசிரியராக இருந்த ஈராண்டு களில் தமிழ்த்துறைத் தலைவர் என்ற அளவில் பல அலுவல் களை ஆங்கில மொழியிலேயே செய்ய வேண்டியதாக இருந்தது. அம்மொழி அறிவு பெருதவரும், திறம்பட ஆட்சி புரியலாம் என்பதைப் பண்டிதமணி எடுத்துக்காட்டினர்.

ஆங்கிலத்திலிருந்து மொழிபெயர்ப்பவர்கள் எங்கே னும் ஒரு சிறு சொல்லில்தவறிவிடினும், பண்டிதமணி அவர் கள் அதனைக் கண்டுபிடித்துவிடுவர்; 'இங்கு நீங்கள் குறித் துள்ள இச் சொல் சிறிதும் பொருத்தமுடையதன்று' என்று துணிந்து கூறுவர்; ஆதலின் ஆங்கிலப் பட்டம் பெற்ற வர்களும் பண்டிதமணி அவர்களிடத்தில் மிக்கவிழிப்புடன் நடந்துகொள்வர்.

தமிழ்ப் பகுதிக்குப் பேராசிரியரையும் மற்றைய ஆசிரி யர்களையும் நியமிக்கும்போது பெரும்பாலும் இவர்களைக் கலந்து செய்வதுண்டு. அதற்கேற்ப இவர்களும் தக்க ஆசிரியரைத் தெரிந்து கூறுவார்கள். போலிப் புலவர்களை அவர் தகுதியிலும் மேலாக உயர்த்திக் கூறும் வழக்கம்

* *"கம்பர் விழா முழக்கம்" என்ற தலைப்பின்கீழ்,* **20—4—44இல் எழுதியது.**

பண்டிதமணி அவர்கள்பால் என்றும் இல்லை. எனவே, தக்க ஆசிரியரைத் தெரிந்து கூறும் வகையிலும் இவர்கள் பல்கலைக்கழகத்துக்குத் தொண்டு புரிந்தார்கள். அண்ணுமலைப் பல்கலைக்கழகத்திலும், சென்னை, மைசூர், திருவனந்தபுரம் பல்கலைக் கழகங்களிலும்பாடப்புத்தகக்குழு, பரீட்சகர் குழு முதலியவற்றில் தலைவராகவும் உறுப்பினராகவும் பல முறை இவர்கள் பணியாற்றியதோடு, அண்ணுமலைப் பல்கலைக்கழகப் பேரவை (Senate), கல்விக் குழு (Academic Council) ஆகியவற்றிலும் உறுப்பினராயிருந்து தொண்டாற்றியுள்ளார்கள்.

அரசியலார், பண்டிதமணி அவர்களின் பெரும் புலமையைப்பாராட்டி, மகாமகோபாத்தியாயர் என்ற பட்டத்தை 1942ஆம் ஆண்டில் கொடுத்து இவர்களைச் சிறப்பித்தனர். அப்பட்டத்திற்குரியவிருதுகளைப் பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாவன்று கவர்னர் அவர்கள் பண்டிதமணி அவர்களுக்கு வழங்கியமை குறிப்பிடத்தக்கது. அவ்வாண்டிலேயே சென்னைப் பல்கலைக் கழகத்தார், கௌரவ ரீடர் பதவிச் சொற்பொழிவுகள் செய்யுமாறு இவர்களை அழைத்துச் சொற்பொழிவு செய்வித்தனர். பண்டிதமணி அவர்கள் தம் ஊருக்குச் சென்று ஓய்வு பெற்றிருந்த பின்னும் அண்ணுமலைப் பல்கலைக்கழகத்தார் தமிழ்ப் பணி செய்ய வருமாறு இவர்களை அழைத்தனர். அதற்கிணங்கப் பண்டிதமணியவர்கள் தமிழ் ஆராய்ச்சி அறிவுரையாளராகப் பொறுப்பேற்ருர்கள். அப்பொழுது வடமொழியிலிருந்து கௌடில்யரின் அர்த்த சாத்திரத்தை மொழி பெயர்த்தனர். அவ்வமயம் தமிழ் இசை ஆராய்ச்சிக்குழுவின் தலைவராகவும் பணியாற்றினுர்கள்.

இவ்வாறு பண்டிதமணி அவர்கள் பல்கலைக் கழகத்தில் பல பணிகளில் ஈடுபட்டிருந்ததோடமையாது, வெளி

யிலும் தமிழ்ப் பணியைச் செய்து வந்தார்கள். இதற்கென இவர் இரு மன்றங்கள் அமைத்தார். இவை அண்ணுமலை நகர் மணிவாசக மன்றமும் தில்லைத் தமிழ்க்கழகமும் ஆகும்.

பண்டிதமணியவர்கள் பல சிறந்த நூல்களைப் பற்றிப் பேசினாலும், திருவாசகத்தைப் பற்றிப் பேசும்பொழுது அவருக்கு ஒரு தனி மகிழ்ச்சி உண்டாகும். சில இடங்களில் கண்ணீர் பெருக்குவர். அண்ணுமலை நகரில் இவரிடத்தில் அளவுகடந்த அன்பினைக் காட்டிய பல அறிஞர்களில் தமிழ் ஆராய்ச்சித்துறைத் தலைவர் பேராசிரியர் ஜி. சுப்பிரமணிய பிள்ளை M. A., B. L. அவர்களும் ஒருவர். ஆகையால் பண்டிதமணி அவர்கள் பிள்ளை அவர்களது வீட்டில் 'மணிவாசக மன்றம்' என்ற ஒரு சங்கத்தை நிறுவி வியாழன்தோறும் சொற்பொழிவாற்றி வந்தனர். அச்சொற்பொழிவில் 'மனம் கரைத்து மலம் கெடுக்கும்' திருவாசகத் திருப்பாடல்களை எடுதது நன்கு விளக்கி மக்களுக்கு மகிழ்ச்சியளித்து வந்தார்.

பண்டிதமணியவர்கள் அண்ணுமலைப்பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியராக இருந்தபொழுது சிதம்பரத்தில் தில்லைத் தமிழ்க்கழகம் என்ற செந்தமிழ்க் கழகத்தைச் சிறந்த முறையில் இயங்கச் செய்தார்கள். ஆங்கிலமும் தமிழும் வல்ல அறிஞர் பலர் இக்கழகத்தின் உறுப்பினராகச் சேர்ந்து பண்டிதமணியவர்களைத் தலைவராகக் கொண்டு தமிழ்ப்பணி புரிந்தார்கள். பண்டிதமணியவர்கள் இக்கழகத்தின் சார்பில் ஞாயிறுதோறும் முத்தமிழ்க் காப்பியமாகிய சிலப்பதிகாரத்தை முறையாகப் பாடஞ் சொல்லி வந்தார்கள். அண்ணுமலைப் பல்கலைக்கழக வரலாற்றுத் துறைப் பேரறிஞர் S. K. கோவிந்தசாமி பிள்ளை, பூதநூற் பேராசிரியர் த. பு. நவநீதகிருட்டினன், பச்சையப்பன் உயர் நிலைப்பள்ளியாசிரியர் சீநி, திருவேங்கட நயினர்,

ஆவணப்பதிவாளர் சு. பூவராகன் முதலியோர் பண்டித மணியவர்கள்பால் சிலப்பதிகாரத்தை முறையாகப் பாடங் கேட்டு வந்தார்கள்.

இவ்வாறு பண்டிதமணி அவர்களிடம் அன்பர்கள் தமிழ் இலக்கியத்தைப் பயிலத் தொடங்கியவுடன் அவர் களது தமிழ்ப்பற்றும் பன்மடங்கு பெருகிற்று. அவர்களது உள்ளம் உரை யாவும் தமிழ்மயமாயின. ஏனைய துறை களில் புலமைபெற்று விளங்கிய ஆசிரியர்கள் தமிழிலும் நல்ல அறிவும் சொல்லாற்றலும் பெற்றனர்.

பாட முடிவில் 9—4—39-ல் இளங்கோவடிகள் விழா சிறப்பாகக் கொண்டாடப பெற்றது. விழாவுக்குக் கரந் தைத் தமிழ்ச் சங்கத் தலைவர் தமிழவேள் உமாமகேசுவரம் பிள்ளையவர்கள் தலைமை தாங்கினார்கள். பண்டிதமணி அவர்கள்பால் சிலப்பதிகாரம் பயின்ற அறிஞர் நால்வர் உரைசால் பத்தினி, ஊழ்வினை, அரசு பிழைத்தோர், தமிழர் வாழ்க்கை என்ற தலைப்புக்களில் சிறந்த சொற்பொழிவு களை நிகழ்த்தினார்கள். பட்டுறை யமைந்த சிலப்பதிகாரம் அழகிய வெள்ளித் தட்டுடன் பண்டிதமணியவர்களுக்கு மாணாக்கர்களால் வழங்கப்பெற்றது.

> "நன்மாணாக்கரைக் கொண்டு உள்ளத்தின் கண் உயர்வளித்துக் கலை விளக்கந் தரும் ஆசிரியர் பண்டிதமணியவர்கள் தமிழ்மொழிக்கு உறுதுணையாய் நின்று, ஆங்கில மொழியறிந்த அறிஞர் உள்ளப்பண்பு களைத் தமிழ்மொழியிற் குறிப்பிடும் பண்பு தந்த ஆசிரியராவார். பல்லாண்டாகத் தங்கள் நாட்டில் நகரத்தார்களை யூக்கித் தமிழ்க் கல்லூரி யமைக்கச் செய்து புலவர்களை யுண்டாக்கிய புரவலராக இவர் கள் விளங்குகின்றார்கள். மேலைச் சிவபுரிச் சன் மார்க்க சபை நிலைத்த தொண்டாற்றுவதற்கு இவர்கள் அறிவுறுத்திய வண்ணம் இயங்குவதே சிறந்த காரண

மாகும். வடமொழிக் காவியங்களின் உள நிலைச் சுவையுணர்ந்து சுவைபெற எடுத்துரைக்க வல்ல இவர்கள் வட மொழி நூல்களைத் தெள்ளத் தெளிந்த தமிழ் நடையில் மொழி பெயர்த்துள்ளார்கள். இவர் களது மொழி பெயர்ப்பு, வளம்பெற்ற தனித் தமிழ் நடையில் அமைந்துளது. இவ்வுண்மை சுக்கிர நீதி, மண்ணியல் சிறுதேர் ஆகிய மொழிபெயர்ப்பு நூல் களால் இனிது விளங்கும். நம் பண்டிதமணியவர்கள் போன்ற அறிஞர்களைப் பல்கலைக்கழகம் தன்னகத் துக்கொண்டு நிற்கும்வரை அது நம் வாழ்த்துடன் என் றும் நிலை பெறுவதாகுக.''

எனத் தமிழவேள் உமாமகேசுவரம் பிள்ளையவர்கள் தம் முடிவுரையிற் பேசியுள்ள கருத்துக்கள், அவர்கள் பண்டிதமணியவர்கள்பாற் கொண்டிருந்த பெருமதிப்பினை நன்கு புலப்படுத்துவனவாகும். இவ்வாறு பண்டிதமணி யவர்களது ஆதரவினால் வளர்ந்த தில்லைத் தமிழ்க்கழகம் தமிழுக்கு ஆக்கமாகுங் கொள்கைகளை வற்புறுத்தியும் கேடு தரும் செயல்களை எதிர்த்து விலக்கியும் பணிபுரிந்து வருகிறது.

உடல்நலக் குறைவால், 1946-ல் பண்டிதமணி பதவியி லிருந்து விலகிக்கொண்டார்; அதற்குச் சில நாட்கள் முன் னரே திரு. எம். இரத்தினசாமி அவர்கள் துணைவேந்த ராகப் பதவியேற்றார்கள். அப்பொழுது தமக்கு நடைபெற்ற பாராட்டுக் கூட்டத்தில் பண்டிதமணி அவர்கள் கூறிய கருத்து இங்கே குறிப்பிடத்தக்கது:

'தமிழ் மூவேந்தர் மடிமீது வளர்ந்தது; யானும் இங்கே சர். எஸ். இ. ரங்கநாதன், மகாகனம் சீனி வாச சாஸ்திரிகள், சர். கே. வி. ரெட்டி ஆகிய மூவேந்தர் (**Vice-chancellors**) காலத்தில் இங்கிருக்க நேர்ந்தது. நான்காவதாக வந்த வேந்தர் யாரும் தமிழ் வளர்த்ததாகத் தெரியவில்லை. எனவே, நான் விலக வேண்டியதுதானே?'

# 14. மகாமகோபாத்தியாயர்

பண்டிதமணி அவர்களின் வாழ்நாளில் பல்கலைக் கழகத்தில் பணியாற்றிய காலமே மிகச் சிறப்பானது. அக் காலம், இவர்கள் அறிவொளி பரப்பி, புகழ்க் குன்றேறிய காலம் என்று சொல்லலாம்.

பிரிட்டிஷ் அரசியலார் வழங்கிய பட்டங்கள் ராவ். சாகிப், ராவ் பகதூர், திவான்பகதூர், சர், கே. சி. ஐ. இ, கே. சி. எஸ். ஐ., எம். பி. ஈ. போன்ற பல. இவற்றுள் **மகாமகோபாத்தியாயர்** என்ற பட்டம் மட்டுமே அரசியல் தொடர்பில்லாதவர்களுக்கு வழங்கப் பெற்றது. சிறந்த முறையில் மொழிப்பணி ஆற்றுபவர்க்கு அரசியலார் வழங்கும் பாராட்டாக இது கருதப்பெற்றது. எனவே இது சிறப்பாக மதிக்கப்பட்டது. எனினும் பழக்கத்தில், இது குறிப்பிட்ட சிலர்க்கு மட்டும் வழங்கப்பட்டு வந்ததால், எல்லாத் தகுதிகளும் இருந்தும் பண்டிதமணி அவர்களுக்கு இப்பட்டம் எளிதில் வரக்கூடியதாக இல்லை. தமிழன்பர் உள்ளங்களில் இருந்த எண்ணத்தை அறிந்து ராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் அவர்கள் உரிய முயற்சியைச் செய்தார்கள். வடமொழியிலும் பண்டிதமணி புலமை பெற்றிருப்பதால் பல்லாண்டுகளுக்கு முன்னரே மகாமகோபாத்தியாயப் பட்டம் வழங்கப்பட்டிருக்க வேண்டும் என்பதை (அப்போது குமாரராஜா) டாக்டர் ராஜா சர் முத்தைய செட்டியார் அவர்களும் மாநிலக் கவர்னரிடம் தெரிவித்தனர்.

'மகாமகோபாத்தியாயர்' என்ற பட்டத்திற்கு ஏற்ற ஒரு தமிழ்ப்பட்டத்தை அரசியலார் ஏற்படுத்தி, சிறந்த தமிழ்ப்

புலவர்களைச் சிறப்பிக்க வேண்டுமென்று ராஜா சர் முத்தைய செட்டியாரவர்கள் டாக்டர் சோமசுந்தர பாரதியார்க்குப் பொன்னுடை போர்த்தியபோது அரசியலாரை வேண்டிக் கொண்டதும் இங்கே குறிப்பிடத்தக்கது.* தமிழ்ப் புலவர்கள் பண்டிதமணிக்கு வழங்கிய **முதுபெரும் புலவர்** என்ற பட்டமும் ராஜா சர் முத்தைய செட்டியார் அவர்கள் தலைமையிலேயே சூட்டப்பெற்றது.

1942-ஆம் ஆண்டில் பிரிட்டிஷ் மன்னர் பிறந்த நாளில், அதாவது 11—6—1942-ல் வழங்கப்பெற்ற பட்டங்களில் பண்டிதமணி அவர்கட்கு மகாமகோபாத்தியாயப் பட்டம் வழங்கப் பெற்றது. இச்செய்தியை வானொலி வாயிலாக அறிந்து ஒரு நண்பர் பாராட்டுத் தந்தி அனுப்பியிருந்தார். பண்டிதமணி அவர்கள் அத்தந்தியைத் தாமே படித்துப் பார்த்துவிட்டு, 'ஏதோ உபசாரத்திற்குத் தந்தி அனுப்பியிருக்கிறார்கள்' என்று எண்ணி அதை ஒரு மூலையில் போட்டுவிட்டார்கள்.

மறுநாள், அதாவது 12—6—1942-ல் பண்டிதமணி அவர்கள் ராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் அவர்களுடைய ஊராகிய கானாடுகாத்தானில், அரசருடைய படத்தைத் திறந்து வைக்க இசைந்திருந்தனர். உரிய ஊர்தியுடன் அன்றுகாலை 5 மணிக்கு, பண்டிதமணி அவர்களைக் கானாடுகாத்தானுக்கு அழைத்துச் செல்ல யான் மகிபாலன்பட்டிக்கு அவர்களது இல்லத்திற்குப் போய்ச் சேர்ந்தேன். பண்டிதமணி அவர்கட்கு **மகாமகோபாத்தியாயப் பட்டம்** கிடைத்த செய்தியால் என் சிந்தனை அன்றிரவு முழுவதும் அவர்கள் நினைவாகவே இருந்தது. அவர்கள் இல்லத்தை அடைந்ததும், அவர்களை அணுகி மகாமகோபாத்தியாயப் பட்டம் அவருக்குக் கிடைத்ததற்கு மகிழ்ச்சி தெரிவித்தேன்.

* *அண்ணாமலைநகர், 28-2-1955*

செய்தி அவர்களுக்குப் புதுமையாக இருந்தது; யான் சிறுவனாக இருந்ததாலும், அப்போது கதிரவன்கூட உதயமாகாததாலும் இரவு உறக்கமின்மையால் நான் ஏதோ உளறுவதாகப் பண்டிதமணி நினைத்தார்கள். பண்டிதமணிக்கு மகாமகோபாத்தியாயப் பட்டம் வழங்கப் பெற்றிருப்பதாக 1934–ல் சில பத்திரிகைகளில் செய்தி வெளிவந்ததையும் அவர்கள் தெரிவித்து, யானும் அவர்களைக் கேலி செய்வதாகக் கூறினர். பின்னர், அங்கிருந்து ஏழு மைல் தொலைவிலுள்ள திருப்புத்தூருக்குச் சென்று, அன்றைய நாளிதழ்களைப் பார்த்துவிட்டுப் பின்னர்க் கானாடுகாத்தானுக்குச் செல்லாம் என்று யான் ஒருவாறு அவர்களுக்கு உறுதி கூறினேன்.

திருப்புத்தூரில் செய்தித்தாள் விற்கும் கடைகளில் தொங்கவிடப்பெற்றிருந்த சுவரொட்டிகளில் '**கதிரேசன் செட்டியாருக்கு மகாமகோபாத்தியாயப் பட்டம்**' என்று கொட்டை எழுத்துக்களில் அச்சிடப்பெற்றிருந்தது. பிறகு அன்று வந்த இதழ்களையெல்லாம் வாங்கினோம். எல்லா இதழ்களிலும் செய்தி வந்திருக்கிறதா என்று சரிபார்த்த பின்னரே பண்டிதமணி நம்பினார்கள். 'ஹிந்து', 'மெயில்' ஆகிய இதழ்களையும் வாங்கி உரிய இடத்தை எடுத்துக் காட்டும்படி என்னிடம் பண்டிதமணி கூறினர்; அவ்வாறே செய்தேன்; அந்தப் பகுதிகளை எழுத்து எழுத்தாகச் சரி பார்த்து மனஅமைதி அடைந்தார்கள்.

இந்நிகழ்ச்சிக்கு இரண்டு நாட்களுக்கு முன்னர் ராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் அவர்களுடைய மருமகன் ஒருவர் காலமாகிவிட்டார்; கானாடுகாத்தானுக்குச் செல்லுவதால் அரசரைச் சந்தித்துத் தம்வருத்தத்தைத் தெரிவிக்க வேண்டுமென்று பண்டிதமணி கருதினர்.

'பண்டிதமணி இன்று இங்கு வருவதால், இரங்கற் செய்தி கூற வருவார்கள்; அதற்கு முன்னரே புதியபட்டம் பெற்றதற்காக அவர்களைப் பாராட்ட வேண்டும்' என்று அரசர் முடிவு செய்தார்.

'தங்களுக்கு மகாமகோபாத்தியாயப் பட்டம் கொடுக்கப் பட்டிருப்பதாக இன்றைய பத்திரிகை களில் படித்து மிகவும் சந்தோஷப்பட்டேன். தாங்கள் இந்தப் பட்டத்திற்கும் மிகவும் தகுதியானவர்கள் என் பதைத் தமிழ்நாடு நன்கு அறியும். மகாமகோபாத்தி யாயப் பட்டம்தரித்துத் தாங்கள் பல்லாண்டு வாழ இறைவனை இறைஞ்சுகிறேன்''

என்று ஒரு சிறு கடிதம் வரைந்து, பண்டிதமணி அவர் கள் கானாடு காத்தான் எல்லையை அடைந்ததுமே அது அவர்களுக்குக் கிடைக்கும்படி அரசரவர்கள் ஏற்பாடு செய்திருந்தார்கள். எனவே, பாராட்டுக் கடிதம் வந்தபிறகு தான், பண்டிதமணி வருத்தம் தெரிவிக்கச் செல்ல நேர்ந் தது.

அன்று மாலையில் அரசருடைய உருவப் படத்தைப் பண்டிதமணி திறந்துவைத்தார்கள். திறந்துவைக்கப்பெற் றது அரசரின் படமாக இருந்தாலும், பேச்சாளர்கள் எல் லோரும் பண்டிதமணி அவர்களையே பாராட்டிப்பேசி, அவர் மகாமகோபாத்தியாயப் பட்டம் பெற்றதற்கு மகிழ்ச்சி தெரிவித்தனர்.

பண்டிதமணி அவர்கள் கூறிய உரையில் அன்று குறிப்பிட்டதாவது.

'அரசர் அவர்களுடைய படத்தைத் திறக்க எனக்குப் போதிய ஆற்றலும் தகுதியும் இல்லை. அவ்

வாறிருந்தும் அன்புரிமையால் யான் இந்த மன்றத்தின் வேண்டுகோளுக்கு இணங்கினேன். அரசர் படத்தைத் திறக்க இவர்க்குத் தகுதி போதியதாகாது; எனவே இவருக்கு அதற்கேற்ற தகுதியைத் தருவதே முறை என்பது இறைவன் திருவுள்ளம் போலும். அதனாலேயே, இன்று இந்தப் பெரும்பட்டத்தை எனக்கு வழங்கியிருக்கிறார்கள்.'

பட்டத்திற்குரிய சான்றிதழில் இயற் பெயரை மட்டுமே எழுதுவது பிரிட்டிஷ் அரசியலாரின் மரபு; அதற்கு மாறாகக் கதிரேசனார்க்கு வழங்கப்பெற்ற இதழில் **பண்டிதமணி முத்துக்கருப்பன் கதிரேசன் செட்டியார்** என்று குறிப்பிடப்பெற்றிருந்தது. பண்டிதமணி என்பதும் அவரது இயற் பெயரின் ஒரு பகுதி என்று உரிய அலுவலர்கள் எண்ணியிருந்திருக்க வேண்டும்!

கதிரேசனாரும் பண்டிதமணி என்னும் பட்டத்தையே சிறப்பாக மதித்தார். மகாமகோபாத்தியாயப் பட்டம் இன்னும் பலருக்கு வழங்கப் பெற்றது; அதைப்பற்றி அவர் குறைப்பட்டதில்லை. பண்டிதமணி என்ற பட்டம் இலங்கையில் சிலருக்கு வழங்கப் பெற்றபோது, 'என்ன, அப்பன், இலங்கையில் அப்பட்டத்தைத் தண்ணீர்போல எளிதாக வழங்கிவிடுகிறார்களே !' என்று என்னிடம் கேட்டார்கள்.

மகாமகோபாத்தியாயப் பட்டத்திற்கு உரியவர்களுக்கு ஆண்டுதோறும் 100 ரூபாயை அரசியலார் வழங்கி வந்தனர் இந்தியா அரசியல் விடுதலை பெற்ற பிறகு, இந்த அன்பளிப்பு நிறுத்தப் பெற்றது என்பதையும் பண்டிதமணி தெரிவிப்பர்.

பண்டிதமணிக்கு வழங்கிய பட்டம் தமிழர் எல்லோர்க்கும் எல்லையற்ற மகிழ்ச்சி தந்தது; தமிழ் நாடெங்கும் இந்நிகழ்ச்சி கொண்டாடப் பெற்றது; பல இடங்களில் பண்டிதமணிக்குப் பாராட்டு விழாக்கள் நடந்தன. நூற்றுக்கணக்கான அன்பர்கள்--தமிழறிஞர்கள்—அரசியல் தலைவர்கள் ஆகியோரிடமிருந்து பாராட்டுக் கடிதங்கள் வந்தவண்ணமாக இருந்தன. அவற்றுள் சிலவற்றை இங்கே தருவோம்:

## 1

பண்டிதமணி மகாமகோபாத்தியாய கதிரேசன் செட்டியார் அவர்களுக்கு. வணக்கம்.

தங்கள் வாழ்க்கை தமிழில் திளைத்த வாழ்க்கை. உயர்ந்த உண்மைகளை அதில் கண்டு அனுபவித்தவர்கள் தாங்கள் துரைத்தனத்தார் அதை அங்கீகரித்துத் தங்களுக்குப் பட்டம் அளித்தது பற்றி, தமிழ் அன்பர்கள் எல்லோரும் களிப்படைவார்கள். என்னுடைய மனமார்ந்த சந்தோஷத்தையும் தெரிவித்துக்கொண்டு நீண்ட ஆயுளையும் குன்றாத உடல் நலத்தையும் இறைவன் அருளும்படி வேண்டுகிறேன்.

தங்கள் அன்புள்ள,

***டி. கே. சிதம்பரநாதன்.***

## 2

ஆசிரியர் பெரும,

நலம். நலம்.

தங்கட்கு நம் தமிழ் நாடு 'பண்டிதமணி' என்று பட்டமளித்துப் பாராட்டிய செய்தி மிக்க பழைமைச் செய்தியாய் விடினும், இன்றும் என்றும் எங்கட்கு அது

பெரு மதிப்பும் பெருமிதமும் பயந்து, 'எங்கள் பண்டிதமணி' எனப் பாராட்டிப் பரவும் பெருமையை எங்கட்குத் தந்து நிலவுகின்றது.

இப்போது, அரசியலார் தங்களுடைய அரிய புலமையும், இனிய சொல்வன்மையும், ஆசிரியர்கட்காசிரியராம் உரிமையும் நன்கறிந்து, 'மகாமகோபாத்தியாயர்' என்று பட்டமளித்துச் சிறப்பித்தற்கு ஒருவாறு மகிழ்ச்சி கொள்கின்றோம்; 'ஒருவாறு' என்றது, இதனைப் பல யாண்டுகட்கு முன்னமே அவர்கள் செய்தல் வேண்டும்; அதனாற்றான் 'ஒருவாறு மகிழ்கின்றேம்' என்பேமாயினேம். ஆனால், உண்மையிலேயே மகாமகோபாத்தியாயராகவுள்ள தங்களையன்றி வேறு எவரை 'மகாமகோபாத்தியாயர்' என்று இன்றேயன்றிப் பண்டும் என்றும் யாம் பரவுதற்கு எங்கள் உள்ளம் செல்லும்?

'எங்கள் பண்டிதமணி', 'எங்கள் இன்தமிழ்ப் பண்டிதமணி', 'எங்கள் உள்ளக்கோயிலில் எழுந்தருளி, இனிய தமிழின்பம் சுரந்து மகிழ்விக்கும் ஆசிரியப் பெருமணி', இன்று அரசியலாரால், 'மகாமகோபாத்தியாயர்' என்ற உயரிய உண்மைப் பட்டம் பெற்றது குறித்துப் பெருமகிழ்வு கொண்டு, அப்புலவர் பெருமணி, நீடிய வாழ்வும், சூடிய புகழும் திகழ, மனைமக்கட் செல்வமும் பெரும்பொருட் செல்வமும் பெற்று 'நீடுவாழ்க' என

> "நீல மேனி வாலிழை பாகத்து
> ஒருவன் இருதாள்" மலரைப்
> பலகாற் பரவி வாழ்த்தல் எம் பண்பே.

எம் வாழ்த்தினை அன்பு கூர்ந்து ஏற்றருள வேண்டு கின்ற

அன்பன்,

**ஔவை. சு. துரைசாமி.**

## 3

அன்பரீர்,

நலம். தமிழர் மனம் இன்றுதான் குளிர்ந்தது. மகாமகோபாத்தியாயர் பட்டமே இன்று பெருமை பெற்றது. தகாதவரையே நாடிச் செல்வதைக்கண்டு பட்டங்களை வெறுத்து நின்ற என்போல்வார் இன்று ஒரு பட்டமேனும் தக்கவரை நாடித் தமிழரிடம் புகுந் தது கண்டு வியந்தும் மனமகிழ்ந்தும் நிற்பர். தக்கார்—அதற்குமேல் தமிழர்—அதற்குமேல் எனது உழுவலன்பர்—இவர்க்கு உரிய சிறப்பு நடப்பது கண்டு எனக்கும் எனது குடும்பத்தினருக்கும் சங்கத்தின ருக்கும் உள்ள அகமகிழ்ச்சியை அளவிட முடியாது. தமிழ மகாமகோபாத்தியாயர் நீடூழி வாழ்க.

இங்ஙனம்

**தெ. பொ. மீனாட்சிசுந்தரன்.**

# 15. கௌடலீயம்

பிற மொழியிலுள்ள அரிய நூல்களைத் தமது மொழியில் மொழிபெயர்த்து அமைத்துக்கொள்வது நாகரிக மக்களது கடமையாகும்; இம்மொழிபெயர்ப்புப் பணியின் இன்றியமையாமையை ஆசிரியர் தொல்காப்பியனுர், 'மொழி பெயர்த்து அதர்ப்படயாத்தல்' என்ற வழிநூல் வகையினுல் வற்புறுத்திக் கூறியுள்ளார். பிற மொழிகளில் விரித்து விளக்கப்பெற்ற அரும் பொருள்களைத் தமது தாய் மொழியில் மொழிபெயர்த்து விளக்குதல் தாய்மொழித் தொண்டர்களின் சிறந்த கடமை. இதனை யுணர்ந்த பண்டிதமணியவர்கள், வடமொழியிலுள்ள சிறந்த நூல்களைத் தமிழில் மொழிபெயர்க்கும் பணியினை மேற்கொண்டார்கள். இப்பணிகளைப்பற்றி முன்னரே கூறியுள்ளோம்.

அரசியல் நெறியில் நின்று, பொருளீட்டும் முறைகளை வகுத்துரைக்கும் பொருள் நூலாகிய அர்த்த சாஸ்திரம் வடமொழியிற் சிறந்த முறையில் அமைந்திருத்தலை அறிந்த பண்டிதமணியவர்கள் அவ்வடநூல் முறையினைத் தமிழ் மக்கள் உணரும் வண்ணம் அந்நூலைப் பல்லாண்டுகளுக்கு முன்னரே மொழிபெயர்க்கத் தொடங்கினுர்கள் என்பதை 67-ஆம் பக்கத்தில் கூறினேம். வடமொழியிற் பொருள் நூல் இயற்றியவர்கள் வியாழன், வெள்ளி, சாணக்கியர் முதலியோராவர். தேவகுருவாகிய வியாழன் அறவே கள்ளுண்ணுத தேவர்களுக்குப் பயன்படும் வகையில் பொருள்நூல் இயற்றினுர்; அசுரகுருவாகிய சுக்கிரன் கள்ளுண்டலில் வேட்கை மிக்க அசுரர்களும் உளங்கொள்ளும் வகை சிறந்ததொரு பொருள்நூல் செய்தார்.

இச்செய்திகள், "நறவினை வரைந்தார்க்கும் வரையார்க்கு மவையெடுத் தறவினையின் புறூஉம் அந்தணர் இருவரும், திறம் வேறு செய்தியின் நூல்நெறி" என வரும் மருதக் கலியால் நன்கு விளங்கும்.

அசுரர்களின் வழக்க ஒழுக்கங்களை உணர்ந்து, அவர்களும் ஏற்றுக்கொள்ளத்தக்க முறையில் அரசியல் நெறிமுறையை வகுத்த அசுரகுருவாகிய சுக்கிரனது கொள்கையை விரித்துரைப்பது சுக்கிரநீதி. அறநூல் களுக்கு மாறுபடாமல் இயற்றப்பட்ட பொருள் நூலாகிய இதனைப் பண்டிதமணியவர்கள் தூய தமிழ் நடையில் மொழிபெயர்த்துள்ளனர். இதன் சிறப்பைப் பற்றி முன் னரே தெரிவித்துள்ளோம்.

தேவர், அசுரர் என்னும் இரு பிரிவினரையும் தன்பாற்கொண்டு விளங்குவது மக்கட் சமுதாயம். இம்மக் களது வாழ்க்கையைக் கூர்ந்து நோக்கிய அரசியற் சூழ்ச்சி யில் வல்ல சாணக்கியரென்பார் வியாழன், வெள்ளி முதலிய முன்னோர் கொள்கைகளையும், தம் காலத்தில் வாழ்ந்த பிறர் கொள்கைகளையும் சீர்தூக்கி ஆராய்ந்ததன் பயனாகக் கௌடலீயம் என்ற அர்த்த சாஸ்திரத்தை வட மொழியில் இயற்றியுள்ளார். இந்நூல் இந்தியநாட்டில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்குமுன் நிலவிய அரசியல் சமு தாய நெறிமுறைகளை ஒருவாறு விரித்துரைப்பதாக அமைந்துளது. இவ்வரிய நூலைத் தமிழில் மொழிபெயர்த் துத் தருமாறு அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தார் நம் பண்டிதமணியவர்களை வேண்டிக் கொண்டார்கள். அவ் வேண்டுகோட்கிணங்கிப் பண்டிதமணியவர்கள் மீண்டும் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திற்குப் போந்து, தமிழ் ஆராய்ச்சித் தலைவராக அமர்ந்து, வடமொழி, தென்மொழி

யாசிரியர்களைத் துணையாகக் கொண்டு, கௌடலீயத்தைத் தூய தமிழ்நடையில் மொழிபெயர்த்துள்ளார்கள்.

இக் கௌடிலீயம் ரஷ்ய மொழியிலும் ஆங்கில மொழியிலும் பெயர்க்கப்பட்ட சிறப்புடையது என்பதும் இங்கே குறிப்பிடத்தக்கது.

பண்டிதமணியின் மொழிபெயர்ப்பு மூலமும், உரை விளக்கமாகிய அடிக்குறிப்பும் என இரண்டு பகுதியாக அமைந்துளது. மூலம் கௌடலீயததின் நேர் மொழி பெயர்ப்பு. அதற்குரிய விளக்கமும் மேற்கோளும் அடிக் குறிப்பாகக் கீழே தரப்பட்டுள்ளன. வடசொற்களுக்கு நேரான தூய தமிழ்ச் சொற்கள் இம் மொழிபெயர்ப்பில் அமைத்து வழங்கப்பெற்றுள்ளன. இந்நூற் பொருளுக்கு ஒத்தனவாகவும் விளக்கம் தருவனவாகவும் உள்ள தமிழ் நூற் குறிப்புக்கள் மேற்கோள்களாக எடுத்தாளப் பெற் றுள்ளன. திருக்குறட் கருத்துக்களும் பரிமேலழகர் உரைக் கருத்துக்களும் இதன்கண் சிறப்பாக இடம்பெற் றுள்ளன. திருக்குறள் முதலிய பண்டைத்தமிழ் நூல்களிற் சுருக்கமாகக் காணப்படும் அரசியல் நெறிமுறைகளை நன்குணர இது உதவுகிறது. தமிழ் நூல்களிற் காணப் படாத வடநாட்டாரது அரசியல் நெறிமுறைகளை யுணர்ந்து கொள்ளுதற்கும் இம் மொழிபெயர்ப்புப் பெரிதும் பயன் படுவதாகும். இந்நூல் உருவாகியபோது, துணைவேந்த ராக இருந்த சர் கே. வி. ரெட்டி நாயடு அவர்கள் பண்டித மணியுடன் அடிக்கடி உரையாடி அவருடைய பேரறிவைப் பெரிதும் பாராட்டினர்.

இக்கௌடலீய மொழிபெயர்ப்பு, பண்டிதமணியவர்க ளது இருமொழிப்புலமையையும், உலகியலறிவையும், மொழிபெயர்ப்பு வன்மையையும் நன்றுகக் காட்டுகிறது.

தமிழ்மொழி, தமிழர் நாகரிகம் என்பவற்றில் அவர்கள் கொண்டுள்ள தளராத உறுதியினையும் இனிது விளக்கும் வகையில் இது அமைந்திருப்பது தமிழ் மக்களால் போற்றத் தகுவதாகும். இம்மொழி பெயர்ப்பினை யூன்றிப் பயில்வோர் கௌடலீயமாகிய இந்நூல் வடமொழியில் அமைந்திருந்தாலும் இந்நூலை யியற்றிய ஆசிரியர் தமிழ் நாட்டோடு நெருங்கிய தொடர்புடையவர் என்பதனை நன்குணர்வர். பண்டிதமணியவர்கள் தமிழில் மொழிபெயர்த் துதவிய கௌடலீய மொழிபெயர்ப்பு அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பதிப்பாக அண்மையில் வெளிவரவிருக்கின்றது. பொருள் நூலாகிய அதனைத் தமிழ்மக்கள் பயின்று பயன் பெறுவாராக!

# 16. பழுத்த பாவன்மை

செய்யுள் நயம் காண்பதிலும் அதைப் பிறர்க்கு எடுத்துரைப்பதிலும் பண்டிதமணி அவர்கள் சிறந்து விளங்கினார்கள் என்பதை இந்நூலில் பல இடங்களில் தெரிவித்திருக்கிறோம். சிறந்த செய்யுள்களில் பண்டிதமணி அவர்கட்கு ஈடுபாடு மிகுதி. **'ஓரான் ஓரான் தோட்டத்திலே ஒருவன் போட்டான் வெள்ளரிக்காய்'** என்பது போன்ற பாடல்களைப் பண்டிதமணி ஒரு சிறிதும் விரும்புவதில்லை. ஆழ்ந்த பொருளும் சிறந்த இலக்கண அமைதியும் ஓசை இனிமையும் உடைய பாடல்களையே பண்டிதமணி விரும்புவார். எனவே அவர் மனத்தை ஈர்த்தவை பழம் பாடல்களே. 'அவற்றில் புதுச்சுவை தோன்றும்; ஆழ்ந்து படிக்கலாம்' என்பார். இக்காலத்துப் பாடல்களை அதிகமாக ஊன்றிப் படிக்க இயலாது. அவற்றைப் படித்தால் வெங்காயத்தில் தோல் உரித்த மாதிரி இருக்கும்; உள்ளே ஒன்றும் இராது; அடித்தோல் நெருங்க நெருங்க நாற்றம் உண்டாகும். அதுபோலவே 'மறுமலர்ச்சிப் பாடல்களில் ஆழ்ந்த கருத்து இராது; அவற்றை ஆராய ஆராய ஆபாசந் தான் வெளிப்படும்' என்று பண்டிதமணி கூறுவார்.

திருநெல்வேலி மாவட்டத்தில் சங்கரன்கோவில் வட்டத்தில் நகரம் என்ற சிற்றூரில் கந்தசாமிப் புலவர் என்பவர் இசையறிவும் இயற்றமிழ்ப் புலமையும் உடையவராய் **வள்ளியம்மை சரிதம்** என்னும் நாடகத்தில் சுப்பிரமணியர், வேடர் என்ற வேடங்கள் தாங்கி நடிப்பதில் மிகவும் வல்லுநராக இருந்தார். அவ்வாறு நடிக்குங் காலங்களில், கோவை, காதல், மடல் முதலான அகத்துறைப் பாடல்

களைப் பொருளுணர்ச்சியோடு பல நாட்கள் நாடக மேடையில் எடுத்துக்கூறி எல்லோரையும் இன்புறுத்திவந்தார். அவரது இயல் இசைப் புலமை தம்மை இளம்பருவத்தில் பெரிதும் மகிழ்வித்ததாகவும், செட்டிநாட்டில் பல இடங்களில் தொடர்ந்து அவருடைய நாடகங்களைப் பார்த்திருப்பதாகவும் பண்டிதமணி அவர்கள் என்னிடம் சொல்லியதுண்டு.

16 வயது இளைஞராக இருந்தபோது, ஒரு நாடகத்தில் பட்டாபிஷேகத்தின்போது, நடிகர்களுக்குத் துப்பட்டி வழங்கிப் பண்டிதமணி பின்வருமாறு பாராட்டினார். இப்பாடலிலிருந்து, இளமையிலேயே யமகம் திரிபுகள் பொருந்தப் பாடும் ஆற்றல் பண்டிதமணி அவர்களுக்கு இருந்தது புலனாகிறது.

**"வேம்பரசின் ஆணைகெழூஉம் தென்னாட்டின்**
**இயற்பெயராம் மேன்மை சால**
**ஆம்பரசு வர்க்கநக ரக்கந்த சாமியெனும்**
**அறிஞன் விண்ணோர்**
**தாம்பரசுந் தரவள்ளி சரிதஇசை இசைப்பமகிழ்ந்**
**தனரெல் லோரும்**
**பாம்பரசு தலைஅசைக்கின் பார்அசையு**
**மெனக்கவலை படைத்தேன் யானே"***

---

* வேம்பரசு — வேப்பமாலை தரித்த பாண்டியன். சுவர்க்கநகர் — சுவர்க்கம்போன்ற நகரம் என்ற சிற்றூர்.

விண்ணோர் தாம் பரசும் தர — தேவர்களும் துதிக்கும் தகுதிவாய்ந்த

பாம்பரசு — ஆதிசேடர்

குறிப்பு: 'எல்லோரும் மகிழ்ந்தார்கள்; யான் கவலை படைத்தேன்' என்பது ஒருநயம்

பண்டிதமணியவர்கள் சிறுவயதில் வரைந்த ஆசிரியப் பாக்களே, கடிதத் தொடர்பு கொண்டிருந்த புலவர் களுக்கு, இவர்களது தமிழ்மொழிப் பயிற்சியைத் தெரிவித் தன. கந்தசாமிக்கவிராயர், அரசன் சண்முகனுர் ஆகி யோருக்குப் பாடல்களாகவே இவர் கடிதங்கள் எழுதி யிருக்கிறுர். மேலேச்சிவபுரி பிள்ளேயார்மீது பதிற்றுப்பத் தந்தாதி பாடியுள்ளார்; இவருடைய சிறந்த பாடல்கள் சில இவ் அந்தாதியில் உள.

சன்மார்க்க சபையைப் பற்றிப் பண்டிதமணி பாடிய பாடல்கள் மிகப் பல. அவற்றுள் சிலவற்றை இங்கே தருவோம்:

சன்மார்க்க சபையைப் பற்றித் தம் உள்ளக்கிடக்கை கூறுமுகத்தான் மொழிந்த

## வாழ்த்துப் பாக்கள்

**நன்மார்க்க மியாததனே நாமெய்தி**
**நலனுகரு நாள்யா தென்றே**
**பன்மார்க்கத் துறுநர்பல பிறவிதொறு**
**மாய்ந்தொருவிப் பற்றி மேற்போய்ச்**
**சென்மார்க்கம் பிறிதின்றித் தன்பாலே**
**சிவானந்தந் திளேப்ப நிற்குஞ்**
**சன்மார்க்கஞ் சைவமெனத் தெளிவுணர்த்துஞ்**
**சன்மார்க்க சபையீதாமல்;**

**இப்பெரிய வவைக்களத்தி லிலக்கணமா**
**தியகருவி யினிது தேர்ந்து,**
**முப்பொருளி னியல்புமுணர்ந் திருமொழியோர்ந்**
**தொருமைகொளு முதியோர்கூடி,**

அப்பணிசெஞ் சடைப்பெருமா னருணிலையு
மவனடியா ரன்புந் தூய,
செப்பமுறு மொழுக்கியலுஞ் செந்தமிழின்
பெருமாண்புந் தெரிக்கின் றூரால்;

அரியவற்று ளரிதுபெரி யவரிணக்க
மெனமறைக ளறையக் கேட்டும்,
பெரியவர்த முரிமைபெருப் பேதையர்க
ளுடற்பொறையாற் பெறுவ தென்னே?
விரியலையார் கடல்வலயத் தறிவன்பு மிக்கீரே!
விரும்பி முன்னர்ப்
புரியறத்தாற் பெற்றபெரும் பொருளுடையீ
ரேயொன்று புகலக் கேண்மின்;

கற்றமைந்த பேரறிஞர் கழறுமொழி
தெளியமனங் கனிந்தன் னேரைப்
பற்றவவர் வேண்டுவன பரிந்துதவ லன்றேவிப்
பண்பார் ஞானம்
உற்றவன்பு பொருளென்னு முண்மை யுணர்ந்
திடவேண்டி னூங்கு வம்மின்,
பெற்றமமர் பெருமான்ற னன்பர்பலர்
காட்சியினற் பிறங்கக் காண்பீர்;

இம்மைமறு மையிலின்ப மினிதுநுகர்ந்
திறைவனடி யிகவா வின்பஞ்
செம்மையுறப் பெறுமாறிச் சன்மார்க்க
சபைமேலைச் சிவபு ரிக்கண்
அம்மையென அறம்வளர்க்கு மெம்வணிக
மக்கள்சில ரமைத்தார் அன்னோர்
தம்மரபு மிச்சபையுஞ் சைவமுஞ்செந்
தமிழ்மொழியுந் தழைத்து வாழ்க!

## வெண்பா

**செய்ய சவுமியத்திற் சித்திரைமுப் பானென்றிற்**
**றுய்யகுரு வாரச் சுபதினமே—வையத்திற்**
**சேமமுறு மேலைச் சிவபுரியிற் சன்மார்க்க**
**நாம அவைநிறுவு நாள்.**

சன்மார்க்க சபை விழாக்களில் தலைமைதாங்கிய தமிழறிஞர்களுக்கு 1909 முதல் 1928 வரை வழங்கப் பெற்ற வரவேற்புரைகள் யாவும் பண்டிதமணி அவர்களால் பாடப்பெற்றவையே. இப்பாடல்களுள் ஒன்று டாக்டர் உ. வே. சாமிநாத ஐயரவர்கள்மீது பாடப் பெற்றது:

**நூலாய்த லுரைவரைதல் நூல்பயிற்றல்**
**முதுநூலின் நுணுக்கங் காட்டி**
**வாலாய எந்திரத்தின் வயக்கிவனப்**
**புறப்பதித்து வழங்கல் இன்ன**
**மேலாய செயல்புரிந்து தமிழ்த்தாயின்**
**தலைமகனாய் விளங்கு நின்றன்**
**பாலாய பெருஞ்சிறப்புக் கண்டுவியப்**
**பெய்தாரிப் பாரில் யாரே.**

'இப் பாடலில் கூறப்பெற்றிருக்கும் தகுதிகள் யாவும் தங்களுக்கு இருக்க, என்மீது இவ்வாறு பாடியிருக்கிறீர் களே!' என்று பண்டிதமணியிடம் டாக்டர் உ. வே. சாமி நாத ஐயரவர்கள் கூறியதும் இங்கே குறிப்பிடத்தக்கது.

மண்ணியல் சிறுதேர் என்னும் நூலில் முதநூலிலிருந்து 400 சுலோகங்களைப் பண்டிதமணி தமிழ்ப் பாடல் களாக ஆக்கியுள்ளனர். '**பொதுவாக இந் நாடகப் பாட்டுக்களைச் சுவையுணர்ந்து படிப்பவர்கள், நம் பண் டிதமணி, வள்ளுவர், திருத்தக்க தேவர், மணிவாசகர்,**

மூவர் சேக்கிழார் அன்ன தெய்வப் புலவரின் இறவாப் பாசுரங்களில் பல்காற் பயின்று பழுத்த 'பாவன்மையும், சொல்லைத் தொடுக்கும் கல்லாப் புலவர்தம் பொல்லாப் புலமை போலாது கற்றுக் கனிந்த நாவன்மையும் உடையவரன்பதை நன்கு கண்டு தெளிவார்.' என்று டாக்டர் சோமசுந்தர பாரதியார் அவர்கள் மண்ணியல் சிறுதேரைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

'சுகிர்தயா' என்ற ஓர் இதழில் சுலோசனை வரலாறு வெளிவந்தது; அதைப் படித்துப் பண்டிதமணி அவ்வப் போது பாடலாக மொழி பெயர்த்தார், பிறமொழிப் பாடல் களையும் தமிழில்தரும் திறமை அவரிடமிருந்ததற்கு இந்நூல் கள் சான்று.

இனி, பண்டிதமணி அவர்கள் இயற்றிய ஏனையபாடல் கள் சிலவற்றைத் தருவோம்.

## கடவுள் வாழ்த்து

*ஆசிரிய விருத்தம்*

பூவார் மணம்போல் உலகமெலாம்
பொருந்தி யியக்கும் பெரும்பொருளே
புனிதம் நிறைந்த வுணர்வுடையோர்
புகழிற் கிடக்கும் புண்ணியனே

நாவார் கலைகள் தணிபொருளா
நவில்நா யகனே மெய்யுணர்வின்
நலமார் வடிவே யகவிருளை
நலிந்து விளங்கி நல்லன்பர்

தூவார் உளத்திற் சுடர்விளக்கே
துகளற் றொடுங்கித் தமைமறந்து

துய்ப்பார்க் கினிய செழுந்தேனே
தோன்றாத் துணையே அறுவரெனும்

மேவார் தமைச்செற் றுளந்தெளிந்தோர்
வினைமா சறுக்கும் மெய்ப்பொருளே
விரும்பிப் பணியும் எம்மையருள்
வெள்ளத் திமைத்துக் காத்தருளே

## உரிமையுரை*

செந்தமி ழமிர்தத் திவலையும் உலகிற்
றிகழ்வட மொழிமணி சிலவும்
முந்துறப் பெறுதற் கறிவொளி யுதவி
முன்னுமென் சிறுபரு வத்தே
நந்தலில் புகழை நிறுவியெம் இறைவன்
நல்லடி யடைந்தவென் அரிய
தந்தையின் அருளை நினைவுறீஇ யுருகுந்
தன்மைக்கீ தறிகுறி யாமால்.

## யாழ்ப்பாணம் கலாநிலையத்துக்கு வாழ்த்து

காவியமுஞ் சிற்பக் கலையும் இயல்நூலும்
ஓவியமு மின்னிசையும் ஒள்ளுணர்வும்—மேவித்
திகழீழ நாட்டின் திலக மெனலாமால்
புகழுங் கலாநிலையப் பொற்பு.

---

*கற்றுவல்ல பெரியோர் அவைகளில் தாமும் கலந்து பயன் எய்துதற்குரிய நல்லறிவு பெறுதற்குக் காரணிகராகிய தந்தையார் அவர்களின் அருட்பெருக்கை நினைந்து நினைந்து உருகுதற்கு அறிகுறியாக அவ்வருட்கு உரைநடைக்கோவை—முதற் பகுதியைப் பண்டிதமணி உரிமைப்படுத்தியிருக்கிறார்.

## கரந்தைத் தமிழ்ச் சங்கத்திற்கு வாழ்த்து

போற்றுந் தமிழும் புலவரும் வாழ்கநலஞ்
சாற்றுங் கரந்தைத் தமிழ்ச்சங்கம்—ஏற்றமொடு
பல்லாண்டு வாழ்க அருள் பாலித் ததுபரக்கும்
எல்லோரும் வாழ்க இனிது.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் இருந்தபோது, தமிழிசை வெளியீடுகளுக்கெனப் பண்டிதமணி பலபாடல்களைப் பாடினார். ஆண்டுதோறும் நிகழும் **அண்ணாமலை அரசர் பிறந்தநாள் விழாவுக்கும்** அவர் மிகப்பல பாடல்களை இயற்றியிருக்கிறார். இவற்றின் தொகுதியைச் 'செட்டி நாட்டரசர் இசைமாலை' என்னும் நூலில் காணலாம். ஒரு சிலவற்றை மட்டும் இங்கே தருவோம்.

### வெண்பா

உலகத் தொருவ னுயர் கொடைக்கென் றேத
மலர்புகழ்சா லண்ணா மலைமன்—நிலவுமியல்
பூண்மங் கலத்தமிழாற் பொற்புறநாம் வாழ்த்துவமிந்
நாண்மங் கலஞ்சிறக்க நன்று;

### ஆசிரிய விருத்தம்

ஒப்புரவே முதலாய உயரறங்கள் பலபுரிந்திவ்
வுலகெ லாந்தன்
மெய்ப்புகழால் விளக்கமுற அப்புகழ்க்கும் அணிகல
னாய் விளங்கு மேலோன்
செப்பமுற அறத்தாற்றிற் பொருளீட்டி யின்பநுகர்
செல்வன் யார்க்கும்
எய்ப்பிடத்து வைப்பனைய இனியவனண் ணாமலையாம்
ஏந்தன் மாதோ

அவஞான மறத்துறந்த பட்டினத்துச் சாமியென
ஆன்றோர் போற்றுஞ்
சிவஞானச் செல்வனுயர் திருமரபின் முத்தையனுஞ்
சீமான் செய்த
தவஞானத் தாலுதித்தோன் பாற்கடலுட்
சலஞ்சலமாஞ் சங்கம் போல்வான்
நவமான மேதையினு லுலகமெலாம் பாராட்டு
நலத்தான் மிக்கான்.

மகிமைபெறு சலஞ்சலமீன் மணிபலவுட்
டலைமைபெறு மணிமுத் தென்னப்
புகலவுயர் குணநிறைந்த முத்தையனும் இளங்கோ
வைப் புதல்வ னுக்கொள்
தகவுடையான் றன்மதியாற் செயற்கரிய பலசெய்வான்
சாருங் கீர்த்தி
மிகவுடையான் அஞ்சாத விறலுடையண் ணுமலையா
மேதக் கோனே.

நல்லறிஞர் நெடிதாய்ந்து தன் பெயரா னுட்டியவிந்
நகராந் தெய்வ
மல்லன்மிகு திருத்தடத்தின் மலர்ந்தருள்வெண்
மலர்போ லோங்கும் [டாமரைநன்
பல்கலை சேர் தனிக்கழகம் நிறுவிய அண் ணுமலை
பரிசு நோக்கி [வேள்
எல்லையற வியவாதார் நயவாதார் இவ்வுலகி
லெவரே யம்மா!

அந்நாளின் முச்சங்கத் தரசுவீற் றிருந்ததமிழ்
அன்னைக் கன்றே
இந்நாளி லொதுக்கிடமு மிலதாயிற் றக்குறையை
யிலதாச் செய்வான்
முன்றுநின் றிக்கழகத் துறுசிறப்பி னிடனளித்து
முறையிற் போற்றும்
மன்னுவான் எங்கள்குல மணிவிளக்கண் ணுமலையா
மதிமிக் கோனே.

விண்டிகழ்மீன் பலசூழ விளங்குமதி யெனநிலனுள்
வேந்தர் வேந்தன்
கண்டசிறப் பினுக்கேற்பப் பற்பலவாம் பட்டமொடு
கவின மேலாக
கொண்டளித்த செட்டிநாட் டரசனெனும் பெரும் [பட்டங்
குலவப் பெற்றே
யெண்டிசையு மிசைவிளங்க வாழ்பவன் அண்ணுமலை
எங்கள் மன்னே. [யாம்

நல்லறமே தினநாடு நாயகன் அண் ணுமலையா
நங்கள் கோமான்
எல்லையிலாப் பெரும்புகழும் இருநிதியுங் கலையறமு
மினிதி ேேனுங்கி
மல்லன்மனை மக்களொடு சுற்றமெலாஞ் சூழவுயர்
வாழ்க்கை மன்னித்
தில்லைநடம் பயில்கூத்தன் றிருவருளா னீடூழி
சிறந்து வாழ்க!

மாட்சிமைசா லண்ணு மலைவள்ளல் தன்பெயராற்
காட்சி தருபல் கலைக்கழகம்— ஆட்சி
புரியும் இறையருளாற் பொன்றுதெஞ் ஞான்றும்
தரணிமிசை வாழ்க தழைத்து.

### நேரிசையாசிரியப்பா.

திருவளர் தெய்வத்து உருவளர் செந்தமிழ்
நிலமகள் நுதலில் திலகமா ஒளிரும்
வானூடு செல்வம் மலிதரப் பெற்ற
கானூடு காத்தான் எனும் பெயர் கவினிய
திருநகர்க் கண்ணே வருபெருஞ் செல்வன்
எத்திசை யும்புகழ் முத்தைய னென்னும்
மணிதரும் ஒளியென அணிதரு புதல்வன்
தோன்றிற் புகழொடு தோன்றுக வென்னும்
ஆன்றோ ருரைக்குச் சான்றாய்த் திகழ்வோன்
செல்வப் பெருக்கமுங் கொடையின் சிறப்பும்
நல்லியற் புலவர் சொல்லினுக் கடங்கா
எல்லைய வாக இயைதரப் பெற்றோன்
காலமுங் கருவியுங் கண்ணிய இடனும்
நூலோர் முறையின் நுண்ணிதிற் றேர்ந்து
தொடங்குமெக் கருமமும் மடங்க லின்றிச்
செவ்விதின் முடிக்கும் எவ்வமில் திறலினன்,
நாடுநன் னலம்பெற நாடிமற் றதற்குக்
கல்வியும் அறிவுங் கவின்பெற வளர்த்தலே
ஒல்லுவ தெனக்கண்டு ஓங்குதன் பெயரால்
நல்லிய லறிஞர் நவின்றுபா ராட்ட
மைந்தரும் மகளிரும் முந்துறீஇப் புகுதந்து
ஆங்கிலத் தொடுதமிழ் அனையபன் மொழிகளும்
இன்னிசைக் கலைகளும் இயல்பிற் பயில்தரப்
பல்கலைக் கழகம் பாங்குற நிறுவியோன்,
மட்டிலாப் பெருமையாற் செட்டிநாட் டரசென
மன்னவர் மன்னன் நன்னரின் வழங்கப்

பெற்றவன் நம்மனோர்க்கு உற்றவன் எங்கள்
கண்ணார் மணியெனக் கவின்றரு கீர்த்தி
அண்ணா மலையெனும் அரசுபல் லாண்டு
வாழ்க வாழ்க மண்மிசை வாழ்கென
இப்பே ரவைக்களத்து இயைபெருந் தலைவரும்
புலத்துறை முற்றிய நலத்துறை வோரும்
கலைபயில் மக்களும் நிலைபெற இயைந்து
கூத்துடை யவன்கழ லேத்தி
வாழ்த்துதும் இனிதே வாழ்த்துதும் இனிதே.

வாணிகத் துறையாற் றிருமகள் நலனும்
மாண்புறு பல்கலைக் கழகம்
பேணிய முறையாற் கலைமகள் நலனும்
பெற்றவன் ஒப்புர வறமே
பூணெனப் பொலியும் நெஞ்சினன் உலகில்
பொருவிலாப் பெருங் கொடை வள்ளல்
சேணுற விளங்குஞ் சீர்த்தியான் எங்கள்
செட்டிநாட் டரசன் வாழியவே.

நல்லியற் கவிஞர் நாவினுக் கடங்கா
நலம்பல செறிந்தவன் நாட்டிற்
பல்கிய மக்கள் அகவிரு ளொழிக்கும்
பல்கலைக் கழகமாம் பரிதிச்
செல்வனை யீன்ற புண்ணியத் தந்தை
செழிப்புறத் தமிழிசை வளர்க்கும்
மங்கிய கருணைத் தாயெனும் அண்ணா
மலைப் பெயர் வள்ளல் வாழியவே.

உள்ளத் திறலும் ஒழியா அருஞ்செயலும்
தெள்ளத் தெளிந்துரைக்குஞ் செம்மொழியும்—[அள்ளியள்ளி
வாரி வழங்குநம் வள்ளல்அண் ணாமலைமன்
பேரிசையும் வாழ்க பெரிது.

## அண்ணாமலைப் பல்கலைக் கழக வாழ்த்து

*கட்டளைக் கலித்துறை*

கண்ணார் மணியிற்புறப்போ ரெனும்பொருட் கார்பொழிந்த
தண்ணார் நிதிநீர்ச் செழிப்பிற் கலைப்பயிர் தான்வளர்க்கும்
அண்ணா மலைப்பல் கலைக்கழ கப்பே ரணிநிலையம்
விண்ணார் புகழொடு நாளுளு மோங்கி விளங்குகவே.

## அண்ணாமலை அரசர் உருவச் சிறப்பு

ஊக்கம் உறுதி உணர்ச்சி யருஞ்செயலின்
ஆக்கம் அறம்புகழன் பாண்மைமுதல்—நீக்கமறக்
காண்டற் கமைந்த கவினுறு அண்ணாமலைமன்
ஆண்டகையின் நல்லுருவ மாம்.

### வாழ்த்து

சீர்மலி கொடையால் அறிவினால் ஆற்றுஞ்
செயற்கருஞ் செயலினால் உலகிற்
பேர்மலி புகழாற் பல்கலைக் கழகம்
நிறுவிய பெருமைற் சிறந்தோன்
ஏர்மலி தருநல் இசைத்தமிழ் வளர்க்கும்
ஏந்தல்நம் செட்டிநாட் டரசாம்
நார்மலி யுளத்தண் ணாமலை வள்ளல்
நலமுற நீடுவா ழியவே.

பண்டிதமணி அவர்களுக்குக் காரைக்குடியில் நடந்த விழாவில் அண்ணாமலை அரசர் தம் கையால் பொன்னாடை போர்த்திப் பெருமைப்படுத்தினார். அப்போது பண்டிதமணி அவர்கள் பின்வரும் பாடலைப் பாடினார்கள்.

பொன்னாடை யொன்றோ புகழாடை யும்புனையும்
எந்நாளுங் கல்வி இனிதோங்கப்—பொன்னீயும்
அண்ணா மலைப்பே ரரசன், அருந்திறல், என்
கண்ணார் மணியனையான் கை.

பண்டிதமணி அவர்கள் கடைசியாக இயற்றிய திருவாசகம்—திருவெம்பாவை உரையில் அந்நூலை, கருமுத்து-தியாகராசச் செட்டியார் அவர்களுக்கு உரிமைப்படுத்திப் பின்வரும் பாடலைப் பாடி யிருக்கின்றனர்.

பெருந்திருவும் நுண்மதியும் பிறங்குமுயர் கலையறிவும்
பேணும் அன்பின்
தருங்கொடையும் நல்லறிவும் தனிப்புகழும் சைவ
சார்பும் பெற்றோன் [நெறிச்
திருந்தியசீர்க் கல்லூரி தன்பெயரால் மதுரைநகர்
சிறக்கக் கண்டோன்
பொருந்துமுயர் கருமுத்துத் தியாகராசன் எனப்பேர்
பூண்ட மேலோன்.

அன்னவன் இளமை தொட்டென்
ஆருயிர் நண்பன் ஆவான்
பன்னுமக் கேண்மைக் கேற்பப்
பாவையின் மணிவி ளக்கம்
என்னுமிந் நூலை யன்னாற்(கு)
இயைதர உரிமை யாக்கி
மன்னிய நலமீக் கூர
மனமுவந் தளிக்கின் றேனால்.

பண்டிதமணி அவர்கள் இறுதிக்காலத்தில் பாடிய பாடலுடன், இக்கட்டுரையை முடிப்போம்.

**தமிழ்நாடு** இதழ் வாழ்த்து.

நாடு நலம் பெருக நம்மரசு செம்மைபெற
வீடு தோறும் செல்வம் மிகமலிய—நாடும்
அமிழ்தா மொழியோ டருங்கலைகள் ஓங்கத்
**தமிழ்நாடு** வாழ்க தழைத்து.

# 17. கதிர்மணி விளக்கவுரை

திருவாசகம் உள்ளத்தை உருக்கும் ஓர் உயர்ந்த நூல். இதன் சிறப்பை உணர்ந்த பேராசிரியர் சுந்தரம் பிள்ளை அவர்கள் 'மனம் கரைத்து மலம் கெடுக்கும் வாசகம்' என்று கூறியுள்ளார். 'திருவாசகத்துக்கு உருகாதார் ஒரு வாசகத்துக்கும் உருகார்' என்ற பழமொழியை அறியாதாரில்லை. 'திருவாசகத்தை ஓதியும் உருகாத ஒருயிர் இருக்குமாயின் அதனைக் கல்லென்று கழறுதுமோ, அன்றி மண்ணென்று வகுக்குதுமோ, இரும்பென்று இயம்புதுமோ ? சொன்மின்கள் !' என்றார் மறைமலையடிகளார்.

இத்தகைய சிறப்பு வாய்ந்த நூலைப் பண்டிதமணி அவர்கள் இளம் பருவந்தொட்டே பன்முறை ஆழ்ந்தாழ்ந்து ஓதி உணர்ந்து உவகைக் கடலில் திளைத்திருக்கின்றார். பலகாலம் ஆராய்ந்து பயின்று வருங்கால் அதன்கண் தாம் கண்ட அரிய உண்மைகளைச் சொற்பொழிவு வாயிலாகவும் கட்டுரை வடிவமாகவும் பண்டிதமணி அவர்கள் வெளிப்படுத்தினர். இவற்றைக் கேட்ட, படித்த பேரறிஞரெல்லாம் பெரிதும் வியந்தனர் ; 'இவ்வளவு ஆழ்ந்த கருத்துக்கள் நூல் வடிவில் வெளிவரின் தமிழுலகுக்குப் பெரும் பயனளிக்கும் ; எனவே உரை எழுதி அருள வேண்டும்' என்று பண்டிதமணியை வேண்டினர்.

ரசிகமணி டி. கே. சி. அவர்கள் முதன் முறையாகப் பண்டிதமணி அவர்களின் சொற்பொழிவைக் கேட்ட

போது கூறியதாவது: ''அவர்களை முதல் முதல் பேசக் கேட்டது திருவாசகத்தின் பெருமையைப் பற்றியே. பண்டிதமணி அவர்கள் பாசுரத்தின் உள்ளக்கிடையில் திளைத்துப் பரவச நிலையில் நின்று பேசினார்கள். இது சாதாரணமாய் சாத்தியமாவதல்ல. 'தொழும்பரோடு அழுந்தி சேவடி பரவியவர்கள்' என்று யூகித்துக்கொண்டேன்.''

நாலாயிர திவ்யப் பிரபந்தத்திற்குப் பெரிய வாச்சான் பிள்ளை முதலிய பெரியோர்கள் எழுதியுள்ள பேருரைகளைப் பற்றி மகாவித்துவான் ரா. இராகவ ஐயங்கார் போன்ற வைணவப் பெரும் புலவர்கள் வாயிலாகப் பண்டிதமணி கேட்டனர். அவ்வுரையைத் தாமே படிக்க விரும்பினார். எனவே, இராகவ ஐயங்கார் அவர்களுடன் சில நாட்கள் அவ்வியாக்கியானங்களை ஆராய்ந்தறிந்தனர். இச்செய்தியை 'வளரும் தமிழ்' என்னும் சிறியேனின் நூலின் கையெழுத்துப்படியிலுள்ள ஒரு பகுதியைப் படித்த போது பண்டிதமணி அவர்கள் தெரிவித்தனர். பின்வரும் கருத்தையும் என் நூலில் சேர்த்துக்கொள்ளலாம் என்று கூறினர்.

'நம்பிள்ளை, நஞ்சீயர் (''வியாக்கியான சக்கரவர்த்தி'' என்று புகழ் பெற்ற) பெரியவாச்சான் பிள்ளை இவர்கள் நாலாயிர திவ்யப் பிரபந்தத்திற்கு மணிப்பிரவாள நடையில் உரை எழுதியுள்ளனர். ஆறாயிரப்படி முதலிய உரைகளில் பாசுரங்களின் ஆழ்ந்த பொருள்களை அவற்றின் நயம் புலப்படுமாறு இவர்கள் எழுதியிருக்கிறார்கள். மிக அரிய தமிழ்ச் சொற்கள் இவைகளில் பொதிந்து கிடக்கின்றன. இவை உபந்நியாசம் செய்வதைக் கேட்ட எழுத்தாளர்களால் பதம் பதமாகச் சோதித்து எழுதப்பெற்றவை. இந்த உரைகளில் ஒரு பாடலுக்கு உரை கேட்டுவிட்டால்,

மனம் வேறொன்றிற் செல்லாது. இவை வடமொழி தென்மொழி இரண்டிலும் ஒருங்கே தேர்ச்சியுடைய வரே யன்றி, பிறரால் எளிதில் பொருள் காண முடி யாத நிலையில் இருக்கின்றன. இவ்வியாக்கியானங் களில் எடுத்ததற்கெல்லாம் மேற்கோள் காட்டப்பட் டிருக்கிறது. முன் சொன்னதே பல இடங்களில் திருப்பிச் சொல்லப்பெற்றிருப்பதால், இந்நூல்களில் ஒழுங்கு முறை இல்லை யென்று சொல்லலாம். இந் நூல்களைப் போல, தேவாரம் முதலிய சைவ நூல் களுக்கும் 'வியாக்கியானம்' எழுத யாராவது முன் வருவார்களானால் அது வரவேற்கத் தகுந்த இலக் கியப் பணியாகும்'.

திருவாசகத்துக்குப் பேருரை எழுதவேண்டுமென்ற கருத்து, பண்டிதமணியின் மனத்தில் பல ஆண்டுகளாக வேரூன்றி யிருந்திருக்கவேண்டும். அத்திருப்பணிக்குத் தம்மைத் தகுதியாக்கிக்கொள்ள அவர் படித்த நூல்கள் பல.

திருவாசகத்துக்கு உரை எழுதத் துணிவது பெருந் தவறு என்று பலர் எண்ணினர். சென்ற நூற்றாண்டில் திருச்சிராப்பள்ளியில் பட்டாபிராம பிள்ளை என்ற தமிழ்ப் புரவலர் ஒருவர் இருந்தார். மகாவித்துவான் தியாகராசச் செட்டியாரவர்களின் பெரும் புலமையை அறிந்து அவர் பெரிதும் பாராட்டியவண்ணமாக இருந்தார். திருவாசகத் துக்கு உரை எழுத வேண்டுமென்று அடிக்கடி அவரை வேண்டினார். புலவரும் 'ஆகட்டும்; அவ்வாறே செய் வோம்' என்று பல நாட்கள் சொல்லி அவருக்கு நம் பிக்கையூட்டி வந்தார். ஒருநாள் இருவரும் எதிர்பாராத விதமாகக் காவிரிப் பாலத்தில் சந்தித்தனர். 'திருவாச உரை எவ்வளவு ஆகியிருக்கிறது?' என்றார் புரவலர்.

மகாவித்துவானுக்குக் கோபம் வந்துவிட்டது. "இதோ பாருங்கள். இன்னொரு முறை இப்படிக் கேட்டால், இக் காவிரியிலேயே விழுந்து என் பிராணனைப் போக்கிக் கொள்வேன். திருவாசகம் எங்கே? நான் எங்கே? அதற்கு உரை எழுத வேண்டுமென்றால் எவ்வளவோ படித்திருக்கவேண்டும். எத்தனையோ ஆற்றல்வேண்டும். விஷயம் தெரியாமல் 'எழுது', 'எழுது' என்று வற்புறுத்து கிறீர்களே" என்று தம் உள்ளக் கருத்தை வெளிப்படுத் தினர்.

மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்களிடம் கல்வி பயின்ற மாணவர்களில் சிறந்து விளங்கிய பெரும் புலவர் தியாகராசச் செட்டியார். அவரிடம் பிள்ளை அவர் களுக்குப் பெருமதிப்பு உண்டு. அத்தகைய பேரறிஞரே திருவாசகத்துக்கு உரை எழுத ஆற்றலில்லை என்று கூறு வாராயின், திருவாசகத்துக்கு உரை எழுதுவது அரிய செயல் என்பது தெரிகிறது.

இந்நூலுக்கு உரை எழுதுவதற்குத் தமிழில் பெரும் புலமை இருக்கவேண்டும். சைவ சாத்திர நூல்களில் ஆழ்ந்த பயிற்சி இருக்கவேண்டும். இலக்கண அறிவு வேண்டும். உரை எழுதும் ஆற்றல்வேண்டும். இவற்றுக் கெல்லாம் மேலாக இறைவனிடத்தில் நீங்காத அன்பு வேண்டும். இத்தனைத் தகுதிகளையும் ஒருங்கே பெற்றவர் நம் பண்டிதமணி அவர்களே.

பண்டிதமணி அவர்களின் தெய்வப்பற்று இங்கே குறிப்பிடத்தக்கது. உடற் குறையாலும் இரத்தக் கொதிப் பாலும் அல்லற்பட்டபோதும், இறைவனுடைய திருவடி யைப் பற்றிப் பேசும் திருவாசகத் தேனை மருந்தெனக் கொண்டார்; அல்லும் பகலும் திருவாசகப் பாக்களையே ஓதி உள்ளம் கசிந்தார்.

திருவாசகத்தைப் படித்தின்புற்ற டாக்டர் போப் என்னும் மேனாட்டறிஞர் ஆங்கில மொழியில் அதை மொழிபெயர்த்துத் தமிழ்த் தொண்டாற்றியுள்ளார். அப் பெரியார்க்குத் தமிழகம் என்றும் கடமைப்பட்டுள்ளது.

இத் திருவாசகத்திற்குத் தமிழில் உரை எழுதியவர் பலர். சைவ சமயப் பற்றில்லாதவர்களும் இந்நூலுக்கு உரை எழுதியிருக்கின்றனர். பண்டிதமணி தவிர ஏனைய சைவ அறிஞர்கள் எழுதிய உரைகளுள் குறிப்பிடத் தக்கவை மூன்று. இந்த உரைகளை எழுதிய அறிஞர்கள் — மறைமலையடிகள், கா. சுப்பிரமணிய பிள்ளை, நவநீத கிருஷ்ண பாரதியார்.

மறைமலையடிகள் திருவாசக அகவற் பாக்களுக்கு மட்டும் உரை எழுதியிருக்கிறார். இப்பேருரை அன்னாரது புலமைக்கும் சைவப் பற்றுக்கும் சிறந்த சான்றாக உளது. இவர் உரை எழுதியுள்ள பகுதியை விட்டு, பண்டிதமணி திருச்சதகத்திலிருந்து உரை எழுதத்தொடங்கினார். ஏனைய பகுதிகளுக்கு உரை எழுதிய பின்னர், அகவற் பாக்களுக் கும் உரை எழுத எண்ணிச் சில குறிப்புக்களைப் பண்டித மணி சேர்த்து வைத்திருந்தார்.

கா. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள் 1932-இல் திரு வாசக உரை எழுதத் தொடங்கினர். அப்போது அவர் பண்டிதமணிக்குப் பின்வருமாறு எழுதினார் :

'அடியேனைச் சித்தாந்த சமாஜத்தார் திருவாசகத் திற்கு ஒரு சிற்றுரை வரையப் பணித்தனர். அது செய்யப் பெரிதுந் தகுதி வாய்ந்தவர்கள் தாங்களே. எனினும் எம் போலியர் ஆசைபற்றி எடுத்துக் கொண்ட வேலைக்குப் பெருந்துணை புரிவான், தங்கள் குறிப்புக்களை அனுப்பியுதவுமாறு வேண்டுகிறேன்.'

கா. சு. பிள்ளை அவர்கள் விரும்பியவாறே, பண்டித மணி அவர்களும் ஒரு சில குறிப்புக்களை அனுப்பியிருக்க வேண்டும். இக் குறிப்புகள் கா. சு. பிள்ளை அவர்களின் உரை நூலின் இறுதியில் தரப்பெற்றுள்ளன.

நவநீதகிருஷ்ண பாரதியார் அவர்களுடைய திருவாசக உரை பண்டிதமணி அவர்களின் உரைக்குப் பின்னரே வெளிவந்தது; எனவே அதைப்பற்றி இங்கே குறிப்பிட வேண்டுவதில்லை, அவ்வுரையாசிரிய ரவர்கள் பண்டிதமணி கதிரேசச் செட்டியார் அவர்களின் பிரிவைக் கேட்டுச் செயலற்ற நிலையில் பாடிய பாக்களுள் ஒன்றினை இங்கே காண்க.

அஞ்சொ டுக்கி அன்புநெ றிப்படுத்(து)
ஆனந் தக்கடற் குள்ளமூழ்ந் தச்செயும்
''நெஞ்சு ருக்கி'' யாகுந்திரு வாசக
நின்ம லத்தமிழ் மாமறை நூல்தனக்(கு)
எஞ்ச லில்சைவ சித்தாந்த மார்க்கத்திற்(கு)
ஏற்றும் பேருரை எங்களுக் கீகையின்
மஞ்சனே கதிரேச மகிபனே
மறைந்தொ ளிப்பது மாயம தாகுமே.

திருவாசகத்திற்கு உரை எழுதப் பல ஆண்டுகளாகத் திட்டமிட்டு, பின்னரே பண்டிதமணி எழுதினார்கள். 'யான் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பேராசிரியனாகத் தொண்டாற்றியபோது இந்த உரை மலர் முகிழ்த்து மலரத் தொடங்கியது......அண்ணாமலைப் பல்கலைக் கழகம் வாழவேண்டுமானால், இந்த அறிவுச் சுடர் விளக்கம் எழுவதற்கு இடங் கொடுத்த ஒன்றே போதும்' என்று பன்மொழிப் புலவர் தெ. பொ. மீனாட்சி சுந்தரனார் கூறியுள்ளார்.

வாழ்நாள் முழுவதும் தம் உள்ளத்திலே ஊறிக் கிடந்த கருத்துக்களையே பண்டிதமணி அவர்கள் தொகுத்தும் வகுத்தும் விளக்கியும் அந்திமாலையில் அரும்பணியாற்றினர். எனவே பண்டிதமணி அவர்கள் தாம் எழுதிய திருவாசக உரைச்குக் **கதிர்மணி விளக்கம் என்னும் பேருரை** என்று பெயரிட்டது மிகப் பொருத்தமாகும். உரை ஆசிரியரின் இயற்பெயர், சிறப்புப் பெயர் ஆகியவற்றின் முன்னதன் முதலும் பின்னதின் இறுதியும் இயைந்து, **கதிரேசராகிய பண்டிதமணி** வழங்கிய விளக்கவுரை என்று பொருள் படுமாறு இப்பெயர் அமைந்துளது.

பண்டிதமணி அவர்கள் திருச்சதகம், நீத்தல் விண்ணப்பம், திருவெம்பாவை ஆகிய மூன்று பகுதிகளுக்கும் உரை எழுதியிருக்கின்றனர்; இவை தனித்தனி நூல்களாக வெளிவந்துள. அவர்கள் இறுதியாக, திருவம்மானையில், 'செங்கணெடுமாலும்', 'பாரார் விசும்புள்ளார்', 'இந்திரனும் மாலயனும்' என்னும் மூன்று பாடல்களுக்கும் எழுதியிருக்கும் உரைகள் வெளிவரவில்லை.

கதிர்மணி விளக்கவுரையின் சிறப்பைப் பாராட்டாத தமிழறிஞரே இல்லையெனலாம். பல அறிஞர்கள் தெரிவித்த மதிப்புரைகளைத் திரட்டி ஒருநூல் வெளியிடப் பெற்றிருக்கிறது. அதனின்றும் சில பகுதிகளைத் தருவோம்.

'பரிமேலழகர், பேராசிரியர், அடியார்க்கு நல்லார், நச்சினார்க்கினியர் முதலிய பல உரையாசிரியர்கள் கண்ட உரை நுட்பங்களை எல்லாம் மிக நன்குகப் பயின்று, ஆழ்ந்த சிந்தனையோடு அவைகளைத் தக்கவாறு பயன் படுத்தியுள்ளது இவ்வுரையாசிரியரது நுண்ணறிவை நமக்குப் புலப்படுத்துகிறது......சைவசித்தாந்த சாத்திரக் கருத்துக்களுக்கு இது ஒரு பெருங் களஞ்சியமாகும்.

இவ்வுரையைப் பன்முறை பயில்வோருக்கு இக்கருத்துக்கள் எளிதில் விளங்குவதோடு இவற்றின் நுட்பமும் சிறப்பும் பயனும் நன்கு புலப்படும்' என்று சைவப்பேரறிஞர் ம. பாலசுப்பிரமணிய முதலியார் அவர்கள் கூறியிருக்கின்றனர்.

இவ்வுரை அமுதத்தைப் பருகிய திரு. வி. க. அவர்கள் :

> இற்றை ஞான்று இளம்பூரணர், சேனாவரையர், பேராசிரியர், நச்சினார்க்கினியர், பரிமேலழகர், சிதம்பர சுவாமிகள், சிவஞான முனிவர் முதலியோர் ஓர் உருக்கொண்டு, கதிரேசச் செட்டியாராகத் தோன்றினர் என்று கூறலாம். 'கதிர்மணி விளக்கம்' ஒரு தமிழ்க் கலங்கரை விளக்காய்ப் புலவர்க்குத் துணை புரியும் பண்பு வாய்ந்தது; பெயருக்கேற்ற பொருண்மை யுடையது

என்று பாராட்டியுள்ளார்.

> 'திருவாசகம்—கதிர்மணி விளக்கம் என்னும் பேருரை, மாதவச் சிவஞான முனிவர் அவர்கள் சிவஞான போதத்துக்கெழுதிய மாபாடியம் போன்று, சித்தாந்தச் செந்தமிழ் உலகை வாழ்விக்கும்'

என்று ஈழநாட்டுப் பேரறிஞர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

பண்டிதமணி அவர்கள் திருவாசகத்தில் சில பகுதிகளுக்கு மட்டிலுமே உரை எழுதியிருக்கின்ற போதிலும், அப்பகுதிகளின் உரையிலேயே பிற்பகுதியிலுள்ள சில பாடல்களுக்கும் உரை கூறியுள்ளார். இச் சிறப்புக்களையெல்லாம் நோக்க, நூலாசிரியரோடு ஒத்த பாராட்டுக்குரிய உரையாசிரியர் என்று பண்டிதமணியைப் போற்றலாம்.

திருவாய் மொழிக்கு மிகச்சிறந்த உரை நம்பிள்ளை அருளிய ஈடு முப்பத்தாறுயிரப்படி என்பது. இதில் ஒரு பாடலுக்கும் அடுத்த பாடலுக்கும் உள்ள தொடர்பு ஒரு சங்கிலித் தொடர் போலப் பொருத்தமாக எடுத்துக் காட்டப் பெற்றிருக்கிறது.

பண்டிதமணி அவர்களும் இம்முறையைக் கையாண்டிருக்கின்றனர்; ஒவ்வொரு பாடலுக்கும் கருத்துரை, பதவுரை விளக்கவுரை என மூன்று உரைகளை எழுதியிருக்கின்றனர். விளக்க உரையில் சொல் நயம், பொருள் நயம் ஆகியவையும் தக்க மேற்கோள்களும் இலக்கண அமைதியும் எடுத்துக் காட்டப் பெற்றுள.

இனி, திருச்சதகப் பகுதி உரையின் சிறப்பைக் கூறுவோம்.

திருச்சதகம் என்பது ஒவ்வொன்றும் 10 பாடல்களையுடைய 10 பிரிவு கொண்ட நூறு திருப்பாட்டுக்களாகும். பண்டிதமணி அவர்கள் இப்பத்துக்களைப் பதிகமெனப் பெயர்தந்து சதக நுதலிய பொருள், பதிக நுதலிய பொருள் எனப் பகுத்துககொண்டு திருப்பாட்டு ஒவ்வொன்றையும் அப் பொருள்களோடு இயைத்து விளக்கியிருக்கின்றனர்.

'ஏனையாவரும்' எனத் தொடங்கும் 38-ஆம் திருப்பாட்டுக்குப் பண்டிதமணி தெரிவித்துள்ள உரை மிகச் சிறப்புடையதாகும். சிவத்தைத் தேனென்றும் ஆனெய் என்றும் கரும்பின் இன்தேறல் என்றும் கூறுவது எவ்வாறு பொருந்துமெனக கேள்வி ஒன்றை எழுப்பி, அதற்கு அடிகளின் அருளனுபவத்தைக் காட்டி அமைதி கூறியிருக்கின்றனர்.

'தேனை ஆனையைக் கரும்பினின் தேறலை': தேன் பால் கன்னல் இம்மூன்றனையும் இனிமையிற் சிறந்த பொருள்களாகக்கொண்டு, இறைவனுக்கு ஒப்பிட்டுப் பெரும்பாலும் இம்முறையிற் கூறுதலைப் பலவிடங்களிலும் காணலாம். "தேனையும் பாலையும் கன்னலையும் ஒத்தினியகோன்" என்பது முதலிய இடங்களிற் காண்க. இறைவன், "அருமையில் எளிய அழகே" என்று கூறியபடி, தேவர், முனிவர் முதலியோரும் அரிய தவம் செய்தும் காணுதற்கரிய பொருளாகவும் தூய அன்பு நெறியில் ஒழுகும் அடியவர்க்கு எளிய பொருளாகவும் உள்ளான் என அறிகின்றோம். அடியவர், "பெறவே வேண்டும் மெய்யன்பு" என்றபடி, ஆண்டவ னிடத்து அன்பைப் பெருக்கிக்கொள்வாராயின், இறைவன் அன்பு வலையில் தானே வந்து படுவன் ஆவன். அங்ஙனம் வலிய வந்து முதலில் எளிய னாய்த் தன் கருணைத் தேன் காட்டி, அவ் அடியவரைத் தன் வயப்படுத்துத் தான் அரிய தன்மையைப் படிப் படியாக உயர்த்திக் காட்டித் தன் இன்ப வெள்ளத் தில் திளைக்கச் செய்வன் என்பது பெரியார் கண்ட உண்மை அனுபவம். ஒரு குழந்தைக்கு இனிமை மிக்க எளிய பொருளை முதலில் காட்டி நுகர்வித்து, அதன்மேல் சிறிது சிறிதாக உயர்ந்த பொருள்களை உண்பித்து உடலுக்கு நலம் செய்வார்போல, மெய் யன்பர்க்கு ஆண்டவன் முதலில் எளியனாய்க் காட்சி யளித்துப் படிப்படியாகத் தன் அரிய நிலையையும் உணர வைத்து, முடிவில் இன்பத்துள் திளைப்பித்து, அவர் தம் உயிர்க்கு நலம் செய்பவன் ஆவன் என்க. இம்முறையில் அடிகளுக்கு ஆண்டவன் தன் இயல்பை முதலில் எளிமையில் காட்டி, ஈர்த்துப் படிப்

படியாக அருமை நிலையை உணர்த்தி ஆட்கொண் டதைப் புலப்படுத்துவாராய், "தேனே ஆனெயை" எனத் தொடங்கி, முறையே கூறுவாராயினர். தேனைப் பெற்றவுடன், அடுதல் முதலிய செயற்படுத்தாமல் இனிமை தோன்ற எளிதில் உண்ணலாம். "ஆனெயை" என்றமையால் பசுவினிடத்தினின்றும் நெய் பெறவேண்டுமானால், பாலை அடுதற் செயற்படுத் துத் தயிராக்கிப் பெறல் வேண்டும். கரும்பின் இன் தேறல் என்புழி, தேறல் ஆகுபெயராய்க் கட்டியை உணர்த்தும். கரும்பின் தேறல் பெற வேண்டுமானால். கரும்பை ஆலையில் இட்டுத் தெளிந்து சாறு எடுத்து, அடுதற் செயலாற் கட்டியாக்கிப் பெறவேண்டும். ஈண்டுக்கூறிய தேன் நெய் கருப்புக்கட்டி இம்மூன் றும் இனிமைச் சுவையில் ஒன்றுபட்டிருந்தாலும், முன் னதை நோக்கப் பின்னது அரிதிற் பெறத்தக்கதாக இருத்தல் அறியத்தக்கது. தேனே என அடைமொழி அன்றியும் ஆனெயை, கரும்பின் இன்தேறலே என துமற்றைய இரண்டிற்கும் அடைமொழி புணர்த் ம்படி கூறியது தேன் ஆக்குஞ் செயல் ஈக்களுக்கே அன்றியும் மக்களுக்கு இன்றென்பதும், நெய்யும் கருப் புக்கட்டியும் ஆக்குஞ் செயல் மக்களுக்குரியன என்பதும் புலப்படுத்தற்கென்க.

திருச்சதக உரைக்கு 20—5—1950-இல், சென்னை தமிழ் வளர்ச்சிக் கழகத்தார், ஆராய்ச்சித் துறையில் வெளியான சிறந்த நூலுக்கு உரிய பரிசை வழங்கினர். அந்த ஆண்டில் கோயமுத்தூரில் நடைபெற்ற தமிழ் விழா வின் இலக்கியப் பகுதிக்குத் தலைமை தாங்க. வேண்டுமென்றும் பண்டிதமணியை வேண்டியிருந்தனர். கோவை நகராண்மைக் கழகம் அவர்கட்கு வரவேற்பிதழ்

வழங்க முடிவுசெய்தது. ஆனால், பண்டிதமணி அவர்கள் அப்போது மிகவும் உடல் நலிவுற்றிருந்த காரணத்தால், மகிபாலன்பட்டியைவிட்டுவெளிச் செல்லஇயலவில்லை. திருவாசகப் பாடல்களை ஓதியவண்ணமாகவே இருந்து, ஓரளவு மன நலம் பெற முயன்று வந்தனர்; மாணிக்கவாசக சுவாமிகளுடைய அருளே கண்ணாகக் கொண்டும், அடிகள் திருவுருவத்தையே இடையறாது நினைவுகூர்ந்தும் வந்தனர்.

பண்டிதமணி அவர்கள் தமிழ் விழாவுக்கு வர இயலாமலிருந்ததை அறிந்து கோவைப் பெருமக்கள் எல்லையற்ற வருத்தம் அடைந்தனர். டாக்டர் சர் ரா. க. சண்முகம் செட்டியார் அவர்கள் பண்டிதமணிமீது பெருமதிப்பு வைத்திருந்தார்கள். அதுபோலவே, திவான் பகதூர் சி. எஸ். இரத்தினசபாபதி முதலியார் அவர்களும் பண்டிதமணியின் இனிய நண்பராக இருந்து வந்தார்கள். பண்டிதமணியின் உடல் நலமின்மை அவர்களைத் துயரத்தில் ஆழ்த்தியது.

அந்த ஆண்டு முழுவதுமே, பண்டிதமணி அவர்களின் உடல்நிலை கவலைக்கிடமாகவே இருந்தது. அன்பர் பலர் அவர்களைக் காண, மகிபாலன்பட்டிக்குச் சென்ற வண்ணமாக இருந்தனர். சென்றவர்கள் எல்லோருமே திருச்சதக உரையின் சிறப்பைப் பாராட்டினர். அதைப் போலவே, இனிய அழகிய நடையும், ஆழ் பொருள் விளக்கமும், சொற்பொருட் சுவைநயமும், சமயப் பொருட் குறிப்புக்களும், அரிய இலக்கண அமைதிகளும் செறிந்து விளங்கும் உரையை ஏனைய பகுதிகளுக்கும் எழுதியருள வேண்டுமென்று யாவரும் கேட்டுக் கொண்டனர்.

இந் நிலையில் திருச்சதகத்திற்கு அடுத்த பிரிவான நீத்தல் விண்ணப்பத்தின் உரை வெளிவந்தது. அந்நூலின்

முன்னுரையில், டாக்டர் ரா. க. சண்முகம் செட்டியார் அவர்கள் பின்வருமாறு கூறியுள்ளார்கள்

இந்த அருமையான நூலிலுள்ள ஆழ்ந்த கருத்துக்களைச் சாமான்யத் தமிழன் ஒரு துணையில்லாமல் தெரிந்து கொள்ளுவது கடினம். பண்டிதமணி அவர்கள் அத் துணைவராய்த் தோன்றியிருக்கிறார்...... பொருள் தெரிந்து பாடவும் கேட்கவும் வல்லவர்கள் தான் பேரின்பம் அடைவர் . ...நீத்தல் விண்ணப்பத்தின் பொருளை நன்றாய் அறிந்து எல்லோரும் பேரின்பம் அடையவேண்டுமென்று, பண்டிதமணி அழகான இந்த உரையை நமக்குத் தந்துள்ளார். உரை எளிய நடையில் எழுதப்பட்டிருக்கின்றது. சொல்லின் பொருளையும், சொல் நயத்தையும், பொருள் நயத்தையும் விளக்கியிருக்கின்றார். கருத்துரை பாட்டைத் தெளிவுபடுத்துகின்றது. பதவுரை சொல்லின் பொருளை எடுத்துக்காட்டுகின்றது. விளக்கவுரை சொல்லின் நயத்தையும், பொருளின் நுட்பத்தையும் விளக்கிக் காட்டுகின்றது. இதுதான் உரையாசிரியர்கள் கையாளவேண்டிய சரியான முறை. இம்முறையில் தமிழ் இலக்கிய நூல்களுக்கெல்லாம் உரைகள் வெளிவந்தால்தான் தமிழ் மறுமலர்ச்சியின் பயனைத் தமிழ்மக்கள் அடையலாம்.

இனி, நீத்தல் விண்ணப்பத்திலுள்ள பாடல் ஒன்றையும், அப்பாடலின் ஒரு பகுதிக்குப் பண்டிதமணி கூறியிருக்கும் விளக்கவுரையையும் காண்போம் :

'வளர்கின்ற நின்கரு ணைக்கையில்
வாங்கவு நீங்கியிப்பால்
மிளிர்கின்ற வெள்ளை விடுதிகண்
டாய்வெண் மதிகொழுந்தொன்

ஒருளிர்கின்ற நீண்முடி யுத்தர
கோசமங் கைக்கரசே
தெளிகின்ற பொன்னுமின் னும்அன்ன
தோற்றச் செஞ்சுடரே

மதிக்கொழுந்து-பிறை. 'மதிக்கொழுந்து ஒன்று ஒளிர்கின்ற நீண்முடி' என்றது அடைக்கலம் புகுந்தாரைத் தலையால் தாங்கிக் காக்கும் அருட்குணம் உடைமையைப் புலப்படுத்துவதாகும். தெளிகின்ற பொன்—வேற்று உலோகக் கலப்பாலாகிய மாசு நீங்கிய மாற்றுயர்ந்த பொன். 'தெளிகின்ற' என்னும் அடையை 'மின்' என்பதனோடும் இயைத்து முகிற் படல முதலியவற்றால் மறைவு படாத மின்னற்கொடியெனவுங் கொள்ளல் வேண்டும். தோற்றம்—கட்பொறியால் வரம்பிட்டுப் பற்ற இயலாத காட்சி. அத்தகைய இறைவனது பேரொளிப் பிழம்பிற்கு 'உயர்ந்ததன் மேற்றே யுள்ளுங்காலை' என்னும் விதிப்படி உவமங் கூறுதல் இயலாத தொன்றாதலின், காணப்பட்ட பொருள்களிற் சிறந்த பொன்னையும் மின்னையும் கூறுவாராயினர். நிறத்திற்குப் பொன்னும் ஒளிக்கு மின்னுங் கூறப்பட்டன. அன்பர்க்கு வழங்க வழங்கக் குறையாமல் மேன்மேலும் நிறைந்திருத்தல் பற்றி 'வளர்கின்ற கருணை' என்றார். தன் கருணை அள்ளக் குறையா அரன்' என்பதும் காண்க. 'குறைவிலா நிறைவே' என்று அடிகள் பிறிதோரிடத்துக் கூறியதற்கும் இதுவே கருத்தாதல் அறிக. வாங்குதல்—வளைத்துப் பிடித்தல். உலகத்தில் ஒருவனை வளைத்துப் பிடித்தல் துன்புறுத்தற் பொருட்டுமாம். ஈண்டு அஃது இறைவன் திருவுள்ளம் அன்றென்பதைப் புலப்படுத்தற்கு, 'கருணைக் கையில் வாங்கவும்' என்றார். உம்மை சிறப்புப் பொருட்டு.

ஐந்தாம் பாட்டில், 'வழி நின்று நின்னருள் ஆரமு தூட்ட' என்னும் சொற்றொடரின் பொருட் சிறப்பைக்காண் போம்.

'வழி........இவ்வுலக வாழ்க்கையை நோக்கி யடையும் நெறி. அந்நெறியிற் செல்ல விடலாகா தென்று கருணை காரணமாக ஆண்டவன் தம்மை மறித்து நின்றமை தோன்ற 'நின்று' என்றார். ஒருவனை வழிமறித்தல் அவனைத் துன்புறுத்திக் கைப்பொருளைக் கவர்தற்கன்றே நிகழ்வது? இவ்வுலக நிகழ்ச்சிக்கு மாறாக இங்கே ஆண்டவன் என்னை வழி மறித்துத் தடுத்து, பெறுதற்கரிய தன் அருளமுதத்தை எனக்கு ஊட்டுதற் பொருட்டு என்பார். 'நின் அருளார் அமுதூட்ட' என்றார். ஈதல் தருதல் முதலிய சொற் களின்றி ஊட்ட என்றது, அருளமுதத்தைக் கையிற் கொடுத்தால் அதன் அருமை அறியாமல் உண்ணாது உகுத்து விடவும் கூடுமென்று திருவுளம் கொண்ட மையான் என்க.'

இம்மாதிரியான விளக்கவுரை எழுதுவதற்குப் பண் டிதமணி அவர்களைத் தவிர வேறொருவராலும் இயலாது என்பது கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்களு டைய முடிந்த முடிபு. சைவப் பழமாக விளங்கிய கவிமணி அவர்கள் திருவாசகப் பாடல்களைப் பாடியும் பண்டிதமணி யின் உரைகளைப் படித்தும் பெருமகிழ் வெய்தியவர்கள். நீத்தல் விண்ணப்ப உரையைப் படித்தபின் அவர்கள் பின்வரும் பாடல்களைப் பண்டிதமணிக்கு எழுதியனுப்பி னார்கள்:

பண்டிதர் போற்றுமகா பண்டிதா! நின்னையெதிர்
கண்டதுபோ லுள்ளம் களிப்படைந்தேன்—தண்டமிழ்
வித்தகர்க்கு வாய்த்த விருந்தாம் மணிவிளக்கப்
புத்தகமென் கைவந்த போது.

வித்தகர்க் கமுதாம் நீத்தல்
விண்ணப்ப உரையின் பாலுன்
பத்தியின் ஆழங் கண்டேன்
பசுந்தமிழ் இனிமை கண்டேன்
புத்தியின் நுட்பங் கண்டேன்
புலமையின் வளமுங் கண்டேன்
உத்தம உரைநீ தந்த
உரையெனற் கைய முண்டோ?

## உரைச் சிறப்பு

வையகம் போற்றுதிரு வாசகத்தின் உட்பொருளைக்
கையிற் கனியாகக் காட்டினனால்—செய்யதமிழ்ப்
பேரா சிரியர் பெருமான் கதிரேசன்
ஆராய்ந்து முற்றும் அறிந்து.

வாசக மெல்லாம் மணிவா சகமாமோ?
காசெல்லாம் காணும்பொற் காசாமோ ?—பேசுலகில்
மன்னுமுரை யெல்லாம் மகிபால மாநகரான்
சொன்னவுரைக் கீடாமோ? சொல்.

புத்தி நுட்பங் கண்டேனுன்
புலமை கண்டேன் சிவநெறிசேர்
பத்தி கண்டேன் செந்தமிழின்
பாகின் இனிய சுவைகண்டேன்
சித்தம் மகிழ்ந்து நண்பாநீ
செய்த கதிர்மா மணிவிளக்கை
எய்த்த நாளில் வைப்பாக
எண்ணிப் போற்றி வாழ்வேனே.

தெய்வ மறையாம் திருவா சகப்பொருளை
ஐயமறக் காட்டும் அணிவிளக்கம்—வையமிசைச்
செந்தமிழைக் கற்றுத் தெளிந்த கதிரேசன்
தந்த மணிவிளக்கம் தான்.

## நூல் வாழ்த்து

கல்லைப் பிசைந்து கனியாக்க வல்லான்எம்
தில்லைப் பெருமான் திருவருளால்—கல்லவொரு
வாடா விளக்காக வாழ்க மணிவிளக்கம்
நீடாழி சூழும் நிலத்து.

## ஆசிரியர் வாழ்த்து

வண்டமிழ் நாட்டுக்கு வாய்த்த மணிவிளக்கம்
கண்ட கதிரேசன் கண்டதுபோல்—மண்டுபுகழ்
வாதவூர் அண்ணல் மனங்கண்ட மாதவரிப்
பூதலத் துண்டோ் புகல்.

இன்னமுதச் செந்தமிழ்நூல் இன்னும் பலகண்டு
மன்னுநலம் பேணிநிதம் வாழியவே—துன்னுபுகழ்ப்
பேரா சிரியர் பெருமான் கதிரேசன்
நீராழி சூழும் நிலத்து.

திருச்சதக உரையும் நீத்தல் விண்ணப் உரையும் இவ்வாறு புலவர்களால் பாராட்டப்பெற்றன ; பொது மக்களாலும் அவை விரும்பிப் பயிலப் பெற்றன. இத்தகைய ஆதரவு இருந்து வந்ததால், தம் முதுமைத் தளர்ச்சியைப் பண்டிதமணி பொருட்படுத்தவில்லை ; தொடர்ந்து திருவெம்பாவைக்கு உரிய விரிவுரையை எழுதினர்.

திருவெம்பாவை உரையில் திருவெம்பாவை வரலாற்றையும் தைந்நீராடல், மார்கழி நீராடல் பற்றிய செய்திகளையும் பண்டிதமணி விளக்கிக் கூறி யிருக்கிறார்கள். அண்ணுமலைப் பல்கலைக்கழகத் தமிழ் ஆராய்ச்சித் துறைவிரிவுரையாளர் புலவர் க. வெள்ளைவாரணனார் அவர்கள், திருவெம்பாவை உரைக்கு எழுதியுள்ள முன்னுரையில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்கள்:

'அவ்வப்பருவத்து மகளிர் உள்நிலைக்கேற்ப அவர்கள் ஆண்டவன்பாற் கொள்ளவேண்டிய அன்பினைப் புலப்படுத்தி அவர்தம் உரையாடற்பொருளை விரித்துரைக்கும் முறையில் இவ்வுரை யமைந்துளது. இவ்வுரையாசிரியர் ஒவ்வொரு பாடலிலும் அதனைக் கூறினோர் கேட்டோர் ஆகியவர்களின் மன நிலையினையும் பிறசூழல் நிலைகளையும் பாட்டின்கண் அமைந்த சொற்குறிப்பின் துணைகொண்டு உலகியல்நிலைக்கேற்ப விரித்துரைக்குந் திறம் வியந்து போற்றுதற்குரியது.'

இனி, திருவெம்பாவைப் பாடல் ஒன்றையும் மேற்குறித்தவாறு அதற்குப் பண்டிதமணி அவர்கள் எழுதியுள்ள வியத்தகு உரையையும் தருவோம்.

ஒண்ணித் திலநகையாய் இன்னம் புலர்ந்தின்றோ
வண்ணக் கிளிமொழியா ரெல்லாரும் வந்தாரோ
எண்ணிக்கொ டுள்ளவா சொல்லுகோம் அவ்வளவும்
கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக் கொருமருந்தை வேத விழுப்பொருளைக்
கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்துள்ளம்
உண்ணெக்கு நின்றுருக யாமாட்டோம் நீயேவந்
தெண்ணிக் குறையில் துயிலேலோ ரெம்பாவாய்

(வி—ரை) :—மிக்க தூக்கமுடையாளாய்த் தன்னை மறந்து படுக்கையிற் கிடக்கும் ஒருத்தியை, எழுப்ப வந்த பெண்கள் பார்க்குங்கால், அவள் வாயைச் சிறிது திறந்து பற்கள் வெளிப்படக்கிடந்த நிலையைக் கண்டு "ஒண்ணித் திலநகையாய்" என்று விளித்தனர் என்க; இதன் முன்னைத் திருப்பாட்டில் கூறப்பட்ட பெண்ணை விளிக்குங்கால், அவள் பண்டைநிகழ்ச்சியைக் குறிக்கொண்டு, பல் விளக்கி நீராடி உடற்றூய்மையுடையளாம் இயல்பு குறித்து உவமைக்கு அடையின்றிப் பொருளுக்கு அடைபுணர்த்து "முத்தன்ன வெண்ணகையாய்" என்று விளித்தனர். இதன்கண் பல்லின் இயற்கை நிறம் காணப்பட்டமையால் பல் விளக்குதல் முதலிய தூய்மை யின்மை தோன்ற உவமைக்கு ஒளியுடைமையாகிய அடையைக் கூறிப் பொருளுக்கு ஏதும் அடை புணர்க்காமற் கூறி விளித்தனர் என்க.

புலர்தல்—விடிதல். இன்னும் விடியவில்லையோ என்ற குறிப்பு இருணீங்கி விடியும் நிலையிலும் அவள் மிக்க உறக்கத்திற் கிடத்தலைப் புலப்படுப்பதாகும். புலர்ந்ததின்று என்பது விகாரத்தால் புலர்ந்தின்று என்றாயிற்று. ஓகாரம் வினாப்பொருட்டு; எதிர்மறையுமாம். இவ்வாறு கூறிய அளவிற் படுக்கையிற் கிடந்தவள் எழாமல் கிடந்தவாறே வந்தவர்களை நோக்கி என்னை எழுப்ப இத்துணைப்பேர் வருவோமென்று சொன்னீர்களே அத்துணைப் பெண்களும் வந்துவிட்டார்களோ என்பாள் "எல்லோரும் வந்தாரோ" என்றாள் என்க. இவ்வினா மீண்டும் துயிலுதலின் விருப்பத்தைப் புலப்படுத்துவதாகும். எழுப்பியவர் பேச்சு எழுப்பப்பட்டவளுக்குக் கடுமொழியாக இருந்தமையால் அவள் "என் தோழிமாராகிய நும்முள்

இனிமையாகப் பேசுவாருமுளரே அன்னார் இக்குழு வில் இலரோ'' என்பான் "வண்ணக்கிளிமொழியார்'' என்ருள் என்பது.வண்ணம் மகளிர்க்கும் பொருந்துவ தாகும். அழகுடையவர் என்றது, "இலங்கெழிலளவு குணமென வுரைப்பர்'' என்றபடி நற்குணங்களையும் புலப்படுத்தும் குறிப்பாகும். ஆகவே நற்குணங்களும் இனியன மொழிதலுமுடையார் இக்கூட்டத்திற் கலந் திலர் என்பது வினவின் குறிப்பாகும். இவ்வாறு வினவிய பெண்ணின் இயல்புணர்ந்து அவளுக்குத் தக்கவாறு எழுப்பியவர் விடை கூறுவாராயினர். யாம் முதலில் எண்ணிக் கணக்கிட்டுக்கொண்டு பின்னர் நினக்குத் தெரிவிப்போம் என்பார் "எண்ணிக் கொடுள்ளவா சொல்லுகோம்'' என்றனர். "கொண்டு'' என்னும் துணைவினை "கொடு'' என்ரு யிற்று. வரவேண்டியவரெல்லோரும் குறைவற வந்த னர் ஆயினும் வரையறுத்து வினவும் நினக்கு விடை யிறுக்க எண்ணிக்கொண்டு தெரிவிப்பதே நலம் என்று அவர் கருதினர் என்பது வந்தவர் தம்மவரை எண்ணிக் கணக்கிட்டாலும் சொல்லுதலில் தவறின் ருமோ என்னும் ஐயந்தோன்று மாதலின், அதனைப் பரிகரிக்க உள்ளவா சொல்லுகோம் என்றனர் என்க. "உள்ளவாறு'' என்பதுவிகாரத்தால் உள்ளவா என்ரு யிற்று. எண்ணிக் கணக்கிட்டுச் சொல்லும் அத்து ணைக் காலம் வரையும் நீ பொய்யுறக்கங் கொண்டு இறைவன் புகழ் பாடுதற்குரிய இவ் அருமைக் காலத் தைப் பயனின்றிக் கழித்தல் ஆகாதென்பார், 'அவ் வளவுங் கண்ணைத் துயின்று அவமே காலத்தைப் போக்காது' என்றனர் என்பது. 'கண்ணைத் துயின்று' என்புழித் துயில்வித்து எனப் பிறவினையாகக் கோடல் வேண்டும். பொய்யுறக்கங் கொண்டு என்பது

கருத்து. அவம்—வீண். "போக்காதே" என்புழி ஏகாரம் அசை. போக்காது என்னும் எச்சம் "கசிந்துருக", என்பதைக் கொண்டு முடியும். அக்காலத்தை வீணாக்காமல் செய்யத்தக்கன் என்னை யென்பதற்கு விடையாக இறைவனைப் பாடியுருக வேண்டுமென்றனர்.

இவ்வாறு திருவாசகம் என்னும் அருள் நூலின் செய்யுடகளில் ஊடுருவிச் சென்று நுண்பொருளை ஒவ்வொரு சொற்றொடர்க்கும் பண்டிதமணி கூறியுள்ளார். இலக்கணப் பயிற்சி, ஆராய்ச்சியாளருக்கு இன்றியமையாதது என்பதையும் அவர் இந்நூலில் உணர்த்தியிருக்கிறார்; ஒரு வேற்றுமை உருபை வேறொரு வேற்றுமை உருபாகத் தவறாகக் கொண்டால் உரையிற் குழப்பம் ஏற்படும் என்பதையும் தம் உரையில் எடுத்துக் காட்டியுள்ளார்.

திருவாசக உரை எழுதத் தொடங்கிய காலந்தொட்டு, பண்டிதமணியவர்கள் அல்லும் பகலும் அப்பணியிலேயே ஈடுபட்டிருந்தனர். இடையிடையே அவர்களுடைய உடல் நலம் குறைந்தபோதும் அவருடைய சிந்தனை அனைத்தும் இந்நூலிலேயே இருந்தது. அவருடைய திருவாய் திருவாசகப் பாசுரங்களையே ஓதியவண்ணமாக இருந்தது. அவருடைய கோலமும் பேச்சும் இனிமையும் திருவாசகமாகவே காட்சி தந்தன.

# 18. கருத்துக்கள்

பண்டிதமணி அவர்கள் எந்தப் பொருளைப் பற்றியும் உறுதியான கருத்துக்கொண்டிருந்தனர். பிறரை மகிழ் விக்கவேண்டும் என்பதற்காக ஒரு கருத்தைத் தெரிவிக்கும் இயல்பு அவரிடம் இருந்ததில்லை. ஆங்கில அறி வின்மையால், காலத்துக்கு ஒவ்வாத கருத்துக்களை உடையவராக அவர் இருந்திருக்கவேண்டும் என்று சிலர் நினைக்கலாம்; இது உண்மைக்கு மாறுபட்டது. சான்ருக, ஒன்றைக் கூறுவோம்:

பண்டிதமணி அவர்கள் தமிழ் எழுத்துத் திருத்தத்தை வரவேற்ருர்கள். காலத்திற்கு ஏற்ப மாறுதல்களை ஏற்றுக்கொள்ளுவது மொழியின் ஆக்கத்திற்கு இன்றியமையாதது என்று அவர்கள் கூறினர்.

பிறமொழி அறிவு தாய்மொழிப் பற்றை மிகுதியாக்க உதவும் என்பதைப் பண்டிதமணி அடிக்கடி வற்புறுத்தி வந்தார்கள். எனினும், இந்தி மொழி கட்டாய பாடமானல் அதனுல் தமிழ் வளர்ச்சிக்குத் தடை உண்டாகும் என்பதை அவர் தெரிவிக்கத் தவறியதில்லை. இவ்வாறே பல பொருள்களைப் பற்றிப்பண்டிதமணியவர்கள் கொண்டிருந்த கருத்துக்களைத் தெரிந்துகொள்வது இளைஞர்க்குப் பயன் தரும். எனவே, அவற்றை இங்கே சுருக்கமாகத் தருவோம்.

## தாய்மொழியின் சிறப்பு

நமக்குரிய நாட்டு மொழியைப் புறக்கணித்து வேற்று மொழியில் எத்துணை மேற்சென்ருலும் மொழியறிவால் பெறும் பயன் முற்றும் எய்தாது.

## ஆங்கிலமும் தமிழும்

ஆங்கிலம் பயிலுஞ் சிறுர்கள் முதலிற் குரங்கு, பூனை, எருது முதலிய விலங்கினங்களின் குணஞ் செய லுருவங்களையும், மா, பலா, கிச்சிலி முதலிய மரஞ் செடி களின் குணஞ் செயலுருவங்களையும பயில்கின்றனர். நம் செந்தமிழ் பயிலுஞ் சிறுர்களோ, "அறஞ் செய விரும்பு", "அன்னையும் பிதாவு முன்னறி தெய்வம்", "மோன மென்பது ஞானவரம்பு", "ஓதாம லொருநாளு மிருக்கவேண்டாம்" என்றின்னோரன்ன அறம், ஒழுக்கம், ஞானம் முதலிய உயர்குணங்களை யெல்லாந் திரட்டி, நீண்ட பனையினளவைச் சிறிய தினையளவினதாகிய புன் னுனிநீர், தன்னுளடக்கிக் காட்டுதல் போற் காட்டித் திகழுஞ் சிறு தொடர் மொழிகளையே, எழுத்துக்களை யொன்ருேடொன்று சேர்க்கும் பாலப்பருவத்திற் பயில் கின்றனர்.

## வடமொழியும் தமிழும்

தமிழில் இல்லாத சிறந்த நூல்கள் வடமொழியிலுள; அதுபோல ஆபாசங்களும் உள. அவற்றையும் அறிந்தால் தான் தமிழ் இலக்கியச் சிறப்பை உணர முடியும்.

## மொழிபெயர்ப்பு

மொழிபெயர்த்த லென்றதனுனே பொருள் பிறழா மைச் செய்யவேண்டுமென்பது போதரும். மொழிபெயர்க் கப்படும் நூல் பெயர்த்துரைக்கப்படும் மொழிக்கண் ணுள்ள குறையை நிரப்புவதாக இருத்தல்வேண்டும், அதுவே அதன் பயனுமாகும்.

## கடுமையும் எளிமையும்

இற்றைஞான்று மொழி நடையில் முதிர்ந்த பழஞ் சொற்களும் தொடர்களும் சிறிது சிறிதாகக் கைவிடப் பட்டு வந்தமையால் முனைப் பாடல் நடைகள் இப்போது நமக்கு எளிமையில்லாதனவாகக் காணப்படுகின்றன. எனவே, கடுமை எளிமை என்பன நூலைப் படிப்பவரின் அறிவுத்தரத்தைப் பொறுத்தன.

நாளடைவிற் புலவர் தனித் தமிழ்ச் சொற்களைத் தெரிந்து வழங்கும் மதுகையின்மையானும், ஒரோ வழித் தெரியினும் அவற்றினும் வடசொற் றொடை செவிக்கு இன்பம் பயப்பனவாம் என மறுகொள உணர்ந்தமை யானும், தனித்தமிழ்ச் சுவை கண்டு இன்புறும் தலைவர் அருகினமையானும், வடமொழியாளர் உவப்பத் தமிழிற் பாட்டு உரை முதலியன இயற்றவேண்டுமென்னும் விழைவு மேற்கொண்டமையானும், பொதுவெழுத்தானும், சிறப்பெழுத்தானும் ஆய வடசொற்கள் பலவற்றைத் தமிழில் வரம்பின்றி வழங்கி வருவாராயினர். சுவை யுடைமை அவ்வம் மொழிகளில் தனித்த நிலையிற் காணப் படுதல்போற் கலப்பிற் காணப்படுதல் அரிது. ஒரு மொழியிற் செவ்வனம் பயின்று சுவை நிலை கண்டுணர் வார்க்கு அதன் தனி நிலையிற்போலப் பிறமொழிக் கலப்பில் அத்துணை இன்பம் உண்டாகாதென்பது உண்மை அநுபவமுடையார் எல்லோர்க்கும் ஒத்ததாகும். இதனல் வடசொற்களை நேர்ந்தவாறு தமிழிற் புகுத்தல் முறையன்றென்பது தெளிவாம். ஒரு சில வடசொற் கலப்பு உண்மை பற்றித் தமிழ் மொழியை வடமொழியி னின்றும் தோன்றியதென்றல் பொருந்தாத தொன்றும்.

## புலவர் கடமை

ஒரு புலவன் காலக்கழிவு நோக்காது நெடிதாராய்ந்து தன் வாணாளில் ஒரு நூலுக்கு உண்மையுரை எழுதி முடிப்பினும் போதியதே.

## எழுத்தும் பேச்சும்

இளந்தமிழர்களே! கவலல்வேண்டாம். திரு. வி. க. அவர்களின் நூறு சொற்றொடர்களையாவது மனப்பாடம் செய்து சேம நிதியாக வைத்துக்கொள்ளுங்கள், உங்கள் சொற்பொழிவுகளிலும் கட்டுரைகளிலும், நீங்கள் எழுதும் கடிதங்களிலும் அவற்றை இடையிடையே செருகிவிடுங்கள். உங்கள் எழுத்தும் பேச்சும் எழில் பெறும்; ஒளி பெறும்.

## கல்வி பயிலு மொழி

இரசாயனம், உயிர், உளம் முதலியவை பற்றிய உயரிய சாத்திரங்களை யெல்லாம் தமிழ் மொழி மூலம் பயில எல்லா வசதிகளும் ஏற்படுத்தல் வேண்டும். எளிய நடையில் உயரிய கருத்துக்களைப் புலப்படுத்தும் புதிய ஆராய்ச்சி நூல்களையும் மொழிபெயர்ப்பு நூல்களையும் வெளிப்படுத்தல் வேண்டும். எளிய நடை யென இலக்கணப் பிழை செறிந்த நடைகளை ஏற்றுக்கொள்ளலாகாது. அவற்றைக் கண்டு களைதல் அல்லது திருத்தி யமைத்தல் வேண்டும்.

# 19. இல்வாழ்க்கை

இல்வாழ்க்கையிலும் பண்டிதமணி தம் காலத் தவர்க்கு ஓர் எடுத்துக்காட்டாக விளங்கினர். இளமையில் தந்தையார் இறந்துவிட்டபடியால், தாமே குடும்பத் தலைவராக இருந்து தம்பிமார்க்குத் திருமண முதலியன நடத்தி வைத்த விவரத்தை முன்னரே கூறியுள்ளோம். தம்பி மார்களுக்குத் திருமணம் நடைபெற்றுப் பல ஆண்டுகளுக்குப் பின்னரே பண்டிதமணிக்குத் திருமணம் ஆயிற்று. எனினும், இவர்க்கே நிரமபியமக்களும் பேரர்களும் தோன்றினர். அதையொட்டி, தம் மரபுக்கேற்ற தொழிலைச் சில இடங்களில் தொடங்கிப் பண்டிதமணி பொருளீட்டினர். தொழில்கள் வெவ்வேறு இடங்களிலிருந்தபோதும், அவற்றைத் தாம் இருக்கும் இடத்திலிருந்தே செவ்வையாக ஆட்சி புரிந்து வந்தார்.

பண்டிதமணி அவர்கட்குச் சுப்பிரமணியன், கனகசபாபதி, மாணிக்கவாசகன், தியாகராசன் என்னும் நான்கு ஆண்மக்களும், மங்கையர்க்கரசி, மீனாட்சி, சகுந்தலை என்னும் மூன்று பெண்மக்களும் உளர். செட்டிநாட்டு இயல்புக்கேற்றபடி குடும்ப அலுவல்களை யெல்லாம் பண்டிதமணி கவனித்து வந்தார்கள். இவற்றை நோக்க, பண்டிதமணி அவர்களை, அளவான செல்வத்தோடு கௌரவமாக வாழ்க்கை நடத்திய பெருமை உடையவர்கள் என்று சொல்லலாம். 'புலவர்க்கு வறுமை நேர்தல் பண்டு தொட்டுளதே. அதற்குக் காரணம் அவர் புலமைச் செல்வத்தைப் போற் பொருட் செல்வத்தை ஈட்ட விருப்பமும் முயற்சியும் உபாயமும் மேற்கொள்ளாமையே யாகும்' என்று

பண்டிதமணி ஓரிடத்தில் கூறியுள்ளார்கள். பண்டிதமணி அவர்கள் புலமைச் செல்வத்தைப்போலப் பொருட் செல்வத்தையும் ஈட்டியவர்கள்; அதிலேயே கண்ணுங் கருத்துமாக இருந்தவர்கள். ஆகையால் திருமகளும் கலைமகளும் ஓரிடத்து வாழார் என்னுஞ் சொற்றொடர் பண்டிதமணியிடம் பொய்த்தது.

சொற்பொழிவு முதலியவற்றுக்காக வெளியூர்களுக்குச் செல்லும்போது, அங்குக் கிடைக்கும் சில பொருள்களில் பண்டிதமணி அவர்கட்கு விருப்பம் இருக்கும்; எனினும் தமக்கு அப்பொருள் வேண்டுமென்று கேட்கமாட்டார்கள்; வலிய அப்பொருளை அவ்வூரார் தமக்கு வழங்கும்படி வாய்ச் சாதுரியத்தால் செய்துவிடுவார்கள்.

அறிவுப் பசி மிக்க பெருமக்கள் பெரும் பொருளைச் செலவிட்டு அரிய நூல்களை வாங்குகின்றனர்; அவர்க்குப் பின்னர், அக்குடும்பத்தில் எவர்க்கும் அந்நூல்கள் பயன்படாது போகின்றன. சென்னை நகரில் பல குடும்பங்களில் இந்த காட்சியைக் காணலாம். உரிய பொருளின் அருமை தெரியாத சிறுவர்கள், விலையுயர்ந்த அரிய நூல்களை அவ்வப்போது தமக்குச் சிறு செலவுகளுக்கு வேண்டும் பொருளுககு விற்றவண்ணமாக இருக்கின்றனர், திரு. வி. க அவர்கள் சேகரித்து வைததிருந்த நூல்களைக் காணேம். மறைமலையடிகளாரின் நூல்கள் யாருக்கும் உதவாமல் பூட்டப்பட்டுக் கிடக்கின்றன. பண்டிதமணி தம்மிடமிருந்த நூல்களுக்கு இத்தகைய அவலநிலை ஏற்படாமல், உரிய காலத்திலேயே அவற்றைக் கருமுத்து தியாகராசச் செட்டியார் அவர்களுக்கு விற்றுவிட்டார்.

ஒரு தடவை, நாட்டரசன் கோட்டையில் ஒரு கூட்டம் நடைபெற்றது. திரு-டி. சி. சீனிவாச ஐயங்கார் அவர்களும் பண்டிதமணி அவர்களும் அக்கூட்டத்திற் கலந்துகொண்டனர். சொற்போர் போட்டி ஒன்று நிகழ்ந்தது; செட்டியார் சமூகத்தைச் சேர்ந்த ஒருவர்க்கு முதலிடமும், பிராமண சமூகத்தைச் சோந்த ஒருவர்க்கு இரண்டாவது இடமும் கிடைத்தன. அதற்குப் பிறகு பேசிய டி. சி. சீனிவாச ஐயங்கார் அவர்கள், "தனவைசியப் பிரபுக்களாகிய நீங்கள் புகழுக்குத்தான் ஆசைப்பட வேண்டும். பொருளுக்கு ஆசைப்படலாகாது. பரிசுப் பொருளை எங்களுக்கே விட்டுக் கொடுக்கவேண்டும்" என்று கூறினர். பண்டிதமணி அவர்கள் உடனே எழுந்து 'புகழுக்கு ஆசைப்படுவதுபோலப் பொருளுக்கும் ஆசைப்படவேண்டும், இரண்டையும் பெறவேண்டுமென்பதே வாழ்க்கையின் குறிக்கோளாக இருக்கவேண்டும்' என விரிவாகப் பேசினார்கள்.

பொருளில் இத்தகைய பற்றுடையவராக இருந்த பண்டிதமணி, பொருளீட்டுவதற்கும் சில முறைகளை மேற்கொண்டிருந்தார். அவர் இறைவன் திருவடிநிழலை அடைவதற்கு ஓராண்டுக்கு முன்னர், எம். ஏ. தேர்வுக்குக் கேள்விகள் குறித்தனுப்பும்படி பண்டிதமணியைச் சென்னைப் பல்கலைக் கழகத்தார் கேட்டுக்கொண்டிருந்தனர். இதை ஒருமணி நேரத்தில் தயாரித்து அனுப்பி. 100 ரூபாயைப்பெற்றுக் கொண்டிருக்கலாம் அல்லது, வேறு யாரையாவது கேள்வித்தாளை எழுதிக்கொண்டு வருக என்று பணித்திருக்கலாம். பண்டிதமணி அவ்வாறு செய்யவில்லை. தாம் அப்போது திருவாசகத்தில் ஈடுபட்டிருந்ததால், உரிய பொறுப்பை ஏற்றுக்கொள்ள இயலாதென்று பல்கலைக்கழகத்தாருக்குத் தெரிவித்துவிட்டார்.

பண்டிதமணி, பொருள்தனைப் போற்றி வாழ்ந்தார். சிக்கனமாகவே செலவு செய்தார். வீட்டிற்கு வேண்டும் எப்பொருளையும் தாமே வாங்குவார். இதனால் அவருடைய வாழ்வு இனிமையும் எளிமையும் கலந்து விளங்கியது.

பண்டிதமணி அவர்கள் தமிழிலக்கியத்தை ஆராய்ந்து ஆராய்ந்து சுவைத்தது போலவே உணவையும் சுவைத்துச் சுவைத்து உண்ணும் ஆற்றல் பெற்றிருந்தனர். நாள் தோறும் இன்ன இன்ன கறிகளைச் சமைக்க வேண்டும் என்று தாமே வரையறை செய்வார்; சமையல்கார னிடம் உணவு வகைகளுக்குப் பக்குவம் சொல்லுவார். இவற்றைக் கேட்பவர் நாவில் நீரூறிய வண்ணமாக இருக் கும். முட்டைக்கோசுக் கூட்டு, உருளைக்கிழங்கு சாம்பார் முருங்கைக்காய், எலுமிச்சங்காய் ஊறுகாய்—இவற்றைப் பண்டிதமணி மிகுதியாக உண்பார். எனினும் உணவு உண்பதிலும் ஒரு கட்டுப்பாடு இருந்தது; சதுர்த்தி விர தத்தை அவர் மேற்கொண்டிருந்தார்.

உணவு வகைகளைவிடப் பண்டிதமணி மிகுதியாக உட்கொண்டது மருந்து என்று சொல்லலாம். அவர் அருகேயுள்ள சன்னல் ஒரு சிறு மருத்துவ நிலையம்போலக் காட்சி தரும். மருந்துப் புட்டிகளில் ஆங்கிலத்தில் அச்சிடப்பெற்றிருக்கும் குறிப்புக்களைப் பற்றிப் பண்டித மணி எண்ணற்ற கேள்விகள் கேட்பார். 'மருத்துவக் கல்லூரியில் யான் பயின்றபோதுகூட இவ்வளவு கடுமை யான கேள்விகளுக்கு விடைகூற வேண்டிய நிலை ஏற்பட வில்லையே' என்று மருத்துவர் எண்ணுவார்; ஒருவாறு பண்டிதமணியிடமிருந்து தப்பினால் போதும் என்றே அவர் கருதுவார்.

பண்டிதமணி உடல் நோயால் அடிக்கடி துன்பப்பட் டார். அதன் பயனாக, இடையிடையே, அவர் சுடுசொல்

கூறினர்; அக்காலத்திலெல்லாம் அன்புக்கட்லாக இருந்து இன்சொல்கூறி, அவர்க்குத் துணை புரிந்தவர் அவருடைய மனைவி மீனாட்சி ஆச்சியார் ஆவர். பண்டிதமணியின் உயர்வு அனைத்துக்கும் இந்த அம்மையார் பெருங் காரணமாக இருந்தனர். 26—8—1945இல், அவர்கள் அண்ணாமலை நகரில் உயிர் நீத்தனர்! மனைவியின் பிரிவு பண்டிதமணிக்குப் பெரும் கவலை தந்தது. தம் பெருவாழ்வில் சிறப்பான பகுதி முடிவடைந்ததையுணர்ந்த பண்டிதமணி பல்கலைக்கழகப் பணியை விடுத்து, ஓய்வு பெற்று மகிபாலன்பட்டிக்கு வந்து சேர்ந்தார்.

# 20. குணச் சிறப்புக்கள்

பண்டிதமணியை நினைக்கும்போது, அவருடைய உருவத் தோற்றம் மனக்கண்முன்னே நிற்கிறது. புலவர் விசு. திருநாவுக்கரசு அவர்கள் எழுதியிருப்பது போல, 'பண்டிதமணி பழமைக்கும் புதுமைக்கும் இடையில் வாழ்ந்தவர், பழங்காலத்து நாட்டுக்கோட்டைச் செட்டியார்களைப் போலவும் இக்காலத்து இளைஞர்களைப் போலவும் இல்லாமல், கிராப்பா—இல்லையா என்று காண்பார் முடிவுகட்ட முடியாத நிலையில் காணப்பட்டார்.'

73 ஆண்டுகள் ஆகியும் பண்டிதமணியின் இனிமையும் வளமும் எத்தனையோ இளைஞர்களை நாணச் செய்தன. அவர்களுடைய கவர்ச்சி மிக்க பூரிப்பை, புன்முறுவல் தெரிவிக்கும். அவர்களின் புன்முறுவலோடு கலந்து வந்து எதிரியின் அறியாமையைத் தகர்த்த அம்புகள் எத்தனை? எதிரியின் ஆணவத்தை ஒழித்த அணுக்குண்டு எத்தனை? சிவபெருமான் புன்முறுவலால் எதிரிகளின் முப்புரத்தையும் எரித்த கதையை நம்பாதவர்கள், நம் பண்டிதமணி அவர்களைக் கவனித்திருந்தால், அக்கதையின் உண்மை விளங்க்ப்பெறுவர்.

தம் அறிவின் சிறப்பால், தமமை இகழ்வோரைத் தலைவணங்கச் செய்யும் ஆற்றல் பண்டிதமணிக்கு இருந்தது. பணிவிடை செய்பவர்களிடத்தும், சுவையான உணவு படைப்பவர்களிடத்தும் அவர்கள் சில வேளை ஏமாறியதும் உண்டு. இவற்றைக் குறையாகக் கொள்ளுவோர் கொள்ளட்டும். ஆனல் பண்டிதமணியின் சிறப்புக்களை நோக்க, அவை மறைந்துவிடுகின்றன.

அழுத்தமான கல்வி யறிவுடையவர்களைப் பண்டித மணி எப்போதும் பாராட்டி வந்தார். மிகுதியான கருத்து வேறுபாடுடையவராய்ப் பல்லாண்டுகள் தம்மைப் பற்றிக் குறை கூறிய சொ. முருகப்பா அவர்களுடைய கம்ப ராமாயண உரைக்குப் பண்டிதமணி அவர்கள் வழங்கி யிருக்கும் அரிய இனிய சிறந்த ஆராய்ச்சி முன்னுரை ஒன்றே, பண்டிதமணியின் பெருந்தன்மைக்குச் சிறந்த சான்றாக நின்று நிலவும். பல்லாண்டுகள் தம்முடன் நெருங்கிப் பழகிய தமிழாசிரியர் முதலிய பலரை உயர்த்தி வைக்கத் தம் செல்வாக்கைப் பயன்படுத்தும் பெருங் குணமும் பண்டிதமணியிடம் இருந்தது.

தம்மைக் காண வருவோருடன் அளவளாவுதலைப் பண்டிதமணி ஒரு கலையாக வளர்த்திருந்தார். எழுந்து பேசுவதுபோல இருந்து பேசவும் வல்லாராக அவர் விளங் கினார். அன்பர்களோடு தனித்து உரையாடும்போதும், இலக்கணப் பிழையின்றிப் பேசும் ஆற்றல் அவரிடம் இயற்கையாகவே இருந்தது. இடையிடையே ஓரிரு ஆங் கிலச் சொற்களைப் பயன்படுத்தியும், இருபொருள் நயம் படப் பேசியும், உடனிருப்பவரை மகிழ்விப்பார்கள்.

திரு. தி. செல்வகேசவராய முதலியார் அவர்கள் தம் பேச்சின் இடையே அடிக்கடி, 'பாவம்' என்ற சொல்லைப் பயன்படுத்துவார்களாம். பண்டிதமணி அவர்களும் அவ வாறே 'அப்பன்' என்ற துணைச்சொல்லைப் பயன்படுத்தி வந்தனர்.

மேலைச்சிவபுரியில் வ. பழ. சா. வீட்டில் ஒரு நாள் பகலுணவுக்குப் பிறகு, ஒரு தட்டில் ஆரஞ்சுப் பழங்கள் வைக்கப்பெற்றிருந்தன. பெரிய பழமாக ஒன்றை எடுத்

துப் பண்டிதமணி உரித்தார்; அதில் விதையே இல்லை. பழத்தைச் சுவைத்து முடித்ததும், பண்டிதமணி ஓர் உவமை கூறினார். பிள்ளைப் பேறில்லாத தாயைப் போல அந்தப் பழமும் இருந்தது என்றார்.

ஒரு சமயம் பண்டிதமணி தம் நண்பர் ஒருவர் வீட்டுக்குச் சென்றிருந்தார். அப்போது அவரைக்கண்டு பேசச் சிலர் வந்திருந்தார்கள். பேசிக்கொண்டிருக்கும்போது, வேலைக்காரன் பண்டிதமணிக்குப் பால் கொண்டுவந்து கொடுத்தான். பண்டிதமணி பாலைக் கையிலே வாங்கினார்; அதை ஒருமுறை பார்த்தார். பிறகு, '**திருப்பாற்கடலில் சீனிவாசன் துயில் கொள்ளுகிறான்**' என்றார்.

இருந்தாற்போலிருந்து அவர் இப்படிக் கூறியது மற்றவர்களுக்கு ஒன்றும் புரியவில்லை. சிலர் விழித்தனர்; வேறு சிலர் எதிரே சுவரில் தொங்கிக்கொண்டிருந்த திருமால் படத்தைப் பார்த்து, 'இதைப்பற்றித்தான் பண்டிதமணி கூறுகிறாரோ' என்று நினைத்தனர். இன்னுஞ் சிலர் ஆழ்ந்து சிந்திக்கலாயினர்.

நகைச்சுவை கடைசியாக விளங்கிவிட்டது. எல்லோரும் சிரிக்கலாயினர். 'பாலில் எறும்பு விழுந்து கிடக்கிறது' என்று கூறுவதற்குப் பதிலாகத்தான் 'திருப்பாற்கடலில் சீனிவாசன் துயில்கொள்ளுகிறான்' என்று கூறினார். பண்டிதமணி !

ஒரு கூட்டத்திற்குப் பண்டிதமணி தலைமை வகித்தார். கூட்டத்தின் ஒரு பகுதியில் பெண்கள் இருந்தனர். ஆகையால் கூட்டத்தை அமைதியாக நடத்த முடியவில்லை.

கூட்டத்திற்கு ஏற்பாடு செய்திருந்தவர்கள், பெண்கள் பகுதியிலிருந்து அடிக்கடி சப்தம் வருவதைக் குறிப்பிட்டு அமைதியாயிருக்கும்படி கேட்டுக்கொண்டார்கள். அப்போது பண்டிதமணி "பெண்மணிகள் — ஒலித்துக் கொண்டுதானிருக்கும்" என்று வேடிக்கையாகக் கூறினர். பண்டிதமணியின் இந்த ஒலியைக் கேட்டதும், கூட்டத்தில் சிரிப்பின் ஒலி எழுந்தது!

பண்டிதமணி ஒருசமயம் மறைமலையடிகள் வீட்டிற்குச் சென்றிருந்தாராம். அங்கே பகல் உணவருந்தும்போது, 'கொஞ்சம் ரசம் விடம்மா' என்று பண்டிதமணி நீலாம்பிகை அம்மையாரிடம் கூறினராம். அதற்கு அந்த அம்மையார், "என்னய்யா, 'ரசம்' என்று வடமொழியில், கூறுகிறீர்கள்? 'சாறு' என்று குறிப்பிடுங்கள்" என்று விளையாட்டாகச் சொன்னராம்; உடனே பண்டிதமணி "சரி அம்மா கறுப்பாயி கொஞ்சம் சாறு ஊற்று" என்ருராம், சிரித்துக்கொண்டே.

'என்னய்யா, என்னைக் கறுப்பாயி என்று அழைக்கிறீர்கள்?' என்று கேட்டாராம் அந்த அம்மையார். அதற்குப் பண்டிதமணி "ஆமம்மா, உன் பெயர் நீலாம்பிகை தானே! நீலம் என்பதைக் கறுப்பு என்றுதான் தமிழில் குறிப்பிடுகின்றோம். அம்பிகை என்பதை ஆயி என்கிறோம். ஆகையால், நீலாம்பிகையைக் கறுப்பாயி என்று நல்ல தமிழில் குறிபபிடுவதில் தவறில்லை" என்ருர்.

ஓர் அறிஞரின மணி விழாவை யொட்டி ஒரு மலர் வெளி வந்தது பண்டிதமணியும் ஒரு கட்டுரை அனுப்பியிருந்தார். ஆனல் அவருடைய கட்டுரை சிறப்பாக வெளியிடப்பெறவில்லை; கட்டுரைகள் கிடைத்தவரிசையில்

முறைப்படுத்தி அச்சிடப் பெற்றிருந்தன. இதன் விளைவாக, புதிதாகத் தமிழ் பயின்றுவரும் இளைஞர் சிலரின் கட்டுரைகள் பண்டிதமணியின் கட்டுரைக்கு முன்னர் இடம் பெற்றிருந்தன. இதைக் குறிப்பிட்டுப் பண்டிதமணி கூறியது சுவையாக இருந்தது: "............................ இப்படிப்பட்ட பெரும் புலவர்கள் கட்டுரை யெல்லாம் இருந்தன; என் கட்டுரை சங்கத்தார்க்குக் கிடைக்கவில்லையோ என்று எண்ணினேன் பின்னர், பக்கம் பக்கமாகப் புரட்டிப் பார்த்ததில் அதையும் அச்சிட்டிருந்தனர்."

அன்பர்களுடன் அளவளாவும்போது பண்டிதமணி பல கதைகள் சொல்லுவார். அவரது கற்பனை வளத்துக்குச் சான்ருக, ஒன்றை மட்டும் இங்கே கூறுவோம்.

ஒருவன் தவறுதலாக ஒரு பூனையைக் கொன்றுவிட்டான். உடனே, அங்கேயிருந்தவர்கள் எல்லாம் 'ஐயோ, பூனையைக் கொன்றுவிட்டாயே? பெரிய பாவம் அல்லவா?' என்றுகூறிப் பரிதாபப்பட்டனர். உடனே அவன் அவ்வூர்ப் பஞ்சாங்க ஐயரிடம் சென்று, இதற்கு ஏதாவது பரிகாரம் செய்ய இயலுமா? என்று உசாவினன்.

உடனே, அந்த ஐயர் 'தங்கத்தில் பூனைபோலச் செய்யவேண்டும்' என்று கூறினர். என்னுடைய பொருளாதார நிலை அவ்வளவுக்கு இடந்தராது; மலிவாக ஏதாவது யோசனை சொல்லுங்கள், என்று பூனையைக் கொன்ற பாவி சொன்னன். அபபடியாயின், பூனையைப்போல வெள்ளி, பித்தளை முதலிய உலோகங்களில் செய்பலாம் என்று பஞ்சாங்க ஐயர் கூறிய யோசனைகள் தம் ஆற்றலுக்கு அப்பாற்பட்டவை என்று அவன் கூறிவிட்டான். பிறகு ஓரணாவுக்கு

வெல்லம் வாங்கிக்கொண்டு வரும்படி ஐயர் கூறினர். அவனும் அவ்வாறே வெல்லத்தை வாங்கி வந்து அவரிடம் கொடுத்தான். உடனே ஐயர் வெல்லத்தைப் பூனைபோன்ற உருவமாக்கி, அதைத்தம் வாயில் போட்டுக்கொண்டார். 'சாமி, பூனையைத் தின்று விட்டீர்களே?' என்று அவன் உரக்கக் கத்தினன். 'பூனையைக் கொன்ற பாவம் உன்னுடன் இருக்கட்டும் வெல்லத்தைத் தின்ற பாவம் என்னுடன் இருக்கட்டும்' என்று பஞ்சாங்க ஐயர் கூறினர்.

இவ்வாறு இனிய கதைகளைச் சுவைபடச் சொல்லி, தாம் செல்லுமிடங்களில் எவரையும் பண்டிதமணி தம் வயப்படுத்தினர். தென்காசியில் திருவள்ளுவர் கழகத்து விழாவுக்குத் தலைமை வகிப்பதற்குப் பண்டிதமணி அங்கே போயிருந்தபோது சிறு வயதுடைய ஒரு செல்வர் வீட்டில் ஒரு பகுதியில் பண்டிதமணி தங்கியிருந்தார். தம்க்குத் தொந்தரவு கொடுக்கக்கூடாதென்றும், உரிய பகுதியில் மட்டுமே பண்டிதமணி இருக்கவேண்டுமென்றும் அச் செல்வர் கண்டிப்பாகச் சொல்லிவிட்டாராம். ஆனல் பண்டிதமணியுடன் உரையாடிய பிறகு, அவரை அச் செல்வர் சமையலறை வரையிலும் அழைத்துச் சென்ருராம்!

ஒரு தடவை பண்டிதமணி ஒரு கனவு கண்டார். சிவபெருமானிடம் ஒரு வரம் கேட்டார். **உமக்கு தந்தம் போம்** என்று சிவபெருமான் கூறினர். தாம்கேட்ட வரத்தைச் சிவபெருமான் தந்து விட்டதாகப் பண்டிதமணி கருதினர். காலையில் எழுந்து பார்த்தபோது அவருடைய பல் போய்விட்டதாம். 'தந்தம் போம்' என்ற கனவு நனவாயிற்று என்று பண்டிதமணி இதைச் சுவைபடக் கூறுவார்.

பண்டிதமணி அவர்களின் அறுபதாம் ஆண்டு நிறைவுவிழாவின்போது மகிபாலன்பட்டியிலே பண்டித மணியின் இல்லத்தில் புலவர்களும் புரவலர்களும் நிறைந் திருந்தார்கள். நாவலர் ச. சோமசுந்தர பாரதியார் அவர் களும் வந்திருந்தனர். ஆனால் அவர் ஆங்கிலேயரைப் போல உடைதரித்து வந்திருந்தார்; தலையிலே தலைப்பாகை யும் வைத்திருந்தார். பண்டிதமணியவர்களின் முன்னராக நின்றுகொண்டு அவர்கள் பார்க்கும்படியாகத் தம் தலைப் பாகையைச் சோமசுந்தர பாரதியார் எடுத்தார். உள்ளே விலையுயர்ந்த வெள்ளிப் பொருள் ஒன்று இருந்தது. 'உங் களுக்காக மதுரையிலிருந்து இப்பொருளைத் தலைமேலே தாங்கி வந்தேன் என்று பாரதியார் கூறினார். உடனே பண்டித மணியவர்கள் 'கனம் அதிகமாக இருக்குமே' என்றார்கள். பொருள் கனமில்லை; ஆனால் அதற்குக் கொடுத்தபொருள் (பணம்) கனமுடையதுதான் என்றார் பாரதியார்.

கரந்தையில் ஒரு விருந்து நடைபெற்றது. புலவர் வரத நஞ்சைய பிள்ளை, ரசத்தைச் சாப்பிட்டுக்கொண் டிருந்தபோது இருமினார். அப்போது, பண்டிதமணி **ரசம் அதிகாரமோ** ? என்று கேட்டார். ரசம் அதிக காரமோ? என்றும் ரசம் அதிகாரம் செய்கிறதோ? என்றும் இரு பொருள் படப் பண்டிதமணி கூறியதை நினைத்துப் புலவ ரெல்லோரும் வியந்தனர்.

**பண்டிதமணி விரும்பியது** : இனிய பேச்சு, பொருள், சுவையான உணவு, செட்டான வாழ்வு.

**விரும்பாதது** : பிழைபட்ட நடை, குழுவாக நண்பர் கள் சிலர் சேர்ந்துகொண்டு ஒருவரை யொருவர் பாராட் டிக் கொள்வது.

# 21. கதிரொளியின் மறைவு

அண்ணாமலை நகரில் வாழ்ந்தபோது பண்டிதமணியின் மனைவியார் காலமாயினர்; அதுவே அவரது உடல் நோயின் தொடக்கம் எனலாம். இந்நோய் இரத்தக் கொதிப்பாக உருவெடுத்து, இறுதிநாள்வரை அவரைத் தொடர்ந்து அல்லற்படுத்திக் கொண்டுவந்தது. பின்னர், கைகால் பிடிப்புத் தோன்றிக் கை வண்டியில் மட்டுமே செல்லத் தக்கவாறு வாத நோயாக மாறிற்று. அந்தக் காலத்திலும் இரத்தக் கொதிப்பு அவரை விடவில்லை. நோய் பெருகப் பெருக, சிந்தனைக்குரிய நேரம் குறைந்தது. திருவாசகப் பாடலில் ஒன்றுக்கு உரை எழுதத் தொடங்கு வார்; ஒவ்வொரு பாட்டிலும் சொற்களுக்கிடையே அமைந் துள்ள காரண காரிய முறையைக் காண்பதில்தான் அவரது உரை காணும் திறம் அமைந்திருந்தது. இவ்வாறு சிந்திக்கும்போது நெடுநேரம் சிந்திக்கவேண்டிய நிலை உண் டாகும். நோய் முதிர முதிர, சிந்தனை நேரம் குறையத் தலைப்பட்டது. இந்த நிலையைத் தம்பால் பேரன்புமிக்க புலவர் பெருமக்களிடையே அடிக்கடி தெரிவித்துக் கவலைப்படுவார். வாத நோயால் தாம் வருந்தியபோது இவ்வாறு தான் திருநாவுக்கரசரும் வருந்தியிருப்பாரோ என்று பண்டிதமணி ஒரு வினா எழுப்புவார்.

'வரையார் மடமங்கை பங்கா கங்கை
மணவாளா வார்சடையாய் நின்றனும்
உரையா வுயிர்போகப் பெறுவே னாகி
லுறுநோய்வந் தெத்தனைய மற்று லென்னே'

—*திருநாவுக்கரசர் திருவாவடுதுறைத் திருத்தாண்டகம்-3*

---

* *வாதத்துக்குச் சூலை என்பதும் ஒரு பெயர்.*

என்ற பாடலையும் அப்போது கூறி அந்தச் சிறப்புத் தமக்கும் உண்டாக வேண்டுமென்று விரும்புவார். அவர் விரும்பிய வண்ணமே இச் சிறப்பையும் பெற்றார்.

விசய ஆண்டு ஐப்பசித் திங்கள் எட்டாம் நாள், அதாவது 24—10—1953இல் பண்டிதமணி வழக்கம்போலத் தம் அலுவல்களைக் கவனித்து வந்தார். அன்று தமக்கு வந்த புதிய நூல்களைப் புரட்டிப் பார்த்தார்; முடங்கல்களுக்குப் பதில் எழுதினார்; அண்ணாமலைப் பல்கலைக் கழகத்துக் கீழ்த்திசைக் கல்விப் பகுதி உறுப்பினர் என்ற முறையில் தமக்கு வந்த வாக்குச் சீட்டில் பேராசிரியர் லெ. ப. கரு. இராமநாதன் செட்டியார் அவர்களுக்கு 'டீன்' பதவிக்கு வாக்குப் பதிந்து அனுப்பினார்; கருமுத்து தியாகராசச்செட்டியார் அவர்களின் மகனார் சுந்தரம் அவர்களுடன் உரையாடினார். மாலை மூன்று மணி இருக்கலாம். மூச்சுத் திணறிற்று. நாற்காலியினின்றும் இறங்கி, ஒரு பாயில் படுத்துக் கொண்டார். மலப்போக்கில் தடை ஏற்பட்டதால், எனிமா வைத்துக் குடலைத் தூய்மை செய்து கொண்டார். சிறிது நேரத்தில் இறைவனின் திருவடிநிழலை அடைந்தார்.

# 22. கையறு நிலை

பண்டிதமணி அவர்களின் மறைவால் சுப்பிரமணியன், கனகசபாபதி, மாணிக்கவாசகன், தியாகராசன் ஆகிய அவரது ஆண்மக்களும் மங்கையர்க்கரசி, மீனாட்சி, சகுந்தலை ஆகிய அவரது பெண்மக்களும் பெருந்துன்பம் எய்தினர். அம்மட்டோ? பண்டிதமணியை ஒரு புலவர் திலகமாகக் கொண்டிருந்த தனவணிக சமூகம் கலங்கிற்று. தமிழர் சமுதாயம் முழுவதுமே தமக்குள்ள ஒரு தனிச் சிறப்பை இழந்து வருந்தியது.

தமிழ் வழங்கும் நாடெங்கும் வாழ்கின்ற தமிழறிஞர் அனைவரும் தத்தம் தந்தையையும் உடன் பிறந்தாரையும் இழந்தார் போன்ற பெருந்துயர் எய்தி வருந்தினர். அப்போது வாழ்ந்த பெருமக்களில் தலைசிறந்து விளங்கியவர் கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை. கனிந்த பழம் போன்ற இனிய பாடல்களைப் பாடும் அக்கவிஞர் கையற்றுப் பாடிய தனை இங்கே காண்க.

பத்தரெலாம் பாராட்டும் பண்டித மாமணிநீ
அத்தன் திருவடிக்கா ளாயினையோ—நித்தமவர்
கற்றுக் களிக்கும் கதிர்மணி நல்விளக்கம்
முற்றுப் பெறுவதன் முன்.

வையமெலாம் போற்றுதிருவாசகத்தின் மெய்ப்பொருளை
ஐயமறக் கண்டின் றடைந்தனையோ-செய்யதமிழ்
மன்றத் தறிஞர் மணியாய் ஒளிவீசி
நின்ற கதிரேசா நீ.

என்று வருவான் எமனென் றெதிர்நோக்கி
நின்று தளர்கின்றேன் நித்தமுமே—மன்றில்
நடங்கண்ட ஈசன் நடராசன் பாதத்
திடங்கண்டு வைநீ எனக்கு*

செந்தமிழ்ச் செல்வம் சிறந்து வளர்ந்துவரச்
சிந்தைமகிழ் பன்னூல்கள் செய்தளித்து—முந்துபுகழ்
பூண்ட கதிரேசப் புலவர் பெருமானை
யாண்டுநாம் காண்போம் இனி.

விஜய வருஷம் விளங்குதுலா மாதம்
இசைய வருந்தேதி எட்டாம்—இசைபெங்கும்
பெற்றான் கதிரேசன் பேரம் பலத்தரனார்
நற்றாள் கலந்துய்ந்த நாள்.

---

*திருவாசகத்தின் பொருள் தில்லையம்பலப் பெருமானே. அந்நூலுக்கு உரைகாணுவதென்பது அப்பெருமானை நேரிற் கண்டு இன்புறுவதாகும். பண்டிதமணியவர்கள் அத்திருவாசகத்தின் பொருளைக் கண்டு கொண்டே அத்தில்லைப் பெருமான் திருவடி நிழலை அடைந்தார். அங்கே அவருக்கு முதலிடம் உண்டு என்பது யாவர்க்கும் ஒப்ப முடிந்த உண்மை. அவர் சொல்லுகிற வண்ணம் அங்கு எல்லாம் நடைபெறும் என்ற கருத்தில் 'என்று வருவான்......' என்ற பாடலைத் தாம் பாடியிருப்பதாகக் கவிமணி என்னிடம் உரையாடியபோது கூறினார்.